# கவிதையில் விடுமுறை

எஸ். மகராஜன்

வானதி பதிப்பகம்
தி.நகர் : சென...

# கவிதையில் விடுமுறை

எஸ். மகராஜன்

வானதி பதிப்பகம்
தி.நகர் : சென்...

முதற் பதிப்பு : மே, 1982

7-5-82 புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப்பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 7-50

அச்சிட்டோர் :

உஷா பவர் பிரஸ்,
6, முத்து முதலி தெரு
சென்னை-14.

முதற் பதிப்பு : மே, 1982

7-5-82 புதுவைக் கம்பன் விழாவில் வெளியிடப்பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 7-50

அச்சிட்டோர் :

உஷா பவர் பிரஸ்,
6, முத்து முதலி தெரு
சென்னை-14.

# முன்னுரை

பல பத்திரிகைகளில் நான் எழுதிய கட்டுரைகளையும் சென்னை வானொலியில் ஒலி பரப்பிய பேச்சுக்களையும் தொகுத்து இந்நூல் வெளிவருகிறது.

'கவிதையில் விடுமுறை' என்ற முதல் கட்டுரையின் தலைப்பே இந்நூலின் தலைப்பு.

விடுமுறையை எப்படி எப்படி எல்லாம் நம் மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை பல கோணங்களில் இருந்து பலரை கட்டுரைகள் எழுதி அனுப்புமாறு கல்கி ஆசிரியர் கேட்டுக் கொண்டார்.

கம்பனில் விடுமுறை என்ற பொருள் பற்றி என்னை எழுதும்படி கேட்டு இருந்தார். அவர் சொல்வதற்கு இணங்கி கம்பனில் விடுமுறை என்ற கட்டுரையை எழுதினேன். கைகேயின் கருணையினால் அரச பாரத்தில் இருந்து தன்னைக் கழற்றிக்கொண்டு கம்ப

# முன்னுரை

பல பத்திரிகைகளில் நான் எழுதிய கட்டுரைகளையும் சென்னை வானொலியில் ஒலி பரப்பிய பேச்சுக்களையும் தொகுத்து இந்நூல் வெளிவருகிறது.

‘கவிதையில் விடுமுறை’ என்ற முதல் கட்டுரையின் தலைப்பே இந்நூலின் தலைப்பு.

விடுமுறையை எப்படி எப்படி எல்லாம் நம் மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை பல கோணங்களில் இருந்து பலரை கட்டுரைகள் எழுதி அனுப்புமாறு கல்கி ஆசிரியர் கேட்டுக் கொண்டார்.

கம்பனில் விடுமுறை என்ற பொருள் பற்றி என்னை எழுதும்படி கேட்டு இருந்தார். அவர் சொல்வதற்கு இணங்கி கம்பனில் விடுமுறை என்ற கட்டுரையை எழுதினேன். கைகேயின் கருணையினால் அரச பாரத்தில் இருந்து தன்னைக் கழற்றிக்கொண்டு கம்ப

ராமன் மிக்க மகிழ்ச்சியோடு சீதையுடன், வன போஜனம் செய்வதற்குப் போனது போல் காட்டுக்கு எவ்வாறு சென்று விடாய் ஆற்றிக் கொண்டான், என்பதை அக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. கம்பனுடைய கவிதை மாத்திரம் அல்ல, எல்லா உயர்ந்த கவிதையும் வாழ்க்கையில் துன்பத்துக்கும் தொல்லைக்கும் உள்ளாகி இருக்கும் மனிதனுக்கு ஆறுதலையும் ஆர்வத்தையும் "விட்டாத்தியையும்" விடுமுறை உணர்வையும் தருகிறது. இந் நூல் முழுவதுமே கவிதைச் சார்பு உடைய நூலாக இருப்பதால் கவிதையில் விடுமுறை என்ற தலைப்பு நூல் முழுவதற்கும் பொருந்தும்.

சில கட்டுரைகள் பல நூற்றுண்டுகளுக்கு முன் வாழ்ந்த லாவ்ட்ஸு போன்ற சீனத்து ஞானிகளுடைய கருத்துக்களையும் தெய்யார்தி ஷர்தான் போன்ற அண்மையில் காலமான ப்ரெஞ்சு சிந்தனையாளர்களின் முன்னணியில் இருந்தவர்களின் கருத்துக்களையும் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

திருமூலரைப் பற்றிய நான்கு கட்டுரைகளில் கடைசி மூன்றும் தொடர்ச்சியாக ஒலி பரப்பு செய்யப் பெற்றவை.

ராமன் மிக்க மகிழ்ச்சியோடு சீதையுடன், வன போஜனம் செய்வதற்குப் போனது போல் காட்டுக்கு எவ்வாறு சென்று விடாய் ஆற்றிக் கொண்டான், என்பதை அக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. கம்பனுடைய கவிதை மாத்திரம் அல்ல, எல்லா உயர்ந்த கவிதையும் வாழ்க்கையில் துன்பத்துக்கும் தொல்லைக்கும் உள்ளாகி இருக்கும் மனிதனுக்கு ஆறுதலையும் ஆர்வத்தையும் "விட்டாத்தியையும்" விடுமுறை உணர்வையும் தருகிறது. இந்நூல் முழுவதுமே கவிதைச் சார்பு உடைய நூலாக இருப்பதால் கவிதையில் விடுமுறை என்ற தலைப்பு நூல் முழுவதற்கும் பொருந்தும்.

சில கட்டுரைகள் பல நூற்றுண்டுகளுக்கு முன் வாழ்ந்த லாவ்ட்ஸ போன்ற சீனத்து ஞானிகளுடைய கருத்துக்களையும் தெய்யார்தி ஷர்தான் போன்ற அண்மையில் காலமான ப்ரெஞ்சு சிந்தனையாளர்களின் முன்னணியில் இருந்தவர்களின் கருத்துக்களையும் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன.

திருமூலரைப் பற்றிய நான்கு கட்டுரைகளில் கடைசி மூன்றும் தொடர்ச்சியாக ஒலி பரப்பு செய்யப் பெற்றவை.

மனித வரலாற்றின் உட்பொருள் பற்றிய கட்டுரை கலைமகளில் வெளியாயிற்று. இதைப் படித்த சில நண்பர்கள் "இதுவரையிலும் தமிழில் இவ்வளவு நுணுக்கமான கருத்துக்கள் வெளிவந்ததில்லை" என்று சொன்னார்கள்.

அதை ஊன்றிப் படித்து அவர்கள் கணிப்பு மெய்யா என்று சொல்ல வேண்டியது வாசகர்களுடைய பொறுப்பு.

'மொழி பெயர்ப்பது எப்படி' என்ற கட்டுரை பல ஆண்டுகளாக ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் ப்ரெஞ்சில் இருந்து ஆங்கிலத்துக்கும் நான் மொழி மாற்றம் செய்யும்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை எப்படிச் சமாளித்தேன் என்பதை நினைவில் கொண்டு எழுதப்பட்டது.

ரஸிகமணி, ராஜாஜி, சொல்லின் செல்வர் ஆகிய இலக்கிய கர்த்தர்களைப்பற்றி வேறு சில கட்டுரைகள் விளக்குகின்றன. 1931-1933-ல் நான் மாணவனாக இருந்து பெரும் பயன் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நினைவு அலைகள் கடைசிக் கட்டுரையில் வீசுகின்றன.

மனித வரலாற்றின் உட்பொருள் பற்றிய கட்டுரை கலைமகளில் வெளியாயிற்று. இதைப் படித்த சில நண்பர்கள் "இதுவரையிலும் தமிழில் இவ்வளவு நுணுக்கமான கருத்துக்கள் வெளிவந்ததில்லை" என்று சொன்னார்கள்.

அதை ஊன்றிப் படித்து அவர்கள் கணிப்பு மெய்யா என்று சொல்ல வேண்டியது வாசகர்களுடைய பொறுப்பு.

'மொழி பெயர்ப்பது எப்படி' என்ற கட்டுரை பல ஆண்டுகளாக ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் ப்ரெஞ்சில் இருந்து ஆங்கிலத்துக்கும் நான் மொழி மாற்றம் செய்யும்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை எப்படிச் சமாளித்தேன் என்பதை நினைவில் கொண்டு எழுதப்பட்டது.

ரஸிகமணி, ராஜாஜி, சொல்லின் செல்வர் ஆகிய இலக்கிய கர்த்தர்களைப்பற்றி வேறு சில கட்டுரைகள் விளக்குகின்றன. 1931-1933-ல் நான் மாணவனாக இருந்து பெரும் பயன் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நினைவு அலைகள் கடைசிக் கட்டுரையில் வீசுகின்றன.

சிதறிக் கிடந்த இத்தனை கட்டுரைகளையும் ஒன்று சேர்த்து புதுவை கம்பன் விழாவில் இந்தத் தொகுப்பு நூலை வெளியிடுவதற்கு மிக்க ஆர்வம் காட்டிய எனது அருமை நண்பர் புலவர் அ. அருணகிரிக்கு என்னுடைய ஆழ்ந்த நன்றி. 15 நாட்களில் இப்புத்தகத்தை அச்சிட்டு தயார் செய்த வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கு என்னுடைய வியப்பு கலந்த பாராட்டு.

**எஸ். மகராஜன்**

சிதறிக் கிடந்த இத்தனை கட்டுரைகளை யும் ஒன்று சேர்த்து புதுவை கம்பன் விழா வில் இந்தத் தொகுப்பு நூலை வெளியிடுவதற்கு மிக்க ஆர்வம் காட்டிய எனது அருமை நண்பர் புலவர் அ. அருணகிரிக்கு என் னுடைய ஆழ்ந்த நன்றி. 15 நாட் களில் இப்புத்தகத்தை அச்சிட்டு தயார் செய்த வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கு என்னுடைய வியப்பு கலந்த பாராட்டு.

**எஸ். மகராஜன்**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கவிதையில் விடுமுறை | ... | 1 |
| 2. | கம்பன் அறிமுக உரை | ... | 7 |
| 3. | தவராஜ யோகி திருமூலர் | ... | 14 |
| 4. | சான்றோர் வாக்கு—திருமூலர் 1, 2, 3 | ... | 22 |
| 5. | மாமனிதன் | ... | 29 |
| 6. | மனித வரலாற்றின் உட்பொருள் | ... | 42 |
| 7. | ராஜாஜியும் டி. கே. சியும் | ... | 54 |
| 8. | சீலம் சிறந்த சிதம்பரநாதன் | ... | 76 |
| 9. | தென் காசிக் கழகத்தின் காப்பாளர் இருவர் | ... | 83 |
| 10. | டி. கே. சியும் எழிலியலும் | ... | 99 |
| 11. | மொழிபெயர்ப்பதெப்படி? | ... | 107 |
| 12. | சீனத்து ஞானி—லாவ்ட்சு | ... | 130 |
| 13. | அண்ணாமலைப் பல்கலைக் கழக நினைவலைகள் | ... | 141 |

# 1. கவிதையில் விடுமுறை

(எஸ். மகராஜன்)

பருவக் காலங்களிலெல்லாம் உள்ளத்துக்கு உகந்தது கோடைக்காலமே என்று சொல்லுகிறார் காளிதாசர். கருப்பூரமும் புனுகும் கலந்த கலவைச் சந்தனத்தை மார்பிலே பூசிக்கொண்டு மாலையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றை நுகர்ந்து மகிழ்வதற்கு உரிய காலம் கோடைக் காலம்.

பரீக்ஷைகள் முடிந்துவிட்டன என்ற ஆனந்தத்தில் மைக்கூடுகளைச் சூறையாடிக் கோடை விடுமுறையை வரவேற்கிறார்கள் சிறுவர்களும் சிறுமியரும். காட்டுப் பாங்கான ஊர்களிலே வாழ்கின்ற எளிய மக்கள் சித்ரா பௌர்ணமி இரவில் வனபோஜனம் செய்வதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் உழைத்துக் களைத்த அலுவலர்கள் கொடைக்கானல், உதகமண்டலம், சிம்லா முதலிய குளுமை நிறைந்த ஊர்களுக்குச் சென்று விடாயாற்றுகிறார்கள். நாளெல்லாம் உழைத்து அலுத்துப் போன உழவு மாடுகள் நுகக்கால் தடிகளிலிருந்து விடுதலை பெற்று வீடு நோக்கிக் குமமாளம் போட்டுக்கொண்டு ஓடுகின்றன.

அரசபாரத்திலிருந்து விடுதலை பெற்ற ராமன், சீதை லக்ஷ்மணர்களோடு உல்லாசமாகக் காடு நோக்கிச் செல்லு

# 1. கவிதையில் விடுமுறை

(எஸ். மகராஜன்)

பருவக் காலங்களிலெல்லாம் உள்ளத்துக்கு உகந்தது கோடைக்காலமே என்று சொல்லுகிறார் காளிதாசர். கருப்பூரமும் புனுகும் கலந்த கலவைச் சந்தனத்தை மார்பிலே பூசிக்கொண்டு மாலையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றை நுகர்ந்து மகிழ்வதற்கு உரிய காலம் கோடைக் காலம்.

பரீக்ஷைகள் முடிந்துவிட்டன என்ற ஆனந்தத்தில் மைக்கூடுகளைச் சூறையாடிக் கோடை விடுமுறையை வரவேற்கிறார்கள் சிறுவர்களும் சிறுமியரும். காட்டுப் பாங்கான ஊர்களிலே வாழ்கின்ற எளிய மக்கள் சித்ரா பௌர்ணமி இரவில் வனபோஜனம் செய்வதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் உழைத்துக் களைத்த அலுவலர்கள் கொடைக்கானல், உதகமண்டலம், சிம்லா முதலிய குளுமை நிறைந்த ஊர்களுக்குச் சென்று விடாயாற்றுகிறார்கள். நாளெல்லாம் உழைத்து அலுத்துப் போன உழவு மாடுகள் நுகக்கால் தடிகளிலிருந்து விடுதலை பெற்று வீடு நோக்கிக் கும்மாளம் போட்டுக்கொண்டு ஓடுகின்றன.

அரசபாரத்திலிருந்து விடுதலை பெற்ற ராமன், சீதை லக்ஷ்மணர்களோடு உல்லாசமாகக் காடு நோக்கிச் செல்லு

கிறான். படாடோபம் நிறைந்த அரண்மனையை விட்டு விட்டு, வளம் கொழிக்கும் நாட்டுப்புறங்கள் வழியாக இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவித்துக்கொண்டே செல்லுகிறார்கள் மூவரும். அங்குள்ள பூஞ்செடிகளிலும் கொடிகளிலும் உள்ள மலர்களைக் கொய்து தன் கூந்தலில் சூடிக்கொள்ளுகிறாள் சீதை. வனத்துக்குள் வந்ததும் அவளுடைய கூந்தலிலுள்ள (அளகத்திலுள்ள) பூக்கள் மகரந்தப் பொடியையும் இனிய மணத்தையும் (மாகந்தத்தையும்) காடு முழுவதும் பரப்புகின்றன. துணைக்கோ பக்கத்தில் ராமன் இருக்கிறான். ஆகவே, அவளுடைய இன்பத்துக்கு எல்லையில்லை என்றே சொல்ல வேண்டும். சொல்லுகிறார் கம்பர் :

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர

பாட்டின் தாளம் எப்படி உல்லாச பாவத்தை உண்டாக்குகிறது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சீதையின் அரைவட்டவடிவிலுள்ள நெற்றி (நுதல்) அவளுக்கு எங்கிருந்து கிடைத்தது? பிறைச்சந்திரன் (மதியின் பாகம்) கொடுத்த நெற்றியாம் அது. ராமனுடைய உதடு (இதழ்) செக்கச்செவேல் என்று சிவந்திருக்கிறது. அந்தச் சிவப்பு அவனுக்கு எங்கிருந்து கிடைத்தது? பவளம் தன் சிவப்பு நிறத்தை நன்கொடையாக அவனுக்குக் கொடுத்திருக்கிறதாம்.

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர,
மதி யின்

கிறான். படாடோபம் நிறைந்த அரண்மனையை விட்டு விட்டு, வளம் கொழிக்கும் நாட்டுப்புறங்கள் வழியாக இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவித்துக்கொண்டே செல்லுகிறார்கள் மூவரும். அங்குள்ள பூஞ்செடிகளிலும் கொடிகளிலும் உள்ள மலர்களைக் கொய்து தன் கூந்தலில் சூடிக்கொள்ளுகிறாள் சீதை. வனத்துக்குள் வந்ததும் அவளுடைய கூந்தலிலுள்ள (அளகத்திலுள்ள) பூக்கள் மகரந்தப் பொடியையும் இனிய மணத்தையும் (மாகந்தத்தையும்) காடு முழுவதும் பரப்புகின்றன. துணைக்கோ பக்கத்தில் ராமன் இருக்கிறான். ஆகவே, அவளுடைய இன்பத்துக்கு எல்லையில்லை என்றே சொல்ல வேண்டும். சொல்லுகிறார் கம்பர் :

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர

பாட்டின் தாளம் எப்படி உல்லாச பாவத்தை உண்டாக்குகிறது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சீதையின் அரைவட்டவடிவிலுள்ள நெற்றி (நுதல்) அவளுக்கு எங்கிருந்து கிடைத்தது ? பிறைச்சந்திரன் (மதியின் பாகம்) கொடுத்த நெற்றியாம் அது. ராமனுடைய உதடு (இதழ்) செக்கச்செவேல் என்று சிவந்திருக்கிறது. அந்தச் சிவப்பு அவனுக்கு எங்கிருந்து கிடைத்தது ? பவளம் தன் சிவப்பு நிறத்தை நன்கொடையாக அவனுக்குக் கொடுத்திருக்கிறதாம்.

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர,
மதி யின்

பாகந் தரு
நுதலா ளொடு
பவளந் தரும்
இத ழான்.

பாரிஸ் நகரத்திலே ஷான் லைஸிலே (சுவர்க்க வயல்) என்று ஒரு சாலையிருக்கிறது. கண்ணையும் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்த சாலை அது. அங்கே காதலர்கள் கைகோத்து விளையாடிக் கொண்டே செல்லுவார்கள். தங்க விக்ரகம் போன்ற ப்ரெஞ்ச் பெண்கள் கன்னங்கரேல் என்ற நிறத்தோடு கூடிய நீக்ரோக் காதலர்களோடு கைகோத்துச் செல்லும் காட்சி விநோதத்தைச் "சுவர்க்க வயலில்" அடிக்கடி பார்க்கலாம். நீலமேக வண்ணனாகிய ராமன் பொன்னொளி வீசுகிற சீதையோடு செல்லும்போது, அவர்களுடைய நிறபேதத்தைக் **(Colour contrast)** கண்டு அனுபவிக்கிறார் கம்பர்.

கறுத்த மழை மேகம் ஒன்று மின்னல் ஒன்றின் கையைப் பிடித்துக்கொண்டு உலாவுவது போலத் தோன்றுகிறது கவிச்சக்கரவர்த்திக்கு.

மேகந் தனி
வருகின் றது
மின்னோ டெனத்

இப்படிச் சொல்லிப் பார்த்தும் மனநிறைவு ஏற்படவில்லை கவிஞருக்கு. கம்பீரமான (தகைசால்) ஆண் யானை (நாகம்) ஒன்று, பெண் யானை (பிடி) ஒன்றுடன், துதிக்கையோடு துதிக்கையைப் பிணைத்துக்கொண்டு, ஜோடியாக நடந்து வருவதுபோல், அவர் காட்சிக்குத் தோன்றுகிறது.

பாகந் தரு
நுதலா ளொடு
பவளந் தரும்
இத ழான்.

பாரிஸ் நகரத்திலே ஷான் லெலிஸே (சுவர்க்க வயல்) என்று ஒரு சாலையிருக்கிறது. கண்ணையும் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்த சாலை அது. அங்கே காதலர்கள் கைகோத்து விளையாடிக் கொண்டே செல்லுவார்கள். தங்க விக்ரகம் போன்ற ப்ரெஞ்ச் பெண்கள் கன்னங்கரேல் என்ற நிறத்தோடு கூடிய நீக்ரோக் காதலர்களோடு கைகோத்துச் செல்லும் காட்சி விநோதத்தைச் "சுவர்க்க வயலில்" அடிக்கடி பார்க்கலாம். நீலமேக வண்ணனாகிய ராமன் பொன்னொளி வீசுகிற சீதையோடு செல்லும்போது, அவர்களுடைய நிறபேதத்தைக் **(Colour contrast)** கண்டு அனுபவிக்கிறார் கம்பர்.

கறுத்த மழை மேகம் ஒன்று மின்னல் ஒன்றின் கையைப் பிடித்துக்கொண்டு உலாவுவது போலத் தோன்றுகிறது கவிச்சக்கரவர்த்திக்கு.

மேகந் தனி
வருகின் றது
மின்றோ டெனத்

இப்படிச் சொல்லிப் பார்த்தும் மனநிறைவு ஏற்படவில்லை கவிஞருக்கு. கம்பீரமான (தகைசால்) ஆண் யானை (நாகம்) ஒன்று. பெண் யானை (பிடி) ஒன்றுடன், துதிக்கையோடு துதிக்கையைப் பிணைத்துக்கொண்டு, ஜோடியாக நடந்து வருவதுபோல், அவர் காட்சிக்குத் தோன்றுகிறது.

தகை சால்
நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென
நட வா.

இந்த அரிய பாடலின் முழு உருவத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால்தான், பாடலுக்குள்ளிருக்கும் தாளம் எப்படி உல்லாசத்தை நம் உள்ளத்தில் தட்டி எழுப்புகிறது என்று தெரியவரும்.

மாகந் தழும்
மகரந் தழும்
அளகம் தர.
மதி யின்
பாகந் தரு
நுதலா ளொடு
பவளந் தரும்
இத ழான்.
மேகந் தனி
வருகின் றது
மின்னோ டெனத்
தகை சால்
நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென,
நட வா.

ரஸிகமணி டி. கே. சி. சொல்லுவார்கள் :—" தமிழ்க் கவிகளைப பாடுவது லகுவான காரியமே; அதற்காக

தகை சால்

நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென
நட வா.

இந்த அரிய பாடலின் முழு உருவத்தை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால்தான், பாடலுக்குள்ளிருக்கும் தாளம் எப்படி உல்லாசத்தை நம் உள்ளத்தில் தட்டி எழுப்புகிறது என்று தெரியவரும்.

மாகந் தழும்
மகரந் தழும்
அளகம் தர.
மதி யின்
பாகந் தரு
நுதலா ளொடு
பவளந் தரும்
இதழ் பூரன்.
மேகந் தனி
வருகின் றது
மின்னோ டெனத்
தகை சால்
நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென,
நட வா.

ரஸிகமணி டி. கே. சி. சொல்லுவார்கள் :—"தமிழ்க் கவிகளைப பாடுவது லகுவான காரியமே; அதற்காக

யாப்பியலோ, காரிகையோ, ஒன்றையும் கற்க வேண்டிய தில்லை. தமிழ்ப் பாடல்களெல்லாம் நடனத்துக்கும் தாளத் துக்கும் இசைக்குமாக ஆதியில் ஆக்கப்பட்டன. அடி என்கிற வார்த்தையானது, நடனத்திலிருந்தே செய்யுள் பிறந்தது என்பதைக் காட்டும். சீர் என்பது, தாளத்தைக் காட்டும். ஆகவே, நடனமும் தாளமும் எந்தத் தமிழ்ச் செய்யுளுக்குப் பின்னும் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று.

நாம் பார்த்த பாடலில் தாளக்கட்டு எப்படி அமைந்து கிடக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட சந்தத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டுகிறார்கள் டி. கே. சி.—

தான னன
தான னன
தான னன
தா னு

இந்தத் தைகாட்டியைத் துணையாகக்கொண்டு "மாகந் தரும் மகரந்தரும்" என்று தொடங்குகிற பாடலைப் பாடிப் பார்த்தால் "விடுமுறை பாவம்" **(Holiday mood)** நம் உள்ளத்தை நிறைத்துவிடும்.

இப்போது, பாடலை, படிப்பதற்குப் பதிலாக, நமக்குத் தெரிந்த ராகத்தில் அல்லது ராகங்களில் பாடிப் பார்ப்போம்.

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர,
மதி யின்

பாகந் தரு
நுதலா ளொடு

யாப்பியலோ, காரிகையோ, ஒன்றையும் கற்க வேண்டியதில்லை. தமிழ்ப் பாடல்களெல்லாம் நடனத்துக்கும் தாளத்துக்கும் இசைக்குமாக ஆதியில் ஆக்கப்பட்டன. அடி என்கிற வார்த்தையானது, நடனத்திலிருந்தே செய்யுள் பிறந்தது என்பதைக் காட்டும். சீர் என்பது, தாளத்தைக் காட்டும். ஆகவே, நடனமும் தாளமும் எந்தத் தமிழ்ச் செய்யுளுக்குப் பின்னும் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று.

நாம் பார்த்த பாடலில் தாளக்கட்டு எப்படி அமைந்து கிடக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட சந்தத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டுகிறார்கள் டி. கே. சி.—

தான னன
தான னன
தான னன
தா ன

இந்தத் தைகாட்டியைத் துணையாகக்கொண்டு "மாகந் தரும் மகரந்தரும்" என்று தொடங்குகிற பாடலைப் பாடிப் பார்த்தால் "விடுமுறை பாவம்" **(Holiday mood)** நம் உள்ளத்தை நிறைத்துவிடும்.

இப்போது, பாடலை, படிப்பதற்குப் பதிலாக, நமக்குத் தெரிந்த ராகத்தில் அல்லது ராகங்களில் பாடிப் பார்ப்போம்.

மாகந் தரும்
மகரந் தரும்
அளகம் தர,
மதி யின்

பாகந் தரு
நுதலா ளொடு

பவளநீ தரும்
இதழான்

மேகந் தனி
வருகின் றது
மின்னே டெனத்
தகை சால்

நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென
நடவா.

பவளநீ தரும்
இதழ் தான்

மேகந் தனி
வருகின் றது
மின்னே டெனத்
தகை சால்

நாகந் தனி
வருகின் றது
பிடியோ டென
நட வா.

# 2. கம்பன்

## அறிமுக உரை

'இருபதாவது நூற்றாண்டில் தமிழ் நாட்டிலே கம்ப னுக்கு இருக்கிற எல்லையில்லாத புகழைப்பற்றி உணரும் போது அயல் நாட்டார் எவரும் இன்றைய சூடான பிரச் சினைகளைப் பற்றிப் பாடிய தற்கால கவிஞன் கம்பன் என்று நினைக்கக்கூடும். இத்தகைய யூகமானது 11 நூற்றாண்டுகள் குறிதப்பிச் செய்த யூகமாகும். ஏனென்றால் கம்பன் கி. பி. 9-வது நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்தவன். அவனுடைய சிறந்தோங்கிய கவிதையானது பல நூற்றாண்டுகளாகியும் தலைதூக்கி நிற்கிறது. ஏனெனில் காலம் கடந்த பிரச்சினை களுக்கு அவன் உருவம் கொடுக்கிறான். அப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் எல்லாக் காலங்களிலும் எழுபவை. காலத்தின் கடைசி எல்லை வரை அந்தப் பிரச்சினைகளுக்கு மனித ஆன்மாவானது ஆர்வத்தோடு விடை தேடிக்கொண்டே நிற்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு அறுதை ஒரு கவிதை மரபு கம்பனுக்கு இருந்தது, தமிழ் இலக்கி யத்தில் இளவேனிற் கால கவிஞர்களுக்கு இருந்த வசதி கம்பனுக்கு இல்லை. கம்பன் வருவதற்கு முன்னால் வல்ல வர்கள் பலர் தமிழ் மொழியைக் கையாண்டுவிட்டார்கள்: அது குழைவாகவும், வேண்டியவாறு வளைந்து கொடுக்கும்

# 2. கம்பன்

## அறிமுக உரை

'இருபதாவது நூற்றாண்டில் தமிழ் நாட்டிலே கம்பனுக்கு இருக்கிற எல்லையில்லாத புகழைப்பற்றி உணரும் போது அயல் நாட்டார் எவரும் இன்றைய சூடான பிரச்சினைகளைப் பற்றிப் பாடிய தற்கால கவிஞன் கம்பன் என்று நினைக்கக்கூடும். இத்தகைய யூகமானது 11 நூற்றாண்டுகள் குறிதப்பிச் செய்த யூகமாகும். ஏனென்றால் கம்பன் கி. பி. 9-வது நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்தவன். அவனுடைய சிறந்தோங்கிய கவிதையானது பல நூற்றாண்டுகளாகியும் தலைதூக்கி நிற்கிறது. ஏனெனில் காலம் கடந்த பிரச்சினைகளுக்கு அவன் உருவம் கொடுக்கிறான். அப்பேர்ப்பட்ட பிரச்சினைகள் எல்லாக் காலங்களிலும் எழுபவை. காலத்தின் கடைசி எல்லை வரை அந்தப் பிரச்சினைகளுக்கு மனித ஆன்மாவானது ஆர்வத்தோடு விடை தேடிக்கொண்டே நிற்கும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு அறுதை ஒரு கவிதை மரபு கம்பனுக்கு இருந்தது. தமிழ் இலக்கியத்தில் இளவேனிற் கால கவிஞர்களுக்கு இருந்த வசதி கம்பனுக்கு இல்லை. கம்பன் வருவதற்கு முன்னால் வல்லவர்கள் பலர் தமிழ் மொழியைக் கையாண்டுவிட்டார்கள்: அது குழைவாகவும், வேண்டியவாறு வளைந்து கொடுக்கும்

நிலைமையிலும் இருந்த காலத்தில், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே இருந்த சங்கம் கவிஞர்கள் தமிழ் மொழிக்கு ஒரு சொகுசான அடக்கத்தையும், கடுமையான எளிமையையும், நல்கிவிட்டார்கள். கி. பி. 2–ஆவது நூற்றாண்டிலிருந்த திருவள்ளுவர் தமிழுக்கு ஒரு வளத்தையும், துல்லியத்தையும், செறிவையும், கொடுத்துவிட்டார். இதைக் கண்ட க்ரால் (Graul) வள்ளுவருடைய குறட்பாக்கள் ஒவ்வொன்றும் வெள்ளிப் பூக்குடலையில் இட்ட தங்க மாம்பழம் போன்றது என்று வருணித்தார். வைணவ ஞானிகளாகிய ஆழ்வார்களும், சைவ ஞானிகளாகிய நாயன்மார்களும் 6-ஆவது நூற்றாண்டிலிருந்து 9-வது நூற்றாண்டு வரையில் அந்த மொழிக்கு அசாதாரணமான ஒரு நெகிழ்வையும், இதயத்திற்குக் கதகதப்பைக் கொடுக்கும் இசைப் பண்ணையும் தமிழுக்குக் கொடுத்தார். கம்பன் தமிழகத்திற்கு வருவதற்கு முன்னமேயே தமிழ் மொழிக்குள் மறைந்து நின்ற ஆற்றல்கள் எல்லாமே முற்றிலும் முன்வந்த கவிஞர்கள் பயன்படுத்திவிட்டார்களோ என்று தோன்றியது. ஆனால் கம்பனுடைய மேதையானது இந்த இடையூறுகளால் பங்கப் படாமல் தமிழ் மொழிக்கு ஒரு புதுக் குரலையும் பேச்சுத் திறனையும் கொடுத்ததோடு கவிதையின் பரிபூரண சுகத்தை எடுத்துக்காட்டிய கருவியாகவும் தமிழை ஆட்டிப் படைத்தது.

அவன் ராம காதையை எடுத்துக்கொண்டான். அது ஒரு எளிய கதை. மகாபாரதத்தைப்போல் சிக்கல் கொண்ட கதையாக அது இருந்திருந்தால் வாசகர்களுடைய கவனத்தைக் கதை கவர்ந்து இருக்கும். பல நூற்றாண்டுகளாக தமிழ் மக்கள் ராம கதையின் பொதுப் போக்கை அறிந்து இருந்தார்கள். அதோடு ஆழ்வார்களுடைய பக்திப் பாடல்களிலே ராம கதையில் உள்ள நிகழ்ச்சிகள் பலவற்றைப் படித்து அனுபவித்து இருந்தார்கள். இவ்வாறு மக்களுக்குத் தெரிந்த கதையைத் தனது

நிலைமையிலும் இருந்த காலத்தில், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே இருந்த சங்கம் கவிஞர்கள் தமிழ் மொழிக்கு ஒரு செருகான அடக்கத்தையும், கடுமையான எளிமையையும், நல்கிவிட்டார்கள். கி. பி. 2-ஆவது நூற்றாண்டிலிருந்த திருவள்ளுவர் தமிழுக்கு ஒரு வளத்தையும், துல்லியத்தையும், செறிவையும், கொடுத்துவிட்டார். இதைக் கண்ட க்ரால் (Graul) வள்ளுவருடைய குறட்பாக்கள் ஒவ்வொன்றும் வெள்ளிப் பூக்குடலையில் இட்ட தங்க மாம்பழம் போன்றது என்று வருணித்தார். வைணவ ஞானிகளாகிய ஆழ்வார்களும், சைவ ஞானிகளாகிய நாயன்மார்களும் 6-ஆவது நூற்றாண்டிலிருந்து 9-வது நூற்றாண்டு வரையில் அந்த மொழிக்கு அசாதாரணமான ஒரு நெகிழ்வையும், இதயத்திற்குக் கதகதப்பைக் கொடுக்கும் இசைப் பண்ணையும் தமிழுக்குக் கொடுத்தார். கம்பன் தமிழகத்திற்கு வருவதற்கு முன்னமேயே தமிழ் மொழிக்குள் மறைந்து நின்ற ஆற்றல்கள் எல்லாமே முற்றிலும் முன்வந்த கவிஞர்கள் பயன்படுத்திவிட்டார்களோ என்று தோன்றியது. ஆனால் கம்பனுடைய மேதையானது இந்த இடையூறுகளால் பங்கப் படாமல் தமிழ் மொழிக்கு ஒரு புதுக் குரலையும் பேச்சுத் திறனையும் கொடுத்ததோடு கவிதையின் பரிபூரண சுகத்தை எடுத்துக்காட்டிய கருவியாகவும் தமிழை ஆட்டிப் படைத்தது.

அவன் ராம காதையை எடுத்துக்கொண்டான். அது ஒரு எளிய கதை. மகாபாரதத்தைப்போல் சிக்கல் கொண்ட கதையாக அது இருந்திருந்தால் வாசகர்களுடைய கவனத்தைக் கதை கவர்ந்து இருக்கும். பல நூற்றாண்டுகளாக தமிழ் மக்கள் ராம கதையின் பொதுப் போக்கை அறிந்து இருந்தார்கள். அதோடு ஆழ்வார்களுடைய பக்திப் பாடல்களிலே ராம கதையில் உள்ள நிகழ்ச்சிகள் பலவற்றைப் படித்து அனுபவித்து இருந்தார்கள். இவ்வாறு மக்களுக்குத் தெரிந்த கதையைத் தனது

கவிதைக்குப் பொருளாக எடுத்துக்கொள்வதிலே உள்ள வசதி என்னவென்பதை நன்ருக அறிந்தான். வாசகர்க்ளுக்குக் கதை தெரியுமாகையால் தன்னுடைய கவிதையிலே துய்த்து அந்தக் கதையைச் சொல்லும்போது அவர்களுடைய கவனம் முழுவதையும் கதையில் இருந்து ஈர்த்து தன்னுடைய படைப்பாற்றலிலும் கதைக்கூற்றுத்திறனிலும், நாடகப் பாங்கிலும். உணர்ச்சிப் பாடல்களிலும், வாசகர்களுடைய கவனத்தை முழுக்க முழுக்கக் கவர்ந்து விடலாம் என்று கம்பன் அறிந்து இருந்தான். உண்மையில் அவனுடைய ராமாயண "அவை அடக்க"த்தில் தன்னுடைய தெய்வ மாக்கவியின் மாட்சியைத் தெரிவிப்பதற்காகவே ராமாயண காதையை இயம்புவதாகப் பெருமையோடு சொல்லுகிருன். இந்த முயற்சியில் கம்பன் அதிசயிக்கத் தக்க வெற்றியைப் பெற்றிருக்கிருன்.

உண்மையில் கம்ப ராமாயணம் பிறந்த காரணத்தால் தமிழ்க் கவிதையின் எதிர்கால ஆக்கமே மாறி அமைந்து விட்டது. அவனுடைய அபாரமான நூலானது சென்ற 11 நூற்றுண்டுகளாகத் தமிழர்களுடைய கவி உணர்வை நல்ல முறையில் போதித்து ஆழ்ந்து உருவாக்கியிருக்கிறது. கம்பன் காலத்திலிருந்து தற்காலம் வரையில் எண்ணறிய கற்றோர்கள் கம்ப ராமாயணப் பாடல்களைப் பாடியும் அவற்றை வைத்துக்கொண்டு கதாகாலக்ஷேபங்கள் செய்தும் கோடிக்கணக்கான மக்களை மயிர்க்கூச்செறியச் செய்திருக்கிருர்கள். இவ்வாறு காலக்ஷேபம் செய்கிறவர்களைப் பேணுவதற்காகத் தமிழ் மன்னர்கள் நில மானியங்கள் பல வழங்கியிருக்கிருர்கள். தமிழகத்தையடுத்து இருக்கும் கேரளத்திலும், கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் உள்ள கல்வெட்டுகளைப் பார்க்கும்போது, தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்களும் கம்ப ராமாயணம் கதா காலக்ஷேபங்களைக் கேட்டு அனுபவித்து இருக்கிருர்கள் என்று தெரிகிறது, இப்படியாக சாமானிய மக்களுக்குக் கல்வியையும் பண்பாடுகளையும் ஊட்டும் சக்தி வாய்ந்த ஒரு கருவி

கவிதைக்குப் பொருளாக எடுத்துக்கொள்வதிலே உள்ள வசதி என்னவென்பதை நன்றாக அறிந்தான். வாசகர் களுக்குக் கதை தெரியுமாகையால் தன்னுடைய கவிதையிலே துய்த்து அந்தக் கதையைச் சொல்லும்போது அவர்களு டைய கவனம் முழுவதையும் கதையில் இருந்து ஈர்த்து தன்னுடைய படைப்பாற்றலிலும் கதைக்கூற்றுத்திறனிலும், நாடகப் பாங்கிலும். உணர்ச்சிப் பாடல்களிலும், வாசகர் களுடைய கவனத்தை முழுக்க முழுக்கக் கவர்ந்து விடலாம் என்று கம்பன் அறிந்து இருந்தான். உண்மையில் அவனு டைய ராமாயண "அவை அடக்க"த்தில் தன்னுடைய தெய்வ மாக்கவியின் மாட்சியைத் தெரிவிப்பதற்காகவே ராமாயண காதையை இயம்புவதாகப் பெருமையோடு சொல்லுகிறான். இந்த முயற்சியில் கம்பன் அதிசயிக்கத் தக்க வெற்றியைப் பெற்றிருக்கிறான்.

உண்மையில் கம்ப ராமாயணம் பிறந்த காரணத்தால் தமிழ்க் கவிதையின் எதிர்கால ஆக்கமே மாறி அமைந்து விட்டது. அவனுடைய அபாரமான நூலானது சென்ற 11 நூற்றாண்டுகளாகத் தமிழர்களுடைய கவி உணர்வை நல்ல முறையில் போதித்து ஆழ்ந்து உருவாக்கியிருக்கிறது. கம்பன் காலத்திலிருந்து தற்காலம் வரையில் எண்ணறிய கற்றோர்கள் கம்ப ராமாயணப் பாடல்களைப் பாடியும் அவற்றை வைத்துக்கொண்டு கதாகாலக்ஷேபங்கள் செய்தும் கோடிக்கணக்கான மக்களை மயிர்க்கூச்செறியச் செய்திருக் கிறார்கள். இவ்வாறு காலக்ஷேபம் செய்கிறவர்களைப் பேணுவதற்காகத் தமிழ் மன்னர்கள் நில மானியங்கள் பல வழங்கியிருக்கிறார்கள். தமிழகத்தையடுத்து இருக்கும் கேரளத்திலும், கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் உள்ள கல்வெட்டுகளைப் பார்க்கும்போது, தமிழைத் தாய் மொழி யாகக் கொள்ளாத மக்களும் கம்ப ராமாயணம் கதா கால க்ஷேபங்களைக் கேட்டு அனுபவித்து இருக்கிறார்கள் என்று தெரிகிறது, இப்படியாக சாமானிய மக்களுக்குக் கல்வி யையும் பண்பாடுகளையும் ஊட்டும் சக்தி வாய்ந்த ஒரு கருவி

யாக ஆகிவிட்டான் கம்பன்; தென்னாட்டிலுள்ள மக்களுடைய பார்வை, ஒழுக்கம், அழகு உணர்ச்சி, பக்திச் சுவை ஆகிய வற்றைக் கம்பன் உருவாக்கியிருக்கிறான். நாட்டு மக்களு டைய நினைவிலே ஒரு பகுதியாகிவிட்டது கம்பனுடைய ராமாயணம். எல்லாக் கவிஞர்களும், புலவர்களும், அவனைக் கவிச் சக்கரவர்த்தி என்று போற்றினார்கள். கவிஞர்களிலே மிகச் சிறந்த கல்வி படைத்தவன் கம்பன், என்பது இலக்கிய வரலாற்று உண்மை. தொடர்ச்சியாகவும், மாதக் கணக் காகவும், கம்ப ராமாயணத்தைக் கதா காலக்ஷேபம் செய்ப வர்கள் ஆடியும், பாடியும் விளக்கி வருகிறார்கள். இன்றும் இருபதாயிரம் முதல் நாற்பதாயிரம் ஆடவரும்,பெண்டிரும், குழந்தைகளும் இந்தக் காலக்ஷேபங்களை மிகக் கவனத்துடன் கேட்டுக் கம்பனுடைய பாடல்களை இன்பத்தோடு துய்க் கிறார்கள் என்றால் இது ஒரு அற்புதமானது. ஒரு நாட்டு மக்களுடைய கவனத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஈர்த்து வைத்திருக்கிற ஒரு கவிஞனைக் காலம் கடந்த கவிஞன் என்பதுதான் சொல்லவேண்டும். கம்பன் ஒரு நாளும் காலாவதியான கவிஞன் ஆகமாட்டான். ஏனென்றால் அவன் நம்மிடமும் உலகத்தில் எல்லோரிடமும் பேசுவது நாளையக் குரலில்.

## கம்பனுடைய காலம்

கம்பனுடைய காலத்தைப்பற்றி புலவர்களிடையே எவ்வளவோ கருத்து வேறுபாடு இருக்கிறது. ஒரு சாரார் கம்பன் கி.பி. 9ஆவது நூற்றாண்டில் இருந்ததாகவும், இன்னொரு சாரார், கி.பி. 12ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த தாகவும் கூறுகிறார்கள். 9ஆவது நூற்றாண்டில் கம்பன் வாழ்ந்தான் என்று சொல்லுவதே உசிதமெனப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவழுந்தூரில் கம்பன் பிறந்தான், என்பதிலே புலவர்களிடையே யாதொரு கருத்து வேறுபாடுகளும் இல்லை. சடையப்ப வள்ளல் என்ற நிலக்

யாக ஆகிவிட்டான் கம்பன்; தென்னாட்டிலுள்ள மக்களுடைய பார்வை, ஒழுக்கம், அழகு உணர்ச்சி, பக்திச் சுவை ஆகிய வற்றைக் கம்பன் உருவாக்கியிருக்கிறான். நாட்டு மக்களு டைய நினைவிலே ஒரு பகுதியாகிவிட்டது கம்பனுடைய ராமாயணம். எல்லாக் கவிஞர்களும், புலவர்களும், அவனைக் கவிச் சக்கரவர்த்தி என்று போற்றினார்கள். கவிஞர்களிலே மிகச் சிறந்த கல்வி படைத்தவன் கம்பன், என்பது இலக்கிய வரலாற்று உண்மை. தொடர்ச்சியாகவும், மாதக் கணக் காகவும், கம்ப ராமாயணத்தைக் கதா காலக்ஷேபம் செய்ப வர்கள் ஆடியும், பாடியும் விளக்கி வருகிறார்கள். இன்றும் இருபதாயிரம் முதல் நாற்பதாயிரம் ஆடவரும்,பெண்டிரும், குழந்தைகளும் இந்தக் காலக்ஷேபங்களை மிகக் கவனத்துடன் கேட்டுக் கம்பனுடைய பாடல்களை இன்பத்தோடு துய்க் கிறார்கள் என்றால் இது ஒரு அற்புதமானது. ஒரு நாட்டு மக்களுடைய கவனத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஈர்த்து வைத்திருக்கிற ஒரு கவிஞனைக் காலம் கடந்த கவிஞன் என்பதுதான் சொல்லவேண்டும். கம்பன் ஒரு நாளும் காலாவதியான கவிஞன் ஆகமாட்டான். ஏனென்றால் அவன் நம்மிடமும் உலகத்தில் எல்லோரிடமும் பேசுவது நாளையக் குரலில்.

## கம்பனுடைய காலம்

கம்பனுடைய காலத்தைப்பற்றி புலவர்களிடையே எவ்வளவோ கருத்து வேறுபாடு இருக்கிறது. ஒரு சாரார் கம்பன் கி.பி. 9ஆவது நூற்றாண்டில் இருந்ததாகவும், இன்னொரு சாரார், கி.பி. 12ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த தாகவும் கூறுகிறார்கள். 9ஆவது நூற்றாண்டில் கம்பன் வாழ்ந்தான் என்று சொல்லுவதே உசிதமெனப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருவழுந்தூரில் கம்பன் பிறந்தான், என்பதிலே புலவர்களிடையே யாதொரு கருத்து வேறுபாடுகளும் இல்லை. சடையப்ப வள்ளல் என்ற நிலக்

கிழார் கம்பனிடத்திலே மிகுந்த மதிப்பு உடையவராய் இருந்தார் என்றும், அவரைப் பாதுகாத்து வந்தார் என்றும் அவருடைய அரவணைப்பிலே கம்பனுடைய கவிதை நன்கு வெளிவந்தது என்றும் எல்லாப் புலவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

கம்பனைப் பற்றிச் சாமானிய மக்கள் பல கற்பனைக் கதைகளைப் நெசவு செய்திருக்கிறார்கள்; அந்தக் கதைகளை வரலாறுகளாக எடுத்துக் கொண்டு யூகம் செய்வது தவறு. அவனுடைய மிகச் சிறந்த கவிதையினை அவர்கள் எவ்வாறு மதிப்பிட்டார்கள் என்பதற்கு மாத்திரம் அக்கதைகளைப் பயன்படுத்தலாம்.

சோழ மன்னனுடைய அரசவைக் கவிஞனாக ஒட்டக் கூத்தர் என்பவர் இருந்தார் என்றும் அவர் காலத்தவரே கம்பன் என்றும் ஒரு கதை சொல்லுகிறது. ஒட்டக் கூத்தருக்கு இருந்த இலக்கணப் புலமையாலும் செய்யுள் இயற்றும் திறமையாலும் ஒட்டக்கூத்தர் தம் காலத்துக் கவிஞர்கள் மீது ஒரு கொடுங்கோன்மை செலுத்திவந்தார். ஒரு சிறு இலக்கணப் பிழையோ, யாப்பு வழுவோ அறியாமையினால் செய்த அவர் காலத்துக் கவிஞர்களை அவர் சிரச் சேதமே செய்துவந்தார் என்றும் சோழ மன்னன் அவர் செய்வதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தான் என்றும் கதைகளின் மூலம் நாம் அறிகிறோம். ஆனால் சோழ மன்னன் அவைக்குக் கம்பன் வந்த பிறகு அரசனிடத்திலே ஒட்டக் கூத்தருக்கு இருந்த செல்வாக்கானது கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்ந்து கொண்டே போய்க் கடைசியில் கம்பனே அரசவைக் கவிஞனாக ஆகிவிட்டான். கம்பன் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம அவனுடைய சொல்லின்பம் ஒட்டக் கூத்தரின் செய்யுங்களைக் காட்டிலும் மேலோங்கி நின்றது.

ஒரு நாள் அரசன் இரு கவிஞர்களையும் அழைத்து ராம காதையை கவிதையாக எழுதிக் கொண்டு வரும்படி பணித்

கிழார் கம்பனிடத்திலே மிகுந்த மதிப்பு உடையவராய் இருந்தார் என்றும், அவரைப் பாதுகாத்து வந்தார் என்றும் அவருடைய அரவணைப்பிலே கம்பனுடைய கவிதை நன்ருக வெளிவந்தது என்றும் எல்லாப் புலவர்களும் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

கம்பனைப் பற்றிச் சாமானிய மக்கள் பல கற்பனைக் கதைகளைப் நெசவு செய்திருக்கிருர்கள்; அந்தக் கதைகளை வரலாறுகளாக எடுத்துக் கொண்டு யூகம் செய்வது தவறு. அவனுடைய மிகச் சிறந்த கவிதையினை அவர்கள் எவ்வாறு மதிப்பிட்டார்கள் என்பதற்கு மாத்திரம் அக்கதைகளைப் பயன்படுத்தலாம்.

சோழ மன்னனுடைய அரசவைக் கவிஞனுக ஒட்டக் கூத்தர் என்பவர் இருந்தார் என்றும் அவர் காலத்தவரே கம்பன் என்றும் ஒரு கதை சொல்லுகிறது. ஒட்டக் கூத்தருக்கு இருந்த இலக்கணப் புலமையாலும் செய்யுள் இயற்றும் திறமையாலும் ஒட்டக்கூத்தர் தம் காலத்துக் கவிஞர்கள் மீது ஒரு கொடுங்கோன்மை செலுத்திவந்தார். ஒரு சிறு இலக்கணப் பிழையோ, யாப்பு வழுவோ அறியாமையினுல் செய்த அவர் காலத்துக் கவிஞர்களை அவர் சிரச் சேதமே செய்துவந்தார் என்றும் சோழ மன்னன் அவர் செய்வதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தான் என்றும் கதைகளின் மூலம் நாம் அறிகிருேம். ஆனல் சோழ மன்னன் அவைக்குக் கம்பன் வந்த பிறகு அரசனிடத்திலே ஒட்டக் கூத்தருக்கு இருந்த செல்வாக்கானது கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்ந்து கொண்டே போய்க் கடைசியில் கம்பனே அரசவைக் கவிஞனுக ஆகிவிட்டான். கம்பன் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம அவனுடைய சொல்லின்பம் ஒட்டக் கூத்தரின் செய்யுங்களைக் காட்டிலும் மேலோங்கி நின்றது.

ஒரு நாள் அரசன் இரு கவிஞர்களையும் அழைத்து ராமகாதையை கவிதையாக எழுதிக் கொண்டு வரும்படி பணித்

தார். கொஞ்ச காலத்திற்குப் பின் இருவரையும் அழைத்து எதுவரையிலும் எழுதியிருக்கிறீர்கள் என்று சோழமன்னன் கேட்டான். தான் 6-வது காண்டம் வரையிலும் வந்து விட்டதாகவும், போர் தொடங்குவதற்கு முன்னால் ராமனுடைய வானர சைனியம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துக்கொண்டிருக்கும் கட்டத்திற்கு வந்துவிட்டதாகவும் கம்பன் சொன்னான். கம்பன் முதல் காண்டத்தையே முடிக்கவில்லை என்று தெரிந்திருந்த ஒட்டக் கூத்தர் சேதுபந்தனத்திலிருந்து ஒரு பாட்டைக் கம்பன் பாடட்டும் என்று கேட்டார். உடனேயே கம்பன் அனயாசமாகக் கீழ்க்கண்ட பாட்டைப் பாடினான்:

> குமிதலிட்ட கூத்தரில் குலவரைத்
> திமிதமிட்டு.............................

இந்த அழகிய பாட்டைக் கேட்ட ஒட்டக் கூத்தருக்கு எரிச்சல் உண்டாய்விட்டது. பாட்டில் வரும் துமி என்ற சொல் புழக்கத்தில் இல்லாத ஒருசொல் என்று கம்பன் மீது குற்றம் சாட்டினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் 'துளி' என்று பொருள்படும் என்று சொன்னான் கம்பன். 'துளி' என்ற 'சொல்' 'துமி' என்று நாப்பழக்கத்திலும் திரியவில்லையென்று வாதாடினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் மக்கள் நாவிலே நடனம் ஆடும் சொல் என்று கம்பன் எதிர் வாதம் செய்தான். கம்பனுடைய வாதத்தை மெய்ப்பிக்கும்படி சவால் விடுத்தார் ஒட்டக்கூத்தர். உடனே கம்பன் தனக்குப் போட்டியாக உள்ள கவிஞரையும், அரசனையும் நகரத்திற்குள் அழைத்துச்சென்றான். ஓர் இடைச்சி தன் வீட்டின் முற்றத்தில் தயிர் கடைந்து கொண்டிருந்ததையும் அவளைச் சுற்றியுள்ள குழந்தைகளைப் பார்த்து அவள் 'குழந்தைகளே, தள்ளிப் போங்கள், இல்லையென்றால் உங்கள் மீது துமிவிழுந்துவிடும் என்றும் சொன்னதைக் கேட்டார்கள். இவ்வாறு அவள் சொல்லி விட்டு திடீர் என்று மறைந்துவிட்டாள். கலைகளுக்கெல்லாம்

தார். கொஞ்ச காலத்திற்குப் பின் இருவரையும் அழைத்து எதுவரையிலும் எழுதியிருக்கிறீர்கள் என்று சோழமன்னன் கேட்டான். தான் 6—வது காண்டம் வரையிலும் வந்து விட்டதாகவும், போர் தொடங்குவதற்கு முன்னால் ராமனுடைய வானர சைனியம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துக்கொண்டிருக்கும் கட்டத்திற்கு வந்துவிட்டதாகவும் கம்பன் சொன்னான். கம்பன் முதல் காண்டத்தையே முடிக்கவில்லை என்று தெரிந்திருந்த ஒட்டக் கூத்தர் சேதுபந்தனத்திலிருந்து ஒரு பாட்டைக் கம்பன் பாடட்டும் என்று கேட்டார். உடனேயே கம்பன் அநாயாசமாகக் கீழ்க்கண்ட பாட்டைப் பாடினான்:

குமிதனிட்ட கூத்தரில் குலவரைத்
திமிதமிட்டு...............................

இந்த அழகிய பாட்டைக் கேட்ட ஒட்டக் கூத்தருக்கு எரிச்சல் உண்டாய்விட்டது. பாட்டில் வரும் துமி என்ற சொல் புழக்கத்தில் இல்லாத ஒருசொல் என்று கம்பன் மீது குற்றம் சாட்டினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் 'துளி' என்று பொருள்படும் என்று சொன்னான் கம்பன். 'துளி' என்ற 'சொல்' 'துமி' என்று நாப்பழக்கத்திலும் திரியவில்லையென்று வாதாடினார் ஒட்டக்கூத்தர். 'துமி' என்ற சொல் மக்கள் நாவிலே நடனம் ஆடும் சொல் என்று கம்பன் எதிர் வாதம் செய்தான். கம்பனுடைய வாதத்தை மெய்ப்பிக்கும்படி சவால் விடுத்தார் ஒட்டக்கூத்தர். உடனே கம்பன் தனக்குப் போட்டியாக உள்ள கவிஞரையும், அரசனையும் நகரத்திற்குள் அழைத்துச்சென்றான். ஓர் இடைச்சி தன் வீட்டின் முற்றத்தில் தயிர் கடைந்து கொண்டிருந்ததையும் அவளைச் சுற்றியுள்ள குழந்தைகளைப் பார்த்து அவள் 'குழந்தைகளே, தள்ளிப் போங்கள், இல்லையென்றால் உங்கள் மீது துமிவிழுந்துவிடும் என்றும் சொன்னதைக் கேட்டார்கள். இவ்வாறு அவள் சொல்லி விட்டு திடீர் என்று மறைந்துவிட்டாள். கலைகளுக்கெல்லாம்

தெய்வமாக இருக்கும் சரஸ்வதி தேவியே ஆய்ச்சிப் பெண்ணாக வந்து கம்பன் சார்பாகப் பேசிவிட்டு மறைந்து விட்டாள் என்பதை அறிந்தார் ஒட்டக்கூத்தர்.

ஒட்டக்கூத்தரின் இதயம் உடைந்தது. அவர் வீட்டிற்குச் சென்று தான் அகராதியைக் கலந்து கலந்து மிகத் தொல்லைப்பட்டு எழுதிய பாடல்களையெல்லாம் கிழித்தெறிய ஆரம்பித்தார். அச்சமயம் கம்பன் ஒட்டக் கூத்தர் வீட்டு வழியாகச் செல்ல நேர்ந்தது. உத்தர காண்டத்தைத் தவிர முந்திய காண்டங்கள் எல்லாவற்றையும் ஒட்டக்கூத்தர் கிழித்தெறிந்துவிட்டார் என்று கம்பனுக்குத் தெரிந்தது. உடனே மிகுந்த பெருந்தன்மையோடு ஒட்டக்கூத்தரை இடைமறித்து உத்தர காண்டத்தையாவது கிழிக்காமல் கொடுக்கவேண்டுமென்று கேட்டு அவருடைய அனுமதியின் பேரில் அவர் எழுதிய உத்தர காண்டத்தைத் தாம் இன்னும் எழுதாத ராமாயணக் கதையோடு சேர்த்துக்கொள்ளுவதாகச் சொன்னார்.

ஆழ்ந்து யோசிக்கும் தன்மையை இழக்கத் துணிந்து விட்ட ஒரு சமுதாயமானது கம்பனுடைய காவியத்தை அறிந்துகொள்ளுவது நலம். கம்பனுக்கு மனித வாழ்க்கையின் பொருள் என்ன என்று கண்டு பிடிப்பதிலே மிகுந்த ஆர்வம் இருந்தது. அவனுடைய இதிகாசத்திலே வாழ்க்கையின் சில்லரைப் பிரச்சினைகளை அடக்கி வைத்துவிட்டு வாழ்க்கையின் முக்கியப் பிரச்சினைகளை நாம் முழு கவனத்துடன் கவனிக்கும்படி அவன் செய்கிறான். உண்மை, அழகு, உத்தமம், ஆகிய குணங்களை உள் உணர்வோடும், ஆற்றலோடும் கம்பன் எடுத்துச் சொல்லும்போது அது நம்முடைய ஆன்மாவுக்கே அரிய உணவாகிவிடுகிறது, நமது ஆணவம் அதன்மூலம் கலைந்து போகிறது, ஒரு புது ஆனந்தப் பிறவியே உண்டாகிவிடுகிறது. கம்பனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலமாக இந்த ஆனந்தத்தில் ஒரு சிறிதேனும் வெளிப்படும் என்று நம்புகிறேன்.

தெய்வமாக இருக்கும் சரஸ்வதி தேவியே ஆய்ச்சிப் பெண்ணாக வந்து கம்பன் சார்பாகப் பேசிவிட்டு மறைந்து விட்டாள் என்பதை அறிந்தார் ஒட்டக்கூத்தர்.

ஒட்டக்கூத்தரின் இதயம் உடைந்தது. அவர் வீட்டிற்குச் சென்று தான் அகராதியைக் கலந்து கலந்து மிகத் தொல்லைப்பட்டு எழுதிய பாடல்களையெல்லாம் கிழித்தெறிய ஆரம்பித்தார். அச்சமயம் கம்பன் ஒட்டக் கூத்தர் வீட்டு வழியாகச் செல்ல நேர்ந்தது. உத்தர காண்டத்தைத் தவிர முந்திய காண்டங்கள் எல்லாவற்றையும் ஒட்டக்கூத்தர் கிழித்தெறிந்துவிட்டார் என்று கம்பனுக்குத் தெரிந்தது. உடனே மிகுந்த பெருந்தன்மையோடு ஒட்டக்கூத்தரை இடைமறித்து உத்தர காண்டத்தையாவது கிழிக்காமல் கொடுக்கவேண்டுமென்று கேட்டு அவருடைய அனுமதியின் பேரில் அவர் எழுதிய உத்தர காண்டத்தைத் தாம் இன்னும் எழுதாத ராமாயணக் கதையோடு சேர்த்துக்கொள்ளுவதாகச் சொன்னார்.

ஆழ்ந்து யோசிக்கும் தன்மையை இழக்கத் துணிந்து விட்ட ஒரு சமுதாயமானது கம்பனுடைய காவியத்தை அறிந்துகொள்ளுவது நலம். கம்பனுக்கு மனித வாழ்க்கையின் பொருள் என்ன என்று கண்டு பிடிப்பதிலே மிகுந்த ஆர்வம் இருந்தது. அவனுடைய இதிகாசத்திலே வாழ்க்கையின் சில்லரைப் பிரச்சினைகளை அடக்கி வைத்துவிட்டு வாழ்க்கையின் முக்கியப் பிரச்சினைகளை நாம் முழு கவனத்துடன் கவனிக்கும்படி அவன் செய்கிறான். உண்மை, அழகு, உத்தமம், ஆகிய குணங்களை உள் உணர்வோடும், ஆற்றலோடும் கம்பன் எடுத்துச் சொல்லும்போது அது நம்முடைய ஆன்மாவுக்கே அரிய உணவாகிவிடுகிறது, நமது ஆணவம் அதன்மூலம் கலைந்து போகிறது, ஒரு புது ஆனந்தப் பிறவியே உண்டாகிவிடுகிறது. கம்பனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலமாக இந்த ஆனந்தத்தில் ஒரு சிறிதேனும் வெளிப்படும் என்று நம்புகிறேன்.

# 3. தவராஜ யோகி திருமூலர்

தமிழ் நாட்டில் இருந்த ஞானிகளிலெல்லாம் சிறந்தவர் திருமூலர். பதினென் சித்தர்களும் அவரையே தலைவராகவும் சித்தர்பள்ளிக்கூடத்தின் முதல்வராகவும் கொண்டாடுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவர் வாழ்ந்தாரென்று புராணங்கள் கூறும், ஆனால், தற்கால ஆராய்ச்சியாளர்கள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் திருமூலர் வாழ்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். கி. பி. ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தவரும் சைவக் குரவர்களில் ஒருவருமான சுந்தர மூர்த்திநாயனார் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், திருமூலரைக் குறிப்பிட்டுக் கீழ்க் கண்டவாறு பாடுகிறார்.

> எம்பிரான் திருமூலன்
> அடியார்க்கும் அடியேன்.

ஆகவே, சுந்தர மூர்த்தி நாயனார், 'எம்பிரான்' என்று கூறுமளவுக்குப் பல ஆண்டுகள் அவரை முத்தியவராகத் திருமூலர் இருந்திருக்கவேண்டும்.

"அன்பே சிவம்" என்ற செய்தியே திருமூலருடைய சித்தாந்தத்திலே முக்கிய இடம் பெற்றிருக்கிறது.

# 3. தவராஜ யோகி திருமூலர்

தமிழ் நாட்டில் இருந்த ஞானிகளிலெல்லாம் சிறந்தவர் திருமூலர். பதினென் சித்தர்களும் அவரையே தலைவராகவும் சித்தர்பள்ளிக்கூடத்தின் முதல்வராகவும் கொண்டாடுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவர் வாழ்ந்தாரென்று புராணங்கள் கூறும், ஆனால், தற்கால ஆராய்ச்சியாளர்கள் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் திருமூலர் வாழ்ந்திருக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். கி. பி. ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தவரும் சைவக் குரவர்களில் ஒருவருமான சுந்தர மூர்த்திநாயனார் தாம் பாடிய திருத் தொண்டத் தொகையில், திருமூலரைக் குறிப்பிட்டுக் கீழ்க் கண்டவாறு பாடுகிறார்.

எம்பிரான் திருமூலன்
அடியார்க்கும் அடியேன்.

ஆகவே, சுந்தர மூர்த்தி நாயனார், 'எம்பிரான்' என்று கூறுமளவுக்குப் பல ஆண்டுகள் அவரை முந்தியவராகத் திருமூலர் இருந்திருக்கவேண்டும்.

"அன்பே சிவம்" என்ற செய்தியே திருமூலருடைய சித்தாந்தத்திலே முக்கிய இடம் பெற்றிருக்கிறது.

அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

என்று மிகுந்த தெளிவோடும் உறுதியோடும். திருமூலர் பாடுகிறார்.

"அன்பே சிவம்" என்ற உண்மைக்கு ஓர் உருக்கமான எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது திருமூலரின் வாழ்க்கை இமயத்திலே திருக்கயிலாய மலையிலே வாழ்ந்து வந்த முனிவர் அவர், ஒருநாள் பொதிகை மலையிலிருந்த அகத்தியரைச் சந்திப்பதற்காக வானமார்க்கமாகப் பறந்து வந்தார். வரும்வழியிலே திருவாவடுதுறையில் இறங்கி அங்குள்ள கோயிலில் சிவனை வழிபட்டுப் பின் காவிரி யாற்றுக்குச் சென்றார். ஆற்றங்கரையிலே பசுக் கூட்டம் ஒன்று கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அன்பே சிவமாக வந்த முனிவர் பசுக்களின் துன்பத்தைப் போக்க முனைந்தார். சாத்தனூர் என்ற ஊரிலிருந்து இந்தப் பசுக்களை காவிரிக் கரைக்கு மேய்த்து வந்த மூலன் என்ற இடையனுடைய பிணம் கரையில் கிடப்பதையும், பிணத்தைச் சுற்றி நின்று பசுக்கள் சில கண்ணீர் விடுவதையும், சில பசுக்கள் இறந்துபோன மூலனுடைய உடம்பை மோந்து, மோந்து குழைவதையும் கண்ட முனிவர், தம்முடைய ஸ்தூல உடம்பைக் கீழே போட்டுவிட்டு தம் உயிரை மூலனுடைய உடலில் பாய்ச்சினார்; மூலன் உயிர் பெற்று எழுந்தவுடன் பசுக்கள் மகிழ்ச்சியினால் மூலனுடைய உடம்பை நாவார நக்கி மோந்து துள்ளிக் கனைத்து விளையாடின. பின்னர் பசுக்கள் தம் கன்றுகளை நினைத்து சாத்தனூரை நோக்கிச் செல்ல மூலரும் அவை பின் சென்று சாத்தனூரையடைந்தார். இடையன் மூலனுடைய மனைவி முனிவர் மூலரை தன் நாயகன் என நினைத்துத் தீண்டவும், மூலர்

அன்பும் சிவமுமிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

என்று மிகுந்த தெளிவோடும் உறுதியோடும். திருமூலர் பாடுகிறார்.

''அன்பே சிவம்'' என்ற உண்மைக்கு ஓர் உருக்க மான எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது திருமூலரின் வாழ்க்கை இமயத்திலே திருக்கயிலாய மலையிலே வாழ்ந்து வந்த முனிவர் அவர், ஒருநாள் பொதிகை மலையிலிருந்த அகத்தியரைச் சந்திப்பதற்காக வானமார்க்கமாகப் பறந்து வந்தார். வரும்வழியிலே திருவாவடுதுறையில் இறங்கி அங்குள்ள கோயிலில் சிவனை வழிபட்டுப் பின் காவிரி யாற்றுக்குச் சென்றார். ஆற்றங்கரையிலே பசுக் கூட்டம் ஒன்று கண்ணீர் விட்டுக் கதறிக் கொண் டிருந்ததைப் பார்த்தார். அன்பே சிவமாக வந்த முனிவர் பசுக்களின் துன்பத்தைப் போக்க முனைந் தார். சாத்தனூர் என்ற ஊரிலிருந்து இந்தப் பசுக்களை காவிரிக் கரைக்கு மேய்த்து வந்த மூலன் என்ற இடைய னுடைய பிணம் கரையில் கிடப்பதையும், பிணத்தைச் சுற்றி நின்று பசுக்கள் சில கண்ணீர் விடுவதையும், சில பசுக்கள் இறந்துபோன மூலனுடைய உடம்பை மோந்து, மோந்து குழைவதையும் கண்ட முனிவர், தம்முடைய ஸ்தூல உடம்பைக் கீழே போட்டுவிட்டு தம் உயிரை மூலனுடைய உடலில் பாய்ச்சினார்; மூலன் உயிர் பெற்று எழுந்தவுடன் பசுக்கள் மகிழ்ச்சியினால் மூலனுடைய உடம்பை நாவார நக்கி மோந்து துள்ளிக் கனைத்து விளையாடின. பின்னர் பசுக்கள் தம் கன்றுகளை நினைத்து சாத்தனூரை நோக்கிச் செல்ல மூலரும் அவை பின் சென்று சாத்தனூரை யடைந்தார். இடையன் மூலனுடைய மனைவி முனிவர் மூலரை தன் நாயகன் என நினைத்துத் தீண்டவும், மூலர்

அவளைத் தடுத்துப் பக்கத்திலுள்ள ஒரு மடத்துக்குள் சென்று சமாதியில் ஆழ்ந்துவிட்டார். மூலனுடைய மனைவி ஊராரிடத்திலே முறையிட்டு தன் கணவனைத் திரும்பப் பெற முயன்றாள், ஆனால் அந்த முயற்சி பலனற்றதாகப் போய்விட்டது. முனிவரும் சமாதியிலிருந்து எழுந்து, ஸ்தூல உடம்பைத் தாம் கீழே போட்டுவிட்டு வந்த இடத்துக்குச் சென்று அதைத் தேடினார்; காணவில்லை. அங்குள்ள மக்கள் அதைப் பிரேதம் என்றெண்ணி தகனம் செய்துவிட்டார்கள் என்று தெரிந்துகொண்டார். தம் சொந்த உடம்பையிழந்தது இறைவனுடைய திருவருளால் என்பதை யுணர்ந்த முனிவர் தமக்குக் கிடைத்த மூலனுடைய உடம்போடு மறுபடியும் திருவாவடுதுறை கோயிலுக்குச் சென்று கோயிலுக்கு மேற்கேயுள்ள ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து திரும்பவும் சிவயோகத்தில் ஆழ்ந்துவிட்டார். ஓராண்டுக்குப்பின் அறிதுயிலிருந்து விழித்து ஒரு திருமந்திரப் பாடலைப் பாடுவார் என்றும் பாடிய பின் மறுபடியும் தியானத்தில் அமிழ்ந்துவிடுவார் என்றும், இவ்வாறாக ஆண்டுக்கொரு திருமந்திரமாக 3,000 திருமந்திரப் பாடல்களையும் 3,000 ஆண்டுகளில் பாடி முடித்தார் என்றும் சொல்லப்படுகிறது. திருமந்திரப் பாடல்களைப் பாடி முடித்தபின்பு, ஒரு நாள் ஐப்பசி அஸ்வினியிலே, இரவலாகக் கிடைத்த ஸ்தூல தேகத்தை கழற்றி வைத்துவிட்டு திருமூலர் திருக்கயிலையை அடைந்தார். மானச உலகத்தில் இருந்துகொண்டு இன்றும் மண்ணுலக மக்கள் வளர்ச்சிக்காக அவர் பாடுபட்டு வருகிறார் என்று ஞானிகள் கருதுகிறார்கள். பாடல்களை மூலனுடைய உடம்பிலிருக்கும்போது அவர் பாடிய காரணத்தால் அவரைத் திருமூலர் என்று நம் முன்னோர் அழைத்தார்கள்.

விக்ரக ஆராதனையிலிருந்து அருவத் தியானத்தில் தன்னைக் கரைக்கும் நிலை வரையில் பல மட்டங்களிலுள்ள

அவளைத் தடுத்துப் பக்கத்திலுள்ள ஒரு மடத்துக்குள் சென்று சமாதியில் ஆழ்ந்துவிட்டார். மூலனுடைய மனைவி ஊராரிடத்திலே முறையிட்டு தன் கணவனைத் திரும்பப் பெற முயன்றாள், ஆனால் அந்த முயற்சி பலனற்றதாகப் போய்விட்டது. முனிவரும் சமாதியிலிருந்து எழுந்து, ஸ்தூல உடம்பைத் தாம் கீழே போட்டுவிட்டு வந்த இடத்துக்குச் சென்று அதைத் தேடினார்; காணவில்லை. அங்குள்ள மக்கள் அதைப் பிரேதம் என்றெண்ணி தகனம் செய்துவிட்டார்கள் என்று தெரிந்துகொண்டார். தம் சொந்த உடம்பையிழந்தது இறைவனுடைய திருவருளால் என்பதை யுணர்ந்த முனிவர் தமக்குக் கிடைத்த மூலனுடைய உடம்போடு மறுபடியும் திருவாவடுதுறை கோயிலுக்குச் சென்று கோயிலுக்கு மேற்கேயுள்ள ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து திரும்பவும் சிவயோகத்தில் ஆழ்ந்துவிட்டார். ஓராண்டுக்குப்பின் அறிதுயிலிருந்து விழித்து ஒரு திருமந்திரப் பாடலைப் பாடுவார் என்றும் பாடிய பின் மறுபடியும் தியானத்தில் அமிழ்ந்துவிடுவார் என்றும், இவ்வாறாக ஆண்டுக்கொரு திருமந்திரமாக 3,000 திருமந்திரப் பாடல்களையும் 3,000 ஆண்டுகளில் பாடி முடித்தார் என்றும் சொல்லப்படுகிறது. திருமந்திரப் பாடல்களைப் பாடி முடித்தபின்பு, ஒரு நாள் ஐப்பசி அஸ்விநியிலே, இரவலாகக் கிடைத்த ஸ்தூல தேகத்தை கழற்றி வைத்துவிட்டு திருமூலர் திருக்கயிலையை அடைந்தார். மானச உலகத்தில் இருந்துகொண்டு இன்றும் மண்ணுலக மக்கள் வளர்ச்சிக்காக அவர் பாடுபட்டு வருகிறார் என்று ஞானிகள் கருதுகிறார்கள். பாடல்களை மூலனுடைய உடம்பிலிருக்கும்போது அவர் பாடிய காரணத்தால் அவரைத் திருமூலர் என்று நம் முன்னோர் அழைத்தார்கள்.

விக்ரக ஆராதனையிலிருந்து அருவத் தியானத்தில் தன்னைக் கரைக்கும் நிலை வரையில் பல மட்டங்களிலுள்ள

விதம் விதமான ஆன்ம அனுபவங்களை அதிகார தோரணை யோடு எடுத்து விளக்கும் அரிய களஞ்சியமாக விளங்கு கிறது திருமந்திரம். தம்முடைய ஆன்ம அனுபவங்களை யெல்லாம் ஆற்றலும் எளிமையும் மிக்க கவிதையில் பதிவு செய்ததோடில்லாமல் தாம் பெற்ற ஆன்ம அனுபவங்களை மற்றவர்களும் பெறட்டுமே என்ற கருணையினால், விரிவான வழி வகைகளையும் தந்திரங்களையும் தம் நூலில் எடுத்து விளக்கிய ஞானி திருமூலரைத் தவிர இந்திய வரலாற்றி லேயே வேறொருவருமில்லையென்று சொல்லலாம். உண்மை தான், திருமூலர் கண்ட உண்மைகளை முண்டு முடிச்சுகள் நிரம்பிய சங்கேத மொழியிலேயே அவர் சொல்லியிருக்கிறார். திருமூலருடைய சங்கேதப் பூட்டைத் திறக்கும் திறவுகோலை நாம் இழந்துவிட்டோம், அதை இனி நாம் திரும்பப் பெற முடியாது என்றுகூட ஒரு காலத்தில் நான் நினைத்ததுண்டு. ஆனால், தமிழ்நாட்டிலே இன்றும் நடமாடி வரும் சில ஞானிகளோடு தொடர்பு கொண்ட பிறகு, திறவுகோல் நல்ல பாதுகாவலான இடத்தில் இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். கேவலம் ஜடதத்துவ உண்மை பொதிந்து கிடக்கும் அணுகுண்டின் உற்பத்தி ரகசியத்தையே சாமான்ய மக்க ளுக்குச் சொல்லுவது அபாயம் என்று நினைக்கும் இந்தக் காலத்தில், சூக்ஷ்மமான ஆன்ம ரகசியங்களை அவர்களுடைய அறிவுக்கெட்டாத இடத்தில் வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் !

மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பல கருவிகளில் அறிவு என்பது ஒரு சாமானியமான கருவிதான் என்பதை உணரும் அறிவாளிகளே ஆன்ம உண்மைகளை உணர் வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். மனிதன் தன் அறியாமையை எப்போது உணர்கிறானோ, அப்போதுதான் அவனுக்கு ஞானம் உதயமாகிறது என்று திருமூலர் கருது

விதம் விதமான ஆன்ம அனுபவங்களை அதிகார தோரணை யோடு எடுத்து விளக்கும் அரிய களஞ்சியமாக விளங்கு கிறது திருமந்திரம். தம்முடைய ஆன்ம அனுபவங்களை யெல்லாம் ஆற்றலும் எளிமையும் மிக்க கவிதையில் பதிவு செய்ததோடில்லாமல் தாம் பெற்ற ஆன்ம அனுபவங்களை மற்றவர்களும் பெறட்டுமே என்ற கருணையினால், விரிவான வழி வகைகளையும் தந்திரங்களையும் தம் நூலில் எடுத்து விளக்கிய ஞானி திருமூலரைத் தவிர இந்திய வரலாற்றி லேயே வேறொருவருமில்லையென்று சொல்லலாம். உண்மை தான், திருமூலர் கண்ட உண்மைகளை முண்டு முடிச்சுகள் நிரம்பிய சங்கேத மொழியிலேயே அவர் சொல்லியிருக்கிறார். திருமூலருடைய சங்கேதப் பூட்டைத் திறக்கும் திறவுகோலை நாம் இழந்துவிட்டோம், அதை இனி நாம் திரும்பப் பெற முடியாது என்றுகூட ஒரு காலத்தில் நான் நினைத்ததுண்டு. ஆனால், தமிழ்நாட்டிலே இன்றும் நடமாடி வரும் சில ஞானிகளோடு தொடர்பு கொண்ட பிறகு, திறவுகோல் நல்ல பாதுகாவலான இடத்தில் இருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். கேவலம் ஜடதத்துவ உண்மை பொதிந்து கிடக்கும் அணுதண்டின் உற்பத்தி ரகசியத்தையே சாமான்ய மக்க ளுக்குச் சொல்லுவது அபாயம் என்று நினைக்கும் இந்தக் காலத்தில், சூக்ஷ்மமான ஆன்ம ரகசியங்களை அவர்களுடைய அறிவுக்கெட்டாத இடத்தில் வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியம்!

மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பல கருவிகளில் அறிவு என்பது ஒரு சாமானியமான கருவிதான் என்பதை உணரும் அறிவாளிகளே ஆன்ம உண்மைகளை உணர் வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். மனிதன் தன் அறியாமையை எப்போது உணர்கிறானோ, அப்போதுதான் அவனுக்கு ஞானம் உதயமாகிறது என்று திருமூலர் கருது

கிருர். கீழ்க்கண்ட திருமந்திரம் இந்தக் கருத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின் றேனே.

பேரறியாத பெருஞ்சுடரைப்பற்றி 3,000 பாடல்கள் பாடப் போகிருர். அப்பாடல்களுக்கு முன்னுரையாக உள்ள பாட்டிலே தமது அறியாமையின் நீள அகலத்தைப் பற்றி வியக்கிருர் திருமூலர்.

ஐன்ஸ்டைன் என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி சொன்ஞர்: "தெரிந்த உலகத்தின் விளிம்பில் நின்றுகொண்டு தெரியாத உலகத்தை நான் எட்டிப்பார்க்கும்போது, என் அறியாமை எவ்வளவு அகண்டமாயிருக்கிறது என்பதை யுணர்ந்து நான் பதறுகிறேன்" என்று. ஆனல், தம் அறியாமையை உணர்ந்த திருமூலருக்கு அச்சம் ஏற்படவில்லை, ஆனந்தமே ஏற்படுகிறது. இல்லையென்ருல்.

'வேரறி யாமைவி ளம்புகின்றேனே' என்று நாக்கைச் சுழற்றி இப்படி ஒரு அடி அடிப்பாரா அவர்!

ஆனல், அறியாமையையுணர்ந்த பின்னருங்கூட ஆணவ வில்லங்கம் தொடர்ந்து நிற்கிறது: "என்னுடைய அறியாமை" என்ற உணர்வு தொத்திக்கொண்டிருக்கிறது. ஆகவேதான், அறிவு—அறியாமை என்ற இரு நிலைகளையும் தாண்டி உணர்வு நிலையில் ஊன்றி நிற்க வேண்டுமென்று கூறுகிருர் திருமூலர். வில்லங்கமற்ற, வரம்பில்லாத அறிவு வெளியிலே நின்று பெறும் "அறிவு"தான் ஞானம் என்பதைக் கீழ்க்கண்ட திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது.

கிறார். கீழ்க்கண்ட திருமந்திரம் இந்தக் கருத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நிகளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின் றேனே.

பேரறியாத பெருஞ்சுடரைப்பற்றி 3,000 பாடல்கள் பாடப் போகிறார். அப்பாடல்களுக்கு முன்னுரையாக உள்ள பாட்டிலே தமது அறியாமையின் நீள அகலத்தைப் பற்றி வியக்கிறார் திருமூலர்.

ஐன்ஸ்டைன் என்ற புகழ் பெற்ற விஞ்ஞானி சொன்னார்: "தெரிந்த உலகத்தின் விளிம்பில் நின்றுகொண்டு தெரியாத உலகத்தை நான் எட்டிப்பார்க்கும்போது, என் அறியாமை எவ்வளவு அகண்டமாயிருக்கிறது என்பதை யுணர்ந்து நான் பதறுகிறேன்" என்று. ஆனால், தம் அறியாமையை உணர்ந்த திருமூலருக்கு அச்சம் ஏற்படவில்லை, ஆனந்தமே ஏற்படுகிறது. இல்லையென்றால்.

'வேரறி யாமைவி ளம்புகின்றேனே' என்று நாக்கைச் சுழற்றி இப்படி ஒரு அடி அடிப்பாரா அவர்!

ஆனால், அறியாமையையுணர்ந்த பின்னருங்கூட ஆணவ வில்லங்கம் தொடர்ந்து நிற்கிறது: "என்னுடைய அறியாமை" என்ற உணர்வு தொத்திக்கொண்டிருக்கிறது. ஆகவேதான், அறிவு—அறியாமை என்ற இரு நிலைகளையும் தாண்டி உணர்வு நிலையில் ஊன்றி நிற்க வேண்டுமென்று கூறுகிறார் திருமூலர். வில்லங்கமற்ற, வரம்பில்லாத அறிவு வெளியிலே நின்று பெறும் "அறிவு"தான் ஞானம் என்பதைக் கீழ்க்கண்ட திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது.

"அறிவு" "அறியாமை" கடந்து அறிவானால்
"அறிவு" "அறியாமை" அழகியவாறே.

ஞானமாகிய சுத்த அறிவைப் பெற்ற பிறகு சாதாரணமான உலகியல் அறிவை அறியாமல் இருத்தல் மிக்க நல்லது என்று நகைச்சுவை ததும்பப் பேசுகிறார் திருமூலர்.

சித்தாகாசத்தில் தாம் நின்றபோது, தம்முடைய அகவெளி புறவெளியில் போய் விரவி யாவற்றையும், தமக்குள்ளேயிருந்த ஒளி வெளியேயிருக்கும் ஒளியோடு கலந்து ஒடுங்கியவாற்றையும் திருமூலர் விவரிக்கிறார். இந்த நிலையில் காலம், இடம் என்ற சட்டத்துக்குள்ளே சிறை யுண்டு நின்ற திருமூலர் சிறையைத் தகர்த்தெறிந்துவிட்டு வரைவில்லாத வெட்ட வெளியோடு கலந்துவிடுகிறார். "நான் வரைவற்றுப்போனபிறகு, வரையறைக்குள்ளிருக்கும் ஒன்றையும் என்னால் சிந்தனை செய்ய முடியவில்லை. நான் அவனானபின், எனக்கு அப்பால் ஒரு பொருளும் இல்லை. ஆகவே, அயல் மாண்டுவிட்டது, அயலேயுள்ள பொருள் என்று ஒன்றுமில்லையாகையால் அதைப்பற்றி நினைக்கவும் முடியவில்லை" என்பதை ஒரு திருமந்திரம் ஆனந்தக் களிப்போடு சொல்லுகிறது :—

நான் வரைவற்றபின் யாரை வரைவது !
நான் அவன் ஆனபின் யாரை நினைவது !

இந்த நிலையிலே,

"தன்னை அர்ச்சிக்கத்
தானிருந்தேனே"

என்ற பக்குவம் திருமூலருக்கு ஏற்படுகிறது.

"அறிவு" "அறியாமை" கடந்து அறிவாளுல்
"அறிவு" "அறியாமை" அழகியவாறே.

ஞானமாகிய சுத்த அறிவைப் பெற்ற பிறகு சாதாரணமான உலகியல் அறிவை அறியாமல் இருத்தல் மிக்க நல்லது என்று நகைச்சுவை ததும்பப் பேசுகிறார் திருமூலர்.

சித்தாகாசத்தில் தாம் நின்றபோது, தம்முடைய அகவெளி புறவெளியில் போய் விரவி யாவற்றையும், தமக்குள்ளேயிருந்த ஒளி வெளியேயிருக்கும் ஒளியோடு கலந்து ஒடுங்கியவாற்றையும் திருமூலர் விவரிக்கிறார். இந்த நிலையில் காலம், இடம் என்ற சட்டத்துக்குள்ளே சிறையுண்டு நின்ற திருமூலர் சிறையைத் தகர்த்தெறிந்துவிட்டு வரைவில்லாத வெட்ட வெளியோடு கலந்துவிடுகிறார். "நான் வரைவற்றுப்போனபிறகு, வரையறைக்குள்ளிருக்கும் ஒன்றையும் என்னல் சிந்தனை செய்ய முடியவில்லை. நான் அவனானபின், எனக்கு அப்பால் ஒரு பொருளும் இல்லை. ஆகவே, அயல் மாண்டுவிட்டது, அயலேயுள்ள பொருள் என்று ஒன்றுமில்லையாகையால் அதைப்பற்றி நினைக்கவும் முடியவில்லை" என்பதை ஒரு திருமந்திரம் ஆனந்தக் களிப்போடு சொல்லுகிறது :—

நான் வரைவற்றபின் யாரை வரைவது !
நான் அவன் ஆனபின் யாரை நினைவது !

இந்த நிலையிலே,

"தன்னை அர்ச்சிக்கத்
தானிருந்தேனே"

என்ற பக்குவம் திருமூலருக்கு ஏற்படுகிறது.

திருமந்திரம் என்ற நூல் 3,000 பாடல்கள் கொண்டது. ஒன்பது தந்திரங்களாக பாகுபடுத்தப்பட்டது. மனிதனுடைய மண்ணுலக வாழ்வின் நிலையாமை, இளமையின் நிலையாமை, உலகியல் செல்வங்களின் நிலையாமை ஆகியவற்றைப் பற்றிக் கூறி நம் குடரெலாம் பதறும்படி செய்துவிட்டு, என்றென்றும் நிலைத்து நிற்கும் பேருண்மைகளை நாம் விரும்பும்படி செய்கிறார் திருமூலர். திருமந்திரத்தில் உள்ள நிலையாமையைப் பற்றிய பாடல்களின் நாடகப் பாங்குக்கும் அச்சுறுத்தும் சக்திக்கும் ஈடான பாடல்கள் தமிழ் இலக்கியத்திலோ, வேறு எந்த இலக்கியத்திலுமோ இருப்பதாகத் தெரியவில்லை.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை யுண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறைநொந்ததே யென்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே

என்ற திருமந்திரப் பாட்டின் இறுதியிலுள்ள ஏகாரம் கடைச்சங்கு ஒலித்துக்கொண்டிருக்கும் நினைவையுண்டாக்குகிறதல்லவா ?

இவ்வாறெல்லாம் நிலையாமையைப்பற்றி நம்மை நினைக்க வைத்துவிட்டு, நிலைபேறான உண்மைகளைப் பற்றிய செய்திகளை நமக்கு ஊட்டுகிறார் திருமூலர்.

தன்னை யறிவதே அறிவாம் அஃதன்றிப்
பின்னை யறிவது பேயறிவாகுமே

என்று அறைந்து, அறிவுக்கும் பேயறிவுக்கும் உள்ள வேறுபாட்டைத் துணிச்சல் கலந்த உறுதியோடு தெளிவுபடுத்துகிறார். நமமையே பூதக்கண்ணாடியின் அடியில் வைத்து நாம் உணர்வோடு சோதனை செய்துகொண்டே

திருமந்திரம் என்ற நூல் 3,000 பாடல்கள் கொண்டது. ஒன்பது தந்திரங்களாக பாகுபடுத்தப்பட்டது. மனிதனுடைய மண்ணுலக வாழ்வின் நிலையாமை, இளமையின் நிலையாமை, உலகியல் செல்வங்களின் நிலையாமை ஆகியவற்றைப் பற்றிக் கூறி நம் குடரெலாம் பதறும்படி செய்து விட்டு, என்றென்றும் நிலைத்து நிற்கும் பேருண்மைகளை நாம் விரும்பும்படி செய்கிறார் திருமூலர். திருமந்திரத்தில் உள்ள நிலையாமையைப் பற்றிய பாடல்களின் நாடகப் பாங்குக்கும் அச்சுறுத்தும் சக்திக்கும் ஈடான பாடல்கள் தமிழ் இலக்கியத்திலோ, வேறு எந்த இலக்கியத்திலுமோ இருப்பதாகத் தெரியவில்லை.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை யுண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறைநொந்ததே யென்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே

என்ற திருமந்திரப் பாட்டின் இறுதியிலுள்ள ஏகாரம் கடைச்சங்கு ஒலித்துக்கொண்டிருக்கும் நினைவையுண்டாக்குகிறதல்லவா ?

இவ்வாறெல்லாம் நிலையாமையைப்பற்றி நம்மை நினைக்க வைத்துவிட்டு, நிலைபேறுன உண்மைகளைப் பற்றிய செய்திகளை நமக்கு ஊட்டுகிறார் திருமூலர்.

தன்னை யறிவதே அறிவாம் அஃதன்றிப்
பின்னை யறிவது பேயறிவாகுமே

என்று அறைந்து, அறிவுக்கும் பேயறிவுக்கும் உள்ள வேறுபாட்டைத் துணிச்சல் கலந்த உறுதியோடு தெளிவு படுத்துகிறார். நபமையே பூதக்கண்ணாடியின் அடியில் வைத்து நாம் உணர்வோடு சோதனை செய்துகொண்டே

திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஆணவம் கரைந்து வெட்ட வெளியோடு விரவி விடும் என்று வற்புறுத்துகிருர்.

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
வெல்லும் அளவு விடுமின் வெகுளியை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினுல்
கல்லும் பிளந்து கடுவெளியாமே

என்பது திருமந்திரம்.

யிருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஆணவம் கரைந்து வெட்ட வெளியோடு விரவி விடும் என்று வற்புறுத்துகிறார்.

செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
வெல்லும் அளவு விடுமின் வெகுளியை
அல்லும் பகலும் அருளொடு தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளியாமே

என்பது திருமந்திரம்.

சான்றோர் வாக்கு—

# திருமூலர் 1

(எஸ். மகராஜன்)

பல நிலைகளிலிருந்து பரம்பொருளை அனுபவித்தவர் திருமூலர். ஆகவே நாம் எந்தெந்த நிலையிலிருந்தாலும் அந்தந்த நிலைக்குத் தக்கபடியெல்லாம் நமக்கு உபதேசம் செய்து நம்மை ஈடேறச் செய்யும் வல்லமை அவரிடம் உண்டு.

பக்தி நிலையை எடுத்துக் கொள்வோம்: இறைவனிடத்திலேதான் அவருக்கு எப்பேர்ப்பட்ட பிரேமை!

சிவபெருமான் புலித்தோலை ஜியார்ஜெட் புடவைபோல அரையில் அணிந்திருக்கிறான். அது அடிக்கிற "டால்" பொன்னின் ஒளியையும் மிஞ்சி விடுகிறதாம்.

"பொன்னைக் கடந்திலங்கும் புலித்தோலினன்" அவனுடைய தலையிலே நிலாக்கீற்று ஒன்று கிடந்து மினுக் மினுக்கென்று மின்னிக்கொண்டிருக்கிறது. 'மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை'. புலித்தோலை அணிந்துகொண்டிருப்பதிலிருந்தே பித்தன் இவன் என்று தெரிகிறது. போதாக்குறைக்கு, இளம்பிறையை வேறு தலையில் அணிந்திருக்கிறான் இதுவும் காணுதென்று. சுடுகாட்டிலுள்ள சாம்பரை தன் மேனியெல்லாம் பூசிக்கொண்டு உன்மத்தத் தோடு ஆடிக்கொண்டிருக்கிறான் சிவபெருமான். இந்தப் பித்தனிடத்திலல்லவா என் பேரன்பு பின்னிக் கிடக்கிறது என்ற வியப்பில் ஆழ்கிறார் திருமூலர்.

சான்றோர் வாக்கு—

# திருமூலர் 1

(எஸ். மகராஜன்)

பல நிலைகளிலிருந்து பரம்பொருளை அனுபவித்தவர் திருமூலர். ஆகவே நாம் எந்தெந்த நிலையிலிருந்தாலும் அந்தந்த நிலைக்குத் தக்கபடியெல்லாம் நமக்கு உபதேசம் செய்து நம்மை ஈடேறச் செய்யும் வல்லமை அவரிடம் உண்டு.

பக்தி நிலையை எடுத்துக் கொள்வோம்: இறைவனிடத்திலேதான் அவருக்கு எப்பேர்ப்பட்ட பிரேமை!

சிவபெருமான் புலித்தோலை ஜியார்ஜெட் புடவைபோல அரையில் அணிந்திருக்கிறான். அது அடிக்கிற "டால்" பொன்னின் ஒளியையும் மிஞ்சி விடுகிறதாம்.

"பொன்னைக் கடந்திலங்கும் புலித்தோலினன்" அவனுடைய தலையிலே நிலாக்கீற்று ஒன்று கிடந்து மினுக் மினுக்கென்று மின்னிக்கொண்டிருக்கிறது. 'மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை'. புலித்தோலை அணிந்துகொண்டிருப்பதிலிருந்தே பித்தன் இவன் என்று தெரிகிறது. போதாக்குறைக்கு, இளம்பிறையை வேறு தலையில் அணிந்திருக்கிறான் இதுவும் காணுதென்று. சுடுகாட்டிலுள்ள சாம்பரை தன் மேனியெல்லாம் பூசிக்கொண்டு உன்மத்தத்தோடு ஆடிக்கொண்டிருக்கிறான் சிவபெருமான். இந்தப் பித்தனிடத்திலல்லவா என் பேரன்பு பின்னிக் கிடக்கிறது என்ற வியப்பில் ஆழ்கிறார் திருமூலர்.

பொன்னைக் கடந்திலங்கும் புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்புதானே.

பிரிக்க முடியாமல் பின்னிக் கிடந்த பக்தி நிலை இது.

இந்த நிலையிலே, பிரிந்து போன துண்டு முழுமையை யண்டி ஆலிங்கனம் செய்து ஒருமைப் பேற்றைப் பெறுகிறது; பிரிந்திருந்த காலத்திலுள்ள அச்சம் முதலிய புன்மைக் குணங்களெல்லாம் பறந்து போய் விடுகின்றன.

வானம் இன்று இடிந்து விழட்டுமே, பெருங்கடல் பொங்கி பூமியையே விழுங்கட்டுமே,

"வானின் றிடிக்கிலென்? மாகடல் பொங்கிலென்?" சிவந்த காட்டுத்தீயில் அகப்பட்டு என்னுடைய உடல் வெந்து போனால்தான் என்ன?

"கானின்ற செந்தீ கலந்துடல் வேகிலென்"

சண்டமாருதமே ஒன்று அடித்தால்தானென்ன? நான் அஞ்சப் போவதில்லை. என் நாதனை நாடும் லக்ஷியத்தை மறந்து நான் பராக்குப் பார்க்கப் போவதில்லை.

வானின் றிடிக்கிலென்? மாகடற் பொங்கிலென்?
கானின்ற செந்தீக் கலந்து உடல் வேகிலென்?
தானொன்றி மாருதம் சண்டமடிக்கிலென்?
நானொன்றி நாதனை நாடுவன் நானே!

சொற்குன்றாதபடி தொழ வேண்டுமாம். "சொற் குன்றலின் றித்தொழுமின்" என்கிறார் திருமூலர். சத்தி தேவியைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் எல்லாமே சொற்குன்றல் இல்லாத பாடல்கள்.

பொன்னைக் கடந்திலங்கும் புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்புதானே.

பிரிக்க முடியாமல் பின்னிக் கிடந்த பக்தி நிலை இது.

இந்த நிலையிலே, பிரிந்து போன துண்டு முழுமையை யண்டி ஆலிங்கனம் செய்து ஒருமைப் பேற்றைப் பெறுகிறது ; பிரிந்திருந்த காலத்திலுள்ள அச்சம் முதலிய புன்மைக் குணங்களெல்லாம் பறந்து போய் விடுகின்றன.

வானம் இன்று இடிந்து விழட்டுமே, பெருங்கடல் பொங்கி பூமியையே விழுங்கட்டுமே,

"வானின் றிடிக்கிலென் ? மாகடல் பொங்கிலென் ?" சிவந்த காட்டுத்தீயில் அகப்பட்டு என்னுடைய உடல் வெந்து போனால்தான் என்ன ?

"கானின்ற செந்தீ கலந்துடல் வேகிலென்"

சண்டமாருதமே ஒன்று அடித்தால்தானென்ன ? நான் அஞ்சப் போவதில்லை. என் நாதனை நாடும் லக்ஷியத்தை மறந்து நான் பராக்குப் பார்க்கப் போவதில்லை.

வானின் றிடிக்கிலென்? மாகடற் பொங்கிலென்?
கானின்ற செந்தீக் கலந்து உடல் வேகிலென்?
தானொன்றி மாருதம் சண்டமடிக்கிலென்?
நானொன்றி நாதனை நாடுவன் நானே!

சொற்குன்றுதபடி தொழ வேண்டுமாம். "சொற் குன்றலின் றித்தொழுமின்" என்கிறார் திருமூலர். சத்தி தேவியைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் எல்லாமே சொற்குன்றல் இல்லாத பாடல்கள்.

முத்து வதனத்தி முகந்தொறும் முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி (தேவி)
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி யென்னுள்ளம் மேவி நின்றாளே

சொற்குன்றல் இன்றி வந்த பாட்டு இது.

சான்றோர் வாக்கு—

## திருமூலர் 2

(எஸ். மகராஜன்)

நேற்று திருமூலர் கூறும் பக்திப் பாதையைப் பற்றிப் பேசினோம். இன்று அவர் யோகமார்க்கத்தைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்பதைச் சற்று கவனிப்போம்.

நம்மிடத்திலே ஒரு குதிரையிருக்கிறது. பறவையைக் காட்டிலும் வேகமாகப் பறக்கும் குதிரை, மூச்சு என்ற குதிரை அது; இடக்குப் பண்ணுகிற குதிரை. லாயக்காக அதற்கு மூக்கணாங்கயிறு போட்டு அதன் மேலேறி உட்கார்ந்து லகானைப் பிடித்து சவாரி செய்யக் கற்றுக் கொண்டால், நம் உடம்பிலும் உள்ளத்திலும் என்று மில்லாத ஆற்றல் ஏற்படும் என்று உறுதி கூறுகிறார் திருமூலர்.

புள்ளினுமிக்க புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளிநடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடையோருக்கே

கள்ளுண்ணாமலேயே ஒரு போதையுண்டாகுமாம் மூச்சுப் பயிற்சியினாலே. கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் அடைத்து விட்டோம். அந்தக் கடைகளிலே

முத்து வதனத்தி முகந்தொறும் முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி (தேவி)
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி யென்னுள்ளம் மேவி நின்றாளே

சொற்குன்றல் இன்றி வந்த பாட்டு இது.

சான்றோர் வாக்கு—

## திருமூலர் 2

(எஸ். மகராஜன்)

நேற்று திருமூலர் கூறும் பக்திப் பாதையைப் பற்றிப் பேசினோம். இன்று அவர் யோகமார்க்கத்தைப் பற்றி என்ன சொல்லுகிறார் என்பதைச் சற்று கவனிப்போம்.

நம்மிடத்திலே ஒரு குதிரையிருக்கிறது. பறவையைக் காட்டிலும் வேகமாகப் பறக்கும் குதிரை, மூச்சு என்ற குதிரை அது; இடக்குப் பண்ணுகிற குதிரை. லாயக்காக அதற்கு மூக்கணாங்கயிறு போட்டு அதன் மேலேறி உட்கார்ந்து லகானைப் பிடித்து சவாரி செய்யக் கற்றுக் கொண்டால், நம் உடம்பிலும் உள்ளத்திலும் என்று மில்லாத ஆற்றல் ஏற்படும் என்று உறுதி கூறுகிறார் திருமூலர்.

புள்ளினுமிக்க புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்
துள்ளிநடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடையோருக்கே

கள்ளுண்ணாமலேயே ஒரு போதையுண்டாகுமாம் மூச்சுப் பயிற்சியினாலே. கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் அடைத்து விட்டோம். அந்தக் கடைகளிலே

மூச்சுப் பயிற்சியைப் பாடமாக மக்களுக்குக் கற்பித்தால், அவர்களுடைய ஏக்கம் மாறிவிடும், சோம்பேரித் தனம்போய் விடும், ஆனந்தக் களிப்பு அவர்களுக்கு ஏற்படுமாம்.

"இவ்வாறு காற்றைப் பிடிக்கும் கணக்கையறிந்தவர்கள் வெகுகாலம் இந்த உடலில் இருந்து வாழலாம். யமன் அவர்களைக் கண்டு அஞ்சுவான்" என்று சொல்லுகிறார் திருமூலர். இதை மிடுக்குடன் எடுத்துச் சொல்லுகிறது ஒரு திருமந்திரம்.

*ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்*
*காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை*
*காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்*
*கூற்றை யுதைக்கும் குறியதுவாமே.*

உடலுக்குள்ளே சென்று திரியும் வாயுவை யோக நெறிப்படி சுத்தி செய்தால், நரை திரை மறைந்து விடும் என்று திருமூலர் கூறுகிறார்.

*புறப்பட்டுப்புக்குத் திரிகின்றவாயுவை*
*நெறிப்படவுள்ளே நிர்மல மாக்கில்*
*உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்*
*புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.*

மனித உடலிலேயுள்ள மூலாதாரத்தை மேல் நோக்கி இழுத்து, தலையுச்சிமேலிருக்கும் மேலைத்துவாரத்தின் மேல் மனம் வைத்து கண்கள் இரண்டின் வெளி நாட்டத்தையும் மீட்டு அகவெளியை நோக்கி விழித்திருந்தால், காலத்தை வென்று விடலாம் என்று அறைகிறது இன்னொரு திருமந்திரம்.

மூலத்துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லும் கருத்தது தானே.

மூச்சுப் பயிற்சியைப் பாடமாக மக்களுக்குக் கற்பித்தால், அவர்களுடைய ஏக்கம் மாறிவிடும், சோம்பேரித் தனம்போய் விடும், ஆனந்தக் களிப்பு அவர்களுக்கு ஏற்படுமாம்.

"இவ்வாறு காற்றைப் பிடிக்கும் கணக்கையறிந்தவர்கள் வெகுகாலம் இந்த உடலில் இருந்து வாழலாம். யமன் அவர்களைக் கண்டு அஞ்சுவான்" என்று சொல்லுகிறார் திருமூலர். இதை மிடுக்குடன் எடுத்துச் சொல்லுகிறது ஒரு திருமந்திரம்.

*ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்*
*காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாரில்லை*
*காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்*
*கூற்றை யுதைக்கும் குறியதுவாமே.*

உடலுக்குள்ளே சென்று திரியும் வாயுவை யோக நெறிப்படி சுத்தி செய்தால், நரை திரை மறைந்து விடும் என்று திருமூலர் கூறுகிறார்.

*புறப்பட்டுப்புக்குத் திரிகின்றவாயுவை*
*நெறிப்படவுள்ளே நிர்மல மாக்கில்*
*உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்*
*புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.*

மனித உடலிலேயுள்ள மூலாதாரத்தை மேல் நோக்கி இழுத்து, தலையுச்சிமேலிருக்கும் மேலைத்துவாரத்தின் மேல் மனம் வைத்து கண்கள் இரண்டின் வெளி நாட்டத்தையும் மீட்டு அகவெளியை நோக்கி விழித்திருந்தால், காலத்தை வென்று விடலாம் என்று அறைகிறது இன்னொரு திருமந்திரம்.

மூலத்துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லும் கருத்தது தானே.

இப்படியெல்லாம் பலபட யோக மார்க்கத்தைப் புகழ்ந்து விட்டு, அந்தப் பாதை வழியாக எவ்வளவு தூரம் நடந்தாலும் இறைவனைக் கண்டுவிடமுடியாது என்றும் சொல்லுகிறார் திருமூலர்.

எண்ணாயிரத்தாண்டு யோகமிருக்கினும்
கண்ணாரமுதனைக் கண்டறிவாரில்லை.

அப்படியானால், என்னதான் செய்வது? ஞானமார்க்கமாகிய ஒளிநெறியைப் பற்றினால் பரம்பொருளைக் காணலாம் என்று சொல்லுகிறார் திருமூலர். இதைப் பற்றி சற்றே பேசலாம் நாளை.

சான்றோர் வாக்கு—

## திருமூலர் 3

**(எஸ். மகராஜன்)**

ஞான மார்க்கத்திலே பல நெறிகள் உண்டு; அதில் முக்கியமானது ஒளிநெறி; ஒளிநெறியைப் பற்றித் திருமூலர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

மாடு போலிருந்து இறைவனுடைய சந்நிதானத்தை மறைத்துக் கொண்டிருப்பது நம்முடைய உள்ளந்தான். ஆனால் உள்ளத்தின் ஆற்றல் அளவிட முடியாதது.

விரித்த பொருட்கெல்லாம் வித்தாவது உள்ளம்
பெருக்கில் பெருகும் சுருக்கில் சுருங்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்து கொள்வார்க்கே

என்கிறது திருமந்திரம்.

இப்படியெல்லாம் பலபட யோக மார்க்கத்தைப் புகழ்ந்து விட்டு, அந்தப் பாதை வழியாக எவ்வளவு தூரம் நடந்தாலும் இறைவனைக் கண்டுவிடமுடியாது என்றும் சொல்லுகிறார் திருமூலர்.

எண்ணாயிரத்தாண்டு யோகமிருக்கினும்
கண்ணாரமுதனைக் கண்டறிவாரில்லை.

அப்படியானால், என்னதான் செய்வது? ஞானமார்க்கமாகிய ஒளிநெறியைப் பற்றினால் பரம்பொருளைக் காணலாம் என்று சொல்லுகிறார் திருமூலர். இதைப் பற்றி சற்றே பேசலாம் நாளை.

சான்றோர் வாக்கு—

## திருமூலர் 3

**(எஸ். மகராஜன்)**

ஞான மார்க்கத்திலே பல நெறிகள் உண்டு; அதில் முக்கியமானது ஒளிநெறி; ஒளிநெறியைப் பற்றித் திருமூலர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

மாடு போலிருந்து இறைவனுடைய சந்நிதானத்தை மறைத்துக் கொண்டிருப்பது நம்முடைய உள்ளந்தான். ஆனால் உள்ளத்தின் ஆற்றல் அளவிட முடியாதது.

விரித்த பொருட்கெல்லாம் வித்தாவது உள்ளம்
பெருக்கில் பெருகும் சுருக்கில் சுருங்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்து கொள்வார்க்கே

என்கிறது திருமந்திரம்.

இந்த உள்ளம் இருக்கிறதே, ஒரு உருவத்தை அதற்கு இரையாகக் கொடுத்தால், அது அசை போட்டு, அசை போட்டுக் கோடி உருவங்களையுண்டாக்கிவிடும். உருவங்கள் உண்டானவுடன் அவற்றுக்கு நாமங்கள் சூட்டுகிறோம். இப்படியாகக் கோடானுகோடி நாமங்களும் உருவங்களும் நம் குடுமியைப் பிடித்து ஆட்டுகின்றன. நாமரூபப் பேய்கள் என்று அவற்றை சித்தர்கள் அழைப்பார்கள். அவற்றால் நமக்கு மயக்கம் உண்டாகிறது; ஒன்றை மற்றொன்றாகக் காண்கிறோம், இந்த மயக்கத்திலிருந்து விடுபடவேண்டு மானால், மனம் செய்கிற வம்புகளிலிருந்தும் குறும்புகளி லிருந்தும் நாம் விடுபடவேண்டும். அப்படி விடுபடுவதற்கு வழியிருக்கிறதா? இருக்கிறது.

உள்ளம் செயலற்றிருந்தால் பேருண்மை நமக்குக்கு காட்சி கொடுக்கும்; உருவங்களை இரையாகக் கொடுத்தால் தானே இந்த உள்ளத்துக் கொண்டாட்டமாக இருக்கும். உருவங்களை ஒதுக்கி விட்டு உருவமற்ற வெட்டவெளியை, அறிவாகாசத்தை நாம் நினைத்தோமானால், நம் உள்ளத்துக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த உண்மையை உணர்ந்து விட்டாலே, ஞானநிலை ஏற்பட்டு விட்டது என்று அர்த்தம். உருவத்துக்கெல்லாம் காரண மாக இருப்பது உள்ளம், உள்ளத்தை இயக்குவது உருவம்.

> உள்ளம் உருவென்றும்,
> உருவம் உளம் என்றும்,
> உள்ள பரிசறிந்து
> ஓரும் அவர்கட்குப்
> பள்ளமுமில்லை திடரில்லை பாழில்லை
> உள்ளமுமில்லை உருவில்லை தானே.

ஆனால் அருவ நிலையில் நிற்பது மிகவும் கடினமான காரியம். குருவின் துணையால், ஓங்காரத்துள்ளொளி

இந்த உள்ளம் இருக்கிறதே, ஒரு உருவத்தை அதற்கு இரையாகக் கொடுத்தால், அது அசை போட்டு, அசை போட்டுக் கோடி உருவங்களையுண்டாக்கிவிடும். உருவங்கள் உண்டானவுடன் அவற்றுக்கு நாமங்கள் சூட்டுகிறோம். இப்படியாகக் கோடானுகோடி நாமங்களும் உருவங்களும் நம் குடுமியைப் பிடித்து ஆட்டுகின்றன. நாமரூபப் பேய்கள் என்று அவற்றை சித்தர்கள் அழைப்பார்கள். அவற்றால் நமக்கு மயக்கம் உண்டாகிறது; ஒன்றை மற்றொன்றாகக் காண்கிறோம், இந்த மயக்கத்திலிருந்து விடுபடவேண்டு மானால், மனம் செய்கிற வம்புகளிலிருந்தும் குறும்புகளி லிருந்தும் நாம் விடுபடவேண்டும். அப்படி விடுபடுவதற்கு வழியிருக்கிறதா? இருக்கிறது.

உள்ளம் செயலற்றிருந்தால் பேருண்மை நமக்குக்கு காட்சி கொடுக்கும்; உருவங்களை இரையாகக் கொடுத்தால் தானே இந்த உள்ளத்துக் கொண்டாட்டமாக இருக்கும். உருவங்களை ஒதுக்கி விட்டு உருவமற்ற வெட்டவெளியை, அறிவாகாசத்தை நாம்நினைத்தோமானால், நம் உள்ளத்துக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த உண்மையை உணர்ந்து விட்டாலே, ஞானநிலை ஏற்பட்டு விட்டது என்று அர்த்தம். உருவத்துக்கெல்லாம் காரண மாக இருப்பது உள்ளம், உள்ளத்தை இயக்குவது உருவம்.

உள்ளம் உருவென்றும்,
உருவம் உளம் என்றும்,
உள்ள பரிசறிந்து
ஓரும் அவர்கட்குப்
பள்ளமுமில்லை திடரில்லை பாழில்லை
உள்ளமுமில்லை உருவில்லை தானே.

ஆனால் அருவ நிலையில் நிற்பது மிகவும் கடினமான காரியம். குருவின் துணையால், ஓங்காரத்துள்ளொளி

உள்ளே உதயமுற்றுவிட்டால், அந்த ஒளியில் உள்ளத்தை எளிதில் நிறுத்தலாம். அந்த ஒளிக்கு உருவமில்லை, ஆனால் அகக்கண்ணால் அதைப் பார்க்கப் பார்க்க உள்ளம் உருகி உருகி ஒழிந்து போகும். நமது உள்ளத்தினுள்ளே ஞான விளக்கை ஏற்றி வைக்கும் தகுதி ஞானாசிரியர்களுக்கே உண்டு. அப்படி விளக்கையேற்றி நோக்கினால், வெட்ட வெளியை உணரலாம். அந்த ஒளியின் முன்னே மனித வேதனையெல்லாம் மறைந்து போகும். விளக்கை விளக்கக் கூடிய கைவிளக்கு அந்த ஞானிகளிடத்திலே இருக்கிறது. அவர்கள் torch light அடித்துக் காட்டினால்தான் ஞான சூரியன் நம் காட்சிக்குப் புலப்படுவான். அப்படி அவர்கள் விளக்கினார்களேயானால், விளக்குக்குள்ளிருக்கும் பரம் பொருள், அதாவது, விளக்கவர் நமக்கு நன்றாகப் புலப்படு வார்.

விளக்கினை யேற்றி வெளியை யறியின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

இவ்வாறு இறைவிளக்கம் பெற்றவர் திருமூலர். மனசை உள்முகமாகச் செலுத்தாமல் வெளிமுகமாகத் திரியவைத்துக் கொண்டிருந்த தம் உடம்புக்குள்ளே புகுந்து அருளைச் சொரிந்து அமுதத்தை ஈந்த இறைவனுடைய கருணையை எண்ணி எண்ணி உள்ளம் நெகிழ்கிறார் திருமூலர்:—

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மலனாக்கி
அறமே புகுந்தெனக் காரமுது ஈந்த
திறமே தெள்ளறெண்ணித் திகைத்திருந்தேனே.

உள்ளே உதயமுற்றுவிட்டால், அந்த ஒளியில் உள்ளத்தை எளிதில் நிறுத்தலாம். அந்த ஒளிக்கு உருவமில்லை, ஆனால் அகக்கண்ணால் அதைப் பார்க்கப் பார்க்க உள்ளம் உருகி உருகி ஒழிந்து போகும். நமது உள்ளத்தினுள்ளே ஞான விளக்கை ஏற்றி வைக்கும் தகுதி ஞானாசிரியர்களுக்கே உண்டு. அப்படி விளக்கையேற்றி நோக்கினால், வெட்ட வெளியை உணரலாம். அந்த ஒளியின் முன்னே மனித வேதனையெல்லாம் மறைந்து போகும். விளக்கை விளக்கக் கூடிய கைவிளக்கு அந்த ஞானிகளிடத்திலே இருக்கிறது. அவர்கள் torch light அடித்துக் காட்டினால்தான் ஞான சூரியன் நம் காட்சிக்குப் புலப்படுவான். அப்படி அவர்கள் விளக்கினார்களேயானால், விளக்குக்குள்ளிருக்கும் பரம் பொருள், அதாவது, விளக்கவர் நமக்கு நன்றாகப் புலப்படுவார்.

விளக்கினை யேற்றி வெளியை யறியின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

இவ்வாறு இறைவிளக்கம் பெற்றவர் திருமூலர். மனசை உள்முகமாகச் செலுத்தாமல் வெளிமுகமாகத் திரியவைத்துக் கொண்டிருந்த தம் உடம்புக்குள்ளே புகுந்து அருளைச் சொரிந்து அமுதத்தை ஈந்த இறைவனுடைய கருணையை எண்ணி எண்ணி உள்ளம் நெகிழ்கிறார் திருமூலர்:—

புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மலனாக்கி
அறமே புகுந்தெனக் காரமுது ஈந்த
திறமே தெள்ளறெண்ணித் திகைத்திருந்தேனே.

# 5. மாமனிதன்

பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் மயிர்க்கூச்செடுக்கும் நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது; நம்ப முடியாத நிகழ்ச்சி அது. சூரியன் அதிவேகமாகச் சுற்றிக் கொண்டிருந்த போது. திடீரென்று ஒரு நக்ஷத்திரம் அதன் அருகே வந்து, அதை உரசிக்கொண்டு சென்றது. அதன் விளைவாகச் சூரியனுடைய உடம்பிலிருந்து ஒரு துண்டு முறிந்து வெட்ட வெளியில் தெறித்து விழுந்தது. தெறித்த துண்டு சூரியனைப் பிராகாரமாகச் சுற்றிக்கொண்டே வெகு தூரத்துக்கு அப்பால் சென்றது. தாயை அண்டி அது சுற்றிக் கொண்டேயிருந்ததானால், உயிரினம் வாழ முடியாத அக்கினிப் பிழம்பாகச் சூரியக் குஞ்சும் இருந்திருக்கும். தாயின் கதகதப்பை வெறுத்து, வெகு தூரத்துக்கப்பால் குஞ்சு போயிருந்தால். உயிரினம் வாழ முடியாத, ஒரே பனிக்கட்டி மயமாகப் பூமி இருந்திருக்கும். நல்ல வேளையாகத் தாயை விட்டு மிகவும் அகலாமலும், தாயின் பக்கம் மிகவும் அணுகாமலும், உயிரினங்களின் உற்பத்திக்கு எவ்வளவு கதகதப்பு வேண்டுமோ, அவ்வளவு கதகதப்புக் கிடைக்கும் தூரத்தில் சுற்றிக்கொண்டு, அந்தச் சூரியத் துண்டு சூரியனைச் சுற்றி வரலாயிற்று. இளகிப் போய், நிலைத்த வடிவம் இல்லாமல் இருந்த அந்த அக்கினித் துண்டு, கொஞ்சம் கொஞ்சமாகச் சூடு ஆறி. உடல் சுருங்கி, ஓர் உருண்டை வடிவம் பெற்றது. அந்த உருண்டைதான் மனித இனத்தின் எதிர்காலத்தைத்

# 5. மாமனிதன்

பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் மயிர்க்கூச்செடுக்கும் நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது; நம்ப முடியாத நிகழ்ச்சி அது. சூரியன் அதிவேகமாகச் சுற்றிக் கொண்டிருந்த போது. திடீரென்று ஒரு நக்ஷத்திரம் அதன் அருகே வந்து, அதை உரசிக்கொண்டு சென்றது. அதன் விளைவாகச் சூரியனுடைய உடம்பிலிருந்து ஒரு துண்டு முறிந்து வெட்ட வெளியில் தெறித்து விழுந்தது. தெறித்த துண்டு சூரியனைப் பிராகாரமாகச் சுற்றிக்கொண்டே வெகு தூரத்துக்கு அப்பால் சென்றது. தாயை அண்டி அது சுற்றிக் கொண்டேயிருந்ததானால், உயிரினம் வாழ முடியாத அக்கினிப் பிழம்பாகச் சூரியக் குஞ்சும் இருந்திருக்கும். தாயின் கதகதப்பை வெறுத்து, வெகு தூரத்துக்கப்பால் குஞ்சு போயிருந்தால். உயிரினம் வாழ முடியாத, ஒரே பனிக்கட்டி மயமாகப் பூமி இருந்திருக்கும். நல்ல வேளையாகத் தாயை விட்டு மிகவும் அகலாமலும், தாயின் பக்கம் மிகவும் அணுகாமலும், உயிரினங்களின் உற்பத்திக்கு எவ்வளவு கதகதப்பு வேண்டுமோ, அவ்வளவு கதகதப்புக் கிடைக்கும் தூரத்தில் சுற்றிக்கொண்டு, அந்தச் சூரியத் துண்டு சூரியனைச் சுற்றி வரலாயிற்று. இளகிப் போய், நிலைத்த வடிவம் இல்லாமல் இருந்த அந்த அக்கினித் துண்டு, கொஞ்சம் கொஞ்சமாகச் சூடு ஆறி. உடல் சுருங்கி, ஓர் உருண்டை வடிவம் பெற்றது. அந்த உருண்டைதான் மனித இனத்தின் எதிர்காலத்தைத்

தன்னகத்தே அடக்கிக் கொண்டு சுற்றியது; இன்னும் சுற்றிக் கொண்டே இருக்கிறது.

மிதமிஞ்சிய சூடுள்ள மண்டலத்திலே எளிமையான ஓரணுப் பொருள்களே இருக்க முடியும். ஆனால் சூரியனி லிருந்து பிய்த்துக் கொண்டு வந்த பூமியிலோ, சூடு குறை வாக இருந்த காரணத்தால், அணுவோடு அணு சேர்க்கை செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருந்தன. ஆகவே, சூரிய மண்டலத்தில் எளிமையோடு இருந்த ஓரணுப் பொருள்கள் சூடு குறைந்த பூமியிலே ஒன்றோடொன்றைப் புணர்ந்து, சிக்கல் நிறைந்த, ஆனால் முற்றும் புதிய பல அணுப் பொருள்களாக மாறின. இவ்வாறாக, பூமாதேவிக்கு, சூரிய தேவனுக்கில்லாத இரண்டு ஆற்றல்கள் உண்டாயின— ஒன்று. புதுப் பொருள்களைப் படைக்கும் ஆற்றல், மற் றொன்று, எளிய பொருள்களிலிருந்து சிக்கலான பொருள் களை உண்டாக்கும் ஆற்றல். 'வாழ்க்கையின் வளர்ச்சிக்கு, பரிணாம தத்துவத்துக்கு (Theory of Evolution) இவ் விரண்டு ஆற்றல்களும் காரணமாக இருந்திருக்கின்றன, இனிமேலும் இருக்கப் போகின்றன' என்று ஃப்ரெஞ்ச் உயிர் நூல் வல்லுநர் தெய்யா தி ஷர்தான் கருதுகிறார்.

அவருடைய கொள்கை புரட்சிகரமான கொள்கையென் றும், எதிர்கால உலகச் சிந்தனையையே அது உருவாக்கப் போகிறதென்றும் ஸர் ஜூலியன் ஹக்ஸ்லி என்ற உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி நினைக்கிறார். பூவுலகப் பொருள்களின் வளர்ச்சியை ஒரு மரமாகக் கற்பனை செய்வோ மானால், மனிதன் அந்த மரத்தின் உச்சாணிக் கிளையாகவும், அக்கிளையின் நுனியில் என்றென்றும் வளர்ந்து கொண் டிருக்கும் கொழுந்தாகவும் இருக்கிறான். நாத்திகவாதியான பெர்ட்ரன்ட் ரஸ்ஸெல் சொன்னார் : "பேரண்டத்தின் ஒரு சிறு மூலையிலே சுற்றிக் கொண்டிருக்கும் ஓர் அற்ப தூசியே இந்தப் பூமி; இந்தத் தூசியின் வரலாற்றில் ஒரு கணம் கொப்புளித்து மறுகணம் மறைகிற ஒரு சிறு கதைதான்

தன்னகத்தே அடக்கிக் கொண்டு சுற்றியது; இன்னும் சுற்றிக் கொண்டே இருக்கிறது.

மிதமிஞ்சிய சூடுள்ள மண்டலத்திலே எளிமையான ஓரணுப் பொருள்களே இருக்க முடியும். ஆனால் சூரியனி லிருந்து பிய்த்துக் கொண்டு வந்த பூமியிலோ, சூடு குறை வாக இருந்த காரணத்தால், அணுவோடு அணு சேர்க்கை செய்வதற்கு வேண்டிய வசதிகள் இருந்தன. ஆகவே, சூரிய மண்டலத்தில் எளிமையோடு இருந்த ஓரணுப் பொருள்கள் சூடு குறைந்த பூமியிலே ஒன்றோடொன்றைப் புணர்ந்து, சிக்கல் நிறைந்த, ஆனால் முற்றும் புதிய பல அணுப் பொருள்களாக மாறின. இவ்வாறாக, பூமாதேவிக்கு, சூரிய தேவனுக்கில்லாத இரண்டு ஆற்றல்கள் உண்டாயின– ஒன்று. புதுப் பொருள்களைப் படைக்கும் ஆற்றல், மற் றொன்று, எளிய பொருள்களிலிருந்து சிக்கலான பொருள் களை உண்டாக்கும் ஆற்றல். 'வாழ்க்கையின் வளர்ச்சிக்கு, பரிணும தத்துவத்துக்கு (Theory of Evolution) இவ் விரண்டு ஆற்றல்களும் காரணமாக இருந்திருக்கின்றன, இனிமேலும் இருக்கப் போகின்றன' என்று ஃப்ரெஞ்ச் உயிர் நூல் வல்லுநர் தெய்யா தி ஷர்தான் கருதுகிறார்.

அவருடைய கொள்கை புரட்சிகரமான கொள்கையென் றும், எதிர்கால உலகச் சிந்தனையையே அது உருவாக்கப் போகிறதென்றும் ஸர் ஜூலியன் ஹக்ஸ்லி என்ற உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி நினைக்கிறார். பூவுலகப் பொருள்களின் வளர்ச்சியை ஒரு மரமாகக் கற்பனை செய்வோ மானால், மனிதன் அந்த மரத்தின் உச்சாணிக் கிளையாகவும், அக்கிளையின் நுனியில் என்றென்றும் வளர்ந்து கொண் டிருக்கும் கொழுந்தாகவும் இருக்கிறான். நாத்திகவாதியான பெர்ட்ரன்ட் ரஸ்ஸெல் சொன்னார் : "பேரண்டத்தின் ஒரு சிறு மூலையிலே சுற்றிக் கொண்டிருக்கும் ஓர் அற்ப தூசியே இந்தப் பூமி; இந்தத் தூசியின் வரலாற்றில் ஒரு கணம் கொப்புளித்து மறுகணம் மறைகிற ஒரு சிறு கதைதான்

மனிதன்." ஆனால், ரஸ்ஸெலஸ் நினைப்பது போல் அவ்வளவு துச்சமான பொருள் அல்ல மனிதன். உண்மையில், சென்ற கோடானுகோடி ஆண்டுகளாகப் பூமியில் சாதிக்கப் பெற்ற சாதனைகளையெல்லாம் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருக்கிறான் மனிதன். அது மாத்திரம் அல்ல; இப்பூவுலகம் எதிர்காலத்திலே சாதிக்கப் போகிற எல்லையற்ற சாதனைகளுக்கெல்லாம் அச்சாரமாகவும் அடையாளமாகவும் இருக்கிறான் மனிதன்.

தெய்யாருடைய கொள்கையானது வளர்ச்சி நெறியின் இரகசியங்களுக்கு மத்தாப்பூப் போட்டுக் காட்டுகிறது. கோண் (Sub-atom) எப்படி மற்றக் கோண்களோடு சல்லாபம் செய்து அணுவாக (Atom) மாறியது. அணுவும் அணுவும் கைகோர்த்துக் கொண்டு பிரிக்க முடியாத அணுத்திரள்களாக எவ்வாறு மாறின, உயிரற்ற அணுக்குள்ளே உயிர் போய் எவ்வாறு தொற்றிக்கொண்டு அவற்றை உயிரணுவாக்கியது (Uni-cellular organism), உயிரணுக்கள் கூட்டம் போட்டு எப்படி உயிரணுத் திரள்களாக (Multi-cellular) மாறின, உயிரணுத்திரள்கள் மூளையுள்ள பிராணிகளாகவும் கடைசியில் மனிதனாகவும் எவ்வாறு உருவெடுத்தன என்பவற்றையெல்லாம் தெய்யார் கண்டுபிடித்த நெறிகள் விளக்குகின்றன. சிக்கல் ஏற ஏற, வாழ்வு வளர்ந்துகொண்டே போகிறது. சிக்குப்படுதல மூலம் வர்ழ்வுக்கு வளர்ச்சி கிடைக்கிறது. இந்தச் சிக்குப்பாட்டில் (Complexification) பேரண்டமே பங்கு கொள்கிறது என்பதே தெய்யாரின் கருத்து. 'இவ்வாறு வளர்ச்சி நிகழும் போது. பூமி தத்துவமானது சுருண்டு, தன் மேலேயேதான் பாய்ந்து மடங்கிக் கொள்கிறது' (The world-stuff is 'rolled up' cr 'folded-in upon' itself) என்றும் தெய்யார் சொல்லுகிறார்.

அணுவிலிருந்து மனிதன் வரை நடந்திருக்கும் வாழ்வின் வளர்ச்சியையும், அதன் அடிப்படைப் போக்கையும்

மனிதன்.'' ஆனால், ரஸ்ஸெலஸ் நினைப்பது போல் அவ்வளவு துச்சமான பொருள் அல்ல மனிதன். உண்மையில், சென்ற கோடானுகோடி ஆண்டுகளாகப் பூமியில் சாதிக்கப் பெற்ற சாதனைகளையெல்லாம் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருக்கிறான் மனிதன். அது மாத்திரம் அல்ல; இப்பூவுலகம் எதிர்காலத்திலே சாதிக்கப் போகிற எல்லையற்ற சாதனைகளுக்கெல்லாம் அச்சாரமாகவும் அடையாளமாகவும் இருக்கிறான் மனிதன்.

தெய்யாருடைய கொள்கையானது வளர்ச்சி நெறியின் இரகசியங்களுக்கு மத்தாப்பூப் போட்டுக் காட்டுகிறது. கோண் (Sub-atom) எப்படி மற்றக் கோண்களோடு சல்லாபம் செய்து அணுவாக (Atom) மாறியது. அணுவும் அணுவும் கைகோர்த்துக் கொண்டு பிரிக்க முடியாத அணுத் திரள்களாக எவ்வாறு மாறின, உயிரற்ற அணுக்குள்ளே உயிர் போய் எவ்வாறு தொற்றிக்கொண்டு அவற்றை உயிரணுவாக்கியது (Uni-cellular organism), உயிரணுக்கள் கூட்டம் போட்டு எப்படி உயிரணுத் திரள்களாக (Multi-cellular) மாறின, உயிரணுத்திரள்கள் மூளையுள்ள பிராணிகளாகவும் கடைசியில் மனிதனாகவும் எவ்வாறு உருவெடுத்தன என்பவற்றையெல்லாம் தெய்யார் கண்டுபிடித்த நெறிகள் விளக்குகின்றன. சிக்கல் ஏற ஏற, வாழ்வு வளர்ந்துகொண்டே போகிறது. சிக்குப்படுதல மூலம் வர்ழ்வுக்கு வளர்ச்சி கிடைக்கிறது. இந்தச் சிக்குப்பாட்டில் (Complexification) பேரண்டமே பங்கு கொள்கிறது என்பதே தெய்யாரின் கருத்து. 'இவ்வாறு வளர்ச்சி நிகழும் போது. பூமி தத்துவமானது சுருண்டு, தன் மேலேயேதான் பாய்ந்து மடங்கிக் கொள்கிறது' (The world-stuff is 'rolled up' cr 'folded-in upon' itself) என்றும் தெய்யார் சொல்லுகிறார்.

அணுவிலிருந்து மனிதன் வரை நடந்திருக்கும் வாழ்வின் வளர்ச்சியையும், அதன் அடிப்படைப் போக்கையும்

நாம் கூர்ந்து கவனித்தால், திறமையான மூளையுள்ள மனிதனைப் படைப்பதற்காகவே, பூமாதேவி, அங்கமெலாம் நோவ நெடுகிலும் பாடுபட்டு வந்திருக்கிருள் என்று தெரிய வரும். மனிதமூளை பிறந்த கதைமிக்க சுவையானது. நான்கு கால்களுள்ள மிருகமாக இருக்கும் வரை மூளையின் வளர்ச்சி தடைப்பட்டு நின்றது. தரையில் ஊன்றி நின்ற முன்கால்கள் இரண்டும் கைகளாக மாறி, மிருகத்தின் முதுகு மனித முதுகாக நிமிர்ந்த மாத்திரத்திலே, ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. கழுத்தைச் சுற்றியிருந்த சதையின் அமுக்கம் குறைந்தது. மண்டையோட்டைப் பிடித்திருந்த பிடிப்பு நீங்கி, தசைகளால் சிறைப்பட்டிருந்த மூளை விடுபட்டு வளரத் தொடங்கியது. நான்கு கால்களோடு இருந்தபோது, மூஞ்சி நீண்டும். கண்கள் பக்கவாட்டிலும் இருந்தன. ஆனல் இரண்டு கால்களில் நின்றபோது மனித முகம் சிறுத்து, கண்கள் ஒன்றையொன்று நெருங்கி அமைந்து விட்டன. இதன் விளைவாக, இரண்டு கண்களும் ஒரே திசையை நோக்கி ஒரு முனைப்பாகப் பார்க்கும் ஆற்றலைப் பெறுகின்றன. கைகள் இரண்டும் வைத்திருக்கும் ஒரு பொருளை இரண்டு கண்களாலும் கூர்ந்து நோக்கும் சக்தி ஏற்படுகிறது. இதுதானே சிந்தனையின் புற அடையாளம். மனிதன் எப்போது சிந்தனையே செய்யத் தொடங்கினுனே. அக்கணத்திலே உயிரினத்தின் வரலாற்றிலே ஒரு மகத்தான மாறுதல் ஏற்பட்டது.

சிந்தனையென்ருல், அது ஒரு சாமானிய நிகழ்ச்சி அல்ல. உணர்வு என்ற தத்துவமானது தன்னைத்தானே ஆராயத் தொடங்கும்போது, அதற்கு ஏற்படும் ஆற்றலைத் தானே சிந்தனையென்று சொல்லுகிறேம்? கண்ணுல் ஒரு பருப் பொருளைப் பார்த்து அதன் குணத்தைச் சோதனை செய்வது போல, மனித அறிவு நுண் பொருளாகிய தன்னையே ஒரு சோதனைப் பொருளாகக் கொண்டு ஆராயத் தொடங்கியது. அறிவது மாத்திரம் அல்ல, அறிகின்ற

நாம் கூர்ந்து கவனித்தால், திறமையான மூளையுள்ள மனிதனைப் படைப்பதற்காகவே, பூமாதேவி, அங்கமெலாம் நோவ நெடுகிலும் பாடுபட்டு வந்திருக்கிறாள் என்று தெரிய வரும். மனிதமூளை பிறந்த கதைமிக்க சுவையானது. நான்கு கால்களுள்ள மிருகமாக இருக்கும் வரை மூளையின் வளர்ச்சி தடைப்பட்டு நின்றது. தரையில் ஊன்றி நின்ற முன்கால்கள் இரண்டும் கைகளாக மாறி, மிருகத்தின் முதுகு மனித முதுகாக நிமிர்ந்த மாத்திரத்திலே, ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. கழுத்தைச் சுற்றியிருந்த சதையின் அழுக்கம் குறைந்தது. மண்டையோட்டைப் பிடித்திருந்த பிடிப்பு நீங்கி, தசைகளால் சிறைப்பட்டிருந்த மூளை விடுபட்டு வளரத் தொடங்கியது. நான்கு கால்களோடு இருந்தபோது, மூஞ்சி நீண்டும். கண்கள் பக்கவாட்டிலும் இருந்தன. ஆனால் இரண்டு கால்களில் நின்றபோது மனித முகம் சிறுத்து, கண்கள் ஒன்றையொன்று நெருங்கி அமைந்து விட்டன. இதன் விளைவாக, இரண்டு கண்களும் ஒரே திசையை நோக்கி ஒரு முனைப்பாகப் பார்க்கும் ஆற்றலைப் பெறுகின்றன. கைகள் இரண்டும் வைத்திருக்கும் ஒரு பொருளை இரண்டு கண்களாலும் கூர்ந்து நோக்கும் சக்தி ஏற்படுகிறது. இதுதானே சிந்தனையின் புற அடையாளம். மனிதன் எப்போது சிந்தனையே செய்யத் தொடங்கினானோ. அக்கணத்திலே உயிரினத்தின் வரலாற்றிலே ஒரு மகத்தான மாறுதல் ஏற்பட்டது.

சிந்தனையென்றால், அது ஒரு சாமானிய நிகழ்ச்சி அல்ல. உணர்வு என்ற தத்துவமானது தன்னைத்தானே ஆராயத் தொடங்கும்போது, அதற்கு ஏற்படும் ஆற்றலைத் தானே சிந்தனையென்று சொல்லுகிறோம்? கண்ணால் ஒரு பருப் பொருளைப் பார்த்து அதன் குணத்தைச் சோதனை செய்வது போல, மனித அறிவு நுண் பொருளாகிய தன்னையே ஒரு சோதனைப் பொருளாகக் கொண்டு ஆராயத் தொடங்கியது. அறிவது மாத்திரம் அல்ல, அறிகின்ற

தன்னையே அறிவது, அறிதல் என்ற தொழிலைச் செய்வதோடு, அறிதற்றொழிலின் தன்மையையே ஆய்ந்து அறிவது—இதுவே மூளை வளர்ச்சியினால் இரண்டு கால் கொண்ட மனிதன் அடைந்த லாபம்.

புற உலகத்தைத் துழாவிக்கொண்டிருக்கும் அறிவைத் தடுத்து மறித்து, தன் அக உலகத்தைத் துழாவச் செய்தான் மனிதன். தன் மனசைத் தன் மனசின் மேல் ஏவிய அந்தக் கணத்திலேயே, ஒரு புதிய உலகம் வழி திறந்தது மனிதனுக்கு. நுண்ணறிவு, தர்க்கம், விசாரம், விவேகம், கற்பனை, புதுக் கண்டுபிடிப்புகள், கணக்கு, கலை காலத்தையும் இடத்தையும் கணிக்கும் முறைகள், கவலைகள், ஏக்கங்கள், காதற் கனவுகள் — இவையெல்லாம், மனித சிந்தனையை உழவு செய்து பயிரிட்ட காரணத்தால் ஏற்பட்ட விளைவுகள்.

சிந்தனை செய்யும் சக்திதான் மனிதனை மிருகத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. மிருகத்துக்குத் தெரியும், ஆனால் தெரியுமென்று தெரியாது. மனிதனைப் போல அறிவதை அறியும் ஆற்றல் மிருகங்களுக்கிருந்தால், மனிதனை போல மிருகங்களும் நீராவிக் கப்பல், யந்திரம், ஆகாய விமானம் போன்ற சாதனங்களைக் கண்டு பிடித்திருக்கும். அப்படி அவை கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. கண்டு பிடித்திருந்தால், அந்தக் கண்டுபிடிப்புகள் மனிதனுடைய கவனத்தினின்றும் தப்பியிருக்க முடியாது. சிந்தனை ஆற்றல் இல்லாத காரணத்தால், மிருகங்கள் சிந்தனை மண்டலத்துக்குள்ளே எட்டி அடி வைக்க முடியவில்லை. ஆனால், மனிதனோ அந்தச் சிந்தனையுலகத்திலே மிகுந்த சுதந்திரத்தோடு நீந்தியும், உலாவியும், பறந்தும், விளையாடியும் வருகிறான்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, வாழ்வு எந்தத் திசையை நோக்கி வளர்கிறது என்ற பிடிபடு

தன்னையே அறிவது, அறிதல் என்ற தொழிலைச் செய்வதோடு, அறிதற்றொழிலின் தன்மையையே ஆய்ந்து அறிவது—இதுவே மூளை வளர்ச்சியினால் இரண்டு கால் கொண்ட மனிதன் அடைந்த லாபம்.

புற உலகத்தைத் துழாவிக் கொண்டிருக்கும் அறிவைத் தடுத்து மறித்து, தன் அக உலகத்தைத் துழாவச் செய்தான் மனிதன். தன் மனசைத் தன் மனசின் மேல் ஏவிய அந்தக் கணத்திலேயே, ஒரு புதிய உலகம் வழி திறந்தது மனிதனுக்கு. நுண்ணறிவு, தர்க்கம், விசாரம், விவேகம், கற்பனை, புதுக் கண்டுபிடிப்புகள், கணக்கு, கலை காலத்தையும் இடத்தையும் கணிக்கும் முறைகள், கவலைகள், ஏக்கங்கள், காதற் கனவுகள் — இவையெல்லாம், மனித சிந்தனையை உழவு செய்து பயிரிட்ட காரணத்தால் ஏற்பட்ட விளைவுகள்.

சிந்தனை செய்யும் சக்திதான் மனிதனை மிருகத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. மிருகத்துக்குத் தெரியும், ஆனால் தெரியுமென்று தெரியாது. மனிதனைப் போல அறிவதை அறியும் ஆற்றல் மிருகங்களுக்கிருந்தால், மனிதனை போல மிருகங்களும் நீராவிக் கப்பல், யந்திரம், ஆகாய விமானம் போன்ற சாதனங்களைக் கண்டு பிடித்திருக்கும். அப்படி அவை கண்டுபிடிந்ததாகத் தெரியவில்லை. கண்டு பிடித்திருந்தால், அந்தக் கண்டுபிடிப்புகள் மனிதனுடைய கவனத்தினின்றும் தப்பியிருக்க முடியாது. சிந்தனை ஆற்றல் இல்லாத காரணத்தால், மிருகங்கள் சிந்தனை மண்டலத்துக்குள்ளே எட்டி அடி வைக்க முடியவில்லை. ஆனால், மனிதனோ அந்தச் சிந்தனையுலகத்திலே மிகுந்த சுதந்திரத்தோடு நீந்தியும், உலாவியும், பறந்தும், விளையாடியும் வருகிறான்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, வாழ்வு எந்தத் திசையை நோக்கி வளர்கிறது என்ற பிடிபடு

கிறது; உயிரற்ற அணுவிலிருந்து உயிருள்ள அணு, உயிருள்ள அணுவிலிருந்து சிந்திக்கும் அணு இப்படியாக வளர்ந்து கொண்டே செல்லுகிறது வாழ்வு.

தன்னுணர்வோடு செய்த சிந்தனையின் முதல் பொறி விரிந்து, ஒளிவட்டமாகப் பரவுகிறது. இந்த வட்டம் விரிந்து விரிந்து பூமியின் முழுப் பரப்பையும் தன் ஒளிக் கதிர்களால் மறைக்கிறது. சிந்தனையாற்றல் பெருகப் பெருக மனிதனுடைய ஆதிக்கம் பெருகிப் பூமியிலுள்ள பொருள் களும் மிருகங்களும் மனிதனுக்கு அடிமைப்படுகின்றன. நன் செய்கள், பூஞ்சோலைகள், மாடமாளிகைகள், தொழிற் சாலைகள், கருத்துகள், சமயங்கள், தத்துவங்கள், பண் பாடுகள் இவை தோன்றி, பூமியில் இதற்கு முன் இல்லாத மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்பதைப் பறைசாற்றிக் கொண்டு நிற்கின்றன. செவ்வாய்க் கிரகத்திலிருந்து ஒருவன் நமது பூமியை இன்று ஞானதிருஷ்டியோடு பார்த்தால், அவனுடைய கண்ணுக்குப் பளிச்சென்று படுவது எதுவாக இருக்கும்? பூமியைச் சுற்றி அலை வீசிக்கொண்டு நிற்கும் நீலக்கடலின் நீல நிறமல்ல; அடர்ந்து படர்ந்து, மிடைந்து நிற்கும் பச்சைப் பசுங்காட்டின் பசுமை அல்ல; கொழுந்து விட்டெரியும் மனித சிந்தனையின் ஒளிப்பெருக்கந்தான் அவனுடைய கண்ணைக் கவர்வதாக இருக்கும்.

சிந்தனை பிறந்த காலந்தொட்டு இன்றுவரை மனிதர்கள் எண்ணிய எண்ணங்கள், உணர்ந்த உணர்ச்சிகள், கண்ட கற்பனைகள் எல்லாம் சிந்தனை அலைகளாகப் பூமியைச் சுற்றி யிருக்கின்றன என்றும், பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்ட லத்துக்கு 'அட்மாஸ்பியர்' (Atmosphere) என்று பெயர் கொடுத்தது போல, பூமியைச் சுற்றியுள்ள மன மண்டலத் துக்கு 'நூஸ்பியர்' (Noosphere) என்று பெயர் கொடுக்க வேண்டும் என்றும் தெய்யார் தி ஷர்தான் சொல்லுகிறார். மேலும், பூமி உருண்டையாக இருப்பதால் பூமிக்கும் மனித சிந்தனைக்கும் இடையேயிருக்கும் உறவாடல் எத்தகையது

கிறது; உயிரற்ற அணுவிலிருந்து உயிருள்ள அணு, உயிருள்ள அணுவிலிருந்து சிந்திக்கும் அணு இப்படியாக வளர்ந்து கொண்டே செல்லுகிறது வாழ்வு.

தன்னுணர்வோடு செய்த சிந்தனையின் முதல் பொறி விரிந்து, ஒளிவட்டமாகப் பரவுகிறது. இந்த வட்டம் விரிந்து விரிந்து பூமியின் முழுப் பரப்பையும் தன் ஒளிக் கதிர்களால் மறைக்கிறது. சிந்தனையாற்றல் பெருகப் பெருக மனிதனுடைய ஆதிக்கம் பெருகிப் பூமியிலுள்ள பொருள்களும் மிருகங்களும் மனிதனுக்கு அடிமைப்படுகின்றன. நன்செய்கள், பூஞ்சோலைகள், மாடமாளிகைகள், தொழிற்சாலைகள், கருத்துகள், சமயங்கள், தத்துவங்கள், பண்பாடுகள் இவை தோன்றி, பூமியில் இதற்கு முன் இல்லாத மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்பதைப் பறைசாற்றிக் கொண்டு நிற்கின்றன. செவ்வாய்க் கிரகத்திலிருந்து ஒருவன் நமது பூமியை இன்று ஞானதிருஷ்டியோடு பார்த்தால், அவனுடைய கண்ணுக்குப் பளிச்சென்று படுவது எதுவாக இருக்கும்? பூமியைச் சுற்றி அலை வீசிக்கொண்டு நிற்கும் நீலக்கடலின் நீல நிறமல்ல; அடர்ந்து படர்ந்து, மிடைந்து நிற்கும் பச்சைப் பசுங்காட்டின் பசுமை அல்ல; கொழுந்து விட்டெரியும் மனித சிந்தனையின் ஒளிப்பெருக்கந்தான் அவனுடைய கண்ணைக் கவர்வதாக இருக்கும்.

சிந்தனை பிறந்த காலந்தொட்டு இன்றுவரை மனிதர்கள் எண்ணிய எண்ணங்கள், உணர்ந்த உணர்ச்சிகள், கண்ட கற்பனைகள் எல்லாம் சிந்தனை அலைகளாகப் பூமியைச் சுற்றியிருக்கின்றன என்றும், பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்துக்கு 'அட்மாஸ்பியர்' (Atmosphere) என்று பெயர் கொடுத்தது போல, பூமியைச் சுற்றியுள்ள மன மண்டலத்துக்கு 'நூஸ்பியர்' (Noosphere) என்று பெயர் கொடுக்க வேண்டும் என்றும் தெய்யார் தி ஷர்தான் சொல்லுகிறார். மேலும், பூமி உருண்டையாக இருப்பதால் பூமிக்கும் மனித சிந்தனைக்கும் இடையேயிருக்கும் உறவாடல் எத்தகையது

என்பதையும் தெய்யார் தம் மனக்கண்ணுல் பார்க்கிருர். பூமி முட்டை வடிவாக இல்லாமல் தட்டையாக இருந்திருந்தால், மனிதனுடைய சிந்தனை நீட்டுப்போக்காக வெகு தூரம் போய்த் தேய்ந்து தேய்ந்து கடைசியில் வலிமையை இழந்திருக்கும். ஆனல் பூமி உருண்டையாக இருப்பதால், அதனுடைய உருட்சி மனித சிந்தனை வீண் போகாமல், அதைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. இந்த முட்டை வடிவமான பூமியில் எந்த ஒரு கருத்துத் தோன்றினுலும், அது உருண்டையைச் சுற்றிச் சுற்றி வருமேயல்லாது, நீட்டுப் போக்காகப் போய் மறைந்து விடாது. இவ்வாறு பூமியைச் சுற்றிவரும் மனிதனுடைய கருத்துகள் ஒன்ருேடொன்று மோதி, சமுதாயத்தின் கூட்டு மனசிலே (Cumulative unconcious) சூடேற்றி, மனிதச் சிந்தனைக்கு மேலும் அழுத்தமும் திருத்த முருகலான பண்பும் கொடுக்கின்றன. இதன் விளைவாக, மனித சமுதாயத்தின் சிந்தனை நெசவு மேறுக்கேறி, மனித சிந்தனையின் ஆற்றல் மேலும் பெருகுகிறது. பூமியைச் சுற்றியுள்ள மன மண்டலம் மனித சிந்தனையைப் பாதிக்க, மனிதசிந்தனை மேற்சொன்ன மனமண்டலத்தைப் பாதிக்க, இவ்வாறு ஒன்றையொன்று பாதிப்பதன் மூலமாக வாழ்வின் வளர்ச்சி முற்றி மாமனிதன் பிறப்பான். அதன் பின் பூமியைச் சுற்றியுள்ள மனமண்டலம் தெய்வத் தன்மையைப் பெறும். அந்த நிலையையே வாழ்வின் கடைசி நிலையாக (Point Omega) அமையும் என்றும் தெய்யார் தீஷர்தான் சொல்லுகிருர்.

மேற்சொன்ன நிலையை விளக்கும்போது, தெய்யாருக்கு இயல்பாக இருக்கும் சித்தத் தெளிவு குறையத் தொடங்குகிறது. இதற்குரிய காரணத்தை வெகுதூரம் அலைந்து தேட வேண்டியதில்லை. கத்தோலிக்கப் பாதிரியாராக இருந்தவர் தெய்யார். அவருடைய விஞ்ஞானக் கருத்துக்கள் கத்தோலிக்கச் சமயக் கோட்பாடுகளுக்கு ஒத்துவரவில்லை. கிறிஸ்து பிறப்பதற்குச் சரியாக 4004 ஆண்டுகளுக்கு முன்

என்பதையும் தெய்யார் தம் மனக்கண்ணால் பார்க்கிறார். பூமி முட்டை வடிவாக இல்லாமல் தட்டையாக இருந்திருந்தால், மனிதனுடைய சிந்தனை நீட்டுப்போக்காக வெகு தூரம் போய்த் தேய்ந்து தேய்ந்து கடைசியில் வலிமையை இழந்திருக்கும். ஆனால் பூமி உருண்டையாக இருப்பதால், அதனுடைய உருட்சி மனித சிந்தனை வீண் போகாமல், அதைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது. இந்த முட்டை வடிவமான பூமியில் எந்த ஒரு கருத்துத் தோன்றினாலும், அது உருண்டையைச் சுற்றிச் சுற்றி வருமேயல்லாது, நீட்டுப் போக்காகப் போய் மறைந்து விடாது. இவ்வாறு பூமியைச் சுற்றிவரும் மனிதனுடைய கருத்துகள் ஒன்றோடொன்று மோதி, சமுதாயத்தின் கூட்டு மனசிலே (Cumulative unconcious) குடேற்றி, மனிதச் சிந்தனைக்கு மேலும் அழுத்தமும் திருத்த முருகலான பண்பும் கொடுக்கின்றன. இதன் விளைவாக, மனித சமுதாயத்தின் சிந்தனை நெசவு மேலுக்கேறி, மனித சிந்தனையின் ஆற்றல் மேலும் பெருகுகிறது. பூமியைச் சுற்றியுள்ள மன மண்டலம் மனித சிந்தனையைப் பாதிக்க, மனிதசிந்தனை மேற்சொன்ன மனமண்டலத்தைப் பாதிக்க, இவ்வாறு ஒன்றையொன்று பாதிப்பதன் மூலமாக வாழ்வின் வளர்ச்சி முற்றி மாமனிதன் பிறப்பான். அதன் பின் பூமியைச் சுற்றியுள்ள மனமண்டலம் தெய்வத் தன்மையைப் பெறும். அந்த நிலையையே வாழ்வின் கடைசி நிலையாக (Point Omega) அமையும் என்றும் தெய்யார் தி ஷர்தான் சொல்லுகிறார்.

மேற்சொன்ன நிலையை விளக்கும்போது, தெய்யாருக்கு இயல்பாக இருக்கும் சித்தத் தெளிவு குறையத் தொடங்குகிறது. இதற்குரிய காரணத்தை வெகுதூரம் அலைந்து தேட வேண்டியதில்லை. கத்தோலிக்கப் பாதிரியாராக இருந்தவர் தெய்யார். அவருடைய விஞ்ஞானக் கருத்துக்கள் கத்தோலிக்கச் சமயக் கோட்பாடுகளுக்கு ஒத்துவரவில்லை. கிறிஸ்து பிறப்பதற்குச் சரியாக 4004 ஆண்டுகளுக்கு முன்

இந்த உலகம் ஒரே நாளில் படைக்கப்பெற்றது என்றும், பரிணாம நெறிப்படி உயிரினம் வளர்ந்து வருவதாகச் சொல்லுவது தவறு என்றும் நம்புகிறவர்கள் கத்தோலிக்கர்கள். தெய்யாருடைய கருத்துக்கள் சமயத்துக்கு விரோதமாக இருந்தபடியால், அவரைச் சமயத்திலிருந்து தள்ளி வைக்கப் போவதாகக் கத்தோலிக்கச் சமயம் அச்சுறுத்தியது. தாய் நாடாகிய ஃப்ரான்ஸ் நாட்டிலே உயிரியலை அவர் போதிக்கக்கூடாது என்று போப்பாண்டவர் அவருக்கு மறியல் கட்டளை போட்டார். பரிணாம நெறியைப் பற்றி அவர் கொண்ட கருத்துக்கள் அபாயகரமானவை என்று கத்தோலிக்க மேலிடம் கருதியது. "மனிதன் என்ற ஒரு நிகழ்ச்சி" (The Phenomenon of man) என்ற தலைப்பில் அவர் எழுதிய புத்தகத்தை வெளியிடுவதற்கு அனுமதி கோரி ரோமுக்கு விண்ணப்பம் செய்தார். ஆனால், அந்த விண்ணப்பத்தை ரோம் உடனடியாகத் தள்ளுபடி செய்தது. தெய்யார் இறந்து ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இறந்த பிறகே அவருடைய நண்பர்கள் அவருடைய நூலை அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் அவருடைய கருத்துக்களை ஆராயும் போது, அவர் தம்முடைய கண்டுபிடிப்புகளின் சித்தாந்த விளைவுகளை மனம் விட்டுப் பேச முடியவில்லை என்று தெரிகிறது.

கத்தோலிக்கக் குருமார்களுடைய மனம் கோணக் கூடாது என்று நினைத்து, பூமியைச் சுற்றியுள்ள மனமண்டலத்தில் (Noosphere) கிறிஸ்து பிறப்பு ஏற்படும் என்று அவர் சொன்னார். இயற்கையைக் கடவுளாகக் கும்பிடும் அஞ்ஞானி (Pantheist) என்று தம்மைக் கத்தோலிக்கர்கள் குறை கூறுவார்களோ என்று அவர் அஞ்சினார். உண்மையில் சத்திய வேட்கையுள்ள எவனும் அவருடைய கருத்துக்களைக் கேட்டு வெட்கப்பட வேண்டியதில்லை.

இந்த உலகம் ஒரே நாளில் படைக்கப்பெற்றதென்றும், பரிணாம நெறிப்படி உயிரினம் வளர்ந்து வருவதாகச் சொல்லுவது தவறு என்றும் நம்புகிறவர்கள் கத்தோலிக்கர்கள். தெய்யாருடைய கருத்துக்கள் சமயத்துக்கு விரோதமாக இருந்தபடியால், அவரைச் சமயத்திலிருந்து தள்ளி வைக்கப் போவதாகக் கத்தோலிக்கச் சமயம் அச்சுறுத்தியது. தாய் நாடாகிய ஃப்ரான்ஸ் நாட்டிலே உயிரியலை அவர் போதிக்கக்கூடாது என்று போப்பாண்டவர் அவருக்கு மறியல் கட்டளை போட்டார். பரிணாம நெறியைப் பற்றி அவர் கொண்ட கருத்துக்கள் அபாயகரமானவை என்று கத்தோலிக்க மேலிடம் கருதியது. "மனிதன் என்ற ஒரு நிகழ்ச்சி" (The Phenomenon of man) என்ற தலைப்பில் அவர் எழுதிய புத்தகத்தை வெளியிடுவதற்கு அனுமதி கோரி ரோமுக்கு விண்ணப்பம் செய்தார். ஆனால், அந்த விண்ணப்பத்தை ரோம் உடனடியாகத் தள்ளுபடி செய்தது. தெய்யார் இறந்து ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இறந்த பிறகே அவருடைய நண்பர்கள் அவருடைய நூலை அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் அவருடைய கருத்துக்களை ஆராயும் போது, அவர் தம்முடைய கண்டுபிடிப்புகளின் சித்தாந்த விளைவுகளை மனம் விட்டுப் பேச முடியவில்லை என்று தெரிகிறது.

கத்தோலிக்கக் குருமார்களுடைய மனம் கோணக் கூடாது என்று நினைத்து, பூமியைச் சுற்றியுள்ள மன மண்டலத்தில் (Noosphere) கிறிஸ்து பிறப்பு ஏற்படும் என்று அவர் சொன்னார். இயற்கையைக் கடவுளாகக் கும்பிடும் அஞ்ஞானி (Pantheist) என்று தம்மைக் கத்தோலிக்கர்கள் குறை கூறுவார்களோ என்று அவர் அஞ்சினார். உண்மையில் சத்திய வேட்கையுள்ள எவனும் அவருடைய கருத்துக்களைக் கேட்டு வெட்கப்பட வேண்டியதில்லை.

இனி, நெய்யாரிடம் விடை பெற்றுக்கொண்டு, அரவிந்தரோடு சற்று உரையாடுவோம். அவரும் நெய்யார் வந்த முடிவுக்கே வேறொரு பாதை வழியாக வந்து சேர்ந்தவர், அவருடைய கொள்கையின் சுருக்கம் என்ன?

'ஜடப் பொருளிலிருந்து உயிர் உண்டாகிறது. உயிர்ப் பொருளிலிருந்து சிந்தனை உண்டாகிறது' என்று நாம் சொல்லும் போது, அது உண்மையாக இருந்தாலும், அதற்குரிய விளக்கத்தை நாம் கொடுக்கவில்லை. மேற் சொன்ன உண்மையை நாம் வேறு விதமாக விளக்கலாம்: ஜடப் பொருளுக்குள்ளே உயிர் மறைந்து கிடக்கிறது; அதனால்தான் அதிலிருந்து மனம் வெளிப்படுகிறது. இதைப் போலவே, மாமனம் (Supramental) மனத்தில் மறைந்து கிடக்கிறது, அது எதிர் காலத்தில் வெளிவரப் போகிறது.

சத்தியம், உணர்வு, ஆனந்தம், ஆகிய இம்மூன்றும் கலந்திருக்கும் சச்சிதானந்த நிலையையே மாமனதினை யென்று அரவிந்தர் சொன்னார். அந்த நிலையை இரட்டை இயக்கங்களின் மூலம் நாம் அடையலாம். ஒன்று மனித உணர்வு உயர்ந்து ஏற்றம் பெற்று, மாமன நிலையைத் தாவிப் பிடிக்க வேண்டும்; அல்லது, மாமன நிலை மேலிருந்து இறங்கி வந்து பூமியிலுள்ள மாந்தரை ஆட்கொள்ள வேண்டும். ஒன்றோடொன்று இயங்குவதன் மூலம் இரண்டுக்கும் வலு ஏற்படும். ஆனந்தம் நிறைந்த பரிபூரண வாழ்க்கை இந்த மண்ணுலகத்திலேயே மனிதனுக்குக் கிடைக்கப் போகிறது. சிந்தனை பிறப்பதற்கு முன்னால், மண்ணுலகப் பொருள்கள் வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன என்றாலும், அப்பொருள்கள் வளர வேண்டுமே என்ற எண்ணத்தில் வளரவும் இல்லை; அப்பொருள்கள் பரிணாம இயக்கத்துக்கு வேகம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு பங்கு கொள்ளவும் இல்லை. சிந்தனை

இனி, தெய்யாரிடம் விடை பெற்றுக்கொண்டு, அரவிந்தரோடு சற்று உரையாடுவோம். அவரும் தெய்யார் வந்த முடிவுக்கே வேருெரு பாதை வழியாக வந்து சேர்ந்தவர், அவருடைய கொள்கையின் சுருக்கம் என்ன?

'ஜடப் பொருளிலிருந்து உயிர் உண்டாகிறது உயிர்ப் பொருளிலிருந்து சிந்தனை உண்டாகிறது' என்று நாம் சொல்லும் போது, அது உண்மையாக இருந்தாலும், அதற்குரிய விளக்கத்தை நாம் கொடுக்கவில்லை. மேற் சொன்ன உண்மையை நாம் வேறு விதமாக விளக்கலாம்: ஜடப் பொருளுக்குள்ளே உயிர் மறைந்து கிடக்கிறது: அதனுல்தான் அதிலிருந்து மனம் வெளிப்படுகிறது. இதைப் போலவே, மாமனம் (Supramental) மனத்தில் மறைந்து கிடக்கிறது, அது எதிர் காலத்தில் வெளிவரப் போகிறது.

சத்தியம், உணர்வு, ஆனந்தம், ஆகிய இம்மூன்றும் கலந்திருக்கும் சச்சிதானந்த நிலையையே மாமனநிலை யென்று அரவிந்தர் சொன்னுர். அந்த நிலையை இரட்டை இயக்கங்களின் மூலம் நாம் அடையலாம். ஒன்று மனித உணர்வு உயர்ந்து ஏற்றம் பெற்று, மாமன நிலையைத் தாவிப் பிடிக்க வேண்டும்; அல்லது, மாமன நிலை மேலிருந்து இறங்கி வந்து பூமியிலுள்ள மாந்தரை ஆட்கொள்ள வேண்டும். ஒன்ருேடொன்று இயங்குவதன் மூலம் இரண்டுக்கும் வலு ஏற்படும். ஆனந்தம் நிறைந்த பரிபூரண வாழ்க்கை இந்த மண்ணுலகத்திலேயே மனிதனுக்குக் கிடைக்கப் போகிறது. சிந்தனை பிறப்பதற்கு முன்னுல், மண்ணுலகப் பொருள்கள் வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன என்ருலும், அப்பொருள்கள் வளர வேண்டுமே என்ற எண்ணத்தில் வளரவும் இல்லை; அப்பொருள்கள் பரிணும இயக்கத்துக்கு வேகம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடு பங்கு கொள்ளவும் இல்லை. சிந்தனை

பிறந்த பிறகோ, பரிணாம நெறிக்குத் தன்னுணர்வு கிடைத்து விட்டது. வளர்ச்சி நெறியின் மர்மங்களை உணர்ந்த மனிதன், இந்த வளர்ச்சி இயக்கத்தில் அக்கறையோடு பங்கு கொண்டு வளர்ச்சிக்கு வேகம் கொடுத்து மாமனத்தை அதிவிரைவில் மண்ணுலகத்துக்கொண்டு வர முடியும்.

பரிணாம நெறியோடு மனிதன் ஒத்துழைக்க முடியுமா? அப்படியானால், எவ்வாறு? புதுவை அரவிந்த ஆசிரமத்தின் அன்னை இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறார்: "ஒவ்வொரு மனிதனும் அவனுடைய உள்ளத்தையும் உணர்வையும் இடைவிடாது விரிவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சம் ஆசைப்படுவது, கொஞ்சம் அதை நிறைவேற்ற உழைப்பது, பிறகு தூங்கப் போய் விடுவது என்பது கூடாது. நாம் எப்போதும் கவனத்தோடு நம்மைச் செம்மைப்படுத்திக் கொண்டும், விரிவு படுத்திக் கொண்டும் இருந்தால்தான், இறையருள் நம்மைக் கருவியாகப் பயன் படுத்தி, சொர்க்கத்தை இம்மண்ணுலகிலேயே படைத்து விடும்; ஒரு நாளில் ஐந்து நிமிஷங்கள் மாமனம் என்ற ஒன்று இருப்பதை நினைவு கூர்ந்து விட்டு, பிறகு நாளெல்லாம் வேறு எதையோ நினைத்துக் கொண்டும், செய்துகொண்டு இருப்பீர்களானால், இறையருள் உங்களைக் கருவியாக ஏற்றுக்கொள்ள மறுக்கும், அரவிந்தர் உங்களால் மாமனத்தைக் கொண்டு வர முடியும் என்று சொல்லவில்லை. இறைவனுடைய இச்சையால்தான் மாமனம் பூமிக்குள் இறங்கும் என்று அவர் சொல்லுகிறார். ஆகையால், 'ஐயோ! என்னால் முடியாது' என்று சொல்லாதீர்கள். உங்களால் அது முடியும் என்று ஒருவரும் சொல்லவில்லை, உங்கள் உள்ளத்தை விரிவு படுத்துங்கள். உங்கள் உணர்வை வளப்படுத்துங்கள். உண்மையைச் சொல்லப் போனால், நாம் ஒவ்வொருவருமே மிக மிகச் சிறியவர்கள்

பிறந்த பிறகோ, பரிணாம நெறிக்குத் தன்னுணர்வு கிடைத்து விட்டது. வளர்ச்சி நெறியின் மர்மங்களை உணர்ந்த மனிதன், இந்த வளர்ச்சி இயக்கத்தில் அக்கறையோடு பங்கு கொண்டு வளர்ச்சிக்கு வேகம் கொடுத்து மாமனத்தை அதிவிரைவில் மண்ணுலகத்துக்கொண்டு வர முடியும்.

பரிணாம நெறியோடு மனிதன் ஒத்துழைக்க முடியுமா? அப்படியானால், எவ்வாறு? புதுவை அரவிந்த ஆசிரமத்தின் அன்னை இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறார்: "ஒவ்வொரு மனிதனும் அவனுடைய உள்ளத்தையும் உணர்வையும் இடைவிடாது விரிவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சம் ஆசைப்படுவது, கொஞ்சம் அதை நிறைவேற்ற உழைப்பது, பிறகு தூங்கப் போய் விடுவது என்பது கூடாது. நாம் எப்போதும் கவனத்தோடு நம்மைச் செம்மைப்படுத்திக் கொண்டும், விரிவு படுத்திக் கொண்டும் இருந்தால்தான், இறையருள் நம்மைக் கருவியாகப் பயன் படுத்தி, சொர்க்கத்தை இம்மண்ணுலகிலேயே படைத்து விடும்; ஒரு நாளில் ஐந்து நிமிஷங்கள் மாமனம் என்ற ஒன்று இருப்பதை நினைவு கூர்ந்து விட்டு, பிறகு நாளெல்லாம் வேறு எதையோ நினைத்துக் கொண்டும், செய்துகொண்டு இருப்பீர்களானால், இறையருள் உங்களைக் கருவியாக ஏற்றுக்கொள்ள மறுக்கும், அரவிந்தர் உங்களால் மாமனத்தைக் கொண்டு வர முடியும் என்று சொல்லவில்லை. இறைவனுடைய இச்சையால்தான் மாமனம் பூமிக்குள் இறங்கும் என்று அவர் சொல்லுகிறார். ஆகையால், ஐயோ! என்னால் முடியாது' என்று சொல்லாதீர்கள். உங்களால் அது முடியும் என்று ஒருவரும் சொல்லவில்லை, உங்கள் உள்ளத்தை விரிவு படுத்துங்கள். உங்கள் உணர்வை வளப்படுத்துங்கள். உண்மையைச் சொல்லப் போனால், நாம் ஒவ்வொருவருமே மிக மிகச் சிறியவர்கள்

மாமனம் தங்குவதற்கு நம் குறுகிய மனத்தில் இடம் இல்லை. நம் குறுகிய உள்ளம் விரிய விரிய, மாமனத்தின் இயக்கங்களுக்கு இடம் கிடைக்கும். நாம் வளரவேண்டும், மேல் நிலையை அடையவேண்டும் என்ற ஆசை எப்போதும் நமக்கு இருக்க வேண்டும், நாம் இப்போது இருக்கும் நிலை, நாம் இப்போது செய்யும் செயல், நாம் இதுவரை அடைந்த அறிவு, நமக்கு இருப்பதாக நாம் நினைக்கும் அறிவு—இவை எல்லாவற்றிலும் நமக்கு அதிருப்தி உண்டாக வேண்டும். இதைக் காட்டிலும் உயர்ந்த குறிக்கோள். இதைக் காட்டிலும் உன்னதமான நிலை, இதைக் காட்டிலும் அதிகமான ஒளி, இதைக் காட்டிலும் உண்மையான உண்மை. இதைக் காட்டிலும் விரிவான நன்மை நமக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் நமக்கு இருக்க வேண்டும், இதற்கெல்லாம் மேலாக, என்றும் குன்றாத நல்லெண்ணம் இருக்கவேண்டும். ஒரு சில நாட்களில் இவையெல்லாம் நடந்து முடிந்து விடுமா? வெகுகாலம் ஆகும்.''

மாமனத்தைப் பெற்ற எதிர் கால மாமனிதனுடைய உடல் நம் உடலிலிருந்தும் முற்றும் வேறுபட்டிருக்கும். ஆன்ம ஒளி வெள்ளம் அவனுடைய உடலுக்குள்ளே பாய்ந்த வண்ணமாக இருக்கும். அவனுடைய உடல் எடை குறைந்து மென்மையாக இருக்கும். உடலை இயக்குவது அவனுக்கு வெகு எளிதாக இருக்கும். ஒரே சமயத்தில் பல இடங்களில் இருக்கும் வல்லமை அவனுக்கு ஏற்படும். அவனுடைய உடம்பிலிருந்து வீசிக் கொண்டிருக்கும் புத்தொளி பகுத்தறிவின் ஈரமற்ற ஒளிபோல இராது இதயத்தின் ஈரம் நிறைந்த ஒளி போலவும் இராது, மின்னலைப் போல, சூரிய காந்தியைப் போல இருக்கும் அந்த ஒளி. அந்த ஒளியினால் மனிதனுக்குத் தெய்வீகத் தன்மை ஏற்படும். பகுத்தறிவாலும், விஞ்ஞானத்தாலும் பெறக்கூடிய அறிவைக் காட்டிலும் சிறந்த அறிவு

மாமனம் தங்குவதற்கு நம் குறுகிய மனத்தில் இடம் இல்லை நம் குறுகிய உள்ளம் விரிய விரிய, மாமனத்தின் இயக்கங்களுக்கு இடம் கிடைக்கும். நாம் வளரவேண்டும், மேல் நிலையை அடையவேண்டும் என்ற ஆசை எப்போதும் நமக்கு இருக்க வேண்டும், நாம் இப்போது இருக்கும் நிலை, நாம் இப்போது செய்யும் செயல், நாம் இதுவரை அடைந்த அறிவு, நமக்கு இருப்பதாக நாம் நினைக்கும் அறிவு—இவை எல்லாவற்றிலும் நமக்கு அதிருப்தி உண்டாக வேண்டும். இதைக் காட்டிலும் உயர்ந்த குறிக்கோள். இதைக் காட்டிலும் உன்னதமான நிலை, இதைக் காட்டிலும் அதிகமான ஒளி, இதைக் காட்டிலும் உண்மையான உண்மை. இதைக் காட்டிலும் விரிவான நன்மை நமக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆசையும் ஆர்வமும் நமக்கு இருக்க வேண்டும், இதற்கெல்லாம் மேலாக, என்றும் குன்றாத நல்லெண்ணம் இருக்கவேண்டும். ஒரு சில நாட்களில் இவையெல்லாம் நடந்து முடிந்து விடுமா? வெகுகாலம் ஆகும்.''

மாமனத்தைப் பெற்ற எதிர் கால மாமனிதனுடைய உடல் நம் உடலிலிருந்தும் முற்றும் வேறுபட்டிருக்கும். ஆன்ம ஒளி வெள்ளம் அவனுடைய உடலுக்குள்ளே பாய்ந்த வண்ணமாக இருக்கும். அவனுடைய உடல் எடை குறைந்து மென்மையாக இருக்கும். உடலை இயக்குவது அவனுக்கு வெகு எளிதாக இருக்கும். ஒரே சமயத்தில் பல இடங்களில் இருக்கும் வல்லமை அவனுக்கு ஏற்படும். அவனுடைய உடம்பிலிருந்து வீசிக் கொண்டிருக்கும் புத்தொளி பகுத்தறிவின் ஈரமற்ற ஒளிபோல இராது இதயத்தின் ஈரம் நிறைந்த ஒளி போலவும் இராது, மின்னலைப் போல, சூரிய காந்தியைப் போல இருக்கும் அந்த ஒளி. அந்த ஒளியினால் மனிதனுக்குத் தெய்வீகத் தன்மை ஏற்படும். பகுத்தறிவாலும், விஞ்ஞானத்தாலும் பெறக்கூடிய அறிவைக் காட்டிலும் சிறந்த அறிவு

அவ்வொளியிஞல் மனிதனுக்குக் கிடைக்கும், ஐம்புலன் களையும் கடந்த புலன் ஒன்று மனிதனிடத்திலே இயக்கத் தொடங்கும் என்றும் அரவிந்தர் கருதுகிருர்,

தெய்யார் திஷர்தான் கொள்கையின்படி (Point Omega) என்ற கட்டந்தான் மனித நாடகத்தின் கடைசிக் காட்சியாக இருக்கும். ஏனென்ருல் அந்தக் கட்டத்தில் கிறிஸ்து என்ற தெய்வக் தத்துவம் எல்லா ஆன்மாக்களையும் தன்னகத்தே இழுத்துக் கொண்டு, மனித வரலாற்றுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும். ஆனல், அரவிந்தர் அப்படி நினைக்க வில்லை. மாமனித நிலையடைந்த பின்னும் அதற்கும் மேலான பல நிலைகள் உண்டு என்றும், மாமனித நிலை. மனித வரலாற்றிலே மிகச் சிறந்த யுகத்தைத் தொடங்கி வைக்கும் என்றும் அவர் கருதுகிருர்.

அரவிந்தரும் தெய்யார் திஷர்தானும் சொல்லும் உண்மைகளை அவர்கள் இருவருக்கும் ஆயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த பட்டினத்தார் வேறு கோணத்தி லிருந்து அநுபவிக்கிருர். வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் ஆற்றல் எது? உயிரற்ற அணு உயிருள்ள அணுவாகிறது என்று சொல்லும் போது, உயிரற்ற பொருள், உயிரை நாடிச் செல்லுகிறது என்று தானே பொருள்? அப்படியானல் அப் பொருளுக்கு அந்த நாட்டத் தைக் கொடுத்தவர் யார்? இறைவன் அல்லவா? ஒரு கால் அந்த நாட்டமே இறைவன் தானே? உயிருள்ள பொருள் உணர்வுள்ள மனிதனுயிற்று என்ருல், உயிர் உணர்வைத் தேடிப் பெற்றது என்பது தானே உண்மை? உயிருள்ள பொருளுக்குள்ளே உணர்வுத் தேட்டத்தை வைத்தவர் யார்? இறைவன் தான். ஒரு கால் அந்தத் தேட்டமே தான் இறைவனே? உணர்வு பெற்ற மனிதன் தன் உணர் வைத் தீட்டித் தீட்டி மாமனிதனுகிருன். (மாமனிதனை வானவன் என்று உபசரித்தார்கள் நம் முன்னேர்கள்.)

அவ்வொளியிஞல் மனிதனுக்குக் கிடைக்கும், ஐம்புலன் களையும் கடந்த புலன் ஒன்று மனிதனிடத்திலே இயக்கத் தொடங்கும் என்றும் அரவிந்தர் கருதுகிருர்,

தெய்யார் திஷர்தான் கொள்கையின்படி (Point Omega) என்ற கட்டந்தான் மனித நாடகத்தின் கடைசிக் காட்சியாக இருக்கும். ஏனென்ருல் அந்தக் கட்டத்தில் கிறிஸ்து என்ற தெய்வக் தத்துவம் எல்லா ஆன்மாக்களையும் தன்னகத்தே இழுத்துக் கொண்டு, மனித வரலாற்றுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும். ஆனல், அரவிந்தர் அப்படி நினைக்க வில்லை. மாமனித நிலையடைந்த பின்னும் அதற்கும் மேலான பல நிலைகள் உண்டு என்றும், மாமனித நிலை. மனித வரலாற்றிலே மிகச் சிறந்த யுகத்தைத் தொடங்கி வைக்கும் என்றும் அவர் கருதுகிருர்.

அரவிந்தரும் தெய்யார் திஷர்தானும் சொல்லும் உண்மைகளை அவர்கள் இருவருக்கும் ஆயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த பட்டினத்தார் வேறு கோணத்தி லிருந்து அநுபவிக்கிருர். வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் ஆற்றல் எது? உயிரற்ற அணு உயிருள்ள அணுவாகிறது என்று சொல்லும் போது, உயிரற்ற பொருள், உயிரை நாடிச் செல்லுகிறது என்று தானே பொருள்? அப்படியாஞல் அப் பொருளுக்கு அந்த நாட்டத் தைக் கொடுத்தவர் யார்? இறைவன் அல்லவா? ஒரு கால் அந்த நாட்டமே இறைவன் தானே? உயிருள்ள பொருள் உணர்வுள்ள மனிதனுயிற்று என்ருல், உயிர் உணர்வைத் தேடிப் பெற்றது என்பது தானே உண்மை? உயிருள்ள பொருளுக்குள்ளே உணர்வுத் தேட்டத்தை வைத்தவர் யார்? இறைவன் தான். ஒரு கால் அந்தத் தேட்டமே தான் இறைவனே? உணர்வு பெற்ற மனிதன் தன் உணர் வைத் தீட்டித் தீட்டி மாமனிதனுகிருன். (மாமனிதனை வானவன் என்று உபசரித்தார்கள் நம் முன்னேர்கள்.)

வானவஞக வேண்டுமென்று மனித இயத்திலே ஓர் ஆசையை ஊன்றி வைத்தவர் யார் ? இறைவன்தான். ஒருவேளை அந்த ஆசையே இறைவன்தானே ? பரிபூரணத்தை இன்னும் அடையாத வானவன் ஞான உண்மைகள் மறைந்து கிடைக்கும் மறைகளை நாடுகிறன. மறைகளோ இறைவனைத் தேடித் துழாவிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துழாவல்களிலெல்லாம் இறைவனுடைய செயலைக் காண்கிறார், பட்டினத்தார். எல்லையற்ற பொருள்களையும் உயிர்களையும் உண்டாக்குகிறான் இறைவன். அவற்றுக்கு வெளியிலிருந்து கொண்டு அவற்றை ஆட்டி வைக்கிறான். அவற்றுக்குள் இருந்து கொண்டு அவன் ஆடுகிறான். வெளியிலிருக்கும் தன்னை, உள்ளிருக்கும் 'தானு'க இருந்து தேடுகிறான். இந்த விளையாட்டுக்குச் சுவை கொடுப்பதற்காக 'நான்' என்ற மயக்கத்தை அவன் தனக்கே கொடுத்துக் கொள்கிறான். கண்ணைக் கட்டாமல் எப்படிக் 'கண்ணும் பொத்தி' விளையாடுவது ? கோயில், குளம், பக்தி, யோகம், ஞானம் என்ற அழகிய பட்டாடைகளால் தன் கண்ணைப் பொத்திக் கொண்டு, அந்த 'நான்' அந்தத் 'தானை'க் கண்டு பிடிப்பதற்காக என்ன பாடுபடுகிறது ! 'நான்' வேறு 'தான்' வேரு? 'நானு'க்குள்ளிருப்பது 'தான்' அல்லவா ? இவ்வாருக வளர்ச்சி நெறியின் உள்ளியக்கத்தைப் பற்றியும் உலகியற்றியவனின் கபட நாடகத்தைப் பற்றியும். உளவறிந்து பாடுகிறார், பட்டினத்தார்.

ஊன்தேடும் உயிரேயோ
உயிர்தேடும் உணர்வேயோ,
வான்தேடும் மறையேயோ,
மறைதேடும் பொருளேயோ,
தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட, தன்னைத்தான்
'நான்' தேடி 'நான்' காண
நானு'ரோ, தானுரோ ?

வானவனாக வேண்டுமென்று மனித இயத்திலே ஓர் ஆசையை ஊன்றி வைத்தவர் யார்? இறைவன்தான். ஒரு வேளை அந்த ஆசையே இறைவன்தானோ? பரிபூரணத்தை இன்னும் அடையாத வானவன் ஞான உண்மைகள் மறைந்து கிடைக்கும் மறைகளை நாடுகிறான. மறைகளோ இறைவனைத் தேடித் துழாவிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துழாவல்களிலெல்லாம் இறைவனுடைய செயலைக் காண்கிறார், பட்டினத்தார். எல்லையற்ற பொருள்களையும் உயிர்களையும் உண்டாக்குகிறான் இறைவன். அவற்றுக்கு வெளியிலிருந்து கொண்டு அவற்றை ஆட்டி வைக்கிறான். அவற்றுக்குள் இருந்து கொண்டு அவன் ஆடுகிறான். வெளியிலிருக்கும் தன்னை, உள்ளிருக்கும் 'தானா'க இருந்து தேடுகிறான். இந்த விளையாட்டுக்குச் சுவை கொடுப்பதற் காக 'நான்' என்ற மயக்கத்தை அவன் தனக்கே கொடுத்துக் கொள்கிறான். கண்ணைக் கட்டாமல் எப்படிக் 'கண்ணும் பொத்தி' விளையாடுவது? கோயில், குளம், பக்தி, யோகம், ஞானம் என்ற அழகிய பட்டாடைகளால் தன் கண்ணைப் பொத்திக் கொண்டு, அந்த 'நான்' அந்தத் 'தானை'க் கண்டு பிடிப்பதற்காக என்ன பாடுபடுகிறது! 'நான்' வேறு 'தான்' வேறா? 'நானு'க்குள்ளிருப்பது 'தான்' அல்லவா? இவ்வாறாக வளர்ச்சி நெறியின் உள்ளியக்கத்தைப் பற்றியும் உலகியற்றியவனின் கபட நாடகத்தைப் பற்றியும். உள வறிந்து பாடுகிறார், பட்டினத்தார்.

ஊன்தேடும் உயிரேயோ
உயிர்தேடும் உணர்வேயோ,
வான்தேடும் மறையேயோ,
மறைதேடும் பொருளேயோ,
தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட, தன்னைத்தான்
'நான்' தேடி 'நான்' காண
நானோரா, தானோரா?

# 6. மனித வரலாற்றின் உட்பொருள்

மனிதனைப் பற்றி மனிதன் என்ன நினைக்கிறான் என்பதை ஆராய்ந்து பார்த்தால், அது வேடிக்கை நிறைந்த ஆராய்ச்சியாக இருக்கும். "மனித வரலாற்றுக்கு ஓர் உட்பொருள் இருக்கிறதா? அதற்கு ஓர் உள்நோக்கம் உண்டா?" என்ற கேள்விகளைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் கேட்டு வருகிறான். ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய அறிவாற்றலுக்கும் அநுபவத்துக்கும் பக்குவத்துக்கும் ஏற்றபடி விடை கண்டிருக்கிறான்.

மனித வரலாற்றை ஆய்ந்து சிந்தனை செய்து அதைப் பற்றித் தம் முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்கள், சில பேரறிஞர்கள். அவர்களுடைய முடிவுகளில் எத்தனை எத்தனை வேறுபாடுகள்!

ஹெரடோட்டஸ் (Heredotus) என்பவர் 'வரலாற்றுக் கலையின் தந்தை' என்ற புகழ் பெற்றவர். 'மனித வரலாறு என்பது இறைவன் நடத்துகிற ஒரு நாடகம்' என்பதை அவர் வற்புறுத்துகிறார். துசிடைடிஸ் (Thucydides) என்ற வரலாற்றாசிரியர், 'மனித வாழ்க்கையில் இறைவனுடைய கைவண்ணத்தை என்னால் பார்க்க முடியவில்லை. மனித வரலாற்றில் மனிதன் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறான் என்றுகூட என்னால் சொல்ல முடியவில்லை' என்று முடிவு கட்டுகிறார். மனித வாழ்க்கை ஓர் அவல நாடகமாகவே அவர் கண்ணுக்குப்படுகிறது. மனித வாழ்வு இழிந்த நிலையிலிருந்து கொண்டே இருக்கிறதென்றும், அபூர்வ

# 6. மனித வரலாற்றின் உட்பொருள்

மனிதனைப் பற்றி மனிதன் என்ன நினைக்கிறான் என்பதை ஆராய்ந்து பார்த்தால், அது வேடிக்கை நிறைந்த ஆராய்ச்சியாக இருக்கும். "மனித வரலாற்றுக்கு ஓர் உட்பொருள் இருக்கிறதா? அதற்கு ஓர் உள்நோக்கம் உண்டா?" என்ற கேள்விகளைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் கேட்டு வருகிறான். ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய அறிவாற்றலுக்கும் அநுபவத்துக்கும் பக்குவத்துக்கும் ஏற்றபடி விடை கண்டிருக்கிறான்.

மனித வரலாற்றை ஆய்ந்து சிந்தனை செய்து அதைப் பற்றித் தம் முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்கள், சில பேரறிஞர்கள். அவர்களுடைய முடிவுகளில் எத்தனை எத்தனை வேறுபாடுகள்!

ஹெரெடோட்டஸ் (Heredotus) என்பவர் 'வரலாற்றுக் கலையின் தந்தை' என்ற புகழ் பெற்றவர். 'மனித வரலாறு என்பது இறைவன் நடத்துகிற ஒரு நாடகம்' என்பதை அவர் வற்புறுத்துகிறார். துசிடைடிஸ் (Thucydides) என்ற வரலாற்றாசிரியர், 'மனித வாழ்க்கையில் இறைவனுடைய கைவண்ணத்தை என்னால் பார்க்க முடியவில்லை. மனித வரலாற்றில் மனிதன் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறான் என்றுகூட என்னால் சொல்ல முடியவில்லை' என்று முடிவு கட்டுகிறார். மனித வாழ்க்கை ஓர் அவல நாடகமாகவே அவர் கண்ணுக்குப்படுகிறது. மனித வாழ்வு இழிந்த நிலையிலிருந்து கொண்டே இருக்கிறதென்றும், அபூர்வ

மாகச் சிற்சில சமயங்களில் சில பெரியார்கள் பிறந்து அதைப் புனிதப்படுத்துகிறார்கள் என்றும், அவர்கள் மறைந்த பின் மனிதவாழ்வு மறுபடியும் தனக்கே உரிய இழி நிலையை அடைந்து விடுகிறதென்றும் அவர் நினைக்கிறார்.

எபிக்யூரஸ் (Epicurus) என்ற தத்துவ ஞானி இன்னொரு கோணத்திலிருந்து மனிதனைப் பார்க்கிறார்; "கடவுள்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்பாலுக்கப்பால் விண் மீன்களுக்கிடையில் ஆனந்தமான அமரத்துவ நிலையில் அவர்கள் சொகுசாக வாழ்கிறார்கள். மிக்க புத்திசாலிகள் அவர்கள்; ஆகையால் கொசுக்கள் போலிருக்கும் அற்ப மனிதர்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இந்தப் பூமி அவர்களால் படைக்கப்படவுமில்லை. அவர்கள் தலைமையில் இப்பூமி இயங்கவும் இல்லை. இன்ப வடிவாக இருக்கும் அக்கடவுளர்கள், வேதனையும் அழுகும், ஒழுங் கீனமும் ஒழுக்கமும் மலிந்து குழம்புகின்ற இப்புன்மையுல கத்தை எப்படிப் படைத்திருக்க முடியும்?"

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, மனிதனுக்கு ஆறுதல் தரக்கூடிய சில கருத்துக்களையும் அவர் சொல்லுகிறார்: "கடவுளர்கள் பூமிக்கு வெகு தூரத்தில் இருப்பதால், அவர் களால் உங்களுக்கு நன்மையைத் தரவும் முடியாது; துன்பத்தைத் தரவும் முடியாது; உங்கள் நடத்தையை அவர்களால் கவனிக்க முடியாது. ஆகவே உங்கள் நடத்தையைப் பற்றித் தீர்ப்புச் சொல்லவும் உங்களை நரகத் தில் தள்ளவும அவர்களால் முடியாது."

கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் லூசியன் (Lucian) என்ற கிரேக்கத் தத்துவ ஞானி. தத்துவ சாஸ்திரத்தின் தொழில் என்னவென்றால், மனிதனை ஓர் ஒய்யாரமான இடத்தில் நிறுத்தி மனித வாழ்க்கையைச் சுற்றுமுற்றும் தெளிவாகப் பார்க்கச் செய்ய

மாகச் சிற்சில சமயங்களில் சில பெரியார்கள் பிறந்து அதைப் புனிதப்படுத்துகிறார்கள் என்றும், அவர்கள் மறைந்த பின் மனிதவாழ்வு மறுபடியும் தனக்கே உரிய இழி நிலையை அடைந்து விடுகிறதென்றும் அவர் நினைக்கிறார்.

எபிக்யூரஸ் (Epicurus) என்ற தத்துவ ஞானி இன்னொரு கோணத்திலிருந்து மனிதனைப் பார்க்கிறார்; "கடவுள்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்பாலுக்கப்பால் விண் மீன்களுக்கிடையில் ஆனந்தமான அமரத்துவ நிலையில் அவர்கள் சொகுசாக வாழ்கிறார்கள். மிக்க புத்திசாலிகள் அவர்கள்; ஆகையால் கொசுக்கள் போலிருக்கும் அற்ப மனிதர்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இந்தப் பூமி அவர்களால் படைக்கப்படவுமில்லை. அவர்கள் தலைமையில் இப்பூமி இயங்கவும் இல்லை. இன்ப வடிவாக இருக்கும் அக்கடவுளர்கள், வேதனையும் அழுகும், ஒழுங் கீனமும் ஒழுக்கமும் மலிந்து குழம்புகின்ற இப்புன்மையுல கத்தை எப்படிப் படைத்திருக்க முடியும்?"

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, மனிதனுக்கு ஆறுதல் தரக்கூடிய சில கருத்துக்களையும் அவர் சொல்லுகிறார்: "கடவுளர்கள் பூமிக்கு வெகு தூரத்தில் இருப்பதால், அவர் களால் உங்களுக்கு நன்மையைத் தரவும் முடியாது; துன்பத்தைத் தரவும் முடியாது; உங்கள் நடத்தையை அவர்களால் கவனிக்க முடியாது. ஆகவே உங்கள் நடத்தையைப் பற்றித் தீர்ப்புச் சொல்லவும் உங்களை நரகத் தில் தள்ளவும அவர்களால் முடியாது."

கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் லூசியன் (Lucian) என்ற கிரேக்கத் தத்துவ ஞானி. தத்துவ சாஸ்திரத்தின் தொழில் என்னவென்றால், மனிதனை ஓர் ஒய்யாரமான இடத்தில் நிறுத்தி மனித வாழ்க்கையைச் சுற்றுமுற்றும் தெளிவாகப் பார்க்கச் செய்ய

வேண்டும் என்பது அவர் கருத்து. தத்துவ சாஸ்திரத்தின் உய்யாரத்தில் நின்றுகொண்டு, அவர் மனித வாழ்க்கையைப் பார்த்துச் சொன்னது பின் வருமாறு: 'அபசுரம் நிறைந்த ஒரு நாட்டியக் கச்சேரியை ஒத்திருக்கிறது மனித வாழ்க்கை. நாட்டியம் ஆடுகிற ஒவ்வொருவனும் மற்றவர்கள் எவரோடும் இசையாமல் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறான். நட்டுவனார் அவர்கள் ஒவ்வொருவரையும் பிடரியைப் பிடித்து நாடக அரங்கிலிருந்து வெளியே தள்ளும் வரை அவர்கள் கத்திக்கொண்டே இருக்கிறார்கள்.' '(ச்) சாரோன்' என்ற நூலிலே ஓர் இருண்ட காட்சியை லூசியன் சொல்லாமல் வரைந்து காட்டுகிறார். வானுலக மலை ஒன்றின் சிகரத்திலே நின்றுகொண்டு ஒரு தேவகுமாரன் மண்ணுலகக் காட்சிகளைத் தன் புனிதக் கண்கொண்டு பார்க்கிறான். என்ன தெரிகிறது? மனிதர்கள் உழுது கொண்டும், போரிட்டுக் கொண்டும் உழைத்துக் கொண்டும், வழக்காடிக்கொண்டும், வட்டிக்குக் கடன் கொடுத்துக் கொண்டும், ஏமாற்றியும், ஏமாந்தும், பொன்னைக் கண்டு மயங்கியும், பெண்டிரைக் கண்டு கிறங்கியும் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கை, அச்சம், முட்டாள்தனம், வெறுப்பு என்ற மேகக் கூட்டங்கள் அம்மாந்தர்களுடைய தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அம்மேகங்களுக்குமேல், ஒவ்வொரு மனித அணுவுக்கும் உண்டான வாழ்வை நெசவு செய்து கொண்டிருக்கிறது விதி. ஒரு மனிதன் மற்ற மனிதர்களைக் காட்டிலும் மிக உயர்வான ஒரு நிலைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறான். பிறகு தொபுகடீர் என்று அந்த உயரத்திலிருந்து அவன் கீழே தள்ளப்படுகிறான். அவனுடைய வீழ்ச்சியின் எதிரொலி பூமி எங்கும் பரவுகிறது. ஒவ்வொருவனும் கடைசியில் யமதூதர்களால் இழுத்துச் செல்லப்படுகிறான். இதுவே லூசியன் கண்ட காட்சி. பணக்காரர்களை அவர்களுடைய பொறுமைக்காகவும், தெய்வங்களை அவர்களுடைய பேராசைக்காகவும், ஏழைகளை அவர்களுடைய பொறுமைக்

வேண்டும் என்பது அவர் கருத்து. தத்துவ சாஸ்திரத்தின் ஒய்யாரத்தில் நின்றுகொண்டு, அவர் மனித வாழ்க்கையைப் பார்த்துச் சொன்னது பின் வருமாறு: 'அபசுரம் நிறைந்த ஒரு நாட்டியக் கச்சேரியை ஒத்திருக்கிறது மனித வாழ்க்கை. நாட்டியம் ஆடுகிற ஒவ்வொருவனும் மற்றவர்கள் எவரோடும் இசையாமல் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறான். நட்டுவனார் அவர்கள் ஒவ்வொருவரையும் பிடரியைப் பிடித்து நாடக அரங்கிலிருந்து வெளியே தள்ளும் வரை அவர்கள் கத்திக்கொண்டே இருக்கிறார்கள்.' '(ச்) சாரோன்' என்ற நூலிலே ஓர் இருண்ட காட்சியை லூசியன் சொல்லாமல் வரைந்து காட்டுகிறார். வானுலக மலை ஒன்றின் சிகரத்திலே நின்றுகொண்டு ஒரு தேவகுமாரன் மண்ணுலகக் காட்சிகளைத் தன் புனிதக் கண் கொண்டு பார்க்கிறான். என்ன தெரிகிறது? மனிதர்கள் உழுது கொண்டும், போரிட்டுக் கொண்டும் உழைத்துக் கொண்டும், வழக்காடிக்கொண்டும், வட்டிக்குக் கடன் கொடுத்துக் கொண்டும், ஏமாற்றியும், ஏமாந்தும், பொன்னைக் கண்டு மயங்கியும், பெண்டிரைக் கண்டு கிறங்கியும் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கை, அச்சம், முட்டாள்தனம், வெறுப்பு என்ற மேகக் கூட்டங்கள் அம்மாந்தர்களுடைய தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அம்மேகங்களுக்குமேல், ஒவ்வொரு மனித அணுவுக்கும் உண்டான வாழ்வை நெசவு செய்து கொண்டிருக்கிறது விதி. ஒரு மனிதன் மற்ற மனிதர்களைக் காட்டிலும் மிக உயர்வான ஒரு நிலைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறான். பிறகு தொபுகடீர் என்று அந்த உயரத்திலிருந்து அவன் கீழே தள்ளப்படுகிறான். அவனுடைய வீழ்ச்சியின் எதிரொலி பூமி எங்கும் பரவுகிறது. ஒவ்வொருவனும் கடைசியில் யமதூதர்களால் இழுத்துச் செல்லப்படுகிறான். இதுவே லூசியன் கண்ட காட்சி. பணக்காரர்களை அவர்களுடைய பொறுமைக்காகவும், தெய்வங்களை அவர்களுடைய பேராசைக்காகவும், ஏழைகளை அவர்களுடைய பொறுமைக்

காகவும், தெய்வங்களை அவர்களுடைய இன்மைக்காகவும் பழித்துக் காட்டுகிறார் லூசியன்.

ஷேக்ஸ்பியர் படைத்த 'மாக்பெத்' என்ற பாத்திரமோ மிகுந்த மனக்கசப்போடு மனித வாழ்வை நிந்திக்கிறான்;

"அணைந்துவிடு நிலையாவிளக்கே, அணைந்து விடு! வாழ்வு என்பது நடமாடும் நிழல்தான். அது ஓர் அற்ப நடிகன்; நாடக அரங்கில் ஒரு நாழிகை பொழுது தக்குப்புக் கென்று நடமாடிப் பின் மறைந்தே போகும் நடிகன்; வாழ்வு என்பது ஒரு கதை: ஆரவாரமும் சீற்றமும் மிக்க கதை. ஆனால் ஓர் அடிமுடிட்டாள் சொல்லும் கதை.' கதாசிரியன் ஒருவன் இருக்கிறான் என்பதில் மாக்பெத்துக்கு நம்பிக்கை இருக்கிறது; ஆனால் கோபம் தாங்க மாட்டாமல், அவ்வாசிரியன் மீது வசவுமாரியைப் பொழிகிறான்.

ப்ரூனோ (Bruno) (1548-1600) என்பவர் ஒரு கலைஞர். பேரண்டம் ஒரு மாபெரும் கலைஞன் செய்த அரிய கலைப் பொருளாக அவர் காட்சியில் தோன்றுகிறது. ஒளி பொருந்தி, எல்லையற்று நிற்கும் பேரண்டத்தின் அழகிலே சொக்கிப் போகிறார் ப்ரூனோ. அறிவினால் அறிய வொண்ணாத பேரண்டப் பெருக்கத்தில் மிதக்கும் தூசி போன்றது நம் பூமி என்பதை மனித சிந்தனைக்குக்கொண்டு வருகிறார். இப்பேரண்டத்தின் நடு மையத்தில் இருப்பது நம் பூமியும் அல்ல, நம் சூரியனும் அல்ல. நாம் காணும் உலகத்துக்கு அப்பால் எத்தனையோ பல உலகங்கள் இருக் கின்றன. அவ்வுலகங்களுக்கு அப்பாலும் இன்னும் வேறு எத்தனையோ உலகங்கள். இப்படியாக அவற்றிற்கும் அப் பால், அவற்றிற்கும் அப்பால் என்று போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதான் இவ்வுலகக் கூட்டங்களின் இறுதியை நம் கற்பனையாலும் காண முடியாது. அவற் றின் தொடக்கத்தையும் நம்மால் எண்ணிப் பார்க்க முடி யாது. விண்மீன்கள் குறிப்பிட்ட இடத்தில் நிலைத்து நிற்ப

காகவும், தெய்வங்களை அவர்களுடைய இன்மைக்காகவும் பழித்துக் காட்டுகிறார் லூசியன்.

ஷேக்ஸ்பியர் படைத்த 'மாக்பெத்' என்ற பாத்திரமோ மிகுந்த மனக்கசப்போடு மனித வாழ்வை நிந்திக்கிறான்;

"அணைந்துவிடு நிலையாவிளக்கே, அணைந்து விடு! வாழ்வு என்பது நடமாடும் நிழல்தான். அது ஓர் அற்ப நடிகன்; நாடக அரங்கில் ஒரு நாழிகை பொழுது தக்குப்புக் கென்று நடமாடிப் பின் மறைந்தே போகும் நடிகன்; வாழ்வு என்பது ஒரு கதை: ஆரவாரமும் சீற்றமும் மிக்க கதை. ஆனால் ஓர் அடிமுடிட்டாள் சொல்லும் கதை.' கதாசிரியன் ஒருவன் இருக்கிறான் என்பதில் மாக்பெத்துக்கு நம்பிக்கை இருக்கிறது; ஆனால் கோபம் தாங்க மாட்டாமல், அவ்வாசிரியன் மீது வசவுமாரியைப் பொழிகிறான்.

ப்ரூனோ (Bruno) (1548-1600) என்பவர் ஒரு கலைஞர். பேரண்டம் ஒரு மாபெரும் கலைஞன் செய்த அரிய கலைப் பொருளாக அவர் காட்சியில் தோன்றுகிறது. ஒளி பொருந்தி, எல்லையற்று நிற்கும் பேரண்டத்தின் அழகிலே சொக்கிப் போகிறார் ப்ரூனோ. அறிவினால் அறிய வொண்ணாத பேரண்டப் பெருக்கத்தில் மிதக்கும் தூசி போன்றது நம் பூமி என்பதை மனித சிந்தனைக்குக்கொண்டு வருகிறார். இப்பேரண்டத்தின் நடு மையத்தில் இருப்பது நம் பூமியும் அல்ல, நம் சூரியனும் அல்ல. நாம் காணும் உலகத்துக்கு அப்பால் எத்தனையோ பல உலகங்கள் இருக்கின்றன. அவ்வுலகங்களுக்கு அப்பாலும் இன்னும் வேறு எத்தனையோ உலகங்கள். இப்படியாக அவற்றிற்கும் அப்பால், அவற்றிற்கும் அப்பால் என்று போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதான் இவ்வுலகக் கூட்டங்களின் இறுதியை நம் கற்பனையாலும் காண முடியாது. அவற்றின் தொடக்கத்தையும் நம்மால் எண்ணிப் பார்க்க முடியாது. விண்மீன்கள் குறிப்பிட்ட இடத்தில் நிலைத்து நிற்ப

தில்லை; இடம் மாறிக்கொண்டே இருக்கின்றது. காலம், இடம், இயக்கம், இவை மூன்றும் தனித்து இயங்குபவை அல்ல. மற்றொன்றோடு ஒட்டிப் பார்த்தால்தான் அவற்றின் இயக்கம் நமக்குப் புலப்படும். இயக்கத்தை அளப்பதற் காகவே நாம் காலம் என்ற கருவியைப் பயன் படுத்து கிறோம். ஆகையால் காலம் என்பது தனித்தியங்கும் தத்துவம் அல்ல என்று ப்ரூனோ கருதுகிறார். பல நக்ஷத் திரங்களிலே அறிவுள்ள, உயிருள்ள மாந்தர் இருக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். இவ்விறுதியற்ற பேரண்டத் தில் எங்குமே ஓர் அநாதியான நியதி, மீறமுடியாத நியதி எப்போதும் நீங்காமல் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் அவர் நினைக்கிறார்.

பேரண்டம் இறுதியற்றதாக இருப்பதாலும், இறுதி யற்ற தத்துவம் ஒன்றுக்கு மேல இருக்க முடியாதாகை யாலும், இறுதியற்ற இறைவனும் இறுதியற்ற பேரண்ட மும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று ப்ரூனோ முடிவு கட்டுகிறார். பேரண்டத்தை இயக்குகிறவன் பேரண்டத்தை இயக்குகிறவன் பேரண்டத்தி னின்றும் வேறுபட்டு இருக்க முடியாது என்றும் ப்ரூனோ நினைக்கிறார். முழுமையின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஒரு சக்தி இருக்கிறது. கடவுள் புறவறிவு அல்ல. இயக்கத்தி னுள் நின்று இயக்கும் அக அறிவாக இருப்பதே இறை வனுக்குப் பெருமையைக் கொடுக்கிறது. இயக்கமே அவன் தன்மை, அவனுடைய ஆன்மா. இயற்கையென்பது இறை வனுடைய உள்ளத்தின் புறத்தோற்றம்; ஆனாலும், இறை வனுடைய மனசு எங்கேயோ உள்ள வான லோகத்தில் இல்லை. இருக்கின்ற பொருள்கள் எல்லாவற்றிலும், ஒவ் வொரு பொருளிலும், ஒவ்வோர் அணுக்குள்ளும் இறைவ னுடைய மனசு இருக்கிறது.

வாழ்க்கை வளர்ந்து கொண்டும் மேல் நிலைக்குப்போய்க் கொண்டுமே இருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதி யும் மேலும் வளர முனைகிறது. வளர்ச்சி நெறி இயற்கை

தில்லை; இடம் மாறிக்கொண்டே இருக்கின்றது. காலம், இடம், இயக்கம், இவை மூன்றும் தனித்து இயங்குபவை அல்ல. மற்றொன்றோடு ஒட்டிப் பார்த்தால்தான் அவற்றின் இயக்கம் நமக்குப் புலப்படும். இயக்கத்தை அளப்பதற்காகவே நாம் காலம் என்ற கருவியைப் பயன் படுத்துகிறோம். ஆகையால் காலம் என்பது தனித்தியங்கும் தத்துவம் அல்ல என்று ப்ரூனோ கருதுகிறார். பல நக்ஷத்திரங்களிலே அறிவுள்ள, உயிருள்ள மாந்தர் இருக்கலாம் என்றும் அவர் கருதுகிறார். இவ்விறுதியற்ற பேரண்டத்தில் எங்குமே ஓர் அநாதியான நியதி, மீறமுடியாத நியதி எப்போதும் நீங்காமல் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் அவர் நினைக்கிறார்.

பேரண்டம் இறுதியற்றதாக இருப்பதாலும், இறுதியற்ற தத்துவம் ஒன்றுக்கு மேல இருக்க முடியாதாகையாலும், இறுதியற்ற இறைவனும் இறுதியற்ற பேரண்டமும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று ப்ரூனோ முடிவு கட்டுகிறார். பேரண்டத்தை இயக்குகிறவன் பேரண்டத்தை இயக்குகிறவன் பேரண்டத்தினின்றும் வேறுபட்டு இருக்க முடியாது என்றும் ப்ரூனோ நினைக்கிறார். முழுமையின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஒரு சக்தி இருக்கிறது. கடவுள் புறவறிவு அல்ல. இயக்கத்தினுள் நின்று இயக்கும் அக அறிவாக இருப்பதே இறைவனுக்குப் பெருமையைக் கொடுக்கிறது. இயக்கமே அவன் தன்மை, அவனுடைய ஆன்மா. இயற்கையென்பது இறைவனுடைய உள்ளத்தின் புறத்தோற்றம்; ஆனாலும், இறைவனுடைய மனசு எங்கேயோ உள்ள வான லோகத்தில் இல்லை. இருக்கின்ற பொருள்கள் எல்லாவற்றிலும், ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வோர் அணுக்குள்ளும் இறைவனுடைய மனசு இருக்கிறது.

வாழ்க்கை வளர்ந்து கொண்டும் மேல் நிலைக்குப்போய்க் கொண்டுமே இருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் மேலும் வளர முனைகிறது. வளர்ச்சி நெறி இயற்கை

முழுவதையும் இயக்கிக்கொண்டே இருக்கிறது. இயற்கையில், எதிர்மறையான, ஒன்றோடொன்று முரண்பட்ட சக்திகள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் பேரண்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இறைவனுடைய உள்ளத்தில் எல்லா முரண்பாடுகளும் மறைந்து ஒருமைப்பாடாக மலர்ந்து விடுகின்றன. சின்னபின்னமாக உருண்டு கொண்டிருக்கும் அண்ட கோளங்கள் சுருதி சேர்ந்து இசைக்கும் இசைக் கச்சேரியை ஒத்திருக்கின்றன. திகைப்பையும் கவர்ச்சியையும் கொடுக்கும் எண்ணற்ற காட்சிகளை நாம் காண்கிறோம். ஆனால் அக்காட்சிகளுக்குப் பின்னால் ஓர் அற்புதமான ஒருமை இருக்கிறது. இயற்கையின் விதம்விதமான பாகங்கள் ஓர் உடலில் இணைந்த பல உறுப்புகளாகத் தோன்றுகின்றன.

ப்ரூனோவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவையார், 'ஒன்றுகக் காண்பதே காட்சி' என்று சொன்னாரல்லவா? அதை நினைவுறுத்துகிறார் ப்ரூனோ. மேலும் அவர் சொல்லுகிறார்: 'என் உள்ளத்தைக் கவர்வது ஒருமையே. அவருடைய அருளால் அடிமையாகிய நான் சுதந்தர புருஷனாகத் திகழ்கிறேன்; துன்பத்தில் இன்பமாக இருக்கிறேன், வறுமையில் வளத்தோடு இருக்கிறேன்; நியதிக்கு நான் கட்டுப்பட்டவன்தான். ஆனால் சொந்தப் பண்பையே நான் வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நான் துன்புற்றாலும் எனக்கு அமைதியொன்று கிட்டுகிறது. அதாவது முழுமையின் ஒரு பாகம் துன்பப்பட்டாலும், முழுமை பாதிக்கப்படவில்லை என்பதை நினைக்கும் போது, எனக்கு அமைதி ஏற்படுகிறது. நான் செத்துப் போனால் தான் என்ன? முழுமையின் ஒரு பகுதி செத்த காரணத்தால், முழுமைக்குப் புத்துயிர் கிடைக்கிறது.

இனிபஸ்க்கல் (Pascal) என்ற பிரெஞ்ச் அறிஞர், வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று பார்ப்போம். ஆஸ்திகத்துக்கும் நாஸ்திகத்துக்கும் இடையே

முழுவதையும் இயக்கிக்கொண்டே இருக்கிறது. இயற்கையில், எதிர்மறையான, ஒன்றோடொன்று முரண்பட்ட சக்திகள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் பேரண்டத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இறைவனுடைய உள்ளத்தில் எல்லா முரண்பாடுகளும் மறைந்து ஒருமைப்பாடாக மலர்ந்து விடுகின்றன. சின்னாபின்னமாக உருண்டு கொண்டிருக்கும் அண்ட கோளங்கள் சுருதி சேர்ந்து இசைக்கும் இசைக் கச்சேரியை ஒத்திருக்கின்றன. திகைப்பையும் கவர்ச்சியையும் கொடுக்கும் எண்ணற்ற காட்சிகளை நாம் காண்கிறோம். ஆனால் அக்காட்சிகளுக்குப் பின்னால் ஓர் அற்புதமான ஒருமை இருக்கிறது. இயற்கையின் விதம்விதமான பாகங்கள் ஓர் உடலில் இணைந்த பல உறுப்புகளாகத் தோன்றுகின்றன.

ப்ரூனோவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவையார், 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்று சொன்னாரல்லவா? அதை நினைவுறுத்துகிறார் ப்ரூனோ. மேலும் அவர் சொல்லுகிறார்: 'என் உள்ளத்தைக் கவர்வது ஒருமையே. அவருடைய அருளால் அடிமையாகிய நான் சுதந்தர புருஷனாகத் திகழ்கிறேன்; துன்பத்தில் இன்பமாக இருக்கிறேன், வறுமையில் வளந்தேர்ந்து இருக்கிறேன்; நியதிக்கு நான் கட்டுப்பட்டவன்தான். ஆனால் சொந்தப் பண்பையே நான் வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நான் துன்புற்றாலும் எனக்கு அமைதியொன்று கிட்டுகிறது. அதாவது முழுமையின் ஒரு பாகம் துன்பப்பட்டாலும், முழுமை பாதிக்கப்படவில்லை என்பதை நினைக்கும் போது, எனக்கு அமைதி ஏற்படுகிறது. நான் செத்துப் போனால் தான் என்ன? முழுமையின் ஒரு பகுதி செத்த காரணத்தால், முழுமைக்குப் புத்துயிர் கிடைக்கிறது.

இனிபஸ்க்கல் (Pascal) என்ற பிரெஞ்ச் அறிஞர், வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறார் என்று பார்ப்போம். ஆஸ்திகத்துக்கும் நாஸ்திகத்துக்கும் இடையே

...சலாடிக்கொண்டிருந்தவர் அவர். 'சிந்தனைகள்'
(Pensees) என்ற நூலை, கி. பி. 1670-இல் அவர் எழுதினார்.
அவர் பேரண்டத்தைப் பார்த்த பார்வை நம்மைத் திக்கு
முக்காடச்செய்கிறது. அவர் சொன்னார்: இயற்கையின்
முழு மேனிஒளியையும், நிறைந்து ததும்பும் அதன் கம்பீரத்
தையும் மனிதன் நன்றாகச் சிந்தனை செய்து பார்க்கட்டும்.
அவனைச் சுற்றியிருக்கும் அற்பப் பொருள்களைக் கண்ணுக்
குப் படாத இடத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப்
பேரண்டத்தை அவன் பார்க்கட்டும். இந்த உலகத்துக்கு
என்றென்றும் ஒளி கொடுப்பதற்காக அமைந்தது
போலுள்ள அந்தப் பேரொளி விளக்கை, பகலவனை, அவன்
கூர்ந்து கவனிக்கட்டும். அப்பகலவன் சுற்றி வரும்
மாபெரும் வட்டத்தில் இப்பூமி ஒரு சிறு புள்ளியென்று
அவன் பார்வையில் படட்டும். பகலவன் போடும் அக் கழி
பெரும் வானவட்டத்தை விண் மீன்களிலிருந்து கொண்டு
பார்த்தால், அதுவும் ஒரு சிறு புள்ளிபோலத் தோன்றும்
என்பதையும் அவன் சிந்தித்துப் பார்க்கட்டும். நமது
பார்வை இதற்கு மேல் போகாமல் நின்று விடுமானால்,
கற்பனையின் துணைகொண்டு அதற்கப்பாலும் போய்ப்
பார்ப்போம். நம் புலன்களுக்குத் தெரிகிற இந்த ஞாலம்
எல்லாம் ஒரு தூசிக்குச் சமானம்: அதாவது, எங்கும்
பரந்து கிடக்கும் இயற்கை யன்னையின் மார்பிலே படிந்து
கிடக்கும் கண்ணுக்குத் தெரியாத தூசி. மனித எண்ணம்
இதற்கு மேல் எவ்வாது. நினைத்துக்கூடப் பார்க்க முடியாது
இந்த விசுவ உருண்டையின் நடு மையப் புள்ளி அங்கிங்
கெனாதபடி எங்கும் இருக்கிறது; அதன் சுற்று விளிப்போ
எங்குமே இல்லை. இறைவனுடைய சர்வ வல்லமையைப்
பற்றி நாம் நன்றாகப் புரிந்துகொள்ளக் கூடிய முக்கிய
அம்சம் இதுவே. இக்கருத்திலே நமது மனிதக் கற்பனை
யெல்லாம் கரைந்து போய்விடுகிறது.

அளக்கமுடியாத அளவுக்குப் பெரிதாக இருக்கும்
பேரண்டத்தை நினைத்து அஞ்சுவதைப் போலவே, அளக்க

ஊசலாடிக்கொண்டிருந்தவர் அவர். 'சிந்தனைகள்' (Pensees) என்ற நூலை, கி. பி. 1670-இல் அவர் எழுதினார். அவர் பேரண்டத்தைப் பார்த்த பார்வை நம்மைத் திக்கு முக்காடச்செய்கிறது. அவர் சொன்னார்: இயற்கையின் முழு மேனிஎளியையும், நிறைந்து ததும்பும் அதன் கம்பீரத்தையும் மனிதன் நன்றாகச் சிந்தனை செய்து பார்க்கட்டும். அவனைச் சுற்றியிருக்கும் அற்பப் பொருள்களைக் கண்ணுக்குப் படாத இடத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப் பேரண்டத்தை அவன் பார்க்கட்டும். இந்த உலகத்துக்கு என்றென்றும் ஒளி கொடுப்பதற்காக அமைந்தது போலுள்ள அந்தப் பேரொளி விளக்கை, பகலவனை, அவன் கூர்ந்து கவனிக்கட்டும். அப்பகலவன் சுற்றி வரும் மாபெரும் வட்டத்தில் இப்பூமி ஒரு சிறு புள்ளியென்று அவன் பார்வையில் படட்டும். பகலவன் போடும் அக் குழி பெரும் வானவட்டத்தை விண் மீன்களிலிருந்து கொண்டு பார்த்தால், அதுவும் ஒரு சிறு புள்ளிபோலத் தோன்றும் என்பதையும் அவன் சிந்தித்துப் பார்க்கட்டும். நமது பார்வை இதற்கு மேல் போகாமல் நின்று விடுமானால், கற்பனையின் துணைகொண்டு அதற்கப்பாலும் போய்ப் பார்ப்போம். நம் புலன்களுக்குத் தெரிகிற இந்த ஞாலம் எல்லாம் ஒரு தூசிக்குச் சமானம்: அதாவது, எங்கும் பரந்து கிடக்கும் இயற்கை யன்னையின் மார்பிலே படிந்து கிடக்கும் கண்ணுக்குத் தெரியாத தூசி. மனித எண்ணம் இதற்கு மேல் எவ்வாது. நினைத்துக்கூடப் பார்க்க முடியாத இந்த விசுவ உருண்டையின் நடு மையப் புள்ளி அங்கிங்கெனாதபடி எங்கும் இருக்கிறது; அதன் சுற்று விளிப்போ எங்குமே இல்லை. இறைவனுடைய சர்வ வல்லமையைப் பற்றி நாம் நன்றாகப் புரிந்துகொள்ளக் கூடிய முக்கிய அம்சம் இதுவே. இக்கருத்திலே நமது மனிதக் கற்பனையெல்லாம் கரைந்து போய்விடுகிறது.

அளக்கமுடியாத அளவுக்குப் பெரிதாக இருக்கும் பேரண்டத்தை நினைத்து அஞ்சுவதைப் போலவே, அளக்க

முடியாத அளவுக்குச் சிறிதாக இருக்கும் சிற்றண்டத்தைக் கண்டும் அவர் அஞ்சுகிறார். அணுவைப் பிரித்துக் கொண்டேபோனால், கடைசியாகப் பரம அணு அல்லது கோண் ஒன்று கிடைக்கிறது. அதை ஆய்ந்து பார்த்தால் அதைக் காட்டிலும் சிறிய பகுதிகளால் அது ஆக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவரும். இந்த இக்கட்டான நிலையில் மனித அறிவு திகைத்து நிற்கிறது: அளப்பரிய பேரண்டத்துக்கும் அளப்பரிய பிண்டத்துக்கும் இடையே நிற்கிறான் மனிதன். அவனுடைய நிலையை மிக்க உணர்ச்சியோடு பஸ்க்கல் வருணிக்கிறார். 'இந் நிலையில் மனிதன் தன்னைக் கண்டே அஞ்ச வேண்டும். பேரண்டப் பாழுக்கும் சிற்றண்டப் பாழுக்கும் இடையில் தொங்கிக்கொண்டிருக்கும் மனிதன் பதைபதைப் பதைத்தவிர வேறு என்னத்தைச் செய்ய முடியும்? இந்த அற்புதத்தை நினைந்து, வியப்பில் ஆழ்ந்து மௌனியாகி விடுகிறான். இந்த வியத்தகு படைப்பில் மனிதனுக்குரிய இடம் எது? பேரண்டப் பாழோடு ஒத்துப் பார்க்கும்போது, மனிதன் பொருளற்றவனாகத் தோன்றுகிறான். ஆனால் சிற்றண்டப் பாழோடு அவனை ஒத்துப் பார்க்கும் போது அவன் ஓங்கி உயர்ந்த பொருளாக விஸ்வரூபம் எடுக்கிறான். பூரணத்துக்கும் வெறுமைக்கும் இடை நிலையில் மனிதன் ஒளி விட்டுக் கொண்டு நிற்கிறான். அவனால் முழுமையைச் சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை, இன்மையைச் சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை. படைப்பின் தொடக்கமும் இறுதியும் அவன் காட்சிக்கு அகப்படாத மர்ம நிலையில் ஒளிந்துகொண்டிருக்கின்றன.

ச்சைய்(ன்) பேவ் (St. Beauve) என்ற பிரெஞ்ச் ரஸிக மணி பஸ்க்கலுடைய வாசகத்தைப்பற்றிச் சொன்னார்: "பிரெஞ்சு மொழியில் இந்த ஒப்பற்ற காட்சியை பஸ்க்கலைப் போல் இவ்வளவு எளிமையாகவும் செறிவோடும் வேறொருவரும் விவரித்ததில்லை.'

க—4

முடியாத அளவுக்குச் சிறிதாக இருக்கும் சிற்றண்டத்தைக் கண்டும் அவர் அஞ்சுகிறார். அணுவைப் பிரித்துக் கொண்டேபோனால், கடைசியாகப் பரம அணு அல்லது கோண் ஒன்று கிடைக்கிறது. அதை ஆய்ந்து பார்த்தால் அதைக் காட்டிலும் சிறிய பகுதிகளால் அது ஆக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவரும். இந்த இக்கட்டான நிலையில் மனித அறிவு திகைத்து நிற்கிறது: அளப்பரிய பேரண்டத்துக்கும் அளப்பரிய பிண்டத்துக்கும் இடையே நிற்கிறான் மனிதன். அவனுடைய நிலையை மிக்க உணர்ச்சியோடு பஸ்க்கல் வருணிக்கிறார். 'இந்நிலையில் மனிதன் தன்னைக் கண்டே அஞ்ச வேண்டும். பேரண்டப் பாழுக்கும் சிற்றண்டப் பாழுக்கும் இடையில் தொங்கிக்கொண்டிருக்கும் மனிதன் பதைபதைப்பதைத்தவிர வேறு என்னத்தைச் செய்ய முடியும்? இந்த அற்புதத்தை நினைந்து, வியப்பில் ஆழ்ந்து மௌனியாகி விடுகிறான். இந்த வியத்தகு படைப்பில் மனிதனுக்குரிய இடம் எது? பேரண்டப் பாழோடு ஒத்துப் பார்க்கும்போது, மனிதன் பொருளற்றவனாகத் தோன்றுகிறான். ஆனால் சிற்றண்டப் பாழோடு அவனை ஒத்துப் பார்க்கும் போது அவன் ஓங்கி உயர்ந்த பொருளாக விஸ்வரூபம் எடுக்கிறான். பூரணத்துக்கும் வெறுமைக்கும் இடை நிலையில் மனிதன் ஒளி விட்டுக் கொண்டு நிற்கிறான். அவனால் முழுமையைச் சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை, இன்மையைச் சிந்தித்துப் பார்க்கவும் முடியவில்லை. படைப்பின் தொடக்கமும் இறுதியும் அவன் காட்சிக்கு அகப்படாத மர்ம நிலையில் ஒளிந்துகொண்டிருக்கின்றன.

ச்சைய்(ன்) பேவ் (St. Beauve) என்ற பிரெஞ்ச் ரஸிக மணி பஸ்க்கலுடைய வாசகத்தைப்பற்றிச் சொன்னார்: "பிரெஞ்சு மொழியில் இந்த ஒப்பற்ற காட்சியை பஸ்க்கலைப் போல் இவ்வளவு எளிமையாகவும் செறிவோடும் வேறொருவரும் விவரித்ததில்லை.'

மேற்கண்ட காட்சியிலிருந்து பஸ்க்கல் என்ன முடிவுக்கு வருகிறார். படைப்பின் அந்தப்புர ரகசியங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு நம்முடைய பகுத்தறிவு நமக்குப் பயன் படாது என்று அவர் கருதுகிறார், ஆகையால், விஞ்ஞானம் படைப்பைப் பற்றிச் சொல்லுவதெல்லாம் ஒரு யூகமே என்றும், அசட்டுத் திமிரிலிருந்து பிறந்த யூகம் என்றும் அவர் நினைக்கிறார். ஏனென்றால், விஞ்ஞானம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: பகுத்தறிவோ நம் புலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; நம்புலன்களோ நம்மை எத்தனையோ வகைகளில் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன. புலன்கள் குறைபாடுகள் நிறைந்தவை. இக்குறைபாடுகளாலும் மனித யாக்கையின் நிலையாமையாலும் விஞ்ஞானமும் பீடிக்கப்படுகிறது. பஸ்க்கல் கண்ணுக்கு, மனிதனுடைய அவல நிலையும் ஒரு புதிராகவே படுகிறது. இயற்கை தேவி ஊழூழிக் காலம் பாடுபட்டு இவ்வளவு குறைபாடுள்ள மனிதச் சாதியையா படைக்க வேண்டும்? மனிதன் என்ற பிராணிக்கு அற்ப சுகத்தைத் தவிர நிலைத்த இன்பம் கிடைக்கவில்லையே! அவனுடைய ஒவ்வொரு நரம்பும் வேதனையால் துடி துடிக்கிறதே. ஒவ்வொரு காதலும் சோகத்தில் முடிவுறுகிறதே. ஒவ்வொரு வாழ்வும் மரணத்தில் மாய்ந்து படுகிறதே' ஆனாலும், மனிதனுடைய பெரும் பெருமை என்னவென்றால், நாம் துன்பத்துக்கு இரையாகிறோம் என்ற உணர்வு அவனுக்கு இருக்கிறது. 'மனிதன் ஒரு துரும்புதான்; ஆனால் சிந்தனை செய்யும் துரும்பாக இருக்கிறான் அவன். அவனைக் கொல்லுவதற்குப் பேரண்டம் முழுவதுமே படையெடுத்துவர வேண்டியதில்லை; ஒரு விஷக்காற்று, ஒரு நீர்த்துளி, அவனைக் கொன்றுவிடும். ஆனால் பேரண்டம் அவனை நசுக்கிக் கொன்ற பிறகும், பேரண்டத்தைக் காட்டிலும் சிறப்புடையவனாக இருக்கிறான் மனிதன். ஏனென்றால், தான் செத்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவனைக் கொன்று வெற்றி பெற்றுவிட்டோம் என்ற உணர்வு பேரண்டத்துக்குக் கிடையாது.'

மேற்கண்ட காட்சியிலிருந்து பஸ்க்கல் என்ன முடிவுக்கு வருகிறார். படைப்பின் அந்தப்புர ரகசியங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு நம்முடைய பகுத்தறிவு நமக்குப் பயன் படாது என்று அவர் கருதுகிறார், ஆகையால், விஞ்ஞானம் படைப்பைப் பற்றிச் சொல்லுவதெல்லாம் ஒரு யூகமே என்றும், அசட்டுத் திமிரிலிருந்து பிறந்த யூகம் என்றும் அவர் நினைக்கிறார். ஏனென்றால், விஞ்ஞானம் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: பகுத்தறிவோ நம் புலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; நம்புலன்களோ நம்மை எத்தனையோ வகைகளில் ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன. புலன்கள் குறைபாடுகள் நிறைந்தவை. இக்குறைபாடுகளாலும் மனித யாக்கையின் நிலையாமையாலும் விஞ்ஞானமும் பீடிக்கப்படுகிறது. பஸ்க்கல் கண்ணுக்கு, மனிதனுடைய அவல நிலையும் ஒரு புதிராகவே படுகிறது. இயற்கை தேவி ஊழூழிக் காலம் பாடு பட்டு இவ்வளவு குறைபாடுள்ள மனிதச் சாதியையா படைக்க வேண்டும் ? மனிதன் என்ற பிராணிக்கு அற்ப சுகத்தைத் தவிர நிலைத்த இன்பம் கிடைக்கவில்லையே ! அவனுடைய ஒவ்வொரு நரம்பும் வேதனையால் துடி துடிக்கிறதே. ஒவ்வொரு காதலும் சோகத்தில் முடிவுறுகிறதே. ஒவ்வொரு வாழ்வும் மரணத்தில் மாய்ந்து படுகிறதே' ஆனாலும், மனிதனுடைய பெரும் பெருமை என்னவென்றால், நாம் துன்பத்துக்கு இரையாகிறோம் என்ற உணர்வு அவனுக்கு இருக்கிறது. 'மனிதன் ஒரு துரும்புதான்; ஆனால் சிந்தனை செய்யும் துரும்பாக இருக்கிறான் அவன். அவனைக் கொல்லுவதற்குப் பேரண்டம் முழுவதுமே படையெடுத்துவர வேண்டியதில்லை; ஒரு விஷக்காற்று, ஒரு நீர்த்துளி, அவனைக் கொன்றுவிடும். ஆனால் பேரண்டம் அவனை நசுக்கிக் கொன்ற பிறகும், பேரண்டத்தைக் காட்டிலும் சிறப்புடையவனாக இருக்கிறான் மனிதன். ஏனென்றால், தான் செத்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவனைக் கொன்று வெற்றி பெற்றுவிட்டோம் என்ற உணர்வு பேரண்டத்துக்குக் கிடையாது.'

இந்தப் புதிர்களுக்கெல்லாம் விடை சொல்லப் பகுத்தறிவினால் முடியாது. பகுத்தறிவு சொல்வதைக் கேட்டால் நாம் என்ன முடிவுக்கு வருவோம்? வாழ்க்கையில், போராடித் துன்பப்பட்டுச் சாவதும், நம்மைப்போல் போராடித் துன்பப் பட்டுச் சாவதற்காகக் குழந்தைகளை நாம் பெறுவதும், இவ்வாறுதலை முறை தலைமுறையாக, குறிக்கோளற்ற, பொருளற்ற, அசட்டுத் தனமான வாழ்வை வாழ்வதுதான் மனிதனுடைய தலைவிதி என்ற முடிவுக்குத்தான் வருவோம். ஆனால் பகுத்தறிவு சொல்லுவது உண்மையல்ல என்று நமது இதயத்துக்குத் தெரிகிறது. மனித வாழ்க்கையும், இந்தப் பிரபஞ்சமும் பொருளற்றவை என்று சொல்லுவது துரோகத்திலும் துரோகம். கடவுளையும் வாழ்வின் பொருளையும் இதயத்தால் உணர வேண்டும். அறிவினால் அல்ல. இதயத்துக்குப் புலனாகும் காரணங்கள் பகுத்தறிவுக்குப் புலப்படாதவை. நம் இதயம் சொல்லுவதை உற்றுக்கேட்டு, நம் உணர்விலே நம்பிக்கைவைக்க வேண்டும். ஆன்ம அநுபவம் என்பது புல்லறிவைக் காட்டிலும் ஆழமானது. பகுத்தறிவின் வாதப் பிரதிவாதங்களைக் காட்டிலும் பொருள் நிறைந்தது.

வாழ்வின் புதிர்களையும் சிந்தனையின் அற்புதங்களையும் விளக்கக் கூடியது எது? சமயமே, சமயம் கைகொடுக்கவில்லையென்றால் ஒழுக்கத்திலும் சிந்தனையிலும் நமக்குத் தடுமாற்றமே ஏற்படும்.

இவ்வாறெல்லாம் பேசிவிட்டு நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில், தாம் ஊசலாடும் காரணத்தை உருக்கத்தோடு விளக்குகிறார். ‘இறைத்தன்மையின் சுவடு இவ்வுலகில் கொஞ்சமும் இல்லாமல் இருந்தால், நான் நாஸ்திகத்தில் உறுதியோடு நின்றிருப்பேன், எங்கும் இறைவனுடைய சுவடு தெரியுமானால், ஆஸ்திகத்தில்

இந்தப் புதிர்களுக்கெல்லாம் விடை சொல்லப் பகுத்தறிவினால் முடியாது. பகுத்தறிவு சொல்வதைக் கேட்டால் நாம் என்ன முடிவுக்கு வருவோம்? வாழ்க்கையில், போராடித் துன்பப்பட்டுச் சாவதும், நம்மைப்போல் போராடித் துன்பப் பட்டுச் சாவதற்காகக் குழந்தைகளை நாம் பெறுவதும், இவ்வாறு தலைமுறை தலைமுறையாக, குறிக்கோளற்ற, பொருளற்ற, அசட்டுத் தனமான வாழ்வை வாழ்வதுதான் மனிதனுடைய தலைவிதி என்ற முடிவுக்குத்தான் வருவோம். ஆனால் பகுத்தறிவு சொல்லுவது உண்மையல்ல என்று நமது இதயத்துக்குத் தெரிகிறது. மனித வாழ்க்கையும், இந்தப் பிரபஞ்சமும் பொருளற்றவை என்று சொல்லுவது துரோகத்திலும் துரோகம். கடவுளையும் வாழ்வின் பொருளையும் இதயத்தால் உணர வேண்டும். அறிவினால் அல்ல. இதயத்துக்குப் புலனாகும் காரணங்கள் பகுத்தறிவுக்குப் புலப்படாதவை. நம் இதயம் சொல்லுவதை உற்றுக்கேட்டு, நம் உணர்விலே நம்பிக்கைவைக்க வேண்டும். ஆன்ம அநுபவம் என்பது புல்லறிவைக் காட்டிலும் ஆழமானது. பகுத்தறிவின் வாதப் பிரதிவாதங்களைக் காட்டிலும் பொருள் நிறைந்தது.

வாழ்வின் புதிர்களையும் சிந்தனையின் அற்புதங்களையும் விளக்கக் கூடியது எது? சமயமே, சமயம் கைகொடுக்க வில்லையென்றால் ஒழுக்கத்திலும் சிந்தனையிலும் நமக்குத் தடுமாற்றமே ஏற்படும்.

இவ்வாறெல்லாம் பேசிவிட்டு நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில், தாம் ஊசலாடும் காரணத்தை உருக்கத்தோடு விளக்குகிறார். 'இறைத்தன்மையின் சுவடு இவ்வுலகில் கொஞ்சமும் இல்லாமல் இருந்தால், நான் நாஸ்திகத்தில் உறுதியோடு நின்றிருப்பேன், எங்கும் இறைவனுடைய சுவடு தெரியுமானால், ஆஸ்திகத்தில்

நிலேத்து நின்று நான் அமைதி அடைந்திருப்பேன். ஆனால் இறைவன் இல்லவே இல்லேயென்று சாதிப்பதற்கும் போதிய சான்று எனக்குக் கிடைக்கவில்லே; இருக்கிறான் என்று சாதிப்பதற்கும் போதிய சான்று கிடைக்கவில்லே. இந்தப் பரிதாபகரமான நிலேயில் என் வாழ்வு நடந்து கொண்டிருக்கிறது. கடவுள் இவ்வுலகுக்கு ஆதாரமாக இருந்தால், ஐயந்திரிபு இல்லாமல் அவனுடைய காட்சி எனக்குக் கிடைக்கலாகாதா?' என்று சொல்லி அலறுகிறார். இரண்டு கட்சிகளுக்கும் இடையில் அகப்பட்டுத் தீர்ப்புச் சொல்லமுடியாமல் தத்தளிக்கிறது பஸ்கலுடைய அறிவு.

திருமூலருக்கு இந்தத் தயக்கமும் தத்தளிப்பும் கொஞ்சங் கூட இல்லே. படைப்பின் ரகசியம் என்னவென்று அவரைக் கேட்டால், 'மனமாகிய நெடுந்தேரேறி, பஸ்கலேப் போல் போயின நாடறியாமல் புலம்ப வேண்டாம் நானும் அப்படி யெல்லாம் திரிந்தவன்தான் அப்படித் திரிந்து விட்டு இந்த உடம்புக்குள்ளேயே, காயத்துக்குள்ளேயே அந்த மர்மத் தைக் கண்டு கொண்டேன்' என்று சொல்கிறார்,

"தேயமும் நாடும் திரிந்து
எங்கள் செல்வனேக்
காயமின்றூட்டிடைக
கண்டுகொண்டேனே."

என்பது திருமந்திரம். இறைவனுடைய எல்லேயற்ற ஆனந்தத்தின் வெளியீடுதான் மனிதன் என்பது திருமந்திர முடிவு.

"ஆனந்தம் ஆடரங்கு
ஆனந்தம் பாடல்கள்.

நிலேத்து நின்று நான் அமைதி அடைந்திருப்பேன். ஆனல் இறைவன் இல்லவே இல்லேயென்று சாதிப்பதற்கும் போதிய சான்று எனக்குக் கிடைக்கவில்லே; இருக்கிருன் என்று சாதிப்பதற்கும் போதிய சான்று கிடைக்கவில்லே. இந்தப் பரிதாபகரமான நிலேயில் என் வாழ்வு நடந்து கொண்டிருக்கிறது. கடவுள் இவ்வுலகுக்கு ஆதாரமாக இருந்தால், ஐயந்திரிபு இல்லாமல் அவனுடைய காட்சி எனக்குக் கிடைக்கலாகாதா?' என்று சொல்லி அலறுகிருர். இரண்டு கட்சிகளுக்கும் இடையில் அகப்பட்டுத் தீர்ப்புச் சொல்லமுடியாமல் தத்தளிக்கிறது பஸ்க்கலுடைய அறிவு.

திருமூலருக்கு இந்தத் தயக்கமும் தத்தளிப்பும் கொஞ்சங் கூட இல்லே. படைப்பின் ரகசியம் என்னவென்று அவரைக் கேட்டால், 'மனமாகிய நெடுந்தேரேறி, பஸ்க்கலேப் போல் போயின நாடறியாமல் புலம்ப வேண்டாம் நானும் அப்படி யெல்லாம் திரிந்தவன்தான் அப்படித் திரிந்து விட்டு இந்த உடம்புக்குள்ளேயே, காயத்துக்குள்ளேயே அந்த மர்மத் தைக் கண்டு கொண்டேன்' என்று சொல்கிருர்,

"தேயமும் நாடும் திரிந்து
எங்கள் செல்வனேக்
காயமின்ருட்டிடைக
கண்டுகொண்டேனே."

என்பது திருமந்திரம். இறைவனுடைய எல்லேயற்ற ஆனந்தத்தின் வெளியீடுதான் மனிதன் என்பது திருமந்திர முடிவு.

"ஆனந்தம் ஆடரங்கு
ஆனந்தம் பாடல்கள்.

ஆனந்தம் பல்லியம்,
    ஆனந்தம் வாச்சியம்
ஆனந்த மாக
    அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக்
    கூத்துகந் தானுக்கே.''

ஆனந்தம் பல்லியம்,
ஆனந்தம் வாச்சியம்
ஆனந்த மாக
அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக்
கூத்துகந் தானுக்கே."

# 7. ராஜாஜியும் டி. கே. சி.யும்

ராஜாஜியோடும் டி.கே.சி.யோடும் நெருங்கிப் பழகும் பேற்றைப் பெற்றவர்களுக்கு அறிவு வளத்தின் கொடுமுடியையும் இதயவளத்தின் கொடுமுடியையும் ஒருங்கே தொடும் பேறு கிட்டியது.

ராஜாஜியோடு கொஞ்ச நேரம் உரையாடிக்கொண்டிருந்தால் போதும், அவர்களுடைய அறிவின் வீச்சு எவ்வளவு பிரம்மாண்டமானது என்று தெரிந்துகொள்ளலாம். எல்லையில்லாத ஒரு சமுத்திரத்தையோ, ஓங்கி உயர்ந்து வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மலையையோ, பார்க்கும்போது நம் உள்ளத்திலே ஏற்படுகிற அகண்ட உணர்ச்சி ராஜாஜியின் அறிவுத் தத்துவத்தின் நீள அகல ஆழங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கும்போது நமக்கு உண்டாகும். ஒருநாள் மணிக்கணக்காக ராஜாஜியோடு பேசிவிட்டு அவர்களை விட்டுப் பிரியும் போது நான் சொன்னேன்:— "கடவுள் இல்லையென்று சொல்லுகிறவர்கள் உங்களுடைய அறிவின் கூர்மையையும் வன்மையையும் ஆய்ந்து பார்த்தார்களேயானால், கடவுள் என்று ஒருவர் இருக்கவே செய்கிறார் என்றும் அவரைத் தவிர வேறொருவராலும் அதிசயிக்கத்தக்க உங்கள் அறிவைப் படைத்திருக்க முடியாது என்றும் உணர்வார்கள்" என்று. இதைக் கேட்ட ராஜாஜி ஒரு புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருந்தார்கள்;

# 7. ராஜாஜியும் டி. கே. சி.யும்

ராஜாஜியோடும் டி.கே.சி.யோடும் நெருங்கிப் பழகும் பேற்றைப் பெற்றவர்களுக்கு அறிவு வளத்தின் கொடுமுடியையும் இதயவளத்தின் கொடுமுடியையும் ஒருங்கே தொடும் பேறு கிட்டியது.

ராஜாஜியோடு கொஞ்ச நேரம் உரையாடிக்கொண்டிருந்தால் போதும், அவர்களுடைய அறிவின் வீச்சு எவ்வளவு பிரம்மாண்டமானது என்று தெரிந்துகொள்ளலாம். எல்லையில்லாத ஒரு சமுத்திரத்தையோ, ஓங்கி உயர்ந்து வானத்தை முட்டிக்கொண்டு நிற்கும் ஒரு மலையையோ, பார்க்கும்போது நம் உள்ளத்திலே ஏற்படுகிற அகண்ட உணர்ச்சி ராஜாஜியின் அறிவுத் தத்துவத்தின் நீள அகல ஆழங்களை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கும்போது நமக்கு உண்டாகும். ஒருநாள் மணிக்கணக்காக ராஜாஜியோடு பேசிவிட்டு அவர்களை விட்டுப் பிரியும் போது நான் சொன்னேன்:— "கடவுள் இல்லையென்று சொல்லுகிறவர்கள் உங்களுடைய அறிவின் கூர்மையையும் வன்மையையும் ஆய்ந்து பார்த்தார்களேயானால், கடவுள் என்று ஒருவர் இருக்கவே செய்கிறார் என்றும் அவரைத் தவிர வேறொருவராலும் அதிசயிக்கத்தக்க உங்கள் அறிவைப் படைத்திருக்க முடியாது என்றும் உணர்வார்கள்" என்று. இதைக் கேட்ட ராஜாஜி ஒரு புன்முறுவல் செய்துவிட்டு மௌனமாக இருந்தார்கள்;

டி. கே. சி.யோடு பழகும்போதோ, அவர்களுடைய எல்லையற்ற இதயத்தின் கதகதப்பு நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். நாம் தலையை நீட்டினால்போதும். குற்றாலத்து அருவியைப் போல, டி. கே. சி. யின் பேரன்பு நம்மை அப்படியே குளிப்பாட்டி விட்டுவிடும். என்னுடைய 66 ஆண்டு மண்ணுலக வாழ்வில் டி.கே.சி.யிடத்தில் நான் கண்ட அன்பில் நூற்றில் ஒரு பங்கைக்கூட வேறொருவரிடமும் நான் கண்டதில்லை. திருக்குற்றாலம் ஐந்தருவிச் சாலையிலுள்ள டி.கே.சி. வீட்டில் ஒரு நாள் நானும் டி.கே.சி. யும் மறுபிறவியைப் பற்றி வெகுநேரம், கொஞ்சம் சூடாகவே, விவாதித்துக் கொண்டிருந்தோம். "மனிதனுக்கு ஒரே பிறவிதான் உண்டு. அவன் இறந்ததும் இறைத் தத்துவத்தோடு அவன் இரண்டறக் கலந்து விடுகிறான்" என்று உறுதியோடு சொன்னார்கள் டி. கே. சி. எனக்கு இந்தக் கூற்றைத் தாங்க முடியவில்லை. "நீங்கள் சொல்வது உண்மையானால், அயோக்கியனும் செத்தவுடன் இறைவனடியைச் சேருவான், யோக்கியனும் அப்படியே இறைவனடியைச் சேருவான். அவரவர்களுடைய கர்ம பலனை அனுபவிக்காமலே எல்லோருக்கும் பேரின்பம் கிடைத்துவிடும். இப்படி ஒரு நம்பிக்கையை வளர்த்தோமேயானால், உலகத்தில் அக்கிரமம்தான் தாண்டவமாடும்" என்று சொல்லி ஆத்திரத்தோடு எழுந்து, டி.கே.சி. வீட்டுக்கு அடுத்த வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டேன். ஒரே கோபாவேசத்தில் இருந்த என்னைச் சமாதானம் செய்வதற்காக, அரை மணி நேரம் கழித்து அங்கு வந்து, மிகுந்த பரிவோடு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி, என் கையைப் பிடித்துக்கொண்டு தம் வீட்டுக்கு அழைத்து வந்து ஆயிரம் உபசாரம் செய்தார்கள் டி.கே.சி.; என்னைக் காட்டிலும் 32வயதுக்கு மூத்தவர்கள் ரசிகமணி; அப்படியிருந்தும் என் சிறுமையைப் பொருட்படுத்தாமல் எனக்காகக் கீழே இறங்கி வந்து என்மீது அன்பைப் பொழிந்தவர்கள் அவர்கள்.

டி. கே. சி.யோடு பழகும்போதோ, அவர்களுடைய எல்லையற்ற இதயத்தின் கதகதப்பு நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். நாம் தலையை நீட்டினால்போதும். குற்றாலத்து அருவியைப் போல, டி. கே. சி. யின் பேரன்பு நம்மை அப்படியே குளிப்பாட்டி விட்டுவிடும். என்னுடைய 66 ஆண்டு மண்ணுலக வாழ்வில் டி.கே.சி.யிடத்தில் நான் கண்ட அன்பில் நூற்றில் ஒரு பங்கைக்கூட வேறொருவரிடமும் நான் கண்டதில்லை. திருக்குற்றாலம் ஐந்தருவிச் சாலையிலுள்ள டி.கே.சி. வீட்டில் ஒரு நாள் நானும் டி.கே.சி. யும் மறுபிறவியைப் பற்றி வெகுநேரம், கொஞ்சம் சூடாகவே, விவாதித்துக் கொண்டிருந்தோம். "மனிதனுக்கு ஒரே பிறவிதான் உண்டு. அவன் இறந்ததும் இறைத் தத்துவத்தோடு அவன் இரண்டறக் கலந்து விடுகிறான்" என்று உறுதியோடு சொன்னார்கள் டி. கே. சி. எனக்கு இந்தக் கூற்றைத் தாங்க முடியவில்லை. "நீங்கள் சொல்வது உண்மையானால், அயோக்கியனும் செத்தவுடன் இறைவனடியைச் சேருவான், யோக்கியனும் அப்படியே இறைவனடியைச் சேருவான். அவரவர்களுடைய கர்ம பலனை அனுபவிக்காமலே எல்லோருக்கும் பேரின்பம் கிடைத்து விடும். இப்படி ஒரு நம்பிக்கையை வளர்த்தோமேயானால், உலகத்தில் அக்கிரமம்தான் தாண்டவமாடும்" என்று சொல்லி ஆத்திரத்தோடு எழுந்து, டி.கே.சி. வீட்டுக்கு அடுத்த வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டேன். ஒரே கோபாவேசத்தில் இருந்த என்னைச் சமாதானம் செய்வதற்காக, அரை மணி நேரம் கழித்து அங்கு வந்து, மிகுந்த பரிவோடு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி, என் கையைப் பிடித்துக்கொண்டு தம் வீட்டுக்கு அழைத்து வந்து ஆயிரம் உபசாரம் செய்தார்கள் டி.கே.சி.; என்னைக் காட்டிலும் 32வயதுக்கு மூத்தவர்கள் ரசிகமணி; அப்படியிருந்தும் என் சிறுமையைப் பொருட்படுத்தாமல் எனக்காகக் கீழே இறங்கி வந்து என்மீது அன்பைப் பொழிந்தவர்கள் அவர்கள்.

டி.கே.சி. என்ற இதயத் தத்துவத்தையும் ராஜாஜி என்ற அறிவுத் தத்துவத்தையும் இணைத்து வைத்தவர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. இந்த இணைப்பினால் இலக்கியம், இசை, கலை, அரசியல் ஆகிய துறைகளில் வரலாற்றுப் புகழ்ப்பெற்ற பல விளைவுகள் விளைந்தன. ராஜாஜியின் நட்பினால் டி. கே. சிக்குப் பெரியவர்களுடைய அங்கீகாரம் கிடைத்தது: காந்திஜி, வினோபாஜி, நேருஜி போன்ற சான்றோர்கள் டி. கே. சி. யை நேரில் சந்தித்து மதிக்கத் தொடங்கினார்கள்: உயர்ந்த பதவிகளிலுள்ள ஐ. சி. எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், நீதிபதிகள் ஆகியோர் டி. கே. சி.யோடு பழகுவதே தமக்கு ஒரு பெருமையென்று நினைத்தார்கள்; பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற புலவர்களுடைய வசவுக்கு ஆளாகிப் புண்பட்டுப் போயிருந்த டி.கே.சி.க்கு அரசியல் செல்வாக்கும், சாகாப் புகழும் பெற்றிருந்த ராஜாஜியின் நட்பும், ராஜாஜி குழாத்தின் நட்பும் இதயத்துக்கு இங்கிதமாக இருந்தது.

டி.கே.சி.யின் நட்பினால் ராஜாஜிக்கு ஆன்ம அமைதியும் ஆனந்தமும் கிடைத்தன. அரசியல் பரபரப்பிலே வேஷதாரிகளுக்கும் ஆஷாடபூதிகளுக்குமிடையே பெற்ற சொல்லொணாத வேதனையையெல்லாம் ராஜாஜி, டி. கே. சி. என்ற அன்பு தத்துவத்தில் மூழ்கி, மூழ்கி மறக்கக் கற்றுக்கொண்டார்கள். அரசியல் அஞ்ஞாத வாசத்தில் இருந்த நாட்களையெல்லாம் இருபதாவது நூற்றாண்டு பீஷ்மராகிய ராஜாஜி, குற்றால முனிவரான டி.கே.சி.யின் அரவணைப்பிலே குதூகலத்தோடு கழித்தார்கள்.

கருப்புக் கண்ணாடிக்குப் பின், அரம் போலும் கூர்மையான, ஆனால் ஈரம் அற்ற அறிவுதானிருந்தது என்று அரசியல்வாதிகளில் சிலர் நினைப்பார்கள். உண்மையில் ராஜாஜி உறைந்த பனிக்கட்டியால் மூடப்பட்ட எரிமலை போன்றவர். நரமாமிச பக்ஷிணிகளோடு பழகும்போது, தமக்குள்ளே அலைமோதிக் கொண்டு நிற்கும் அன்பை

டி.கே.சி. என்ற இதயத் தத்துவத்தையும் ராஜாஜி என்ற அறிவுத் தத்துவத்தையும் இணைத்து வைத்தவர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. இந்த இணைப்பினால் இலக்கியம், இசை, கலை, அரசியல் ஆகிய துறைகளில் வரலாற்றுப் புகழ்ப்பெற்ற பல விளைவுகள் விளைந்தன. ராஜாஜியின் நட்பினால் டி. கே. சிக்குப் பெரியவர்களுடைய அங்கீகாரம் கிடைத்தது: காந்திஜி, வினோபாஜி, நேருஜி போன்ற சான்றோர்கள் டி. கே. சி. யை நேரில் சந்தித்து மதிக்கத் தொடங்கினார்கள்: உயர்ந்த பதவிகளிலுள்ள ஐ. சி. எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள், நீதிபதிகள் ஆகியோர் டி. கே. சி.யோடு பழகுவதே தமக்கு ஒரு பெருமையென்று நினைத்தார்கள்; பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற புலவர்களுடைய வசவுக்கு ஆளாகிப் புண்பட்டுப் போயிருந்த டி.கே.சி.க்கு அரசியல் செல்வாக்கும், சாகாப் புகழும் பெற்றிருந்த ராஜாஜியின் நட்பும், ராஜாஜி குழாத்தின் நட்பும் இதயத்துக்கு இங்கிதமாக இருந்தது.

டி.கே.சி.யின் நட்பினால் ராஜாஜிக்கு ஆன்ம அமைதியும் ஆனந்தமும் கிடைத்தன. அரசியல் பரபரப்பிலே வேஷதாரிகளுக்கும் ஆஷாடபூதிகளுக்குமிடையே பெற்ற சொல்லொணாத வேதனையையெல்லாம் ராஜாஜி, டி. கே. சி. என்ற அன்பு தத்துவத்தில் மூழ்கி, மூழ்கி மறக்கக் கற்றுக்கொண்டார்கள். அரசியல் அஞ்ஞாத வாசத்தில் இருந்த நாட்களையெல்லாம் இருபதாவது நூற்றாண்டு பீஷ்மராகிய ராஜாஜி, குற்றால முனிவரான டி.கே.சி.யின் அரவணைப்பிலே குதூகலத்தோடு கழித்தார்கள்.

கருப்புக் கண்ணாடிக்குப் பின், அரம் போலும் கூர்மையான, ஆனால் ஈரம் அற்ற அறிவுதானிருந்தது என்று அரசியல்வாதிகளில் சிலர் நினைப்பார்கள். உண்மையில் ராஜாஜி உறைந்த பனிக்கட்டியால் மூடப்பட்ட எரிமலை போன்றவர். நரமாமிச பக்ஷிணிகளோடு பழகும்போது, தமக்குள்ளே அலைமோதிக் கொண்டு நிற்கும் அன்பை

அவர்கள் பார்க்கவொட்டாமல் முகமூடிகளைப் போட்டு மறைக்கவும், தம் கண்ணோட்டத்தை அவர்கள் கண்டுவிடாமல் கருப்புக் கண்ணாடி போட்டு ஒளிக்கவும் வேண்டியது தமது கடமையென்று ராஜாஜி நினைத்தார்கள். தம்மிடத்திலே ஒரு விதமான பிரதிபலனும் எதிர்பார்க்காத டி. கே. சி. யைப் போன்ற தன்னலமற்ற உத்தமர்களோடு பழகும் போது, ராஜாஜி தம்முடைய முகமூடிகளையும் கருப்புக் கண்ணாடிகளையும் கழற்றி எறிந்து விட்டு இயல்பான அன்பைக் கொட்டிக்கொண்டிருப்பார்கள்.

டி. கே. சி. மறைந்த சில மாதங்களுக்குப் பின் சென்னைக்கு வந்து ராஜாஜியை அவர்கள் பஸ்லுல்லா சாலை வீட்டில் சந்தித்தேன். "உங்களைக் கண்டதும் டி. கே. சி. யைக் கண்டது போல இருக்கிறது" என்று மாறி, மாறிச் சொன்னார்கள் ராஜாஜி. அதோடு நிற்கவில்லை. எனக்கு லஜ்ஜை ஏற்படும் அளவுக்கு, டி. கே. சி. க்குச் செய்யும் தனி உபசாரத்தை எனக்கும் செய்யத் தொடங்கினார்கள். அன்று எங்கள் உரையாடல் டி. கே. சி. மயமாக இருந்தது. சானட்டோஜனை ஒரு கோப்பைத் தயிரில் போட்டு ஒரு தேக்கரண்டில் மசித்து, மசித்துச் சாப்பிட்டுக்கொண்டே ராஜாஜி கீழ்க்கண்டவாறு சொன்னார்கள் :— "நாம் ஒரு தப்புப் பண்ணிவிட்டோம், சானட்டோஜனில் நல்ல ப்ரோட்டீன் சத்து இருக்கிறது. இதை நாம் டி. கே. சி.க்குக் கொடுத்திருக்க வேண்டும், கொடுத்திருந்தால் இன்னும் ஐந்தாண்டு காலம் அவர் நம்மோடு வாழ்ந்திருப்பார்." அவ்வாறு சொல்லும்போது ராஜாஜியின் தொண்டை உணர்ச்சி மிகுதியால் அடைத்துக்கொண்டது. இந்தச் சோகமான கட்டத்தைச் சமாளிப்பதற்காக, "நீங்கள் சானட்டோஜன் சாப்பிடுகிறீர்கள். நானும் சாப்பிடுகிறேன். உடம்புக்கு நன்றாகத்தான் இருக்கிறது" என்று அசட்டுத்தனமாக நான் சொல்லிவைத்தேன். இதைக் கேட்ட ராஜாஜி மிகுந்த பரபரப்போடு, "நீங்களும் நானும் அதைச்

அவர்கள் பார்க்கவொட்டாமல் முகமூடிகளைப் போட்டு மறைக்கவும், தம் கண்ணோட்டத்தை அவர்கள் கண்டுவிடாமல் கருப்புக் கண்ணாடி போட்டு ஒளிக்கவும் வேண்டியது தமது கடமையென்று ராஜாஜி நினைத்தார்கள். தம்மிடத்திலே ஒரு விதமான பிரதிபலனும் எதிர்பார்க்காத டி. கே. சி. யைப் போன்ற தன்னலமற்ற உத்தமர்களோடு பழகும் போது, ராஜாஜி தம்முடைய முகமூடிகளையும் கருப்புக் கண்ணாடிகளையும் கழற்றி எறிந்து விட்டு இயல்பான அன்பைக் கொட்டிக்கொண்டிருப்பார்கள்.

டி. கே. சி. மறைந்த சில மாதங்களுக்குப் பின் சென்னைக்கு வந்து ராஜாஜியை அவர்கள் பஸ்லுல்லா சாலை வீட்டில் சந்தித்தேன். "உங்களைக் கண்டதும் டி. கே. சி. யைக் கண்டது போல இருக்கிறது" என்று மாறி, மாறிச் சொன்னார்கள் ராஜாஜி. அதோடு நிற்கவில்லை. எனக்கு லஜ்ஜை ஏற்படும் அளவுக்கு, டி. கே. சி. க்குச் செய்யும் தனி உபசாரத்தை எனக்கும் செய்யத் தொடங்கினார்கள். அன்று எங்கள் உரையாடல் டி. கே. சி. மயமாக இருந்தது. சானட்டோஜனை ஒரு கோப்பைத் தயிரில் போட்டு ஒரு தேக்கரண்டியில் மசித்து, மசித்துச் சாப்பிட்டுக்கொண்டே ராஜாஜி கீழ்க்கண்டவாறு சொன்னார்கள் :— "நாம் ஒரு தப்புப் பண்ணிவிட்டோம், சானட்டோஜனில் நல்ல ப்ரோட்டீன் சத்து இருக்கிறது. இதை நாம் டி. கே. சி.க்குக் கொடுத்திருக்க வேண்டும், கொடுத்திருந்தால் இன்னும் ஐந்தாண்டு காலம் அவர் நம்மோடு வாழ்ந்திருப்பார்." அவ்வாறு சொல்லும்போது ராஜாஜியின் தொண்டை உணர்ச்சி மிகுதியால் அடைத்துக்கொண்டது. இந்தச் சோகமான கட்டத்தைச் சமாளிப்பதற்காக, "நீங்கள் சானட்டோஜன் சாப்பிடுகிறீர்கள். நானும் சாப்பிடுகிறேன். உடம்புக்கு நன்றாகத்தான் இருக்கிறது" என்று அசட்டுத்தனமாக நான் சொல்லிவைத்தேன். இதைக் கேட்ட ராஜாஜி மிகுந்த பரபரப்போடு, "நீங்களும் நானும் அதைச்

சாப்பிட்டு என்னத்துக்கு?'' என்று ஒரு போடு போட்டார்கள். அந்தக் கேள்விக்குள்ளிருந்து பொத்துக் கொண்டு வந்த வேதனையும் துன்பமும் என்னைத் தூக்கி வாரிப் போட்டன.

டி. கே. சி. மறைந்த ஓராண்டுக்குப் பின், ரஸிகமணி எழுதிய 'கம்பர் தரும் ராமாயணத்'தின் மூன்றும் பாகம் வெளிவந்தது. அதற்கு எழுதிய முன்னுரையில்ராஜாஜிக்கு டி. கே. சி. யிடமிருந்த அன்பும், டி. கே. சி. மறைந்ததால் அவர்களுக்கு ஏற்பட்ட ஏக்கமும் சோகமும் பீறிட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கலாம். இதோ ராஜாஜியின் வாசகம் :- "டி. கே. சி. அவர்கள் கம்பனுடை உள்ளத்தில் புகுந்து அதன் அந்த ரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவிவானம் உண்டாக்கி அமுதமழை பொழியச் செய்வார்; அதை நேரில் அனுபவித்தவர்கள், நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி. கே. சி. ஊனுடலை விட்டுப் போய் விட்டார். நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்தில் இருக்கும் நினைவுகளும் இந்த நூலும்' ராஜாஜி தம் ஆற்றுமையைத் அறிவினால் எவ்வளவு அடக்கிப் பார்த்தாலும் அது அத்து மீறிக்கொண்டு எப்படியெல்லாம் கொந்தளிக்கிறது என்பதை இந்த வாசகத்தின் வாயிலாக நாம் கண் கூடாகக் கணலாம்.

உணர்ச்சிகளை அடக்கியும் ஒடுக்கியும் அமுக்கியும் வைக்க வேண்டும் என்பது ராஜாஜியின் கொள்கை. ஆனால், டி. கே. சி. யின் கொள்கையோ இதற்கு நேர்மாறானது. உணர்ச்சிகளுக்குப் போக்குவிடவில்லையென்றால் அவை உள்மனத்தில் புதைந்து உட்கார்ந்து கொண்டு பல திருகுமுறுகல்களையும் முண்டு முடிச்சுகளையும் (Inhilibions) உண்டாக்கும் என்பது டி. கே. சி. யின் கருத்து; நல்ல தோன்றைக் கண்டுவிட்டால் அதை மனசுக்குள்ளே

கண்ணேடு டி. கே. சி. யை இணைத்து எழுதிய பரமபாகவதரான ராஜாஜியின் துணிச்சலைப் பாராட்டி, தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பதிலாக ராஜாஜியிடமிருந்து வந்த கடிதம் இதோ:—"தங்களுடைய கடிதம் படித்து, அமிர்தம் குடித்த தேவர்கள் போல், மத்தம் ஏறி, என்ன எழுதுவதென்று தெரியாமல் திகைக்கிறேன். மகராஜனுக்கு பல்லாண்டு.

இராசகோபாலாச்சாரி.''

இந்தக் கடிதத்தில் ஒரு பிற்குறிப்பும் இருந்தது:— "தாங்கள் கடிதத்தை சோமுவும் பார்த்து ஆனந்தம் பொங்கி மகிழ்ந்தார்.''

இவ்வாறெல்லாம் எழுதியருளிய ராஜாஜியும், டி. கே. சி. யைப் போல, அமரத்துவம் அடைந்து விட்டார்கள். ஆனந்தத்தோடு அறிவு கலந்துவிட்டது, சௌந்தரியத்தோடு சத்தியம் கலந்தது போல, ராஜாஜி நூற்றாண்டு விழாவில் இந்த இனிய உணர்வு நமது இதயத்தைப் புனிதப்படுத்துமாக.

இவ்வாறெல்லாம் எழுதியருளிய ராஜாஜியும், டி. கே. சி. யைப் போல, அமரத்துவம் அடைந்து விட்டார்கள். ஆனந்தத்தோடு அறிவு கலந்துவிட்டது, சௌந்தரியத்தோடு சத்தியம் கலந்தது போல, ராஜாஜி நூற்றாண்டு விழாவில் இந்த இனிய உணர்வு நமது இதயத்தைப் புனிதப்படுத்துமாக.

# 8. "சீலம் சிறந்த சிதம்பரநாதன்"

ஒரு நாள் குற்றாலத்தில் ரசிகமணி டி. கே. சி. யோடு நான் சொல்லாக்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது டி. கே. சி. சொன்னார்கள்: "தமிழில் புதிய சொல் ஒன்றை உண்டாக்கி அதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வது என்பது கடினமான காரியந்தான். பாருங்கள். நாம் இத்தனை காலமாக ஒரு சொல்லைத்தானே உண்டாக்க முடிந்தது, "பண்பாடு" என்ற சொல்லை. அது பூர்விகமாக இருந்த சொல்லைப் போல நன்றாகத் தமிழோடு ஒட்டிக்கொண்டது, பண்பாடு என்றால் வெகு காலம் உள்ளம் பண்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நாகரிகந்தானே **Culture** என்ற ஆங்கிலச் சொல்லும் **Cultivate** (பண்படுத்துதல் அல்லது பயிரிடுதல்) என்ற சொல்லிலிருந்து வந்தது தான். குற்றாலத்துக்கு அருகே கடவாய்க்காத்தி என்ற செழிப்பான நன்செய் நிலம் இருக்கிறது. 2000 அல்லது 3000 ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வந்த நிலம். ஆண்டுக்கு மூன்று போகம் விளையும். அவ்வளவு செழிப்பான மண். நல்ல உழவன் ஒருவன் அந்த மண்ணைக் கையில் அள்ளித் தொட்டுப் பார்த்தாலே சொல்லிவிடுவான், "இது 3000 ஆண்டுகள் பண்பட்ட நன்செய்" என்று. தமிழ்ப் பண்பாடு 30000 ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து வந்தது. ஒரு வெள்ளைக்காரனுக்கு அது என்ன வென்று எளிதில் விளக்கிவிட முடியாது. கடவாய்க்காத்தி மண்ணை ஒருபிடி அள்ளி அவன் வாயில் போட்டால் அதன் நயத்தைப்பற்றி அவனால் புரிந்துகொள்ளவா முடியும்?"

# 8. "சீலம் சிறந்த சிதம்பரநாதன்"

ஒரு நாள் குற்றாலத்தில் ரசிகமணி டி. கே. சி. யோடு நான் சொல்லாக்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது டி. கே. சி. சொன்னார்கள்: "தமிழில் புதிய சொல் ஒன்றை உண்டாக்கி அதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வது என்பது கடினமான காரியந்தான். பாருங்கள். நாம் இத்தனை காலமாக ஒரு சொல்லைத்தானே உண்டாக்க முடிந்தது, "பண்பாடு" என்ற சொல்லை. அது பூர்விகமாக இருந்த சொல்லைப் போல நன்றாகத் தமிழோடு ஒட்டிக்கொண்டது, பண்பாடு என்றால் வெகு காலம் உள்ளம் பண்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நாகரிகந்தானே **Culture** என்ற ஆங்கிலச் சொல்லும் **Cultivate** (பண்படுத்துதல் அல்லது பயிரிடுதல்) என்ற சொல்லிலிருந்து வந்தது தான். குற்றாலத்துக்கு அருகே கடவாய்க்காத்தி என்ற செழிப்பான நன்செய் நிலம் இருக்கிறது. 2000 அல்லது 3000 ஆண்டுகளாக உழுது பயிரிட்டு வந்த நிலம். ஆண்டுக்கு மூன்று போகம் விளையும். அவ்வளவு செழிப்பான மண். நல்ல உழவன் ஒருவன் அந்த மண்ணைக் கையில் அள்ளித் தொட்டுப் பார்த்தாலே சொல்லிவிடுவான், "இது 3000 ஆண்டுகள் பண்பட்ட நன்செய்" என்று. தமிழ்ப் பண்பாடு 30000 ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து வந்தது. ஒரு வெள்ளைக்காரனுக்கு அது என்னவென்று எளிதில் விளக்கிவிட முடியாது. கடவாய்க்காத்தி மண்ணை ஒருபிடி அள்ளி அவன் வாயில் போட்டால் அதன் நயத்தைப்பற்றி அவனால் புரிந்துகொள்ளவா முடியும்?"

பண்பாடு என்பது என்ன என்று மேற்கண்டபடி விளக்கிய டி.கே.சி. அவர்கள் வாழ்க்கையில் பண்பாட்டுக்கே ஓர் அரிய எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள்.

கம்பனிடத்திலே டி.கே.சி.க்கு இருந்த பக்தி அளக்க முடியாதது. ஆனால், மக்களிடத்திலே அவர்களுக்கிருந்த மரியாதையும் மதிப்பும் கம்பன் மீதுள்ள பக்தியையும் மிஞ்சி நின்றன. டி.கே.சி. யின் இல்லத்துக்கு நான் ஒரு நாள் போயிருந்தபோது அவர்கள் சொன்னார்கள்; "நேற்று ராமசாமிப் பெரியார் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் வந்தபோது நான் 7, 8 நண்பர்களுக்குக் கம்பராமாயணத்திலுள்ள வாலி வதைப் படலப் பாடல்களை விளக்கிக்கொண்டிருந்தேன். ஆனால் பெரியாரைப் பார்த்ததும் கம்பராமாயணத்தை மூடிவைத்துவிட்டு. திருக்குறளில் பல பாடல்களை எடுத்துச் சொன்னேன். பெரியாருக்கு ஒரே ஆர்வமும் மகிழ்ச்சியும். சிலருக்கு வெண்டைக்காய் பிடிக்கும், பாவைக்காய் பிடிக்காது. அவர்களிடத்திலே பாவைக்காயையே போட்டுத் தாளித்துக்கொண்டிருப்பது பண்பாடு இல்லை. வெண்டைக்காய், முருங்கக்காய், புடலங்காய் என்று எத்தனை, எத்தனையோ பொது விஷயங்கள் இருக்கத்தானே செய்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசி ஆனந்தத்தை உண்டாக்கலாமல்லவா?"

இதைக் கேட்ட பிறகு, "பிறர் மனங்கோணும்படியாக நாம் நடக்கக் கூடாது" என்ற ஆசை. டி.கே.சி. க்குக் கம்பனிடமிருந்த ஆசையையும் வென்றுவிட்டது என்று தெரிந்தது. எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும், எல்லோரிடமும் இங்கிதமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற முனைப்பில் உண்மைப் பண்பாட்டின் ஆழத்தைக் காண்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் காரைக்குடிக் கம்பன் விழாவின் ஆதரவில் டி.கே.சி. யின் தலைமையில் பல

பண்பாடு என்பது என்ன என்று மேற்கண்டபடி விளக்கிய டி. கே. சி. அவர்கள் வாழ்க்கையில் பண்பாட்டுக்கே ஓர் அரிய எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள்.

கம்பனிடத்திலே டி. கே. சி. க்கு இருந்த பக்தி அளக்க முடியாதது. ஆனால், மக்களிடத்திலே அவர்களுக்கிருந்த மரியாதையும் மதிப்பும் கம்பன் மீதுள்ள பக்தியையும் மிஞ்சி நின்றன. டி. கே. சி. யின் இல்லத்துக்கு நான் ஒரு நாள் போயிருந்தபோது அவர்கள் சொன்னார்கள்; "நேற்று ராமசாமிப் பெரியார் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் வந்தபோது நான் 7, 8 நண்பர்களுக்குக் கம்பராமாயணத்திலுள்ள வாலி வதைப் படலப் பாடல்களை விளக்கிக்கொண்டிருந்தேன். ஆனால் பெரியாரைப் பார்த்ததும் கம்பராமாயணத்தை மூடிவைத்துவிட்டு. திருக்குறளில் பல பாடல்களை எடுத்துச் சொன்னேன். பெரியாருக்கு ஒரே ஆர்வமும் மகிழ்ச்சியும். சிலருக்கு வெண்டைக்காய் பிடிக்கும், பாவைக்காய் பிடிக்காது. அவர்களிடத்திலே பாவைக்காயையே போட்டுத் தாளித்துக்கொண்டிருப்பது பண்பாடு இல்லை. வெண்டைக்காய், முருங்கக்காய், புடலங்காய் என்று எத்தனை, எத்தனையோ பொது விஷயங்கள் இருக்கத்தானே செய்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசி ஆனந்தத்தை உண்டாக்கலாமல்லவா?"

இதைக் கேட்ட பிறகு, "பிறர் மனங்கோணும்படியாக நாம் நடக்கக் கூடாது" என்ற ஆசை. டி. கே. சி. க்குக் கம்பனிடமிருந்த ஆசையையும் வென்றுவிட்டது என்று தெரிந்தது. எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும், எல்லோரிடமும் இங்கிதமாக நடந்துகொள்ளவேண்டும் என்ற முனைப்பில் உண்மைப் பண்பாட்டின் ஆழத்தைக் காண்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் காரைக்குடிக் கம்பன் விழாவின் ஆதரவில் டி. கே. சி. யின் தலைமையில் பல

புலவர்கள் பேசினார்கள். அப்புலவர் வரிசையில் குறிப்பிடத் தக்தவர் மகோபாத்யாய கதிரேசன் செட்டியார் அவர்கள் அவர் சிறந்த அறிவாளி. தமிழ்நாட்டிலும், சிறப்பாகச் செட்டி நாட்டிலும் அவருக்குப் பெருமதிப்பிருந்தது. அவர் டி. கே. சி. தலைமையில் பேசும்போது மிகுந்த ஆங்காரத் தோடு டி. கே. சி. செய்துவந்த திருத்தங்களைப் பற்றி கண் டித்தார். டி. கே. சி. யோ சிரித்துக்கொண்டே பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிரிப்பைக் பார்த்ததும் கதிரேசன் செட்டியாருக்குப் பெருஞ்சீற்றமே ஏற்பட்டுவிட்டது. உடனே, அவர் டி. கே. சி. யைப் பார்த்து, "ஏன் ஐயா, சிரிப்பு வேறு கேடா? உங்கள் அக்கிரமத்தை நான் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கி றேன். உடம்பிலே தைக்கவேயில்லையோ நான் சொல்லு வது? மானம் இருந்தால் தானே" என்று ஒரு போடு போட்டு விட்டு அமர்ந்தார்; ஒரு பெரும் போர் விளையப் போகிறது என்று வந்திருந்தவர்கள் எல்லோரும் எதிர் பார்த்தார்கள். டி. கே. சி. எழுந்து நின்று, "அவையோர் களே, செட்டியார் அவர்கள் வெகுஅழககாகப் பேசினார்கள்' என்று தொடங்கி, செட்டியார் பேச்சிலிருந்த நல்ல கருத்துக் களையெல்லாம் எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும், "பெருந்தன்மை யென்றால், இந்த மனிதனிடமல்லவா இருக்கிறது' பண்பாடு என்றால் இதுத்தான் பண்பாடு" என்று டி. கே. சி. யைப் பலபடப் புகழ்ந்தார்கள். அந்த நாளிலிருந்து மகாமகோ பாத்தியயரைக் கம்பர் விழாவுக்கு அழைப்பது என்பது அறவே நின்றுவிட்டது.

ராஜாஜி கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது. திருவண்ணமலை ரமணாஸ்ரமத்தில் கல்நாட்டு விழாவுக்காக வந்தார். அப்போது பெரியார் மணியம்மையாரை மணக்கப் போவது குறித்து தமிழ்நாட்டில் பெரிய விவாதம் நடந்துகொண்டிருந்தது. தன் பழைய நண்பரான ராஜாஜி

புலவர்கள் பேசினார்கள். அப்புலவர் வரிசையில் குறிப்பிடத் தக்தவர் மகோபாத்யாய கதிரேசன் செட்டியார் அவர்கள் அவர் சிறந்த அறிவாளி. தமிழ்நாட்டிலும், சிறப்பாகச் செட்டி நாட்டிலும் அவருக்குப் பெருமதிப்பிருந்தது. அவர் டி. கே. சி. தலைமையில் பேசும்போது மிகுந்த ஆங்காரத் தோடு டி. கே. சி. செய்துவந்த திருத்தங்களைப் பற்றி கண் டித்தார். டி. கே. சி. யோ சிரித்துக்கொண்டே பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சிரிப்பைக் பார்த்ததும் கதிரேசன் செட்டியாருக்குப் பெருஞ்சீற்றமே ஏற்பட்டுவிட்டது. உடனே, அவர் டி. கே. சி. யைப் பார்த்து, "ஏன் ஐயா, சிரிப்பு வேறு கேடா? உங்கள் அக்கிரமத்தை நான் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கி றேன். உடம்பிலே தைக்கவேயில்லையோ நான் சொல்லு வது? மானம் இருந்தால் தானே" என்று ஒரு போடு போட்டு விட்டு அமர்ந்தார்; ஒரு பெரும் போர் விளையப் போகிறது என்று வந்திருந்தவர்கள் எல்லோரும் எதிர் பார்த்தார்கள். டி. கே. சி. எழுந்து நின்று, "அவையோர் களே, செட்டியார் அவர்கள் வெகுஅழககாகப் பேசினார்கள்' என்று தொடங்கி, செட்டியார் பேச்சிலிருந்த நல்ல கருத்துக் களையெல்லாம் எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும், "பெருந்தன்மை யென்றால், இந்த மனிதனிடமல்லவா இருக்கிறது' பண்பாடு என்றால் இதுத்தான் பண்பாடு" என்று டி. கே. சி. யைப் பலபடப் புகழ்ந்தார்கள். அந்த நாளிலிருந்து மகாமகோ பாத்தாயயரைக் கம்பர் விழாவுக்கு அழைப்பது என்பது அறவே நின்றுவிட்டது.

ராஜாஜி கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது. திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்தில் கல்நாட்டு விழாவுக்காக வந்தார். அப்போது பெரியார் மணியம்மையாரை மணக்கப் போவது குறித்து தமிழ்நாட்டில் பெரிய விவாதம் நடந்துகொண்டிருந்தது. தன் பழைய நண்பரான ராஜாஜி

யைக் கலந்து ஆலோசனை செய்து முடிவு கட்டப் போவதாகப் பெரியார் ஓர் அறிக்கை விட்டிருந்தார். ராஜாஜி இதைப் போன்ற காரியங்களில் மிகவும் கடுமையானவர். ஆனால், டி. கே. சி. யோ ஒருவருடைய சொந்த விஷயத்தில் மற்றவர்கள் குறுக்கிடக்கூடாது என்ற கொள்கையுடையவர். திருமணம் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களையும், அரசியல் தேர்தலில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களையும் தடுப்பது தவறு. பயனில்லாதது என்று டி. கே. சி. சொல்லுவார்கள்.

திருவண்ணாமலை போகும் புகைவண்டியில் ஒரே பெட்டியில் ராஜாஜியோடு டி. கே. சி. யும் அவர்களுடைய செயலாளர்களும் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். இடைவழியில் ஒரு புகைவண்டி நிலையத்திலே பெரியாரும் ராஜாஜி இருந்த பெட்டியில் ஏறிக்கொண்டார். ஏறியவுடனேயே, பெரியார் ராஜாஜியிடம் தன் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். ராஜாஜி தன் ஆலோசனையைச் சொல்லுமுன்பே, டி. கே. சி. முந்திக்கொண்டு, "உங்கள் விருப்பம் அப்படி இருக்குமானால், திருமணத்தைச் செய்து முடிப்பதே நல்லது" என்று சொன்னார்கள். ராஜாஜியும் "ஆமாம். அப்படிச் செய்வதே நலம்" என்று சொல்லி விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். பெரியாரை ராஜாஜி கடுமையான சோதனைக்கு உள்ளாக்கிவிடக்கூடாதே என்று அஞ்சியே டி. கே. சி, மேற்கண்டவாறு செய்ததாக உடனிருந்தவர்கள் நினைக்கிறார்கள்.

1948 கோடை விடுமுறையில் என் குடும்பத்தார் எல்லோரும் தன்னோடு குற்றாலத்துக்கு வந்து தங்க வேண்டுமென்று டி. கே. சி. அழைத்திருந்தார்கள். எட்டறையில் டி. கே. சி. யிருந்தது முதல் இரண்டு அறைகளில். என் குடும்பம் தங்குவதற்கு நான்காவது அறையை டி. கே. சி. யே

யைக் கலந்து ஆலோசனை செய்து முடிவு கட்டப் போவதாகப் பெரியார் ஓர் அறிக்கை விட்டிருந்தார். ராஜாஜி இதைப் போன்ற காரியங்களில் மிகவும் கடுமையானவர். ஆனால், டி. கே. சி. யோ ஒருவருடைய சொந்த விஷயத்தில் மற்றவர்கள் குறுக்கிடக்கூடாது என்ற கொள்கையுடையவர். திருமணம் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களையும், அரசியல் தேர்தலில் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களையும் தடுப்பது தவறு. பயனில்லாதது என்று டி. கே. சி. சொல்லுவார்கள்.

திருவண்ணாமலை போகும் புகைவண்டியில் ஒரே பெட்டியில் ராஜாஜியோடு டி. கே. சி. யும் அவர்களுடைய செயலாளர்களும் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். இடைவழியில் ஒரு புகைவண்டி நிலையத்திலே பெரியாரும் ராஜாஜி இருந்த பெட்டியில் ஏறிக்கொண்டார். ஏறியவுடனேயே, பெரியார் ராஜாஜியிடம் தன் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார். ராஜாஜி தன் ஆலோசனையைச் சொல்லுமுன்பே, டி. கே. சி. முந்திக்கொண்டு, "உங்கள் விருப்பம் அப்படி இருக்குமானால், திருமணத்தைச் செய்து முடிப்பதே நல்லது" என்று சொன்னார்கள். ராஜாஜியும் "ஆமாம். அப்படிச் செய்வதே நலம்" என்று சொல்லி விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். பெரியாரை ராஜாஜி கடுமையான சோதனைக்கு உள்ளாக்கிவிடக்கூடாதே என்று அஞ்சியே டி. கே. சி, மேற்கண்டவாறு செய்ததாக உடனிருந்தவர்கள் நினைக்கிறார்கள்.

1948 கோடை விடுமுறையில் என் குடும்பத்தார் எல்லோரும் தன்னோடு குற்றாலத்துக்கு வந்து தங்க வேண்டுமென்று டி. கே. சி. அழைத்திருந்தார்கள். எட்டறையில் டி. கே. சி. யிருந்தது முதல் இரண்டு அறைகளில். என் குடும்பம் தங்குவதற்கு நான்காவது அறையை டி. கே. சி. யே

ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், உணவெல்லாம் டி. கே. சி. இல்லத்தில் தான்.

ஒரு நாள் டி. கே. சி. யும் நானும் தனியாக இருந்தோம். அன்று எங்களுக்குள் ஒரு கடுமையான விவாதம் தொடங்கியது. "சுவர்க்கம் நரகம் என்றெல்லாம் கிடையாது. இறந்தவுடன் எல்லா மனிதர்களும் இறைவனுடைய வஸ்துவிலே கலந்துவிடுகிறார்கள். மறுபிறப்பு என்பதே கிடையாது" என்று டி. கே. சி. வாதாடினார்கள்.

நான் சொன்னேன்:— "நீங்கள் சொல்லும் கட்சியை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். கர்மத்துக்கு ஏற்ற பிறவி என்று சைவம் சொல்லுகிறது. **Somerset Maugham** என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர்கூட "வேறு ஒரு சமயம் சொல்லாத ஒரு கொள்கையே இந்து மதம் மாத்திரம் சொல்லுகிறது. அதுதான் கர்மாவைப் பற்றிய கொள்கை. பிறவியிலே குருடர்களாகவும் மூடர்களாகவும் பலர் பிறக்கிறார்கள். ஏன்? கர்மாக் கொள்கைப்படி, முன் பிறவியில் செய்த தீவினையினால் அவர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை மறுத்தால், இறைவன் அநீதியுள்ளவன், காரணமில்லாமல் மக்களுக்குத் துன்பம் கொடுக்கிறான் என்றல்லவா சொல்ல வேண்டும்" என்று சாமார் செட் மாம் தன் "**The Summing up**" என்ற நூலில் எழுதியிருக்கிறார்" என்று சொன்னேன்.

இதைக் கேட்ட டி. கே. சி, "ஒரு பாட்டிலே சிவவாக்கியரே என் கருத்தை உறுதிப்படுத்துகிறார். இதோ பாடல்:—

"கறந்த பால் முலை புகா,
கடைந்த வெண்ணெய் மோர் புகா,

ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், உணவெல்லாம் டி. கே. சி. இல்லத்தில் தான்.

ஒரு நாள் டி. கே. சி. யும் நானும் தனியாக இருந்தோம். அன்று எங்களுக்குள் ஒரு கடுமையான விவாதம் தொடங்கியது. "சுவர்க்கம் நரகம் என்றெல்லாம் கிடையாது. இறந்தவுடன் எல்லா மனிதர்களும் இறைவனுடைய வஸ்துவிலே கலந்துவிடுகிறார்கள். மறுபிறப்பு என்பதே கிடையாது" என்று டி. கே. சி. வாதாடினார்கள்.

நான் சொன்னேன்:— "நீங்கள் சொல்லும் கட்சியை நான் ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். கர்மத்துக்கு ஏற்ற பிறவி என்று சைவம் சொல்லுகிறது. **Somerset Maugham** என்ற புகழ் பெற்ற நாவலாசிரியர்கூட "வேறு ஒரு சமயம் சொல்லாத ஒரு கொள்கையே இந்து மதம் மாத்திரம் சொல்லுகிறது. அதுதான் கர்மாவைப் பற்றிய கொள்கை. பிறவியிலே குருடர்களாகவும் மூடர்களாகவும் பலர் பிறக்கிறார்கள். ஏன்? கர்மாக் கொள்கைப்படி, முன் பிறவியில் செய்த தீவினையினால் அவர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை மறுத்தால், இறைவன் அநீதியுள்ளவன், காரணமில்லாமல் மக்களுக்குத் துன்பம் கொடுக்கிறான் என்றல்லவா சொல்ல வேண்டும்" என்று சாமர்செட் மாம் தன் "**The Summing up**" என்ற நூலில் எழுதியிருக்கிறார்" என்று சொன்னேன்.

இதைக் கேட்ட டி. கே. சி, "ஒரு பாட்டிலே சிவவாக்கியரே என் கருத்தை உறுதிப்படுத்துகிறார். இதோ பாடல்:—

"கறந்த பால் முலை புகா,
கடைந்த வெண்ணெய் மோர் புகா,

இறந்தவர் பிறப்பதில்லை,
இல்லை இல்லை இல்லையே''.

சிவவாக்கியரை ஆமோதிக்கிறார் ஜெர்மன் தத்துவஞானி ஷோப்பன்ஹாவர். அவர் சொல்லுவதைக் கேளுங்கள்:—''இறந்த பின் எல்லா மனிதர்களுமே பேரின்பத்தை யடைகிறார்கள். இந்த உண்மையை அறிந்தால் எத்தனையோ பேர் உடனடியாகத் தற்கொலை செய்துகொண்டு பேரின்பத்தை அடைவார்கள்.''

இதைக் கேட்டதும்எனக்குக்கோபம் தாங்கமுடியவில்லை. ''உங்கள் கொள்கைப்படி அயோக்கியனும் இறந்தவுடன் பேரின்பத்தை யடைகிறான், யோக்கியனும் பேரின்பத்தை அடைகிறான். இந்தக் கொள்கையைக் கேட்டும் மனிதர்கள், 'இம்மையில் அயோக்கியர்களாக இருந்து என்ன அக்கிரமும் செய்யலாம்; மறுமையில் எப்படியும் பேரின்பம் நமக்குக் கிட்டுமே'' என்று தானே நினைப்பார்கள்'' என்று டி. கே. சி. யிடம் சொல்லிவிட்டு மிக்க சீற்றத்தோடு எழுந்து வெளியேபோய் நான்காவது அறையில் உட்கார்ந்துகொண்டேன். அரை மணி நேரம் அங்கே மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்போது, நோய்வாய்ப்பட்டிருந்த டி. கே. சி. மெல்ல மெல்ல அங்கே நடந்துவந்து, ''என்ன! மணி 12-30 ஆச்சே. இலை போட்டாகிவிட்டது. சாப்பிட வாருங்கள்'' என்றார்கள். இதைக் கேட்ட பின்னும் நான் மௌனம் சாதித்தேன். ஆனால், ரஸிகமணியோ என் கையைப் பிடித்துத் தூக்கி, ''வாருங்கள், வாருங்கள்'' என்று கெஞ்சுங் குரலில் அழைத்தார்கள். என்னைக் காட்டிலும் 33 வயது மூத்திருந்த அவர்களுடைய சீலத்தைக் கண்டு நான் உருகிவிட்டேன். அவர்களுடைய குழந்தை உள்ளத்தைப் புண்படுத்திவிட்டோமே என்ற உணர்வு என்னை வருத்தியது. மறுவார்த்தை பேசா

இறந்தவர் பிறப்பதில்லை,
இல்லை இல்லை இல்லையே''.

சிவவாக்கியரை ஆமோதிக்கிறார் ஜெர்மன் தத்துவஞானி ஷோப்பன்ஹாவர். அவர் சொல்லுவதைக் கேளுங்கள்:—
''இறந்த பின் எல்லா மனிதர்களுமே பேரின்பத்தை யடைகிறார்கள். இந்த உண்மையை அறிந்தால் எத்தனையோ பேர் உடனடியாகத் தற்கொலை செய்துகொண்டு பேரின்பத்தை அடைவார்கள்.''

இதைக் கேட்டதும்எனக்குக்கோபம் தாங்கமுடியவில்லை. ''உங்கள் கொள்கைப்படி அயோக்கியனும் இறந்தவுடன் பேரின்பத்தை யடைகிறான், யோக்கியனும் பேரின்பத்தை அடைகிறான். இந்தக் கொள்கையைக் கேட்டும் மனிதர்கள், ''இம்மையில் அயோக்கியர்களாக இருந்து என்ன அக்கிரமும் செய்யலாம்; மறுமையில் எப்படியும் பேரின்பம் நமக்குக் கிட்டுமே'' என்று தானே நினைப்பார்கள்'' என்று டி. கே. சி. யிடம் சொல்லிவிட்டு மிக்க சீற்றத்தோடு எழுந்து வெளியேபோய் நான்காவது அறையில் உட்கார்ந்துகொண்டேன். அரை மணி நேரம் அங்கே மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்போது, நோய்வாய்ப்பட்டிருந்த டி. கே. சி. மெல்ல மெல்ல அங்கே நடந்துவந்து, ''என்ன! மணி 12–30 ஆச்சே. இலை போட்டாகிவிட்டது. சாப்பிட வாருங்கள்'' என்றார்கள். இதைக் கேட்ட பின்னும் நான் மௌனம் சாதித்தேன். ஆனால், ரஸிகமணியோ என் கையைப் பிடித்துத் தூக்கி, ''வாருங்கள், வாருங்கள்'' என்று கெஞ்சுங் குரலில் அழைத்தார்கள். என்னைக் காட்டிலும் 33 வயது மூத்திருந்த அவர்களுடைய சீலத்தைக் கண்டு நான் உருகிவிட்டேன். அவர்களுடைய குழந்தை உள்ளத்தைப் புண்படுத்திவிட்டோமே என்ற உணர்வு என்னை வருத்தியது. மறுவார்த்தை பேசா

மலே அவர்கள் பின் சென்று அவர்கள் அளித்த உணவு விருந்தையும், கவிதை விருந்தையும் உண்டு களித்தேன். இத்தகைய டி. கே. சி. யின் அரிய பண்பாட்டை விதம் வித மான கோணங்களிலிருந்து அனுபவித்தவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. அந்த அனுபவம் கவிதையாக வடிவெடுக்கிறது:—

"சீலம் சிறந்த சிதம்பரநாத வள்ளால்,
சால நீ வாழ்க தழைத்து."

மலே அவர்கள் பின் சென்று அவர்கள் அளித்த உணவு விருந்தையும், கவிதை விருந்தையும் உண்டு களித்தேன். இத்தகைய டி. கே. சி. யின் அரிய பண்பாட்டை விதம் வித மான கோணங்களிலிருந்து அனுபவித்தவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. அந்த அனுபவம் கவிதையாக வடிவெடுக்கிறது:—

"சீலம் சிறந்த சிதம்பரநாத வள்ளால்,
சால நீ வாழ்க தழைத்து."

# 9. தென்காசித் கழகத்தின் காப்பாளர் இருவர்

தென்காசித் திருவள்ளுவர் கழகத்தை நிறுவியவர் சுப்பிரமணிய தாஸ், ஆனாலும் அது நிறுவப்பட்ட பின், அதை மிக்க அன்புடன் வளர்த்து வந்தவர் இருவர்—சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளையும் ரஸிகமணி டி. கே. சி. யும். எனக்குத் தமிழையும், வள்ளுவரையும் கம்பனையும் அறிமுகப்படுத்தியவர்களும் அவர்களே. முன்னவர் எனக்கு உறவினர்: பின்னவர் உறவினைக் காட்டிலும் எனக்கு நெருங்கியவர், என் இலக்கியத் தந்தை. இருவருடைய பேரன்புக்கும் பாத்திரமாகும் பேறு எனக்கு இந்த மண்ணுலக வாழ்வில் கிடைத்தது.

1921-ல்—எனக்கு அப்போது வயது எட்டு—முதன் முதலாவதாக சேதுப் பிள்ளை அவர்களைச் சாத்தூரில் சைவ சபை மகாநாட்டுக் கூட்டத்தில் கேட்டேன். ஓயா மொழிப் புலவர்கள் மணிக்கணக்காக சுவையற்ற தமிழிலே பேசிக் கொண்டிருந்த காலம் அது. அன்றும் மேற்படி, மேற்படி தான். அந்தப் பேச்சுக்களையும் பொறுமையோடு காலையிலும் மாலையிலும் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு எட்டு மணிக்கெல்லாம் ஓர் இளைஞர் மேடை மீது ஏறினார்; நல்ல கவர்ச்சியான தோற்றம்; புன்சிரிப்பும் அறிவுக்களையும் அவர் முகத்தில் தாண்டவமாடின. அவர் பேசத் தொடங்கியதும் மட்கிப் போயிருந்த கூட்டம் நிமிர்ந்து

# 9. தென்காசித் கழகத்தின் காப்பாளர் இருவர்

தென்காசித் திருவள்ளுவர் கழகத்தை நிறுவியவர் சுப்பிரமணிய தாஸ், ஆனாலும் அது நிறுவப்பட்ட பின், அதை மிக்க அன்புடன் வளர்த்து வந்தவர் இருவர்—சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளையும் ரஸிகமணி டி. கே. சி. யும். எனக்குத் தமிழையும், வள்ளுவரையும் கம்பனையும் அறிமுகப்படுத்தியவர்களும் அவர்களே. முன்னவர் எனக்கு உறவினர்: பின்னவர் உறவினரைக் காட்டிலும் எனக்கு நெருங்கியவர், என் இலக்கியத் தந்தை. இருவருடைய பேரன்புக்கும் பாத்திரமாகும் பேறு எனக்கு இந்த மண்ணுலக வாழ்வில் கிடைத்தது.

1921-ல்—எனக்கு அப்போது வயது எட்டு—முதன் முதலாவதாக சேதுப் பிள்ளை அவர்களைச் சாத்தூரில் சைவ சபை மகாநாட்டுக் கூட்டத்தில் கேட்டேன். ஓயா மொழிப் புலவர்கள் மணிக்கணக்காக சுவையற்ற தமிழிலே பேசிக் கொண்டிருந்த காலம் அது. அன்றும் மேற்படி, மேற்படி தான். அந்தப் பேச்சுக்களையும் பொறுமையோடு காலையிலும் மாலையிலும் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவு எட்டு மணிக்கெல்லாம் ஓர் இளைஞர் மேடை மீது ஏறினார்; நல்ல கவர்ச்சியான தோற்றம்; புன்சிரிப்பும் அறிவுக்களையும் அவர் முகத்தில் தாண்டவமாடின. அவர் பேசத் தொடங்கியதும் மட்கிப் போயிருந்த கூட்டம் நிமிர்ந்து

உட்கார்ந்தது. ஒரே கலகலப்பும் உற்சாகமுமாக இருந்தது பேச்சு. பேச்சைக் கேட்ட ஒவ்வொருவருக்கும் தமிழைப் பற்றிய கர்வம் ஓங்கி வளர்ந்தது. "இவர் தாம் ரா. பி. சேதுப் பிள்ளை"யென்று ஒருவரோடொருவர் தாழ்ந்த குரலில் சொல்லிக்கொண்டார்கள். இந்தக் கன்னிப் பேச்சைக் கேட்ட என் இளம் இதயத்தில் தமிழ்க் காதல் மூண்டது.

" 'என்றுமுளதென் தமிழ்' என்று தமிழில் வாசியறிந்த ஆசி கூறினார் கம்பர். இத்தகைய இனிமை வாய்ந்த மொழியை—மூவாச் சாவா மொழியைப் பிறப்புரிமையாகப் பெற்ற பெருமை என்றும் தமிழருக்கு உண்டு. ஆயினும், தம் பெருமை தாமுணராத் தன்மையராய்த் தமிழர் இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள்" என்று இனிய அடுக்குமொழியிலே பேசி, என்னைத்தட்டி எழுப்பித் தமிழ் அமுதை ஊட்டியவர்கள் சொல்லின் செல்வர்.

1931 முதல் 1933 வரை நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ்ஸி. மாணவனாக இருந்த காலத்தில், ரா. பி. சே. அவர்கள் தமிழாசிரியராக அங்கு பணியாற்றினார்கள். அக்காலத்தில் அவர்களுடைய பேச்சுக்களை அடிக்கடி பொதுக்கூட்டங்களில் கேட்கும் வாய்ப்பும் அவர்களுடைய இனிய உரையாடல் மணிக்கணக்காக அவர்கள் இல்லத்தில் போயிருந்து கேட்கும் வாய்ப்பும் எனக்கும் கிட்டியது. "கம்பன் பாடல்களிலே மூவாயிரம் பாடல்கள் எனக்கு மனப்பாடம்" என்று அடிக்கடி சொல்லின் செல்வர் சொல்லுவார்கள். அவர்களுடைய உள்மனது கம்பன் கவிதையிலே ஊறி ஊறி, விம்மிப் பூரித்து நின்றது. ஆகவேதான் அவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் கம்பனுடைய கவிச்சொல் அடிக்கடி தெறித்து விழுந்து கொண்டிருக்கும்.

ஆங்கில மோகம் எங்களைப் பிடித்தாட்டிய காலம் அது. தமிழில் பேசுவது கண்ணியக் குறைவு என்று நாங்கள்

உட்கார்ந்தது. ஒரே கலகலப்பும் உற்சாகமுமாக இருந்தது பேச்சு. பேச்சைக் கேட்ட ஒவ்வொருவருக்கும் தமிழைப் பற்றிய கர்வம் ஓங்கி வளர்ந்தது. "இவர் தாம் ரா. பி. சேதுப் பிள்ளை"யென்று ஒருவரோடொருவர் தாழ்ந்த குரலில் சொல்லிக்கொண்டார்கள். இந்தக் கன்னிப் பேச்சைக் கேட்ட என் இளம் இதயத்தில் தமிழ்க் காதல் மூண்டது.

" 'என்றுமுளதென் தமிழ்' என்று தமிழில் வாசியறிந்த ஆசி கூறினார் கம்பர். இத்தகைய இனிமை வாய்ந்த மொழியை—மூவாச் சாவா மொழியைப் பிறப்புரிமையாகப் பெற்ற பெருமை என்றும் தமிழருக்கு உண்டு. ஆயினும், தம் பெருமை தாமுணராத் தன்மையராய்த் தமிழர் இன்று தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள்" என்று இனிய அடுக்குமொழியிலே பேசி, என்னைத்தட்டி எழுப்பித் தமிழ் அமுதை ஊட்டியவர்கள் சொல்லின் செல்வர்.

1931 முதல் 1933 வரை நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எஸ்ஸி. மாணவனாக இருந்த காலத்தில், ரா. பி. சே. அவர்கள் தமிழாசிரியராக அங்கு பணியாற்றினார்கள். அக்காலத்தில் அவர்களுடைய பேச்சுக்களை அடிக்கடி பொதுக்கூட்டங்களில் கேட்கும் வாய்ப்பும் அவர்களுடைய இனிய உரையாடல் மணிக்கணக்காக அவர்கள் இல்லத்தில் போயிருந்து கேட்கும் வாய்ப்பும் எனக்கும் கிட்டியது. "கம்பன் பாடல்களிலே மூவாயிரம் பாடல்கள் எனக்கு மனப்பாடம்" என்று அடிக்கடி சொல்லின் செல்வர் சொல்லுவார்கள். அவர்களுடைய உள்மனது கம்பல் கவிதையிலே ஊறி ஊறி, விம்மிப் பூரித்து நின்றது. ஆகவேதான் அவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் கம்பனுடைய கவிச்சொல் அடிக்கடி தெறித்து விழுந்து கொண்டிருக்கும்.

ஆங்கில மோகம் எங்களைப் பிடித்தாட்டிய காலம் அது. தமிழில் பேசுவது கண்ணியக் குறைவு என்று நாங்கள்

நினைத்து வந்த காலம். அக்காலத்தில் தமிழில் பேசி வந்த பேச்சாளர்களில் பலர் உப்புச் சப்பில்லாமல் பேசுவார்கள்; அவர்கள் பேச்சில் புதுமையோ சுவையோ கலகலப்போ இருக்காது. ஆனால் அந்தக் காலத்தில் ஆங்கிலத்திலே பேசி ஜமாய்க்கிற பலஜாம்பவான்கள் இருந்தார்கள். ஸர் சி. ஆர். ரெட்டி, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார், எஸ் சத்தியமூர்த்தி, ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் ஆங்கிலத்தில் பெருமுழக்கம் செய்து வந்த காலம். அப் பேர்ப்பட்ட காலத்தில் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் தமிழ் விரிவுரையாளராக அண்ணுமலை நகருக்கு வந்து சேர்ந்தார்கள். வந்த சில மாதங்களில் ஆங்கிலத்தின் கை தாழ்ந்து, தமிழின் கையோங்கி விட்டது. காரணம். பிள்ளையவர்களுடைய அபாரமான பேச்சுத் திறமைதான். "நெல்லையில் பிறந்து தில்லையில் வாழ்கின்றேன்" என்று பேச்சைத் தொடங்குவார்கள்——ஒரே கைதட்டும் கும்மாளமுமாக இருக்கும். தமிழ் மாணவர்கள் மாத்திரமல்ல, ஆந்திர மாணவர்கள், கேரள மாணவர்கள், கன்னடியர்கள்—எல்லோரும் கனம் சாஸ்திரியாரின் ஆங்கிலப் பேச்சைக் கூடக் கேட்காமல் பிள்ளையவர்களின் தமிழ்ப் பேச்சைக் கேட்கக் கூடி விடுவார்கள். அவர்கள் பேச்சிலே அவ்வளவு நளு குளுப்பும். மினுமினுப்பும். கண்ணியமும் ஆற்றலும் இனிமையும் ஒன்று கூடிக் கொஞ்சி விளையாடும். மாணவர் சங்கத்தில் தலைவனுக நான் இருந்தபோது, **"Mr. R. P. Sethu Pillai is the A. G. Gardiner of Tamil Literature"** (திரு ரா. பி. சேதுப் பிள்ளை தமிழ் இலக்கியத்துக்கு ஒரு ஏ. ஜி. கார்டினர்) என்று சொல்லி அவர்களை வரவேற்றிருக்கிறேன். தமிழ் ஆங்கிலத்தைக் காட்டிலும் ஒரு வகையிலும் குறைந்ததல்ல, தமிழைக் கற்பதால் பெருமையடைலாம் என்ற உணர்ச்சியை என் காலத்து இளைஞர்களுக்கு ஊட்டியவர்சொல்லின் செல்வர் அதோடு தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் சென்று கம்பனுடைய பெருமையையெல்லாம்

நினைத்து வந்த காலம். அக்காலத்தில் தமிழில் பேசி வந்த பேச்சாளர்களில் பலர் உப்புச் சப்பில்லாமல் பேசுவார்கள்; அவர்கள் பேச்சில் புதுமையோ சுவையோ கலகலப்போ இருக்காது. ஆனால் அந்தக் காலத்தில் ஆங்கிலத்திலே பேசி ஜமாய்க்கிற பலஜாம்பவான்கள் இருந்தார்கள். ஸர் சி. ஆர். ரெட்டி, ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரியார், எஸ் சத்தியமூர்த்தி, ஏ. ராமசாமி முதலியார் ஆகியோர் ஆங்கிலத்தில் பெருமுழக்கம் செய்து வந்த காலம். அப் பேர்ப்பட்ட காலத்தில் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் தமிழ் விரிவுரையாளராக அண்ணுமலை நகருக்கு வந்து சேர்ந்தார் கள். வந்த சில மாதங்களில் ஆங்கிலத்தின் கை தாழ்ந்து, தமிழின் கையோங்கி விட்டது. காரணம். பிள்ளையவர்களு டைய அபாரமான பேச்சுத் திறமைதான். "நெல்லையில் பிறந்து தில்லையில் வாழ்கின்றேன்" என்று பேச்சைத் தொடங்குவார்கள்——ஒரே கைதட்டும் கும்மாளமுமாக இருக்கும். தமிழ் மாணவர்கள் மாத்திரமல்ல, ஆந்திர மாணவர்கள், கேரள மாணவர்கள், கன்னடியர்கள்—எல் லோரும் களம் சாஸ்திரியாரின் ஆங்கிலப் பேச்சைக் கூடக் கேட்காமல் பிள்ளையவர்களின் தமிழ்ப் பேச்சைக் கேட்கக் கூடி விடுவார்கள். அவர்கள் பேச்சிலே அவ்வளவு நளு குளுப்பும். மினுமினுப்பும். கண்ணியமும் ஆற்றலும் இனிமை யும் ஒன்று கூடிக் கொஞ்சி விளையாடும். மாணவர் சங்கத் தில் தலைவனுக நான் இருந்தபோது, "Mr. R. P. Sethu Pillai is the A. G. Gardiner of Tamil Literature" (திரு ரா. பி. சேதுப் பிள்ளை தமிழ் இலக்கியத்துக்கு ஒரு ஏ. ஜி. கார்டினர்) என்று சொல்லி அவர்களை வரவேற்றிருக் கிறேன். தமிழ் ஆங்கிலத்தைக் காட்டிலும் ஒரு வகையிலும் குறைந்ததல்ல, தமிழைக் கற்பதால் பெருமையடையலாம் என்ற உணர்ச்சியை என் காலத்து இளைஞர்களுக்கு ஊட்டியவர்சொல்லின் செல்வர் அதோடு தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் சென்று கம்பனுடைய பெருமையையெல்லாம்

செவியையும் உள்ளத்தையும் ஈர்க்கும் போதைத் தமிழின் பறை சாற்றியவர் ரா. பி. சே.

ஆகவேதான், சொல்லில் செல்வரை எனது இலக்கியத் தலைவராக ஏற்றுக்கொண்டேன். இலக்கியத்தின்பாலுள்ள பற்று காரணமாக எங்களிருவருக்கும் இடையேயிருந்த உறவு வளர்ந்தது. பிள்ளையவர்களுக்குக் குழந்தை கிடையாது. அவர்களுடைய சொத்து முழுவதையும் இனிமேல் வரப்போகும் ராயல்டியையும் திருநெல்வேலியிலுள்ள ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை விரிவு படுத்துவதற்காக 24-6-60 இல் எழுதிய உயில் மூலம் ஒரு அறக்கட்டளை நிறுவினார்கள். இந்தப் புனிதமான அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக என்னை ஒரே நிறைவேற்றுநராக (Sole Executor) நியமித்தார்கள். அவர்களுடைய பவித்திரமாக நம்பிக்கைக்குப் பாத்திரமானேனே என்று நினைக்கும்போதெல்லாம் ரசிகமணி டி. கே. சி. யின் பேரன்பும் நினைவுக்கு வருகிறது.

இருவருமே உயர்ந்த குடும்பங்களில் தோன்றியவர்கள். பதினேழாவது நூற்றாண்டில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த வடமலையப்ப பிள்ளையனுடைய வழித் தோன்றல் சொல்லின் செல்வர். பிள்ளையனுக்கு முன்னால் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த தளவாய் அரிய நாயக முதலியாருடைய வழித்தோன்றல் டி. கே. சி.

ரா. பி. சே. ராஜவல்லிபுரத்தில் பிறந்து திருநெல்வேலியில் வழக்கறிஞராக இருந்த பின்னர் அரசியலில் இறங்கி, அதன் பின் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலை நகரிலும் அதன் பின் சென்னையிலும் சேவை செய்தவர்கள். டி. கே. சி. தென்காசிக்குப் பக்கமிருக்கும் களங்காட்டில் பிறந்த திருநெல்வேலியில் வழிக்கறிஞராக இருந்து பின்னர் அரசியலில் இறங்கி, சட்டசபை அங்கத்தினராகி, அதன் பின் இந்து மத பரிபாலன சங்கத்தின் ஆணையராகச் சென்னையில் பணி செய்தார்கள். சொல்லின் செல்வரைக் காட்டிலும் ரசிகமணி பத்துப் பதினைந்து வயது மூத்தவர்.

செவியையும் உள்ளத்தையும் ஈர்க்கும் போதைத் தமிழின் பறை சாற்றியவர் ரா. பி. சே.

ஆகவேதான், சொல்லின் செல்வரை எனது இலக்கியத் தலைவராக ஏற்றுக்கொண்டேன். இலக்கியத்தின்பாலுள்ள பற்று காரணமாக எங்களிருவருக்கும் இடையேயிருந்த உறவு வளர்ந்தது. பிள்ளையவர்களுக்குக் குழந்தை கிடையாது. அவர்களுடைய சொத்து முழுவதையும் இனிமேல் வரப்போகும் ராயல்டியையும் திருநெல்வேலியிலுள்ள ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை விரிவு படுத்துவதற்காக 24–6–60 இல் எழுதிய உயில் மூலம் ஒரு அறக்கட்டளை நிறுவினார்கள். இந்தப் புனிதமான அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக என்னை ஒரே நிறைவேற்றுநராக (Sole Executor) நியமித்தார்கள். அவர்களுடைய பவித்திரமாக நம்பிக்கைக்குப் பாத்திரமானேனே என்று நினைக்கும்போதெல்லாம் ரசிகமணி டி. கே. சி. யின் பேரன்பும் நினைவுக்கு வருகிறது.

இருவருமே உயர்ந்த குடும்பங்களில் தோன்றியவர்கள். பதினேழாவது நூற்றாண்டில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த வடமலையப்ப பிள்ளையனுடைய வழித்தோன்றல் சொல்லின் செல்வர். பிள்ளையனுக்கு முன்னால் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்த தளவாய் அரிய நாயக முதலியாருடைய வழித்தோன்றல் டி. கே. சி.

ரா. பி. சே. ராஜவல்லிபுரத்தில் பிறந்து திருநெல்வேலியில் வழக்கறிஞராக இருந்த பின்னர் அரசியலில் இறங்கி, அதன் பின் தமிழ்ப் பேராசிரியராக அண்ணாமலை நகரிலும் அதன் பின் சென்னையிலும் சேவை செய்தவர்கள். டி. கே. சி. தென்காசிக்குப் பக்கமிருக்கும் களங்காட்டில் பிறந்த திருநெல்வேலியில் வழிக்கறிஞராக இருந்து பின்னர் அரசியலில் இறங்கி, சட்டசபை அங்கத்தினராகி, அதன் பின் இந்து மத பரிபாலன சங்கத்தின் ஆணையராகச் சென்னையில் பணி செய்தார்கள். சொல்லின் செல்வரைக் காட்டிலும் ரசிகமணி பத்துப் பதினைந்து வயது மூத்தவர்.

கம்பனை ஒரு வைணவக் கவி என்று நினைத்து, அவருடைய பெருமைகளைகளையெல்லாம் ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்கள் சைவப் புலவர்கள். சிறப்பாக, திருநெல்வேலிச் சீமையிலுள்ள சைவர்கள் கம்பனை ஒதுக்கிப் புறக்கணிப்பதில் முனைந்து நின்றார்கள். அதன் விளைவாக கம்பனது ஈடற்ற புலமை சில நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்தது. 1924ல் கம்பனுக்கு யோகம் பிறந்தது. ரசிகமணி டி. கே. சி. யும். பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களும் இன்னும் சில சைவப் பெரியார்களும் சைவக்கோட்டையாகிய திருநெல்வேலியிலேயே கம்பன் கழகம் ஒன்றை நிறுவி, கம்பன் புகழையெடுத்து விளம்பத் தொடங்கினார்கள். சமயங் கடந்து நிற்கும் கம்பனுடைய காவியப் பெருமையைத் தமிழ் நாட்டு மக்கள், ஏன், பிறநாட்டு மக்களுங்கூட, உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால் 1924ல் திருநெல்வேலியில் நிறுவப்பட்ட கம்பன் கழகமும் டி. கே. சி., ரா. பி. சே. ஆகிய இவருடைய தூண்டுதலால் பின்னால் காரைக்குடி முதலிய பல இடங்களில் நடந்து வரும் கம்பன் விழாக்களுந்தான் அதற்குக் காரணம்.

டி. கே. சி. யின் பேச்சை முதல்முதலாக் 1924ல் நான் கேட்டேன். பாளையங்கோட்டை அர்ச்சவோரியார் கல்லூரியிலே அவர்கள் கம்பனைப் பற்றிப் பேசினார்கள். இல்லை. கம்பனைப் பற்றிப் பேசவில்லை. கம்பனையே பேச வைத்தார்கள். கம்பனுடைய இதயத்தைத் திறந்து காட்டினார்கள் உண்மையும், உண்மையோடொட்டிய உணர்வும் நிறைந்த பேச்சு அது. அது வரையிலும் என் உள்மனது எந்த லக்ஷியப் பேச்சைக் கேட்கவேண்டுமென்று பல காலமாக ஏங்கிக்கொண்டிருந்ததோ, அந்தப் பேச்சை டி. கே. சி. யிடமிருந்து அன்று கேட்டுவிட்ட திருப்தி அதற்கு ஏற்பட்டது அது வெறும் சொற்களாலான பேச்சல்ல; சொல் மூலம் ஒரு புதிய, மறக்க முடியாத அனுபவத்தையே டி. கே. சி. எனக்கு ஊட்டிவிட்டார்கள். கேவலம் சொல்லினால் வெளி

கம்பனை ஒரு வைணவக் கவி என்று நினைத்து, அவருடைய பெருமைகளைகளையெல்லாம் ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்கள் சைவப் புலவர்கள். சிறப்பாக, திருநெல்வேலிச் சீமையிலுள்ள சைவர்கள் கம்பனை ஒதுக்கிப் புறக்கணிப்பதில் முனைந்து நின்றார்கள். அதன் விளைவாக கம்பனது ஈடற்ற புலமை சில நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்தது. 1924ல் கம்பனுக்கு யோகம் பிறந்தது. ரசிகமணி டி. கே. சி. யும். பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களும் இன்னும் சில சைவப் பெரியார்களும் சைவக்கோட்டையாகிய திருநெல்வேலியிலேயே கம்பன் கழகம் ஒன்றை நிறுவி, கம்பன் புகழையெடுத்து விளம்பத் தொடங்கினார்கள். சமயங் கடந்து நிற்கும் கம்பனுடைய காவியப் பெருமையைத் தமிழ் நாட்டு மக்கள், ஏன், பிறநாட்டு மக்களுங்கூட, உணரத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால் 1924ல் திருநெல்வேலியில் நிறுவப்பட்ட கம்பன் கழகமும் டி. கே. சி., ரா. பி. சே. ஆகிய இவருடைய தூண்டுதலால் பின்னால் காரைக்குடி முதலிய பல இடங்களில் நடந்து வரும் கம்பன் விழாக்களுந்தான் அதற்குக் காரணம்.

டி. கே. சி. யின் பேச்சை முதல்முதலாக் 1924ல் நான் கேட்டேன். பாளையங்கோட்டை அர்ச்சவோரியார் கல்லூரியிலே அவர்கள் கம்பனைப் பற்றிப் பேசினார்கள். இல்லை. கம்பனைப் பற்றிப் பேசவில்லை. கம்பனையே பேச வைத்தார்கள். கம்பனுடைய இதயத்தைத் திறந்து காட்டினார்கள் உண்மையும், உண்மையோடொட்டிய உணர்வும் நிறைந்த பேச்சு அது. அது வரையிலும் என் உள்மனது எந்த லக்ஷ்யப் பேச்சைக் கேட்கவேண்டுமென்று பல காலமாக ஏங்கிக்கொண்டிருந்ததோ, அந்தப் பேச்சை டி. கே. சி. யிடமிருந்து அன்று கேட்டுவிட்ட திருப்தி அதற்கு ஏற்பட்டது அது வெறும் சொற்களாலான பேச்சல்ல; சொல் மூலம் ஒரு புதிய, மறக்க முடியாத அனுபவத்தையே டி. கே. சி. எனக்கு ஊட்டிவிட்டார்கள். கேவலம் சொல்லினால் வெளி

யிட முடியாததை வெளியிடும் அரிய சித்து டி. கே. சி. யிட மிருந்ததை என் இதயம் கண்டு கொண்டது. அவர் களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே கிடைத்தது. சட்டக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு நான் பாளையங்கோட்டை திரும்பி யதும், டி. கே. சி. இந்து அறநிலையக் கமிஷனராகச் சென்னையிலிருந்து விட்டு வண்ணாரப்பேட்டை திரும்பியதும் 1935லேதான். 1935 முதல் 1968வரை ஞாயிற்றுக்கிழமை தோறும் டி. கே. சி. வீட்டில் நடந்த வட்டத்தொட்டிக் கூட்டத்திற்குச் சென்று டி. கே. சி. யின் அபூர்வ மேதையை அனுபவிக்கத் தொடங்கினேன். அவர்களுடைய கலையுணர்வும் என் உணர்ச்சித் தத்துவத்தில் போய்க் கலந்து, என்னை வேறு வஸ்துவாக்கி, எனக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டியது போன்ற உணர்வைக் கொடுத்தது. 1935 முதல் அவர்கள் மறைந்த தெய்தியான 16-2-1954 வரை அன்பும் ஆனந்தமும் கலந்த டி. கே. சி. யென்ற பேருவியிலே குளித்துக் குளித்து என் உள்ளமும் ஆன்மா வும் நிர்மலமாயின. தாம் விழித்திருக்கும் நேரமெல்லாம் சமயத்தைப் பற்றியும், கலையைப் பற்றியும், கவிதையைப் பற்றியும் சிந்தனை செய்தும் பேசியும் வந்த டி. கே. சி. யைப் போன்ற வேறொருவரை கண்டதில்லை. கம்பனைப் போன்ற மகாகவி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறப்பான் என்று ரஸிகமணி சொல்லுவார்கள். அந்தக்கூற்று முற்றிலும் உண்மை. ஆனால் டி. கே. சி. யைப் போன்ற உள்ளுணர் வும், மாசற்ற காட்சியும் பெற்ற ரசிகர் 2000 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறக்க முடியும். ரஸிகமணி மறைந்து 23 ஆண்டுகளாகி விட்டன; அதாவது, ஒரு தலைமுறை கழிந்து விட்டது. சமகாலத்திலிருந்த விருப்பு வெறுப்புகளையெல்லாம் மறந்து விட்டு, உணர்ச்சி வசப்படாமல் டி. கே. சி. யைத் தொலை நோக்கி மூலம் நோக்கி நிதானத்தோடு தீர்ப்புச் சொல்லுவதற்கு நமக்குத் தகுதியேற்பட்டுவிட்டது. தூரத்தி லிருந்து அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் மானிடச் சட்டை தாங்கி வந்த ஒரு அவதார புருஷர் என்று தெளி

யிட முடியாததை வெளியிடும் அரிய சித்து டி. கே. சி. யிட மிருந்ததை என் இதயம் கண்டு கொண்டது. அவர் களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே கிடைத்தது. சட்டக் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு நான் பாளையங்கோட்டை திரும்பி யதும், டி. கே. சி. இந்து அறநிலையக் கமிஷனராகச் சென்னையிலிருந்து விட்டு வண்ணாரப்பேட்டை திரும்பியதும் 1935லேதான். 1935 முதல் 1948வரை ஞாயிற்றுக்கிழமை தோறும் டி. கே. சி. வீட்டில் நடந்த வட்டத்தொட்டிக் கூட்டத்திற்குச் சென்று டி. கே. சி. யின் அபூர்வ மேதையை அனுபவிக்கத் தொடங்கினேன். அவர்களுடைய கலையுணர்வும் என் உணர்ச்சித் தத்துவத்தில் போய்க் கலந்து, என்னை வேறு வஸ்துவாக்கி, எனக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டியது போன்ற உணர்வைக் கொடுத்தது. 1935 முதல் அவர்கள் மறைந்த தெய்தியான 16-2-1954 வரை அன்பும் ஆனந்தமும் கலந்த டி. கே. சி. யென்ற பேருவியிலே குளித்துக் குளித்து என் உள்ளமும் ஆன்மா வும் நிர்மலமாயின. தாம் விழித்திருக்கும் நேரமெல்லாா சமயத்தைப் பற்றியும், கலையைப் பற்றியும், கவிதையைப் பற்றியும் சிந்தனை செய்தும் பேசியும் வந்த டி. கே. சி. யைப் போன்று வேறொருவரை கண்டதில்லை. கம்பனைப் போன்ற மகாகவி ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறப்பான் என்று ரஸிகமணி சொல்லுவார்கள். அந்தக்கூற்று முற்றிலும் உண்மை. ஆனால் டி. கே. சி. யைப் போன்ற உள்ளுணர் வும், மாசற்ற காட்சியும் பெற்ற ரசிகர் 2000 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறக்க முடியும். ரஸிகமணி மறைந்து 23 ஆண்டுகளாகி விட்டன; அதாவது, ஒரு தலைமுறை கழிந்து விட்டது. சமகாலத்திலிருந்த விருப்பு வெறுப்புகளையெல்லாம் மறந்து விட்டு, உணர்ச்சி வசப்படாமல் டி. கே. சி. யைத் தொலை நோக்கி மூலம் நோக்கி நிதானத்தோடு தீர்ப்புச் சொல்லுவதற்கு நமக்குத் தகுதியேற்பட்டுவிட்டது. தூரத்தி லிருந்து அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் மானிடச் சட்டை தாங்கி வந்த ஒரு அவதார புருஷர் என்று தெளி

வாகத் தெரிகிறது. நம்மையெல்லாம் காட்டிலும் அகண்டமான அறிவும் நுண்ணிய உணர்வும் படைத்த ராஜாஜி, டி. கே. சி. மறைந்த பதினன்கு ஆண்டுகளுக்குப் பின்னல் 10-9-67, கல்கி'யில் ஒரு கட்டுரை எழுதினர்கள். கிருஷ்ணன் அவதாரத்தை டி. கே. சி. அவதாரத்தோடு மிகுந்த துணிச்சலோடு ஒப்பு நோக்கி இருவரையும் பாராட்டி எழுதிய கட்டுரை அது. கட்டுரை தொடங்குகிற தோரணையைப் பாருங்கள் :— "சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடையின் முன்னேற்றத்தின் ரகசியம். தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்மை அனைத்தும் நன்ருகக் கண்ட பூரண ரசிக மணி டி. கே. சி. பிறந்த நாளும். ஹரியின் பூரணவதார கண்ணனின் ஜன்ம நக்ஷத்திரமும், டி. கே. சி. யின் ஜன்ம நக்ஷத்திரமும், ஒன்ருய்ச் சேர்ந்த திருவிழாவை மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடினேம். இந்தத் திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்." இந்தக் கட்டுரையில், ராமன் மகாவிஷ்ணுவின் நான்கில் ஒரு அம்சம், ஆனல் கிருஷ்ணபகவான் மகாவிஷ்ணுவின் பூரண அவதாரம் என்னும் உண்மையைப் பல காரணங்கள் தந்து ராஜாஜி விளக்கிருர்கள். சீதையை இழந்ததும் ராமன் துயரமடைந்து பிரலாபித்ததைக் குறிப்பிட்டுவிட்டு கண்ணனுக்குத் துயரம் என்பதே கிடையாது, தான் சர்வேஸ்வரன் என்று உணர்ந்தவன் கண்ணன் என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, "மூடர்கள் கிளப்பிய அபவாதத்துக்குப் பயந்து ராமச்சந்திரன் சீதாதேவியைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான். கண்ணன் இப்படிச் செய்வான? ஒரு நாளும் செய்யமாட்டான்... இது ராமச்சந்திரனுடைய பெருமையைக் குறைக்கிறது" என்று ராஜாஜி சொல்லுகிருர்கள். இவ்வாருக, கண்ணனை குறைவற்ற தெய்வம், உலகத்

வாகத் தெரிகிறது. நம்மையெல்லாம் காட்டிலும் அகண்டமான அறிவும் நுண்ணிய உணர்வும் படைத்த ராஜாஜி, டி. கே. சி. மறைந்த பதினன்கு ஆண்டுகளுக்குப் பின்னல் 10–9–67, கல்கி'யில் ஒரு கட்டுரை எழுதினர்கள். கிருஷ்ணன் அவதாரத்தை டி. கே. சி. அவதாரத்தோடு மிகுந்த துணிச்சலோடு ஒப்பு நோக்கி இருவரையும் பாராட்டி எழுதிய கட்டுரை அது. கட்டுரை தொடங்குகிற தோரணையைப் பாருங்கள் :— "சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடையின் முன்னேற்றத்தின் ரகசியம். தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம். அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்மை அனைத்தும் நன்ருகக் கண்ட பூரண ரசிகமணி டி. கே. சி. பிறந்த நாளும். ஹரியின் பூரணவதார கண்ணனின் ஜன்ம நக்ஷத்திரமும், டி. கே. சி. யின் ஜன்ம நக்ஷத்திரமும், ஒன்ருய்ச் சேர்ந்த திருவிழாவை மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடினேம். இந்தத் திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்." இந்தக் கட்டுரையில், ராமன் மகாவிஷ்ணுவின் நான்கில் ஒரு அம்சம், ஆனல் கிருஷ்ணபகவான் மகாவிஷ்ணுவின் பூரண அவதாரம் என்னும் உண்மையைப் பல காரணங்கள் தந்து ராஜாஜி விளக்கினர்கள். சீதையை இழந்ததும் ராமன் துயரமடைந்து பிரலாபித்ததைக் குறிப்பிட்டுவிட்டு கண்ணனுக்குத் துயரம் என்பதே கிடையாது, தான் சர்வேஸ்வரன் என்று உணர்ந்தவன் கண்ணன் என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, "மூடர்கள் கிளப்பிய அபவாதத்துக்குப் பயந்து ராமச்சந்திரன் சீதாதேவியைக் காட்டுக்கு அனுப்பிவிட்டான். கண்ணன் இப்படிச் செய்வான? ஒரு நாளும் செய்யமாட்டான்... இது ராமச்சந்திரனுடைய பெருமையைக் குறைக்கிறது" என்று ராஜாஜி சொல்லுகிருர்கள். இவ்வாருக, கண்ணனை குறைவற்ற தெய்வம், உலகத்

துக்கு வழிகாட்டியவன் அவனே என்று நிலைநாட்டிவிட்டு, அதே மூச்சிலே ராஜாஜி டி. கே. சி. யைப் பற்றிச் சொல்லுவதாவது:— "கண்ண பகவான் ரோகிணி நக்ஷத்திரத்தில் அவதரித்தான். அதே நக்ஷத்திரத்தில் மற்றொருவர் அவதரித்தார், தமிழ்க் கவிக் காதலர் என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள்... ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி. கே. சி. பிறந்த நாள், என்றும் தமிழர் கொண்டாடும் நாள்" என்று கட்டுரையை ராஜாஜி முடிக்கிறார்கள். எளிதில் யாரையும் புகழாத வாய் ராஜாஜியின் வாய்; நிதானத்தை ஒருக்காலும் இழக்காத இதயம் ராஜாஜியின் இதயம்; இந்தியத் தலைவர்கள் எல்லோரும் பீஷ்மருக்குப் பின்னர் அறிவிலும் விவேகத்திலும் உறுதியிலும் சிறந்து நிற்கும் இந்தியர் ராஜாஜியே என்று பாராட்டுகிறார்கள். இதற்கெல்லாம் மேலாக, வைணவ பக்தி நிறைந்தவர் ராஜாஜி. அப்பேர்ப்பட்டவர், "பூரண டி.கே.சி.யும் பூரண ஹரியும்" என்ற தலைப்பின் மூலம் இரு அவதாரங்களுக்கும் சம அந்தஸ்து கொடுத்து, இருவரையும் ஒரே மூச்சிலே பாராட்டியிருக்கிறார் என்றால், டி.கே.சி.யைக் குறை கூறிக் கொண்டிருந்த தமிழறிஞர்கள் இனிமேலாவது டி. கே. சி. யின் பூரணத்துவத்தையறிந்து டி. கே. சி. காட்டிய இலக்கியப் பாதையில் நடந்து பார்ப்பார்களாக!

கம்பனையும் வள்ளுவரையும் எப்படி டி. கே. சி. அனுபவித்தார்கள். என்னைப் போன்ற மற்றவர்களையும் எப்படி அனுபவிக்கச் செய்தார்கள் என்பதை ரத்தின வியாபாரிகள் ரத்தினத்தை எப்படி அனுபவிப்பார்கள் என்று டி. கே. சி. வருணித்த தமிழிலேயே சொல்லலாம்:— "இருபது முப்பது வருஷத்துக்கு முன் காயல் பட்டணத்து காக்காய்கள் (சாய்புகள்) ரத்ன வியாபாரம் செய்தார்கள். முக்கியமாக சிவப்பு வியாபாரந்தான்; வைரம் அந்தக் காலத்தில் அவ்வளவாக மதிப்புக்கு வரவில்லை. மேலே

துக்கு வழிகாட்டியவன் அவனே என்று நிலைநாட்டிவிட்டு, அதே மூச்சிலே ராஜாஜி டி. கே. சி. யைப் பற்றிச் சொல்லுவதாவது:— "கண்ண பகவான் ரோகிணி நக்ஷத்திரத்தில் அவதரித்தான். அதே நக்ஷத்திரத்தில் மற்றொருவர் அவதரித்தார், தமிழ்க் கவிக் காதலர் என்று பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள்... ஸ்ரீஜயந்தி என்றால் கண்ணன் பிறந்த நாள். டி. கே. சி. பிறந்த நாள், என்றும் தமிழர் கொண்டாடும் நாள்" என்று கட்டுரையை ராஜாஜி முடிக்கிறார்கள். எளிதில் யாரையும் புகழாத வாய் ராஜாஜியின் வாய்; நிதானத்தை ஒருக்காலும் இழக்காத இதயம் ராஜாஜியின் இதயம்; இந்தியத் தலைவர்கள் எல்லோரும் பீஷ்மருக்குப் பின்னர் அறிவிலும் விவேகத்திலும் உறுதியிலும் சிறந்து நிற்கும் இந்தியர் ராஜாஜியே என்று பாராட்டுகிறார்கள். இதற்கெல்லாம் மேலாக, வைணவ பக்தி நிறைந்தவர் ராஜாஜி. அப்பேர்ப்பட்டவர், "பூரண டி.கே.சி.யும் பூரண ஹரியும்" என்ற தலைப்பின் மூலம் இரு அவதாரங்களுக்கும் சம அந்தஸ்து கொடுத்து, இருவரையும் ஒரே மூச்சிலே பாராட்டியிருக்கிறார் என்றால், டி.கே.சி.யைக் குறை கூறிக் கொண்டிருந்த தமிழறிஞர்கள் இனிமேலாவது டி. கே. சி. யின் பூரணத்துவத்தையறிந்து டி. கே. சி. காட்டிய இலக்கியப் பாதையில் நடந்து பார்ப்பார்களாக!

கம்பனையும் வள்ளுவரையும் எப்படி டி. கே. சி. அனுபவித்தார்கள். என்னைப் போன்ற மற்றவர்களையும் எப்படி அனுபவிக்கச் செய்தார்கள் என்பதை ரத்தின வியாபாரிகள் ரத்தினத்தை எப்படி அனுபவிப்பாகள் என்று டி. கே. சி. வருணித்த தமிழிலேயே சொல்லலாம்:— "இருபது முப்பது வருஷத்துக்கு முன் காயல் பட்டணத்து காக்காய்கள் (சாய்புகள்) ரத்ன வியாபாரம் செய்தார்கள். முக்கியமாக சிவப்பு வியாபாரந்தான்; வைரம் அந்தக் காலத்தில் அவ்வளவாக மதிப்புக்கு வரவில்லை. மேலே

சொன்ன காக்காய்கள் மாணிக்கங்களைப் பரிசோதிப்பார்கள், விலையிடுவார்கள். எங்கள் வீட்டில் அவர்களை அடிக்கடி பார்க்கலாம். ஒரு நல்ல சிவப்பை அவர்கள் கண்டு விட்டார்களானால், அவர்களுக்கு உண்டாகிற ஆவேசம் அப்படி இப்படியல்ல, இடது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். பிறகு வலது கண்ணிட்டுப் பார்ப்பார்கள் திண்ணைக்கு ஓடிப் போய்ப் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டு போய்ப் பார்ப்பார்கள். எப்படியெல்லாமோ குனிந்தும், நிமிர்ந்தும், சாய்ந்தும் பார்ப்பார்கள். என்ன பூரிப்பு! என்ன பழுப்பு! இதல்லவா மாணிக்கம். தின்று விடுவோமா அல்லது கண்ணுக்குள்ளேயே திணித்துவிடுவோமா என்றெல்லாம் சொல்லுவார்கள். டி. கே. சி. யும் கம்பன் பாடல் ஒவ்வொன்றையும், திருக்குறள் ஒவ்வொன்றையும், ஏன், நல்ல தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றையுமே இப்படியெல்லாம் அனுபவிப்பார்கள், குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்ததும், பற்பல கோணங்களிலிருந்து பார்த்தும் அனுபவிப்பார்கள், நன்மையும் அனுபவிக்கச் செய்வார்கள், "தமிழ்க்கவி மக்களைக் கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல. ஆனால் மக்களை ஆனந்தமயத்தில் ஊற வைக்க வந்த தேவாமிர்தம்" என்று டி. கே. சி. அடிக்கடி சொல்லுவார்கள். ஆணவத்தை உதறித் தள்ளி விட்டு டி. கே. சி.யோடு கவிதையில் கரையத் தெரிந்த ஒரு சிலருக்கு அவர்களுடைய கூற்று முழுக்க முழுக்க உண்மை என்று தெரியும்.

மற்றப் புலவர்கள் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் வேகத்தில் கவிதையையும் படித்துத் தீர்த்து விடுவார்கள். ஆனால், டி.கே.சி.யோ பாடல்களில் தம் உள்ளத்தை மணிக்கணக்கில் நிலைநிறுத்தி அவற்றை மிக்க பொறுப்போடும் நுணுக்கத்தோடும் ரத்தினப் பரீக்ஷை செய்து, எது கவிதை, எது கவிதையில்லை, எதில் கம்பனுடைய முத்திரை இருக்கிறது. எதில் அந்த முத்திரை இல்லை என்பதைத் தெளியும் உள்ளுணர்வு பெற்றிருந்தார்கள். அந்த உள்ளுணர்வை நாள்தோறும் பெருக்கி வந்தார்கள், ஏறக்-

சொன்ன காக்காய்கள் மாணிக்கங்களைப் பரிசோதிப்பார்கள், விலையிடுவார்கள். எங்கள் வீட்டில் அவர்களை அடிக்கடி பார்க்கலாம். ஒரு நல்ல சிவப்பை அவர்கள் கண்டு விட்டார்களானுல், அவர்களுக்கு உண்டாகிற ஆவேசம் அப்படி இப்படியல்ல, இடது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். பிறகு வலது கண்ணிட்டுப் பார்ப்பார்கள் திண்ணைக்கு ஓடிப் போய்ப் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டு போய்ப் பார்ப்பார்கள். எப்படியெல்லாமோ குனிந்தும், நிமிர்ந்தும், சாய்ந்தும் பார்ப்பார்கள். என்ன பூரிப்பு! என்ன பழுப்பு! இதல்லவா மாணிக்கம். தின்று விடுவோமா அல்லது கண்ணுக்குள்ளேயே திணித்துவிடுவோமா என்றெல்லாம் சொல்லுவார்கள். டி. கே. சி. யும் கம்பன் பாடல் ஒவ்வொன்றையும், திருக்குறள் ஒவ்வொன்றையும், ஏன், நல்ல தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றையுமே இப்படியெல்லாம் அனுபவிப்பார்கஇ, குனிந்தும் நிமிர்ந்தும் சாய்ந்ததும், பற்பல கோணங்களிலிருந்து பார்த்தும் அனுபவிப்பார்கள், நன்மையும் அனுபவிக்கச் செய்வார்கள், "தமிழ்க்கவி மக்களைக் கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல. ஆனல் மக்களை ஆனந்தமயத்தில் ஊற வைக்க வந்த தேவாமிர்தம்" என்று டி. கே. சி. அடிக்கடி சொல்லுவார்கள். ஆணவத்தை உதறித் தள்ளி விட்டு டி. கே. சி.யோடு கவிதையில் கரையத் தெரிந்த ஒரு சிலருக்கு அவர்களுடைய கூற்று முழுக்க முழுக்க உண்மை என்று தெரியும்.

மற்றப் புலவர்கள் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் வேகத்தில் கவிதையையும் படித்துத் தீர்த்து விடுவார்கள். ஆனல், டி.கே.சி.யோ பாடல்களில் தம் உள்ளத்தை மணிக்கணக்கில் நிலைநிறுத்தி அவற்றை மிக்க பொறுப்போடும் நுணுக்கத்தோடும் ரத்தினப் பரீக்ஷை செய்து, எது கவிதை, எது கவிதையில்லை, எதில் கம்பனுடைய முத்திரை இருக்கிறது. எதில் அந்த முத்திரை இல்லை என்பதைத் தெளியும் உள்ளுணர்வு பெற்றிருந்தார்கள். அந்த உள்ளுணர்வை நாள்தோறும் பெருக்கி வந்தார்கள், ஏறக்-

குறைய 40 ஆண்டுகளாகப் பெருக்கி வந்தார்கள். ஆகவே தான், கம்பராமாயணத்திலுள்ள போலிப்பாட்டுகளை எடுத்த எடுப்பிலேயே இனங்கண்டுகொள்ள அவர்களால் முடிந்தது. இந்த அரிய உள்ளுணர்வை முயன்று பெருதவர்கள், கவிதையைப் பொறுத்த மட்டில், விழி கண் குருடர்கள் தாம்; அவர்கள் கவிதையைப் பற்றிக் கூறும் கருத்துக் களெல்லாம் மயிலைக் கையினால் தடவிப் பார்த்துவிட்டு, "அடடா! எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்று குருடன் சொல்லும் கணக்குத்தான். கூர்மையோடு பார்க்கும் கண் களும். மாசற்ற உள்ளுணர்வும், நீண்ட காலக் கவிப் பயிற்சி யும் கொண்ட டி. கே. சிக்கல்லவா கவிமயிலைக் கண்டு அனுபவித்து அதன் வர்ணஜாலங்களைப் பற்றித் தீர்ப்புச் சொல்லும் தகுதியிருக்க முடியும்!

ராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப் போகிறதை எதிர் நோக்கி ஒரே ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள் மக்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதத்தில் பட்டாபிஷேகத்தை எண்ணி அனுபவிக்கிறார்கள். வயது முதிர்ந்த மாதர்கள், கோசலையின் மனநிலையிலிருந்து அனுபவித்தார்கள். வேறு மகளிர் எல்லாம், அதாவது, சீதையையொத்த வயதுள்ள பெண்களெல்லாம், சீதையின் மனத்தையொட்டி அவளுடைய ஆனந்தத்தைப் பகிர்ந்து கொண்டார்கள் சீதையோ லக்ஷ்மி தேவியையே ஒத்திருந்தாள். பரலோக சாதனத்தில் மனதை ஈடுபடுத்திய முதியவர்கள் தசரதனை ஒத்திருந் தார்கள். இம்மனநிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லு கிறது ஓரரிய கம்பன் பாடல். ஆனால், அந்தப்பாட்டிலே ஒரு பிழை விழுந்து விட்டது. மற்றவர்கள் கண்ணுக்குப் படாத அப்பிழை டி.கே.சி. கண்ணுக்குப் பட்டுவிட்டது. "மாதர்கள் வயதின் மிக்கார், கோசலை மனத்தை ஒத்தார்" என்பதற்குப் பதில், "மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்" என்றிருந்தது பாடம். கற்பினால் மிக்க பெண்கள் எல்லாம் கோசலையையொத்தார்கள் என்று

குறைய 40 ஆண்டுகளாகப் பெருக்கி வந்தார்கள். ஆகவே தான், கம்பராமாயணத்திலுள்ள போலிப்பாட்டுகளை எடுத்த எடுப்பிலேயே இனங்கண்டுகொள்ள அவர்களால் முடிந்தது. இந்த அரிய உள்ளுணர்வை முயன்று பெருதவர்கள், கவிதையைப் பொறுத்த மட்டில், விழி கண் குருடர்கள் தாம்; அவர்கள் கவிதையைப் பற்றிக் கூறும் கருத்துக் களெல்லாம் மயிலைக் கையினால் தடவிப் பார்த்துவிட்டு, "அடடா! எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்று குருடன் சொல்லும் கணக்குத்தான். கூர்மையோடு பார்க்கும் கண் களும். மாசற்ற உள்ளுணர்வும், நீண்ட காலக் கவிப் பயிற்சி யும் கொண்ட டி. கே. சிக்கல்லவா கவிமயிலைக் கண்டு அனுபவித்து அதன் வர்ணஜாலங்களைப் பற்றித் தீர்ப்புச் சொல்லும் தகுதியிருக்க முடியும்!

ராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப் போகிறதை எதிர் நோக்கி ஒரே ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிருர்கள் மக்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதத்தில் பட்டாபிஷேகத்தை எண்ணி அனுபவிக்கிருர்கள். வயது முதிர்ந்த மாதர்கள், கோசலையின் மனநிலையிலிருந்து அனுபவித்தார்கள். வேறு மகளிர் எல்லாம், அதாவது, சீதையையொத்த வயதுள்ள பெண்களெல்லாம், சீதையின் மனத்தையொட்டி அவளுடைய ஆனந்தத்தைப் பகிர்ந்துகொண்டார்கள் சீதையோ லக்ஷ்மி தேவியையே ஒத்திருந்தாள். பரலோக சாதனத்தில் மனதை ஈடுபடுத்திய முதியவர்கள் தசரதனை ஒத்திருந் தார்கள். இம்மனநிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லு கிறது ஓரரிய கம்பன் பாடல். ஆனால், அந்தப்பாட்டிலே ஒரு பிழை விழுந்து விட்டது. மற்றவர்கள் கண்ணுக்குப் படாத அப்பிழை டி.கே.சி. கண்ணுக்குப் பட்டுவிட்டது. "மாதர்கள் வயதின் மிக்கார், கோசலை மனத்தை ஒத்தார்" என்பதற்குப் பதில், "மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்" என்றிருந்தது பாடம். கற்பினுல் மிக்க பெண்கள் எல்லாம் கோசலையையொத்தார்கள் என்று

சொல்லிவிட்டு, மற்றுள மாதரெல்லாம் சீதையையொத்தார் என்று சொன்னால், கற்பில்லாத மாதரெல்லாம் சீதையை யொத்தார் என்ற அபத்தமான பொருளல்லவா ஏற்பட்டு விடும்! கம்பன் இதயத்தையுணர்ந்த டி. கே. சி. கம்பன் இப்படிப் பாடியிருக்க முடியாது என்று கண்டு, 'கற்பின் மிக்கார்' என்ற சொற்றொடரை "வயதின் மிக்கார்" என்று திருத்தினார்கள். கம்பனைக் கொளுத்த வேண்டும் என்று சொன்னவர்கள்கூட, டி.கே.சி. கம்பனைத் திருத்தியது தவறு என்று கண்டித்தார்கள். இவ்வாறு டி.கே.சி. திருத்திய சில ஆண்டுகளுக்குப் பின் பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரி யார் என்ற தமிழ்ப் புலவர் வைத்திருந்த பழைய கம்ப ராமாயண ஓலைச்சுவடியில், "மாதர்கள் ஆண்டின் மிக்கார்" என்ற பாடபேதம் இருப்பது தெரியவந்தது. இதைப் பார்த்த பிறகு பல தமிழ்ப் புலவர்கள் டி.கே.சி. செய்த திருத்தம் எவ்வளவு பொருத்தமானது என்று கண்டு பாராட்டினார்கள். டி.கே.சி.யும் 'வயதின் மிக்கார்' என்பதை மாற்றி "ஆண்டின் மிக்கார்" என்று ஓலைச்சுவடிக்கிணங்கத் தம் பதிப்பில் பாடலைத் திருத்திக்கொண்டார்கள். திருத்திய பாடல் கீழ்வருமாறு:—

மாதர்கள் ஆண்டின் மிக்கார்
  கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்
  வேறுள மகளிர் எல்லாம்

சீதையை ஒத்தார்; அன்னாள்
  திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதன மர்ந்தர் எல்லாம்
  தயரதன் தன்னை ஒத்தார்

இப்படியாகப் பல பாடல்களைத் திருத்தினார்கள் டி. கே. சி. இவ்வாறு திருத்தியதற்குக் காரணம் அகம்பாவம் அல்ல;

சொல்லிவிட்டு, மற்றுள மாதரெல்லாம் சீதையையொத்தார்
என்று சொன்னால், கற்பில்லாத மாதரெல்லாம் சீதையை
யொத்தார் என்ற அபத்தமான பொருளல்லவா ஏற்பட்டு
விடும்! கம்பன் இதயத்தையுணர்ந்த டி. கே. சி. கம்பன்
இப்படிப் பாடியிருக்க முடியாது என்று கண்டு, 'கற்பின்
மிக்கார்' என்ற சொற்றொடரை "வயதின் மிக்கார்" என்று
திருத்தினார்கள். கம்பனைக் கொளுத்த வேண்டும் என்று
சொன்னவர்கள்கூட, டி.கே.சி. கம்பனைத் திருத்தியது தவறு
என்று கண்டித்தார்கள். இவ்வாறு டி.கே.சி. திருத்திய சில
ஆண்டுகளுக்குப் பின் பால சரஸ்வதி கிருஷ்ணமாச்சாரி
யார் என்ற தமிழ்ப் புலயர் வைத்திருந்த பழைய கம்ப
ராமாயண ஓலைச்சுவடியில், "மாதர்கள் ஆண்டின் மிக்கார்"
என்ற பாடபேதம் இருப்பது தெரியவந்தது. இதைப்
பார்த்த பிறகு பல தமிழ்ப் புலவர்கள் டி.கே.சி. செய்த
திருத்தம் எவ்வளவு பொருத்தமானது என்று கண்டு
பாராட்டினார்கள். டி.கே.சி.யும் 'வயதின் மிக்கார்' என்பதை
மாற்றி "ஆண்டின் மிக்கார்" என்று ஓலைச்சுவடிக்கிணங்கத்
தம் பதிப்பில் பாடலைத் திருத்திக்கொண்டார்கள். திருத்திய
பாடல் கீழ்வருமாறு:—

மாதர்கள் ஆண்டின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்
வேறுள மகளிர் எல்லாம்

சீதையை ஒத்தார்; அன்னாள்
திருவினை ஒத்தாள்; அவ்வூர்
சாதன மர்ந்தர் எல்லாம்
தயரதன் தன்னை ஒத்தார்

இப்படியாகப் பல பாடல்களைத் திருத்தினார்கள் டி. கே. சி.
இவ்வாறு திருத்தியதற்குக் காரணம் அகம்பாவம் அல்ல;

ஈடுபாடுதான். தாம் அடைந்த இன்பத்தை மற்றவர்களுகம் அடையட்டுமே எனற பரிவு காரணமாக இப்படியெல்லாம் செய்தார்கள். ஆனால் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் உட்பட எல்லாப் புலவர்களும் டி. கே. சி. யைக் கண்டனம் செய்தார்கள். வேடிக்கை யென்ன வென்றால். கம்பராமாய ணத்தைப் பொசுக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தவர் களும், "டி. கே. சி. எப்படி கம்பனைத் திருத்தலாம்?" என்று சீறியெழுந்தார்ககள். "கம்பரை எரித்துப் பெரிய தீ. வளர்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர் களுக்கு எரிதுரும்பு குறைந்து விட்டதே என்று வருந்து வதில் பொருள் இருக்கத்தானே செய்கிறது" என்று சொல்லி டி. கே. சி. கம்பன் எதிரிகளுடைய கோபத்துக்கு மேலும் எரியூட்டினார்கள். கம்பன் பக்தர்களுடைய கோபத் துக்கு டி. கே. சி. சொன்ன சமாதானம் இன்னும் சுவை யானது;—"நல்ல மலையாளத்து அப்பளம்' வாயிலே போட வேண்டியது—பல்லைத் தொட வேண்டியது, அப்படியே பொரு பொரு என்று தூளாய்ப் போய் விடும். 50 அப்பளத்தை தீர்த்துவிடலாம் என்று படும். நம்மிடம் வஞ்சம் இல்லை. போடுவார் இல்லை என்பதுதான். போட்டால் மாயமாய்ப் போய்விடும்- அப்பேர்ப்பட்ட அப்பளத்தில் இரண்டொரு மணலைத் தூவி விட வேண்டும். அப்பளத்தைக் கடிக்கும் போது இதோ இருக்கிறேன் நான் என்று கல் சொல்லிவிடும். பல்லின் பரிட்டைச் சொல்ல வேண்டுமா; வேண்டாம், அப்பளக் கடையில் வறுத்து வைத்த அப்பளம் அப்படியே இருந்துவிடும். மிச்சந்தான். கம்பன் பாடல்களும் அப்பளம் போலத்தான், பிழைபட்ட பாடல் இருந்தால், பாடல் மிச்சம் தானே. 'கல்லை எப்படி எடுக்கலாம் நீ என்று கோபிக்கிறார்கள்" கவிச் சக்கரவர்த்திக்கு நேர்ந்த விபத்துகளை நினைந்து ரஸிகச் சக்கரவர்த்தி இப்படியெல்லாம் ஏங்கினார்கள். அவ்வாறு ஏங்கி ஏங்கித் தன்னந்தனியாக இருந்த காலத் திலே, டி. கே. சி. யோடு உளங்கலந்து அவர்களுக்கு இலக்கிய நட்பை நல்கியவர்கள் வெகு சிலரே ராஜாஜி

டுபாடுதான். தாம் அடைந்த இன்பத்தை மற்றவர்களுகம் அடையட்டுமே எனற பரிவு காரணமாக இப்படியெல்லாம் செய்தார்கள். ஆனால் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் உட்பட எல்லாப் புலவர்களும் டி. கே. சி. யைக் கண்டனம் செய்தார்கள். வேடிக்கை யென்ன வென்றால். கம்பராமாய ணத்தைப் பொசுக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தவர் களும், "டி. கே. சி. எப்படி கம்பனைத் திருத்தலாம்?" என்று சீறியெழுந்தார்ககள். "கம்பரை எரித்துப் பெரிய தீ. வளர்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறவர் களுச்கு எரிதுரும்பு குறைந்து விட்டதே என்று வருந்து வதில் பொருள் இருக்கத்தானே செய்கிறது" என்று சொல்லி டி. கே. சி. கம்பன் எதிரிகளுடைய கோபத்துக்கு மேலும் எரியூட்டினார்கள். கம்பன் பக்தர்களுடைய கோபத் துக்கு டி. கே. சி. சொன்ன சமாதானம் இன்னும் சுவை யானது;—"நல்ல மலையாளத்து அப்பளம்' வாயிலே போட வேண்டியது—பல்லைத் தொட வேண்டியது, அப்படியே பொரு பொரு என்று தூளாய்ப் போய் விடும். 50 அப்பளத்தை தீர்த்துவிடலாம் என்று படும். நம்மிடம் வஞ்சம் இல்லை. போடுவார் இல்லை என்பதுதான். போட்டால் மாயமாய்ப் போய்விடும்- அப்பேர்ப்பட்ட அப்பளத்தில் இரண்டொரு மணலைத் தூவி விட வேண்டும். அப்பளத்தைக் கடிக்கும் போது இதோ இருக்கிறேன் நான் என்று கல் சொல்லிவிடும். பல்லின் பரிட்டைச் சொல்ல வேண்டுமா; வேண்டாம், அப்பளக் கடையில் வறுத்து வைத்த அப்பளம் அப்படியே இருந்துவிடும். மிச்சந்தான். கம்பன் பாடல்களும் அப்பளம் போலத்தான், பிழைபட்ட பாடல் இருந்தால், பாடல் மிச்சம் தானே. 'கல்லை எப்படி எடுக்கலாம் நீ என்று கோபிக்கிறார்கள்" கவிச் சக்கரவர்த்திக்கு நேர்ந்த விபத்துகளை நினைந்து ரஸிகச் சக்கரவர்த்தி இப்படியெல்லாம் ஏங்கினார்கள். அவ்வாறு ஏங்கி ஏங்கித் தன்னந்தனியாக இருந்த காலத் திலே, டி. கே. சி. யோடு உளங்கலந்து அவர்களுக்கு இலக்கிய நட்பை நல்கியவர்கள் வெகு சிலரே ராஜாஜி

கல்கி. பாஸ்கரத் தொண்டைமான், எனது தமக்கையார் வேலம்மாள், நான் சோமு, ல. ஷண்முகசுந்தரம் முதலி யோர், டி. கே. சி. யின் இறுதிக் காலத்தில் என்னுடைய துணை தமக்கு இருக்க வேண்டுமென்றே உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜமன்னாரிடம் சென்று என்னைத் தென் காசியில் முன்சீப்பாகப் போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சொந்த ஊரில் நான் நீதிபதியாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதியைத் தளர்த்தி என்னை தென்காசியில் முன்சீப்பாகப் போட்டார்கள். 1949 முதல் 1952 வரை அநேகமாக நாள் தோறும் தென்காசியி லிருந்து நான் குற்றாலம் சென்று டி. கே. சி. யோடு மணிக் கணக்காக உரையாடிக் கொண்டிருக்கும் பேறு பெற்றேன். மூன்று ஆண்டுகள் மூன்று கணமாக விரைந்தோடின. காலம் என்ற தத்துவம் தங்கச்சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்தில் விரைந்தோடியது.

1950 ல் ஒரு நாள் திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளையவர்களோடும் டி. கே. சி. யோடும் ஐந்தருவிச் சாலையிலே நான் உலாவிக் கொண்டிருந்தேன். திடீரென்று டி. கே. சி. நின்றார்கள். ஒரு சாலை மாணுக்கராகிய திவான் பகதூரைப் பார்த்து, "ஆவுடையப்ப பிள்ளைய வாள்: நான் மகராஜனுக்கு ஒரு உயில் எழுதி வைக்க விட்டேன்" என்று சொன்னார்கள். அப்படியா, அப்படியா என்ன அது? என்று அதிசயத்தோடு கேட்டார்கள் ஆவுடையப்ப பிள்ளை. "நமது தமிழ்க் கவிதை, பண்பாடு, சமயம் எல்லாவற்றையும் மகராஜனுக்கு உயில் எழுதி வைத்துவிட்டேன். இனிக் கவலையில்லை" என்றார்கள் ரஸிக மணி. இதே அன்பையும் அருமைப்பாட்டையும் 0/6/48ல் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க் கண்ட சொற்களில் டி. கே. சி. வெளியிட்டார்கள். "ஒருவ னுக்குக் கை நிறைய வைரங்கள் கிடைத்தன. அவைகளை வைக்கும் பெட்டகம் இல்லை, வீடில்லை, கடைசியாக, அவை கள் கிடைத்தன. அப்படியானல் அவனுக்கு எவ்வளவு ஆறு

கல்கி, பாஸ்கரத் தொண்டைமான், எனது தமக்கையார் வேலம்மாள், நான் சோமு, ல. ஷண்முகசுந்தரம் முதலி யோர், டி. கே. சி. யின் இறுதிக் காலத்தில் என்னுடைய துணை தமக்கு இருக்க வேண்டுமென்றே உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜமன்னாரிடம் சென்று என்னைத் தென் காசியில் முன்சீப்பாகப் போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சொந்த ஊரில் நான் நீதிபதியாக இருக்கக்கூடாது என்பது விதி. இந்த விதியைத் தளர்த்தி என்னை தென்காசியில் முன்சீப்பாகப் போட்டார்கள். 1949 முதல் 1952 வரை அநேகமாக நாள் தோறும் தென்காசியி லிருந்து நான் குற்றாலம் சென்று டி. கே. சி. யோடு மணிக் கணக்காக உரையாடிக் கொண்டிருக்கும் பேறு பெற்றேன். மூன்று ஆண்டுகள் மூன்று கணமாக விரைந்தோடின. காலம் என்ற தத்துவம் தங்கச்சக்கரம் பூண்டு வெள்ளித் தண்டவாளத்தில் விரைந்தோடியது.

1950 ல் ஒரு நாள் திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளையவர்களோடும் டி. கே. சி. யோடும் ஐந்தருவிச் சாலையிலே நான் உலாவிக் கொண்டிருந்தேன். திடீரென்று டி. கே. சி. நின்றார்கள். ஒரு சாலை மாணுக்கராகிய திவான் பகதூரைப் பார்த்து, "ஆவுடையப்ப பிள்ளைய வாள்: நான் மகராஜனுக்கு ஒரு உயில் எழுதி வைக்க விட்டேன்" என்று சொன்னார்கள். அப்படியா, அப்படியா என்ன அது? என்று அதிசயத்தோடு கேட்டார்கள் ஆவுடையப்ப பிள்ளை. "நமது தமிழ்க் கவிதை, பண்பாடு, சமயம் எல்லாவற்றையும் மகராஜனுக்கு உயில் எழுதி வைத்துவிட்டேன். இனிக் கவலையில்லை" என்றார்கள் ரஸிக மணி. இதே அன்பையும் அருமைப்பாட்டையும் 0/6/48ல் ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து எனக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க் கண்ட சொற்களில் டி. கே. சி. வெளியிட்டார்கள். "ஒருவ னுக்குக் கை நிறைய வைரங்கள் கிடைத்தன. அவைகளை வைக்கும் பெட்டகம் இல்லை, வீடில்லை, கடைசியாக, அவை கள் கிடைத்தன. அப்படியானல் அவனுக்கு எவ்வளவு ஆறு

தலாய் இருக்கும். அதே போல நானும் தமிழில் அற்புதமான பாடல்களைக் கண்டேன். கை நிறையவே இருக்கின்றன. வைக்க இடமில்லாமல் திண்டாடினேன். தாங்களும் வேலம்மாளும் ஒப்படைப்பதற்கு இருக்கிறீர்கள். எனக்கு எவ்வளவு ஆறுதல் என்று சொல்வானேன்.''

ரஸிகமணியின் வாய்மொழி உயிலையும் சொல்லின் செல்வரின் எழுத்துவழி உயிலையும் பெற்ற நான் அவர்களிருவருக்கும் இடையேயுள்ள மனக்கசப்பை நீக்குவதற்குப் பல ஆண்டுகள் முயன்றேன். ''பி. ஸ்ரீ. ஆச்சார்யா என்னோடு ஒட்டியிருந்தவர்கள். சில காரணங்களால் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். அவரை திருக்குற்றாலத்துக்கு அழைத்து என்னோடு மறுபடியும் ஒட்டும்படி செய்துவிட்டீர்கள். அதனால் எனக்கு ஏற்பட்ட சந்தோஷம் இப்படி, அப்படி என்று சொல்ல முடியாது. ஆனால், ரா. பி. சேதுப்பிள்ளை என்னோடு ஒரு காலத்திலும் ஒட்டியிருந்ததில்லை. நான் ஒரு கோமாளி என்று நினைக்கிறவர்கள் அவர்கள். நீங்கள் ஒட்டி வைத்தாலும் அவர்கள் ஒட்டமாட்டார்கள் என்று டி. கே. சி, என்னிடம் அடிக்கடி சொல்லுவார்கள். ''இல்லை. தமிழின் நலத்துக்காக நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்'' என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

1951ல் 'தளவாய் ''ஹவுஸ்'' என்ற விடுதியிலே குற்றாலத்தில் தங்கியிருந்தார்கள் சொல்லின் செல்வர். இரட்டை மாட்டு வண்டியிலே தென்காசியை நோக்கி அவசரமாகப் போய்க்கொண்டிருந்த ரஸிகமணியைப் பார்த்து, ''அண்ணாத்தை, எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறீர்கள்'' என்று கேட்டார்கள் ரா. பி. சே. ''இல்லை, மூன்று நாட்களாக மகராஜனுக்குக் காய்ச்சல். படுக்கையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு டி. கே. சி. தென்காசிக்கு விரைந்து வந்துவிட்டார்கள். என்னோடு இரண்டு மணி நேரம் அளவளாவி விட்டு

தலாய் இருக்கும். அதே போல நானும் தமிழில் அற்புதமான பாடல்களைக் கண்டேன். கை நிறையவே இருக்கின்றன. வைக்க இடமில்லாமல் திண்டாடினேன். தாங்களும் வேலம் மாளும் ஒப்படைப்பதற்கு இருக்கிறார்கள். எனக்கு எவ்வளவு ஆறுதல் என்று சொல்வானேன்.''

ரஸிகமணியின் வாய்மொழி உயிலையும் சொல்லின் செல் வரின் எழுத்துவழி உயிலையும் பெற்ற நான் அவர்களிருவ ருக்கும் இடையேயுள்ள மனக்கசப்பை நீக்குவதற்குப் பல ஆண்டுகள் முயன்றேன். ''பி. ஸ்ரீ. ஆச்சார்யா என்னோடு ஒட்டியிருந்தவர்கள். சில காரணங்களால் என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்கள். அவரை திருக்குற்றாலத்துக்கு அழைத்து என்னோடு மறுபடியும் ஒட்டும்படி செய்துவிட்டீர் கள். அதனால் எனக்கு ஏற்பட்ட சந்தோஷம் இப்படி, அப் படி என்று சொல்ல முடியாது. ஆனால், ரா. பி. சேதுப் பிள்ளை என்னோடு ஒரு காலத்திலும் ஒட்டியிருந்ததில்லை. நான் ஒரு கோமாளி என்று நினைக்கிறவர்கள் அவர்கள். நீங்கள் ஒட்டி வைத்தாலும் அவர்கள் ஒட்டமாட்டார்கள் என்று டி. கே. சி, என்னிடம் அடிக்கடி சொல்லுவார்கள். ''இல்லை. தமிழின் நலத்துக்காக நீங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்'' என்று நான் சொல்லிக் கொண்டிருந்தேன்.

1951ல் 'தளவாய் ''ஹவுஸ்'' என்ற விடுதியிலே குற்றாலத் தில் தங்கியிருந்தார்கள் சொல்லின் செல்வர். இரட்டை மாட்டு வண்டியிலே தென்காசியை நோக்கி அவசரமாகப் போய்க்கொண்டிருந்த ரஸிகமணியைப் பார்த்து, ''அண் ணாத்தை, எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறீர்கள்'' என்று கேட்டார்கள் ரா. பி. சே. ''இல்லை, மூன்று நாட்க ளாக மகராஜனுக்குக் காய்ச்சல். படுக்கையில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு டி. கே. சி. தென்காசிக்கு விரைந்து வந்துவிட்டார்கள். என்னோடு இரண்டு மணி நேரம் அளவளாவி விட்டு

டிகேசி குற்றாலம் போனார்கள். அவர்கள் போன சில நிமி ஷங்களில் ரா. பி. சே. என் இல்லத்துக்கு வந்து. "டி. கே. சி.க்கு உம்மிடத்திலேயிருக்கிற பிரியத்தைப்பார்த் தேன். உடனே எனக்கு அவர்களிடத்திலிருந்த கசப்பெல் லாம் மாறிவிட்டது. அவர்கள் மீது அன்பு பெருகத் தொடங்கி விட்டது. காரணம், நம்முடைய மகராஜனிடத் திலே டி.கே.சி.க்கு இவ்வளவு அன்பிருக்கிறதே என்பது தான்," என்று சொல்லி அன்பு வளரும் மர்மத்தை ரா.பி.சே. எனக்கு விளக்கினார்கள்.

இருபதாவது நூற்றாண்டில் கம்பனுக்காகவும் வள்ளு வருக்காகவும் தமிழுக்காகவும் அரும்பாடுபட்ட இரண்டு பெரும் மேதைகள், என்னிடத்திலிருந்த அன்பின் காரண மாக, கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டார்கள் என்ற நிகழ்ச்சி என்றென்றும் எனக்கு விம்மிதத்தையும் பூரிப்பையும் கொடுத்துக் கொண்டிருக்கும். 1952ல் திருவள்ளுவர் கழகத்தின் வெள்ளி விழா நடந்த போது நான் தென்காசியில் முன்சீப்பாக இருந்தேன். ரசிகமணியும் சொல்லின் செல்வரும் நானும் கழகத்தின் வெள்ளி விழா மலருக்குக் கட்டுரைகள் வழங்கியும் மற்றவர்களைக் கட்டுரை வழங்கச் செய்தும் மலரை பயனுள்ளதாக்குவதில் ஈடுபட் டோம், சொல்லின் செல்வரும் மலரின் ஒரு பாகத்தைப் பாடப் புத்தகமாக வைத்து அதன் மூலம் கழகத்துக்கு நல்ல வருவாய் கிடைக்கும்படி செய்தார்கள்.

வெள்ளி விழாவுக்கும் பொன் விழாவுக்கும் இடையிலே கழகத்தின்பால் பேரன்பு கொண்டிருந்த அவ்விருவரும் மறைந்துவிட்டார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தின் மூலம் சொல்லின் செல்வர் ரசிகமணியைப் பற்றிப் பேசிய பேச்சு கீழ்க்கண்டவாறு முடிகிறது:— "குற்றாலத்தின் பெருமையை

டி.கே.சி குற்றாலம் போனார்கள். அவர்கள் போன சில நிமிஷங்களில் ரா. பி. சே. என் இல்லத்துக்கு வந்து, “டி. கே. சி.க்கு உம்மிடத்திலேயிருக்கிற பிரியத்தைப்பார்த்தேன். உடனே எனக்கு அவர்களிடத்திலிருந்த கசப்பெல்லாம் மாறிவிட்டது. அவர்கள் மீது அன்பு பெருகத் தொடங்கி விட்டது. காரணம், நம்முடைய மகராஜனிடத்திலே டி.கே.சி.க்கு இவ்வளவு அன்பிருக்கிறதே என்பது தான்,” என்று சொல்லி அன்பு வளரும் மர்மத்தை ரா.பி.சே. எனக்கு விளக்கினார்கள்.

இருபதாவது நூற்றாண்டில் கம்பனுக்காகவும் வள்ளுவருக்காகவும் தமிழுக்காகவும் அரும்பாடுபட்ட இரண்டு பெரும் மேதைகள், என்னிடத்திலிருந்த அன்பின் காரணமாக, கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டார்கள் என்ற நிகழ்ச்சி என்றென்றும் எனக்கு விம்மிதத்தையும் பூரிப்பையும் கொடுத்துக் கொண்டிருக்கும். 1952ல் திருவள்ளுவர் கழகத்தின் வெள்ளி விழா நடந்த போது நான் தென்காசியில் முன்சீப்பாக இருந்தேன். ரசிகமணியும் சொல்லின் செல்வரும் நானும் கழகத்தின் வெள்ளி விழா மலருக்குக் கட்டுரைகள் வழங்கியும் மற்றவர்களைக் கட்டுரை வழங்கச் செய்தும் மலரை பயனுள்ளதாக்குவதில் ஈடுபட்டோம், சொல்லின் செல்வரும் மலரின் ஒரு பாகத்தைப் பாடப் புத்தகமாக வைத்து அதன் மூலம் கழகத்துக்கு நல்ல வருவாய் கிடைக்கும்படி செய்தார்கள்.

வெள்ளி விழாவுக்கும் பொன் விழாவுக்கும் இடையிலே கழகத்தின்பால் பேரன்பு கொண்டிருந்த அவ்விருவரும் மறைந்துவிட்டார்கள். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தின் மூலம் சொல்லின் செல்வர் ரசிகமணியைப் பற்றிப் பேசிய பேச்சு கீழ்க்கண்டவாறு முடிகிறது:— “குற்றாலத்தின் பெருமையை

யெல்லாம் தன் பெருமையாக்கிக்கொண்ட ரசிகமணி இன்று நம்மை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களோடு நெருங்கிப் பழகிய இலக்கிய நண்பர்களுக்கு இப்போது குற்ருலம் ஆவியகன்ற கூடு போலவே தோன்றும். மலையிருந்தென்ன; மந்தமாருதமிருந்தென்ன; அவிதான் இருந்தென்ன; அறிவுக் களஞ்சியத்தை இழந்து விட்டோம்; அருமையாகத் தமிழின் பெருமையை உணர்த்தும் அறிஞரை இழந்துவிட்டோம். பண்பாட்டின் நிலையமாகிய பெரியாரை இழந்துவிட்டோம், டி. கே. சி. அவர்கள் நம் கண்ணுக்கு மறைந்தாலும் கருத்துக்கு ஒரு நாளும் மறைவாரல்லர் என்பது ஒன்றே நமக்கு ஆறுதல் அளிக்கின்றது." இவ்வாறு பேசிய குரலும் மறைந்துவிட்டது. மறைந்துவிட்டது. மறைந்து போனாலும், தென்காசித் திருவள்ளுவர் கழகத்தின் மூலமும் காரைக்குடி கம்பன் கழகம் முதலிய பல கழகங்களின் மூலம் தென்னாட்டில் தமிழைப் பரப்பி வந்த இருவருடைய உயிர்த் தத்துவங்களும் ஊழூழிக் காலம் நிலைத்து நிற்குமாக. 50 ஆண்டு காலமாகச் சிறந்த தமிழ்த் தொண்டு செய்து, ஆயிரக்கணக்கான ரஸிகர்களை உண்டாக்கிவிட்ட தென்காசித் திருவள்ளுவர் கழகமும் என்றுமுள தென்தமிழைப் போல நிலைத்து நிற்குமாக.

யெல்லாம் தன் பெருமையாக்கிக்கொண்ட ரசிகமணி இன்று நம்மை விட்டுப் போய்விட்டார்கள். அவர்களோடு நெருங்கிப் பழகிய இலக்கிய நண்பர்களுக்கு இப்போது குற்றாலம் ஆவியகன்ற கூடு போலவே தோன்றும். மலையிருந்தென்ன; மந்தமாருதமிருந்தென்ன; அவி தான் இருந்தென்ன: அறிவுக் களஞ்சியத்தை இழந்து விட்டோம்: அருமையாகத் தமிழின் பெருமையை உணர்த்தும் அறிஞரை இழந்துவிட்டோம். பண்பாட்டின் நிலையயாகிய பெரியாரை இழந்துவிட்டோம், டி. கே. சி. அவர்கள் நம் கண்ணுக்கு மறைந்தாலும் கருத்துக்கு ஒரு நாளும் மறைவாரல்லர் என்பது ஒன்றே நமக்கு ஆறுதல் அளிக்கின்றது." இவ்வாறு பேசிய குரலும் மறைந்துவிட்டது. மறைந்து விட்டது. மறைந்து போனாலும், தென்காசித் திருவள்ளுவர் கழகத்தின் மூலமும் காரைக்குடி கம்பன் கழகம் முதலிய பல கழகங்களின் மூலம் தென்னாட்டில் தமிழைப் பரப்பி வந்த இருவருடைய உயிர்த் தத்துவங்களும் ஊழூழிக் காலம் நிலைத்து நிற்குமாக. 50 ஆண்டு காலமாகச் சிறந்த தமிழ்த் தொண்டு செய்து, ஆயிரக்கணக்கான ரஸிகர்களை உண்டாக்கிவிட்ட தென்காசித் திருவள்ளுவர் கழகமும் என்றுமுள தென்தமிழைப் போல நிலைத்து நிற்குமாக.

# 10. டி. கே. சி. யும் எழிலியலும்

(Aesthetics) எழிலியலின் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் ரஸிகமணி டி. கே. சி. நேர்கோட்டில் அழகு அவ்வளவு இருப்பதில்லை. ஆனால், வளை கோட்டில் அழகு அதிகம் இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால், நேர் கோடு நேர்மையையும் அசையாமையையும் குறிக்கிறது. ஒரு கோபுரத்தில் அல்லது நெடுஞ்சுவரில் உள்ள நேர் கோடோ என்றுமே அசைக்க முடியாததோ என்ற எண்ணத்தை நமக்குக் கொடுக்கும் என்பார்கள் டி. கே. சி. உதாரணத்துக்காக, ஒன்றை எடுத்துச் சொல்லுவார்கள்:— இலங்கைத் தீவில் கோட்டை மதிலும் கோபுரமுமாக எழுந்து நிற்கின்றன. எங்கே நிற்கின்றன? சமுத்திரக் கரையோரத்தில் நீருக்குள் இருந்தே எழுந்து நிற்கின்றன. பெரும் பெரும் அலைகள் வந்து மதில்கள் மீதும் கோபுரத்தின் அடியிலும் மோதுகின்றன. அப்படி மோதுவதைப் பார்த்தால். ஏதோ "நிலையாமை, நிலையாமை" என்று சொல்லுகிறார்களே அதற்கெல்லாம் மாறாக, "என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையை இதோ பார்க்கிறோமே கல் மதிலிலும் கோபுரத்திலும்" என்று சொல்லத் தோன்றும்.

> நிலைகிடந்த நெடுமதிட் கோபுரத்து
> அலைகிடந்த இலங்கையின் அண்ணலை
> (நிலைகிடந்த அழியாத நிலைத்த தத்துவம் கிடந்த)

ஆனால், பனை மரம் நேர்கோடாகத்தான் நிற்கிறது. அதை நம்மால் நெடுநேரம் பார்த்து அனுபவிக்க முடிய

# 10. டி. கே. சி. யும் எழிலியலும்

(Aesthetics) எழிலியலின் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் ரஸிகமணி டி. கே. சி. நேர்கோட்டில் அழகு அவ்வளவு இருப்பதில்லை. ஆனால், வளை கோட்டில் அழகு அதிகம் இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால், நேர் கோடு நேர்மையையும் அசையாமையையும் குறிக்கிறது. ஒரு கோபுரத்தில் அல்லது நெடுஞ்சுவரில் உள்ள நேர் கோடோ என்றுமே அசைக்க முடியாததோ என்ற எண்ணத்தை நமக்குக் கொடுக்கும் என்பார்கள் டி. கே. சி. உதாரணத்துக்காக, ஒன்றை எடுத்துச் சொல்லுவார்கள்:— இலங்கைத் தீவில் கோட்டை மதிலும் கோபுரமுமாக எழுந்து நிற்கின்றன. எங்கே நிற்கின்றன? சமுத்திரக் கரையோரத்தில் நீருக்குள் இருந்தே எழுந்து நிற்கின்றன. பெரும் பெரும் அலைகள் வந்து மதில்கள் மீதும் கோபுரத்தின் அடியிலும் மோதுகின்றன. அப்படி மோதுவதைப் பார்த்தால். ஏதோ "நிலையாமை, நிலையாமை" என்று சொல்லுகிறார்களே அதற்கெல்லாம் மாறாக, "என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மையை இதோ பார்க்கிறோமே கல் மதிலிலும் கோபுரத்திலும்" என்று சொல்லத் தோன்றும்.

நிலைகிடந்த நெடுமதிட் கோபுரத்து
அலைகிடந்த இலங்கையின் அண்ணலை
(நிலைகிடந்தஅழியாத நிலைத்த தத்துவம் கிடந்த)

ஆனால், பனை மரம் நேர்கோடாகத்தான் நிற்கிறது. அதை நம்மால் நெடுநேரம் பார்த்து அனுபவிக்க முடிய

வில்லை. ஏன் ? நம் கண்ணும் மனசும் அதில் நின்று நிலைத்து அனுபவிப்பதற்கு அதில் வசதிகள் வைக்கவில்லை. முண்டும் முடிச்சுமாக இருக்கும் மஞ்சணத்தி மரம் எத்தனையோ கோணல்களோடு நிற்கிறது. அந்தக் கோணல்களில் நின்று. தங்கி அனுபவிப்பதற்கு நம் மனசுக்கு முடிகிறது. அதன் முண்டு முடிச்சுகளை மணிக்கணக்காக நம் கண் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. கண்ணை மேலுங் கீழுமாகவும், இடப்புறமும் வலப்புறமுமாகவும் புரட்டிப் பொருளின் அளவை நிதானித்துக் கொள்கிறோம். பார்க்கும் பொருள் பார்க்கப்படும் பொருளை ஊடுருவிப் பார்க்கிறது; பார்ப்பதெது. பார்க்கப்படுவதெது, பார்வையெது என்ற பேதங்களின்றி ஒரு காட்சி கிடைக்கும்போது ஆனந்தம். கிடைக்கிறது. கலையின் மூலமாக இந்த இன்பநிலையை அடையலாம் என்று கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

ஒரு பொருளை நினைக்கும்போது அதன் குணங்கள் சில வேறு சில பொருள்களை நினைவுபடுத்திவிடும். ஆகவே. நினைவு-ஈர்ப்பினால் ஏற்படும் பொருளும் அந்தப் பொருளுக்கு ஏற்பட்டு விடுகிறது. சொல்லுகிறார்கள் டி. கே. சி. "ஒரு மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருக்கிறது மருதமரத்தின் காம்பீரியம், தொன்மை எல்லாம் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன. பொந்து விழுந்த பழைய மரமாய் இருந்து விட்டால் அதை அனுபவியாமல் இருக்க முடியாது. மாணிக்கவாசகர் அபாரமாய் அனுபவித்தார் அத்தகைய தொன்மையான பொந்து விழுந்த மருதமரத்தைப் பாடினார்.

எனக்குத் தந்தைதான் கடவுள், தாய்தாய், சுற்றத்தார் தான், செல்வம் எல்லாந்தான். என்னுடைய பாண்டி மன்னன்தான் அந்தக் கடவுள். இப்படி அனுபவிக்கிறார் கடவுளை. கடவுளை அனுபவிக்கிற காரியமோ பேரானந்தந் தந்தான். (ஆனந்தத் தேன்தான்)

வில்லை. ஏன்? நம் கண்ணும் மனசும் அதில் நின்று நிலைத்து அனுபவிப்பதற்கு அதில் வசதிகள் வைக்கவில்லை. முண்டும் முடிச்சுமாக இருக்கும் மஞ்சணத்தி மரம் எத்தனையோ கோணல்களோடு நிற்கிறது. அந்தக் கோணல்களில் நின்று. தங்கி அனுபவிப்பதற்கு நம் மனசுக்கு முடிகிறது. அதன் முண்டு முடிச்சுகளை மணிக்கணக்காக நம் கண் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. கண்ணை மேலுங் கீழுமாகவும், இடப்புறமும் வலப்புறமுமாகவும் புரட்டிப் பொருளின் அளவை நிதானித்துக் கொள்கிறோம். பார்க்கும் பொருள் பார்க்கப்படும் பொருளை ஊடுருவிப் பார்க்கிறது; பார்ப்பதெது. பார்க்கப்படுவதெது, பார்வையெது என்ற பேதங்களின்றி ஒரு காட்சி கிடைக்கும்போது ஆனந்தம். கிடைக்கிறது. கலையின் மூலமாக இந்த இன்பநிலையை அடையலாம் என்று கண்டவர்கள் நம் முன்னோர்கள்.

ஒரு பொருளை நினைக்கும்போது அதன் குணங்கள் சில வேறு சில பொருள்களை நினைவுபடுத்திவிடும். ஆகவே. நினைவு-ஈர்ப்பினுல் ஏற்படும் பொருளும் அந்தப் பொருளுக்கு ஏற்பட்டு விடுகிறது. சொல்லுகிறார்கள் டி. கே. சி. "ஒரு மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருக்கிறது மருதமரத்தின் காம்பீரியம், தொன்மை எல்லாம் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன. பொந்து விழுந்த பழைய மரமாய் இருந்து விட்டால் அதை அனுபவியாமல் இருக்க முடியாது. மாணிக்கவாசகர் அபாரமாய் அனுபவித்தார் அத்தகைய தொன்மையான பொந்து விழுந்த மருதமரத்தை பாடினார்.

எனக்குத் தந்தைதான் கடவுள், தாய்தாய், சுற்றத்தார் தான், செல்வம் எல்லாந்தான். என்னுடைய பாண்டி மன்னன்தான் அந்தக் கடவுள். இப்படி அனுபவிக்கிறார் கடவுளை. கடவுளை அனுபவிக்கிற காரியமோ பேரானந்தந் தந்தான். (ஆனந்தத் தேன்தான்)

"எந்தை ! என் தாய் ! சுற்றம் !
மற்றும் எல்லாம் ! என்னுடைய
(பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட) பாண்டிப்பிரான்,
அந்த இடைமருகில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி நாம்
பூவல்லி கொய்யாமோ."

தூரத்தைக் காட்டிலும் அமைதி நிறைந்தது வட்டம். வட்டத்தோடு ஆழமும் சேர்ந்து விட்டாலோ, அதை ஆனந்தத் தேனிருந்த பொந்தாக, இறைவனாகவே பரவி மகிழலாம். மகிழ்கிறார் மணிவாசகர்.

டி. கே. சி. கவியை உள்ளுணர்வோடு பார்ப்பவர்கள். ராஜாஜி 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற நூலின் முன்னுரையில் சொல்லுவது போல, டி. கே. சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவி வானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார்கள். அதை நேரில் அனுபவித்தவர்கள், நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி. கே. சி. ஊனுடலை விட்டுப் போய்விட்டார்; நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்திலிருக்கும் நினைவுகளும் இந்த நூலும்;"

இப்படி ஒரு ரஸிக மகரிஷியைப் பார்க்க முடியாதே என்ற ஆற்றாமையில் ராஜாஜி சொன்ன கூற்று இது;

ஒரு கவியை விளக்கும்போது, டி. கே. சி. தம்மை மறந்து, கூடு விட்டுக் கூடு பாய்ந்து, கவிஞனுடைய கவிதைப் பட்டறையில் இருந்துகொண்டு அவனுடைய

"எந்தை! என் தாய்! சுற்றம்!
மற்றும் எல்லாம்! என்னுடைய
(பந்தம் அறுத்தென்னை
ஆண்டுகொண்ட) பாண்டிப்பிரான்,
அந்த இடைமருகில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவி நாம்
பூவல்லி கொய்யாமோ."

தூரத்தைக் காட்டிலும் அமைதி நிறைந்தது வட்டம். வட்டத்தோடு ஆழமும் சேர்ந்து விட்டாலோ, அதை ஆனந்தத் தேனிருந்த பொந்தாக, இறைவனாகவே பரவி மகிழலாம். மகிழ்கிறார் மணிவாசகர்.

டி. கே. சி. கவியை உள்ளுணர்வோடு பார்ப்பவர்கள். ராஜாஜி 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற நூலின் முன்னுரையில் சொல்லுவது போல, டி. கே. சி. அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து, கம்பன் பாடல்களைப் பாடி, கவி வானம் உண்டாக்கி அமுத மழை பொழியச் செய்வார்கள். அதை நேரில் அனுபவித்தவர்கள், நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அறிவார்கள் அதன் மகிழ்ச்சியை; எழுத்தில் ஓரளவுதான் தொனிக்கும். ஆனால், இப்போது டி. கே. சி. ஊனுடலை விட்டுப் போய்விட்டார்; நிற்பது என்னைப் போன்ற பித்தரின் உள்ளத்திலிருக்கும் நினைவுகளும் இந்த நூலும்;"

இப்படி ஒரு ரஸிக மகரிஷியைப் பார்க்க முடியாதே என்ற ஆற்றாமையில் ராஜாஜி சொன்ன கூற்று இது;

ஒரு கவியை விளக்கும்போது, டி. கே. சி. தம்மை மறந்து, கூடு விட்டுக் கூடு பாய்ந்து, கவிஞனுடைய கவிதைப் பட்டறையில் இருந்துகொண்டு அவனுடைய

படைப்பாற்றலையும் உள்ளுணர்வையும் கண்டு அவற்றை நாம் புரியும் மொழியிலே எடுத்துச் சொல்லுவார்கள்.

மாதிரிக்கு ஒரு கம்பன் பாடல்.

நேரம் நடுநிசி. அசோகவனம் நிசப்தமாயிருக்கிறது. யாரும் விழித்திருக்கமாட்டார்கள். ஆகவே இப்போதே சென்று சீதையைக் காண்போம் என்று எண்ணுகிருன் மரத்தில் அமர்ந்திருக்கும் அனுமன்.

"காண்டற்கு ஒத்த
காலமும் ஈதே"

அடுத்தாற்போல் கொஞ்சம் கீழேயுள்ள கிளையில் இறங்கிப் பார்க்கிருன். சீதையைச் சுற்றி வட்டமிட்டுப் பல அரக்கிகள் உட்கார்ந்திருக்கிருர்கள். எச்சரிக்கையோடு விழித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் சுதாரிப்பாக இருப்பதைப் பார்த்தால், காவலுக்கென்று ஓர் அதிதேவதையுண்டே, அந்தத் தேவதைக்குக்கொஞ்சம் அயர்ந்து தூக்கம் வந்தால், அதை ஒரு அடி அடித்து, "ஏய், என்ன தூக்கம்!" என்று சொல்லித் தூண்டி விடுவார்களாம் அந்த அரக்கிகள். அவர்கள் முகத்திலோ கண்களிலோ சோர்வு கொஞ்சமும் இல்லையாம். அவர்களைப் பார்த்ததும் அனுமனுக்கு மனம் சோர்ந்து விட்டது.

தெறுகாவல்
தூண்டற்கொத்த
சிந்தையினரோ துயில்கில்லார்!

ஆனாலும், அச்சமயத்தில் தன்னுடைய மந்திர சக்தி (**Mas Hypnotism**) அனுமனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே அவனுக்குச் சிரிப்பு வந்தது. "இந்த அரக்கிகளுக்கு

படைப்பாற்றலையும் உள்ளுணர்வையும் கண்டு அவற்றை நாம் புரியும் மொழியிலே எடுத்துச் சொல்லுவார்கள்.

மாதிரிக்கு ஒரு கம்பன் பாடல்.

நேரம் நடுநிசி. அசோகவனம் நிசப்தமாயிருக்கிறது. யாரும் விழித்திருக்கமாட்டார்கள். ஆகவே இப்போதே சென்று சீதையைக் காண்போம் என்று எண்ணுகிருன் மரத்தில் அமர்ந்திருக்கும் அனுமன்.

"காண்டற்கு ஒத்த
காலமும் ஈதே"

அடுத்தாற்போல் கொஞ்சம் கீழேயுள்ள கிளையில் இறங்கிப் பார்க்கிருன். சீதையைச் சுற்றி வட்டமிட்டுப் பல அரக்கிகள் உட்கார்ந்திருக்கிருர்கள். எச்சரிக்கையோடு விழித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் சுதாரிப்பாக இருப்பதைப் பார்த்தால், காவலுக்கென்று ஓர் அதிதேவதையுண்டே, அந்தத் தேவதைக்குக்கொஞ்சம் அயர்ந்து தூக்கம் வந்தால், அதை ஒரு அடி அடித்து, "ஏய், என்ன தூக்கம்!" என்று சொல்லித் தூண்டி விடுவார்களாம் அந்த அரக்கிகள். அவர்கள் முகத்திலோ கண்களிலோ சோர்வு கொஞ்சமும் இல்லையாம். அவர்களைப் பார்த்ததும் அனுமனுக்கு மனம் சோர்ந்து விட்டது.

தெறுகாவல்
தூண்டற்கொத்த
சிந்தையினரோ துயில்கில்லார்!

ஆனுலும், அச்சமயத்தில் தன்னுடைய மந்திர சக்தி (Mass Hypnotism) அனுமனுக்கு நினைவுக்கு வந்தது. உடனே அவனுக்குச் சிரிப்பு வந்தது. "இந்த அரக்கிகளுக்கு

நான் ஒருவேண்டுகோள் விட்டால், தூங்கவா செய்வார் கள்!'' என்று நினைத்துச் சிரித்துக்கொண்டு ஒருமந்திரத்தை ஜபித்தான். உடனே அரக்கியரெல்லாம் மாண்டவர்கள் போன்று ஒரு பேருறக்கத்தில் சாய்ந்து விட்டார்கள்.

வேண்டத் துஞ்சார்
என்றொரு விஞ்சை
வினை செய்தான்.

காண்டற்கொத்த காலமும் ஈதே;— தெறுகாவல்
தூண்டற்கொத்த சிந்தையினரோ துயில்கில்லார்;
வேண்டத்துஞ்சார்; என்றொரு விஞ்சை
வினைசெய்தான்;
மாண்டற்குற்றாராம் என எல்லாம் மயர்வுற்றார்.

இந்தப் பாட்டிலே ''தெறுகாவல் தூண்டற்கொத்த சிந்தையினரோ துயில்கில்லார்'' என்ற வரிக்கு உரை தெரியவில்லை இருரையாசிரியருக்கும். டி. கே. சி. கம்ப னுடைய உள்ளத்தோடு ஒத்திருந்து பார்க்கும் உள் ளுணர்வு பெற்றிருந்த காரணத்தால், அவர்கள் 'தெறு காவல்' என்றால் என்ன என்று விளக்கினார்கள். காளி கோயில் முன்பு வாசலில் இரண்டு பயங்கரமான பெருத்த உருவங்கள் செய்து வைத்திருக்கும். பயத்தை உண்டாக்க வேண்டுமல்லவா? கையில் பெரிய வாள் ஒன்றை ஏந்தி ஓங்கிய வண்ணமாயிருக்கும். இவைகள்தான் காவலுக்கு அதிதேவதைகளின் சிலை உருவங்கள். மீறிச் செல்பவர்களை வாள் கொண்டு வெட்டி விடும் (—தெறும்) என்பது குறிப்பு. அத்தகைய காவல் தெய்வத்தை, தூண்டற்கொத்த சிந்தை யினரோ = தூண்டி ஜாக்கிரதை பண்ணக்கூடிய அரக்கி களோ, துயில்கில்லார் = தூங்கவே மாட்டார். இவ்வாறு சொல்லி இந்தச் சொற்றொடரைப் புரிய வைத்தவர்கள் டி. கே சி.

நான் ஒருவேண்டுகோள் விட்டால், தூங்கவா செய்வார்கள்!" என்று நினைத்துச் சிரித்துக்கொண்டு ஒருமந்திரத்தை ஜபித்தான். உடனே அரக்கியரெல்லாம் மாண்டவர்கள் போன்று ஒரு பேருறக்கத்தில் சாய்ந்து விட்டார்கள்.

வேண்டத் துஞ்சார்
என்றொரு விஞ்சை
வினை செய்தான்.

காண்டற்கொத்த காலமும் ஈதே;— தெறுகாவல்
தூண்டற்கொத்த சிந்தையினரோ துயில்கில்லார்;
வேண்டத்துஞ்சார்; என்றொரு விஞ்சை
வினைசெய்தான்;
மாண்டற்குற்றாராம் என எல்லாம் மயர்வுற்றார்.

இந்தப் பாட்டிலே "தெறுகாவல் தூண்டற்கொத்த சிந்தையினரோ துயில்கில்லார்" என்ற வரிக்கு உரை தெரியவில்லை ஒருரையாசிரியருக்கும். டி. கே. சி. கம்பனுடைய உள்ளத்தோடு ஒத்திருந்து பார்க்கும் உள்ளுணர்வு பெற்றிருந்த காரணத்தால், அவர்கள் 'தெறு காவல்' என்றால் என்ன என்று விளக்கினார்கள். காளி கோயில் முன்பு வாசலில் இரண்டு பயங்கரமான பெருத்த உருவங்கள் செய்து வைத்திருக்கும். பயத்தை உண்டாக்க வேண்டுமல்லவா? கையில் பெரிய வாள் ஒன்றை ஏந்தி ஓங்கிய வண்ணமாயிருக்கும். இவைகள்தான் காவலுக்கு அதிதேவதைகளின் சிலை உருவங்கள். மீறிச் செல்பவர்களை வாள் கொண்டு வெட்டி விடும் (—தெறும்) என்பது குறிப்பு. அத்தகைய காவல் தெய்வத்தை, தூண்டற்கொத்த சிந்தையினரோ = தூண்டி ஜாக்கிரதை பண்ணக்கூடிய அரக்கிகளோ, துயில்கில்லார் = தூங்கவே மாட்டார். இவ்வாறு சொல்லி இந்தச் சொற்றொடரைப் புரிய வைத்தவர்கள் டி. கே சி.

புராணக் கதைகளை நாம் கேட்கும்போது, சொல்லுக்குச் சொல் என்ன பொருள் என்று கண்டுபிடிக்கிறோம். **We are cursed with the curse of literalness** — என்று சொல்லுவார் தாகூர். ஆனால், கதைகளின் உட்பொருளை நாம் தெரிந்து கொண்டால் அதன் பலனைப் பெறலாம். ரசிகமணி இப்பேர்ப்பட்ட கதைகளைப் பகுத்தறிவில் மாத்திரம் நம்பிக்கையுடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படி எடுத்துச் சொல்லிவிடுவார்கள். மாதிரிக்கு ஒரு கதை. அவுணர்கள் என்ற வேண்டாத வர்க்கத்தவர் இருந்தார்கள். அவர்கள் உலகத்திலுள்ள அரிய வஸ்த்துக்களையெடுத்துக்கொண்டு போய் சமுத்திரத்துக்குள் ஒளித்து வைத்துவிட்டார்கள். தேவர்கள் போய் அகத்திய முனிவரிடம் குறையிரந்தார்கள். விஷயத்தைத் தெரிந்து கொண்டு, சமுத்திரத்தை உள்ளங் கையில் வாரி முகந்து அப்படியே உண்டு விட்டார் அகஸ்தியர். தேவர்கள் உமிழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் உமிழ்ந்தார். உலகத்துக்குச் சிறந்த பொருள் எல்லாம் கிடைத்தன. அதாவது உயர்ந்த கலைகள் மக்களுக்கு மீண்டு வந்தன. இதைக் கம்பர் பாடல் சொல்லுகிறது:—

"பண்(டு) அவுணர் மூழ்கினர் படார் என வானோர்
எண்தவ! எமக்கருள்" எனக் குறை இரந்தார்
கண்(டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லாம்
உண்டு, அவர்கள் பின் "உமிழ்க" என்றதும்
உமிழ்ந்தான்.

இந்தக் கதையின் உட்கருத்தென்ன என்பதை டி.கே.சி. இவ்வாறு விளக்குகிறார்கள் : இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு கிரேக்கர்கள் மிக உயர்ந்த பாணியில் கலைகளையும் இலக்கியங்களையும் அமைத்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய ரசிகத்தன்மை அபூர்வமாயிருந்தது. பிற்

புராணக் கதைகளை நாம் கேட்கும்போது, சொல்லுக்குச் சொல் என்ன பொருள் என்று கண்டுபிடிக்கிறோம். **We are cursed with the curse of literalness** — என்று சொல்லுவார் தாகூர். ஆனால், கதைகளின் உட்பொருளை நாம் தெரிந்து கொண்டால் அதன் பலனைப் பெறலாம். ரசிகமணி இப்பேர்ப்பட்ட கதைகளைப் பகுத்தறிவில் மாத்திரம் நம்பிக்கையுடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படி எடுத்துச் சொல்லிவிடுவார்கள். மாதிரிக்கு ஒரு கதை. அவுணர்கள் என்ற வேண்டாத வர்க்கத்தவர் இருந்தார்கள். அவர்கள் உலகத்திலுள்ள அரிய வஸ்துக்களையெடுத்துக்கொண்டு போய் சமுத்திரத்துக்குள் ஒளித்து வைத்துவிட்டார்கள். தேவர்கள் போய் அகத்திய முனிவரிடம் குறையிரந்தார்கள். விஷயத்தைத் தெரிந்து கொண்டு, சமுத்திரத்தை உள்ளங் கையில் வாரி முகந்து அப்படியே உண்டு விட்டார் அக்ஸ்தியர். தேவர்கள் உமிழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் உமிழ்ந்தார். உலகத்துக்குச் சிறந்த பொருள் எல்லாம் கிடைத்தன. அதாவது உயர்ந்த கலைகள் மக்களுக்கு மீண்டு வந்தன. இதைக் கம்பர் பாடல் சொல்லுகிறது:—

"பண்(டு) அவுணர் மூழ்கினர் படார் என வானோர்
எண்தவ! எமக்கருள்" எனக் குறை இரந்தார்
கண்(டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லாம்
உண்டு, அவர்கள் பின் "உமிழ்க" என்றதும்
உமிழ்ந்தான்.

இந்தக் கதையின் உட்கருத்தென்ன என்பதை டி.கே.சி. இவ்வாறு விளக்குகிறார்கள்: இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு கிரேக்கர்கள் மிக உயர்ந்த பாணியில் கலைகளையும் இலக்கியங்களையும் அமைத்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய ரசிகத்தன்மை அபூர்வமாயிருந்தது. பிற்

காலத்தில் ரோமாபுரியிலுள்ளவர்கள் கிரேக்கக் கலைகளைக் கற்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்தக் கலைகளின் உண்மைத் தத்துவமும் ரஸமும் அவர்களுக்குப் பிடிபட வில்லை. அது காரணமாக இலக்கண கர்த்தாக்களும் வியாக் கியானக் கர்த்தாக்களும் அவதரித்துவிட்டார்கள். புற்றீசல் போல் அவதரித்து விட்டார்கள். உண்மை உணர்ச்சி குறையக் குறைய வியாக்கியான கர்த்தாக்களின் ஆதிக்கம் அதிகமாய்ப் போய் விட்டது. கலைக்கு அவர்கள் எல்லாம் அசுரர்களே ஆனார்கள். அவர்கள் எழுதியுள்ள கணக் கில்லாத வியாக்கியானங்களுக்குள் உண்மைக் கலையை இருக்கிற இடம் தெரியாதபடி புதைத்து விட்டார்கள். உண்மைக் கலையொன்று இருப்பதாக அவர்களுக்குச் சொல்ல முடியாமலே போயிற்று.

இந்த நிலையில் பெரியார் ஒருவர் வியாக்கியான கர்த்தாக்களையும் அவர்களது படாடோபங்களையும் கண்டித்து ஒதுக்கத் தலைப்பட்டார். அதற்காக எவ்வளவோ நூல்களை எத்தனையோ ஆண்டுகளாக ஆராய்ந்தார். ஆராய்ந்ததன் பலனை உலகத்துக்கு எடுத்துச் சொன்னார். மறைந்து போன பூர்வக்கலை அவரால் மக்களுக்கு உதவ வந்தது. (இது நடந்து 500 வருஷங்கள் ஆகிவிட்டன)— சவனரோலா என்பது அவருடைய பெயர்.

உயர்ந்த பண்பாடுகள் மறைந்து போகவும் மறுபடி அவைகளை மீட்கவும் ஏற்பட்டது கம்பர் காலத்திலேயே. ஆதி பூர்வமான காலத்திலும் அப்படியே கதைகள் மறையவும் அகத்திய முனிவர் அவைகளை விரிந்த ஆராய்ச்சியினால் மீட்டு உலகத்துக்கு உதவினார்.

இதையே கம்பர் அடையாள மொழியிலே புராண உருவத்திலே கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்:—

காலத்தில் ரோமாபுரியிலுள்ளவர்கள் கிரேக்கக் கலைகளைக் கற்கத் தொடங்கினார்கள். ஆனால், அந்தக் கலைகளின் உண்மைத் தத்துவமும் ரஸமும் அவர்களுக்குப் பிடிபட வில்லை. அது காரணமாக இலக்கண கர்த்தாக்களும் வியாக்கியானக் கர்த்தாக்களும் அவதரித்துவிட்டார்கள். புற்றீசல் போல் அவதரித்து விட்டார்கள். உண்மை உணர்ச்சி குறையக் குறைய வியாக்கியான கர்த்தாக்களின் ஆதிக்கம் அதிகமாய்ப் போய் விட்டது. கலைக்கு அவர்கள் எல்லாம் அசுரர்களே ஆனார்கள். அவர்கள் எழுதியுள்ள கணக்கில்லாத வியாக்கியானங்களுக்குள் உண்மைக் கலையை இருக்கிற இடம் தெரியாதபடி புதைத்து விட்டார்கள். உண்மைக் கலையொன்று இருப்பதாக அவர்களுக்குச் சொல்ல முடியாமலே போயிற்று.

இந்த நிலையில் பெரியார் ஒருவர் வியாக்கியான கர்த்தாக்களையும் அவர்களது படாடோபங்களையும் கண்டித்து ஒதுக்கத் தலைப்பட்டார். அதற்காக எவ்வளவோ நூல்களை எத்தனையோ ஆண்டுகளாக ஆராய்ந்தார். ஆராய்ந்ததன் பலனை உலகத்துக்கு எடுத்துச் சொன்னார். மறைந்து போன பூர்வக்கலை அவரால் மக்களுக்கு உதவ வந்தது. (இது நடந்து 500 வருஷங்கள் ஆகிவிட்டன)—சவனரோலா என்பது அவருடைய பெயர்.

உயர்ந்த பண்பாடுகள் மறைந்து போகவும் மறுபடி அர்களை மீட்கவும் ஏற்பட்டது கம்பர் காலத்திலேயே. ஆதி பூர்வமான காலத்திலும் அப்படியே கதைகள் மறையவும் அகத்திய முனிவர் அவைகளை விரிந்த ஆராய்ச்சியினால் மீட்டு உலகத்துக்கு உதவினார்.

இதையே கம்பர் அடையாள மொழியிலே புராண உருவத்திலே கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார்:—

பண்டவுணர் சூழ்கினர் படார் என வானோர்
"என் தவ! எமக்குள்" எனக் குறையிரந்தார்
கண் (டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லையும்
உண்(டு) அவர்கள்பின் உமிழ்க என்றலும்
உமிழ்ந்தான்.

இந்த அற்புதமான விளக்கம் பகுத்தறிவாளருக்குக் கூட ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கிறது.

பண்டவுணர் சூழ்கினர் படார் என வானோர்
"என் தவ! எமக்குள்" எனக் குறையிரந்தார்
கண் (டு) ஒருகை வாரினன் முகந்த கடல் எல்லாம்
உண்(டு) அவர்கள்பின் உமிழ்க என்றலும்
உமிழ்ந்தான்.

இந்த அற்புதமான விளக்கம் பகுத்தறிவாளருக்குக் கூட ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கிறது.

# 11. மொழிபெயர்ப்பதெப்படி?

"மொழி பெயர்ப்பென்பது பொன்னைச் செம்பாக்கும் அரிய ரஸவாதக் கலை" என்று ஸர் வால்ட்டர் ஸ்காட் (Sir Walter Scott) சொன்னார். மொழிபெயர்ப்பு எல்லாமே மூலத்துக்குத் துரோகம் செய்கிற காரியந்தான் என்று மனங்கசந்து சொல்லுகிறார்கள், வேறு சிலர். "கவிதைக்கு இலக்கணம் என்ன?" என்ற கேள்விக்கு, "மொழி—பெயர்க்க முடியாத அம்சம் எதுவோ அதுவே கவிதை" என்று ஒரு ஆங்கில அறிஞர் சொன்னார். இந்தக் கூற்றுகள் எல்லாமே, ஒரு உண்மையை அரைகுறையாகச் சொல்லி, அதற்கு அழுத்தம் கொடுக்க முனைகின்றன. மொழிபெயர்ப்பின் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது தான். ஆனால், மொழிபெயர்ப்பாளர்கள் இதுவரையிலும் சாதித்திருக்கும் சாதனைகளையும் வெற்றிகளையும் நாம் மறந்து விடக்கூடாது.

பாரசீக இலக்கியப் புலவர்கள் பலர். ஓமர்கையாம் எழுதிய "ரூபயத்"திலுள்ள கவிதை மூன்றாம் தரமானது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மொழிபெயர்ப்பாளர் ஃபிட்ஸ்ஜெரால்ட் (Fitzgerald) கைபட்டதும், மூலத்தில் மூன்றாந்தரக் கவிதையாயிருந்தது ஆங்கில மொழி பெயர்ப்பில் முதல்தரக் கவிதையாக உயர்ந்துவிட்டது. ஆகவே, மொழிபெயர்ப்பின் மூலம் செம்பையும் பொன்னாக்கலாம் என்று தெரிகிறது. வங்காள மூலத்திலிருந்து தாகூரின்

# 11. மொழிபெயர்ப்பதெப்படி?

"மொழி பெயர்ப்பென்பது பொன்னைச் செம்பாக்கும் அரிய ரஸவாதக் கலை" என்று ஸர் வால்ட்டர் ஸ்காட் (Sir Walter Scott) சொன்னார். மொழிபெயர்ப்பு எல்லாமே மூலத்துக்குத் துரோகம் செய்கிற காரியந்தான் என்று மனங்கசந்து சொல்லுகிறார்கள், வேறு சிலர். "கவிதைக்கு இலக்கணம் என்ன?" என்ற கேள்விக்கு, "மொழி—பெயர்க்க முடியாத அம்சம் எதுவோ அதுவே கவிதை" என்று ஒரு ஆங்கில அறிஞர் சொன்னார். இந்தக் கூற்றுகள் எல்லாமே, ஒரு உண்மையை அரைகுறையாகச் சொல்லி, அதற்கு அழுத்தம் கொடுக்க முனைகின்றன. மொழி பெயர்ப்பின் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது தான். ஆனால், மொழிபெயர்ப்பாளர்கள் இதுவரையிலும் சாதித்திருக்கும் சாதனைகளையும் வெற்றிகளையும் நாம் மறந்து விடக்கூடாது.

பாரசீக இலக்கியப் புலவர்கள் பலர். ஓமர்கைய்யாம் எழுதிய "ருபயத்"திலுள்ள கவிதை மூன்றும் தரமானது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மொழிபெயர்ப்பாளர் ஃபிட்ஸ்ஜெரால்ட் (Fitzgerald) கைபட்டதும், மூலத்தில் மூன்றுந்தரக் கவிதையாயிருந்தது ஆங்கில மொழி பெயர்ப்பில் முதல்தரக் கவிதையாக உயர்ந்துவிட்டது. ஆகவே, மொழிபெயர்ப்பின் மூலம் செம்பையும் பொன்னாக்கலாம் என்று தெரிகிறது. வங்காள மூலத்திலிருந்து தாகூரின்

கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அற்புதமாக மொழி பெயர்த்திருக்கிறார்களே, அதுவும் மொழிபெயர்ப்புக் கலையின் வல்லமையைக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

ஷேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட், கிங் லீயர், மாக்பெத் ஆகிய மூன்று கவிதை நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும், கம்பராமாயணப் பாடல்களில் ஏறக் குறைய 3,000 பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப் பதிலும் நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமன்று. அவ்வாறு மொழிபெயர்க்கும்போது எத்தனையோ கடினமான பிரச் சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எத்தனையோ படுகுழிகளில் விழாமல் மொழிபெயர்ப்பைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. என் அனுபவத்தின் மூலம் நான் கற்ற பாடங்கள் மற்ற மொழிபெயர்ப்பாளருக்குப் பயன் தரலாம் என்று நினைத்தே இக்கட்டுரையை எழுதலானேன்.

ஷேக்ஸ்பியரைத் தமிழில் மொழிபெயர்த்துவிட்டு, மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒத்துப் பார்த்த பிறகு, கீழ்க்கண்ட முடிபுகளுக்கு வந்தேன்:—மூலத்தில் உள்ள விஷயத்தில் 99.9 சதவிகிதம் மொழிபெயர்ப்பில் இறங்கி விட்டது; ஷேக்ஸ்பியருடைய பாவங்களில் 60 விழுக்காடு தமிழில் இறங்கியிருக்கிறது; ஷேக்ஸ்பியருடைய கவிதையின் நிழலில் 20 சதவிகிதம் மொழி பெயர்ப்பில் வந்திருக்கிறது.

நல்ல வேளையாக, ஷேக்ஸ்பியர் அவருடைய நாடகங்கள் மூலம் மொழிபெயர்க்க முடியாத தத்துவங்களை மாத்திரம் கொடுக்கவில்லை. மனித வாழ்விலுள்ள எண்ணற்ற காட்சிகள், மனிதச் செயலுக்கு அடிப்படையாக இருக்கும் உந்து சக்திகள், சுறியெறிந்து ஓடும் உணர்ச்சி வெள்ளங்கள், அவற்றைச் சாடித் தாக்கும் எதிர்வெள்ளங்கள், விதியின் கம்பீர நடை, வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலேயிருக்கும் முரண்பாடு, மனித இன்பங்களுக்கும் மனிதத் துன்பங் களுக்கும் இடையேயுள்ள பொருந்தாமை, காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்ட புன்மை, காலமும் கணக்கும்

நிதாஞ்சலியை ஆங்கிலத்தில் அற்புதமாக மொழி பெயர்த் திருக்கிறார்களே, அதுவும் மொழிபெயர்ப்புக் கலையின் வல்லமையைக் காட்டிக்கொண்டு நிற்கிறது.

ஷேக்ஸ்பியர் எழுதிய ஹாம்லெட், கிங் லீயர், மாக்பெத் ஆகிய மூன்று கவிதை நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும், கம்பராமாயணப் பாடல்களில் ஏறக் குறைய 3,000 பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப் பதிலும் நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமன்று. அவ்வாறு மொழிபெயர்க்கும்போது எத்தனையோ கடினமான பிரச் சினைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எத்தனையோ படுகுழிகளில் விழாமல் மொழிபெயர்ப்பைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. என் அனுபவத்தின் மூலம் நான் கற்ற பாடங்கள் மற்ற மொழிபெயர்ப்பாளருக்குப் பயன் தரலாம் என்று நினைத்தே இக்கட்டுரையை எழுதலானேன்.

ஷேக்ஸ்பியரைத் தமிழில் மொழிபெயர்த்துவிட்டு, மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒத்துப் பார்த்த பிறகு, கீழ்க்கண்ட முடிபுகளுக்கு வந்தேன்:—மூலத்தில் உள்ள விஷயத்தில் 99.9 சதவிகிதம் மொழிபெயர்ப்பில் இறங்கி விட்டது; ஷேக்ஸ்பியருடைய பாவங்களில் 60 விழுக்காடு தமிழில் இறங்கியிருக்கிறது; ஷேக்ஸ்பியருடைய கவிதையின் நிழலில் 20 சதவிகிதம் மொழி பெயர்ப்பில் வந்திருக்கிறது.

நல்ல வேளையாக, ஷேக்ஸ்பியர் அவருடைய நாடகங்கள் மூலம் மொழிபெயர்க்க முடியாத தத்துவங்களை மாத்திரம் கொடுக்கவில்லை. மனித வாழ்விலுள்ள எண்ணற்ற காட்சிகள், மனிதச் செயலுக்கு அடிப்படையாக இருக்கும் உந்து சக்திகள், சுழிபெறிந்து ஓடும் உணர்ச்சி வெள்ளங்கள், அவற்றைச் சாடித் தாக்கும் எதிர்வெள்ளங்கள், விதியின் கம்பீர நடை, வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலேயிருக்கும் முரண்பாடு, மனித இன்பங்களுக்கும் மனிதத் துன்பங் களுக்கும் இடையேயுள்ள பொருந்தாமை, காலத்துக்கும் இடத்துக்கும் கட்டுப்பட்ட புன்மை, காலமும் கணக்கும்

நீத்த பெருமை மொழிபெயர்க்கக்கூடிய இவற்றையெல்லாம் பற்றியும் ஷேக்ஸ்பியர் பாடியிருக்கிறார், அவர் கதாசிரியனாய், உளநூற்புலவராய், தத்துவஞானியாய் கலைஞனாய் இருந்து சொல்லும் பொருள்கள் பல மொழிபெயர்க்கக்கூடியவை. அவர் கையாளும் நாடக உத்திகளும் தந்திரங்களும் தமிழ்ப்படுத்தக்கூடியவைதான்.

எப்படிக் கஷ்டப்பட்டாவது ஷேக்ஸ்பியருடைய உள்ளுணர்வைத் தமிழில் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆசை மொழிபெயர்ப்பாளருக்கு எப்போதும் இருக்க வேண்டும். இவ்வாறு தமிழாக்கம் செய்யும்போது மொழிபெயர்ப்பாளர் சில சுதந்திரங்களை அனுபவிக்கலாம். மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும்மொழிபெயர்ப்பாளனுடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காகஅமைந்துவிடக்கூடாது. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும் போது, மூலத்திலுள்ள உயிர்த்தத்துவம் செத்து, சுவையுள்ளது சுவையற்றுப் போகலாம். அதே சமயத்தில், மூலத்திலுள்ள ரஸத்தை இறக்குகிறேன் என்று நொண்டிச் சாக்கைச் சொல்லிக் கொண்டு மொழிபெயர்ப்பாளன் வரம்பு மீறிச் செல்லவும் கூடாது. மூலத்துக்கு உண்மையாக இருக்க வேண்டும் மொழிப்பெயர்ப்பு, மூலத்தின் தழுவலாகவோ களப்படமாகவோ மாறிவிடக்கூடாது.

மூலத்துக்கு உண்மையோடிருக்க வேண்டும் என்று நினைக்கும்போது மொழிபெயர்ப்பு அலங்கோலமாகவும் காதுக்கு இங்கிதமில்லாமலும் போய்விடும். காதுக்கு இங்கிதமாகவும், மிடுக்கு நடையிலும் இருக்க வேண்டும் என்று நினைத்தால் மொழிபெயர்ப்பு மூலத்துக்குத் துரோகம் செய்ததாக முடிந்துவிடும். பெண்ணைத் தேர்ந்தெடுக்க வந்த மாப்பிள்ளையிடத்திலே, ''உனக்கு அழகுள்ள பெண் வேண்டுமா? அல்லது உண்மையுள்ள பெண் வேண்டுமா? அழகிருந்தால், உண்மையிருக்காது; உண்மையிருந்தால், அழகிருக்காது'' என்று சொன்னால் மாப்பிள்ளை

நீத்த பெருமை மொழிபெயர்க்கக்கூடிய இவற்றையெல்லாம் பற்றியும் ஷேக்ஸ்பியர் பாடியிருக்கிறார், அவர் கதாசிரியனாய், உளநூற்புலவராய், தத்துவஞானியாய், கலைஞனாய் இருந்து சொல்லும் பொருள்கள் பல மொழிபெயர்க்கக்கூடியவை. அவர் கையாளும் நாடக உத்திகளும் தந்திரங்களும் தமிழ்ப்படுத்தக்கூடியவைதான்.

எப்படிக் கஷ்டப்பட்டாவது ஷேக்ஸ்பியருடைய உள்ளுணர்வைத் தமிழில் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆசை மொழிபெயர்ப்பாளருக்கு எப்போதும் இருக்க வேண்டும். இவ்வாறு தமிழாக்கம் செய்யும்போது மொழிபெயர்ப்பாளர் சில சுதந்திரங்களை அனுபவிக்கலாம். மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும்மொழிபெயர்ப்பாளனுடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காகஅமைந்துவிடக்கூடாது. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும் போது, மூலத்திலுள்ள உயிர்த்தத்துவம் செத்து, சுவையுள்ளது சுவையற்றுப் போகலாம். அதே சமயத்தில், மூலத்திலுள்ள ரஸத்தை இறக்குகிறேன் என்று நொண்டிச் சாக்கைச் சொல்லிக் கொண்டு மொழிபெயர்ப்பாளன் வரம்பு மீறிச் செல்லவும் கூடாது. மூலத்துக்கு உண்மையாக இருக்க வேண்டும் மொழிப்பெயர்ப்பு, மூலத்தின் தழுவலாகவோ களப்படமாகவோ மாறிவிடக்கூடாது.

மூலத்துக்கு உண்மையோடிருக்க வேண்டும் என்று நினைக்கும்போது மொழிபெயர்ப்பு அலங்கோலமாகவும் காதுக்கு இங்கிதமில்லாமலும் போய்விடும். காதுக்கு இங்கிதமாகவும், மிடுக்கு நடையிலும் இருக்க வேண்டும் என்று நினைத்தால் மொழிபெயர்ப்பு மூலத்துக்குத் துரோகம் செய்ததாக முடிந்துவிடும். பெண்ணைத் தேர்ந்தெடுக்க வந்த மாப்பிள்ளையிடத்திலே, "உனக்கு அழகுள்ள பெண் வேண்டுமா? அல்லது உண்மையுள்ள பெண் வேண்டுமா? அழகிருந்தால், உண்மையிருக்காது; உண்மையிருந்தால், அழகிருக்காது" என்று சொன்னால் மாப்பிள்ளை

எவ்வளவு திகைப்படைவாரோ? அவ்வளவு திகைப்படைகிறார் மொழிபெயர்ப்பாளரும். உண்மையில்லாத அழகு, அழகில்லாத உண்மையைப் போல், வேதனை தருகின்ற ஒன்று. தூங்காத கவனத்தோடும் தன்னெச்சரிக்கையோடும் தன்னுடைய மொழி பெயர்ப்பைச் சோதித்துக் கொண்டேயிருக்கும் மொழிபெயர்ப்பாளர் அழகோடும் உண்மையோடும் மொழிபெயர்க்கும் வல்லமையைப் பெறலாம்.

சில சமயங்களில், மூலத்திலுள்ள சில சொற்களை மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டால் அதனால் மொழி பெயர்ப்பு ஒன்றும் கெட்டுப் போய்விடாது. உண்மையில். மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாக மொழிபெயர்ப்பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டியிருக்கும். இந்தக் கொள்கையைத் தெளிவு படுத்துவதற்காக, லியர் அரசன் என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தில் 2வது அங்கம் 2வது காட்சியிலுள்ள கடுமையான வசவு வாசகம் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். கானெரிலுடைய காரியஸ்தர் ஆஸ்வால்டை எதிர்த்துக் கீழ்க்கண்டவாறு கென்ட் பேசுகிறான் :

"A Knave, a rascal, an eater of broken meats; a base, proud, shallow, beggarly,three-suited, hundred pound, filthy, worsted-stocking Knave; a lily-livered, acticn-taking Knave; a whoreson, glass-gazing, super serviceable, finical rogue, one trunk-inheriting slave:- one that wouldst be a bawd, in way of good service, & art nothing but the composition of a knave, beggar, coward, pandar and the son and heir of a mongrel bitch."

மேற்கண்ட சொற்களை ஒன்றுவிடாமல் பயபக்தியோடு தமிழ்ப்படுத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த

எவ்வளவு திகைப்படைவாரோ? அவ்வளவு திகைப்படை கிறார் மொழிபெயர்ப்பாளரும். உண்மையில்லாத அழகு, அழகில்லாத உண்மையைப் போல், வேதனை தருகின்ற ஒன்று. தூங்காத கவனத்தோடும் தன்னெச்சரிக்கை யோடும் தன்னுடைய மொழி பெயர்ப்பைச் சோதித்துக் கொண்டேயிருக்கும் மொழிபெயர்ப்பாளர் அழகோடும் உண்மையோடும் மொழிபெயர்க்கும் வல்லமையைப் பெறலாம்.

சில சமயங்களில், மூலத்திலுள்ள சில சொற்களை மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டால் அதனால் மொழி பெயர்ப்பு ஒன்றும் கெட்டுப் போய்விடாது. உண்மையில், மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாக மொழிபெயர்ப் பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டியிருக்கும். இந்தக் கொள்கையைத் தெளிவு படுத்துவதற்காக, லியர் அரசன் என்ற ஷேக்ஸ்பியர் நாட கத்தில் 2வது அங்கம் 2வது காட்சியிலுள்ள கடுமையான வசவு வாசகம் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள் வோம். கானெரிலுடைய காரியஸ்தர் ஆஸ்வால்டை எதிர்த்துக் கீழ்க்கண்டவாறு கெண்ட் பேசுகிறான் :

"A Knave, a rascal, an eater of broken meats; a base, proud, shallow, beggarly,three-suited, hundred pound, filthy, worsted-stocking Knave; a lily-livered, acticn-taking Knave; a whoreson, glass-gazing, super serviceable, finical rogue, one trunk-inheriting slave:-one that wouldst be a bawd, in way of good service, & art nothing but the composition of a knave, beggar, coward, pandar and the son and heir of a mongrel bitch."

மேற்கண்ட சொற்களை ஒன்றுவிடாமல் பயபக்தியோடு தமிழ்ப்படுத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த

வாசகத்தைக் கிழக்கண்ட முறையில் மொழிபெயர்த் கலாமோ என்று எண்ணுகிறேன்:

"கயவன், அயோக்கியன், எச்சில் பொறுக்கி; தரங் கெட்ட, திமிர் பிடித்த வெங்கன்; அட்டுப் பிடித்த ஓசிச் சட்டை, கலிக்காரச் சல்லி; பயந்தாரி, டம்பாச்சாரி, வேசி மகன்; தளுக்குக்காரப் போக்கிரி. ஒற்றை டப்பாப் பிழைப்பு; கூட்டிக் கொடுக்கிற பயல்; போக்கிரியையும் பிச்சைக்காரனையும் கோழையையும் டாப்பர் மாமாவையும் ஒன்றாய் பிடிச்சு வைச்ச நரி நீ. ஜாதி கெட்ட நாய் போட்ட சொறிக்குட்டி, அதுக்குத் தனி வாரிசு"

இங்கே நாம் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்க வில்லை. உண்மையில் அசலில் உள்ள சில சொற்களை மொழி பெயர்க்காமல் விட்டு விட்டோம். அதோடு வசவுச் சொற்களைப் புதுமுறையில் கலவை செய்திருக் கிறோம் தமிழாக்கத்தில். இவ்வாறு செய்ததால் மூலத்தின் சாரம் கெட்டுப் போனதாகத் தெரியவில்லை.

அந்தப்படியாக, நாட்டின் தட்ப வெப்ப நிலைக்குத் தக்கபடி மொழிபெயர்ப்பைப் பக்குவப்படுத்த வேண்டும். சில வேளைகளில் ஷேக்ஸ்பியருடைய உணர்ச்சிகளையும் கருத்துகளையும் சொல் திருப்பங்களையும் தமிழ்நாட்டின் சிந்தனை மரபுகளுக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியிருக் கிறது.

கூர்ந்து கவனிக்கும்போது, சொற்கள் வெறும் அடை யாளங்களே என்பது தெரியும். ஒரு நாட்டு மக்களுடைய பண்பாடு, பேச்சு முறை, மரபு, மனவளம், பூகோள இயல் முதலியவற்றால் மேற்சொன்ன அடையாளங்கள் உருவாக்கப் படுகின்றன. குணத்திலும் பாங்கிலும் முற்றிலும் வேறு பட்ட மொழிகள் ஆங்கிலமும் தமிழும். இரு வேறு பண் பாடுகளின் பிரதிநிதிகளாக இருக்கும் இம்மொழிகளின்

வாசகத்தைக் கிழக்கண்ட முறையில் மொழிபெயர்க்கலாமோ என்று எண்ணுகிறேன்:

"கயவன், அயோக்கியன், எச்சில் பொறுக்கி; தரங்கெட்ட, திமிர் பிடித்த வெங்கன்; அட்டுப் பிடித்த ஓசிச் சட்டை, கலிக்காரச் சல்லி;'பயந்தாரி, டம்பாச்சாரி, வேசி மகன்; தளுக்குக்காரப் போக்கிரி. ஒற்றை டப்பாப் புழுக்கை; கூட்டிக் கொடுக்கிற பயல்; போக்கிரியையும் பிச்சைக்காரனையும் கோழையையும் டாப்பர் மாமாவையும் ஒன்றாய் பிடிச்சு வைச்ச நரி நீ. ஜாதி கெட்ட நாய் போட்ட சொறிக்குட்டி, அதுக்குத் தனி வாரிசு"

இங்கே நாம் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்கவில்லை. உண்மையில் அசலில் உள்ள சில சொற்களை மொழி பெயர்க்காமல் விட்டு விட்டோம். அதோடு வசவுச் சொற்களைப் புதுமுறையில் கலவை செய்திருக்கிறோம் தமிழாக்கத்தில். இவ்வாறு செய்ததால் மூலத்தின் சாரம் கெட்டுப் போனதாகத் தெரியவில்லை.

அந்தந்தபடியாக, நாட்டின் தட்ப வெப்ப நிலைக்குத் தக்கபடி மொழிபெயர்ப்பைப் பக்குவப்படுத்த வேண்டும். சில வேளைகளில் ஷேக்ஸ்பியருடைய உணர்ச்சிகளையும் கருத்துகளையும் சொல் திருப்பங்களையும் தமிழ்நாட்டின் சிந்தனை மரபுகளுக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியிருக்கிறது.

கூர்ந்து கவனிக்கும்போது, சொற்கள் வெறும் அடையாளங்களே என்பது தெரியும். ஒரு நாட்டு மக்களுடைய பண்பாடு, பேச்சு முறை, மரபு, மனவளம், பூகோள இயல் முதலியவற்றால் மேற்சொன்ன அடையாளங்கள் உருவாக்கப் படுகின்றன. குணத்திலும் பாங்கிலும் முற்றிலும் வேறுபட்ட மொழிகள் ஆங்கிலமும் தமிழும். இரு வேறு பண்பாடுகளின் பிரதிநிதிகளாக இருக்கும் இம்மொழிகளின்

வேறுபட்ட தன்மையை ஒரு மொழிபெயர்ப்பாளர் சதா உணர்வில் வைத்துக் 'கொண்டிருந்தால்தான், அவருடைய மொழிபெயர்ப்பு இயல்பானதாக இருக்கும்.

பனிக்கட்டிப் பிரதேசமான இங்லண்டில் மாவு போன்ற வெண்பனி, மழையாகப் பெய்து வீடு, வாசல், தெருக்களெல்லாம் உறைந்து கிடப்பதைப் பார்க்கலாம். மாசற்ற இந்த வெண்பனி ஷேக்ஸ்பியரைப் போன்ற மாபெரும் கவிஞர்களுடைய உவமைக் கருவூலத்திலே ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டின் தட்பவெப்ப நிலையிலே Flakes என்று ஆங்கிலேயர் கூறும் வெண்பனி நுரையைத் தமிழர்கள் பார்த்திருக்க முடியாது. இவ்வாறு தமிழர்களுடைய அனுபவ அறிவுக்கு எட்டாத ஆங்கில உவமைப் பொருள்களை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது என்பது ஒரு முக்கிய பிரச்சினை. மூலத்தின் உள்ளுணர்ச்சியைக் காட்டவல்ல, ஆனால் தமிழகத்தில் அடிபடுகிற ஒரு பொருளை 'Flakes'—க்குப் பதில் உவமையாகச்சொல்லலாம். லீயர், 4வது அங்கம், 6வது காட்சியில் ;கார்டீலியா. தன் தந்தை தன் தமக்கைமார் கையில் பட்ட பாட்டை நினைந்து வருந்துகிறாள்;—

'Had you not been their father, these white flakes
Had challenged pity of them.:Was this a face
To be exposed against the warring winds?"

இந்த வாசகத்தைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்க்கலாம் என்று கருதுகேன்.

"தந்தையென்று பார்க்காவிட்டாலும் பிச்சிப்பூப் போன்ற இந்த வெள்ளை முடியைப் பார்த்தாவது அவர்கள் இரங்கியிருக்கக்கூடாதா? குமுறிப் போராடும் காற்றுக்கு இரையாக வேண்டிய முகமா இது?''

வேறுபட்ட தன்மையை ஒரு மொழிபெயர்ப்பாளர் சதா உணர்வில் வைத்துக் 'கொண்டிருந்தால்தான், அவருடைய மொழிபெயர்ப்பு இயல்பானதாக இருக்கும்.

பனிக்கட்டிப் பிரதேசமான இங்லண்டில் மாவு போன்ற வெண்பனி, மழையாகப் பெய்து வீடு, வாசல், தெருக்களி லெல்லாம் உறைந்து கிடப்பதைப் பார்க்கலாம். மாசற்ற இந்த வெண்பனி ஷேக்ஸ்பியரைப் போன்ற மாபெரும் கவிஞர்களுடைய உவமைக் கருவூலத்திலே ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டின் தட்பவெப்ப நிலையிலே Flakes என்று ஆங்கிலேயர் கூறும் வெண்பனி நுரையைத் தமிழர்கள் பார்த்திருக்க முடியாது. இவ்வாறு தமிழர்களுடைய அனுபவ அறிவுக்கு எட்டாத ஆங்கில உவமைப் பொருள்களை எவ்வாறு தமிழ்ப்படுத்துவது என்பது ஒரு முக்கிய பிரச்சினை. மூலத்தின் உள்ளுணர்ச்சி யைக் காட்டவல்ல, ஆனால் தமிழகத்தில் அடிபடுகிற ஒரு பொருளை 'Flakes'—க்குப் பதில் உவமையாகச் சொல்லலாம். லீயர், 4வது அங்கம், 6வது காட்சியில் ; கார்டீலியா, தன் தந்தை தன் தமக்கைமார் கையில் பட்ட பாட்டை நினைந்து வருந்துகிறாள்;—

'Had you not been their father, these white flakes
Had challenged pity of them.:Was this a face
To be exposed against the warring winds?"

இந்த வாசகத்தைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்க் கலாம் என்று கருதுகிறேன்.

"தந்தையென்று பார்க்காவிட்டாலும் பிச்சிப்பூப் போன்ற இந்த வெள்ளை முடியைப் பார்த்தாவது அவர்கள் இரங்கியிருக்கக்கூடாதா? குமுறிப் போராடும் காற்றுக்கு இரையாக வேண்டிய முகமா இது?''

வாறு நிறம் மாறுகிறது. அகௌரவமாகக் கருதப்படும் இச்சொல், 'முலைப்பால்' என்ற தொடரில் பாலைத் தழுவி நிற்கும்போது, தாயன்பின் அறிகுறியாக மாறி கண்ணியம் பெற்றுவிடுகிறது.

"கொலைக்கு உடந்தையாயிருக்கும் சக்திகளே, என் பெண்மைக் கொங்கைகளினுட் புகுந்து, முலைப்பாலைப் பித்தமாக மாற்றி, உங்களுடைய வன்கண்மையின் துணை கொண்டு, இயல்பான தீவினைக்கு ஏவல் புரியுங்கள்"

பண்பாட்டுக்கேற்றவாறு எடுத்துச் சொல்லும் முறையிலும் மொழி பெயர்ப்பாளர் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

அயல் மொழிச் சொற்களை இன்னொரு விதத்தில் வசக்கவும் வேண்டியிருக்கிறது. ஷேக்ஸ்பியருடைய நூல்களில் புராணக் கடவுளர்களைப் பற்றி பல இடங்களில் பேசப்பட்டிருக்கிறது. அங்குள்ள தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் ஈடான தேவர்களும் தேவதைகளும் தமிழ் அல்லது ஹிந்துப் புராணங்களில் இல்லை. அப்படி ஒரு சிலர் இருந்தால், தமிழர் உள்ளத்தில் உணர்ச்சியையூட்டக் கூடிய புராணக் கடவுளர்கள் பெயரைப் பயன்படுத்துவதே நலம். மேல்நாட்டுப் புராணங்களில் வருகிற நெப்ட்யூனை (Neptune) வருணன் என்றும் குப்பிடை (Cupid) மன்மதன் என்றும் மொழிபெயர்க்கலாம் என்று தோன்றுகிறது. சமயப் பண்பாடு சம்பந்தமான சொற்களை மொழி பெயர்ப்பதில் தொல்லை அதிகம் என்பதை அனுபவத்தில் அறியலாம்.

வாக்கிய அமைப்பு முறையிலே, ஆங்கிலமும் தமிழும் மிக்க மாறுபட்டவை. நிகழ்ச்சிகள் நடந்த கால வரிசையைக் குறிக்கும்போது, ஆங்கிலம் இயல்புக்கு விரோதமாகப் பேசும். உதாரணமாக, "This morning I met the man

வாறு நிறம் மாறுகிறது. அகௌரவமாகக் கருதப்படும் இச்சொல், 'முலைப்பால்' என்ற தொடரில் பாலைத் தழுவி நிற்கும்போது, தாயன்பின் அறிகுறியாக மாறி கண்ணியம் பெற்றுவிடுகிறது.

"கொலைக்கு உடந்தையாயிருக்கும் சக்திகளே, என் பெண்மைக் கொங்கைகளினுட் புகுந்து, முலைப்பாலைப் பித்தமாக மாற்றி, உங்களுடைய வன்கண்மையின் துணை கொண்டு, இயல்பான தீவினைக்கு ஏவல் புரியுங்கள்"

பண்பாட்டுக்கேற்றவாறு எடுத்துச் சொல்லும் முறையிலும் மொழி பெயர்ப்பாளர் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

அயல் மொழிச் சொற்களை இன்னொரு விதத்தில் வசக்கவும் வேண்டியிருக்கிறது. ஷேக்ஸ்பியருடைய நூல்களில் புராணக் கடவுளர்களைப் பற்றி பல இடங்களில் பேசப் பட்டிருக்கிறது. அங்குள்ள தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் ஈடான தேவர்களும் தேவதைகளும் தமிழ் அல்லது ஹிந்துப் புராணங்களில் இல்லை. அப்படி ஒரு சிலர் இருந்தால், தமிழர் உள்ளத்தில் உணர்ச்சியையூட்டக் கூடிய புராணக் கடவுளர்கள் பெயரைப் பயன்படுத்துவதே நலம். மேல்நாட்டுப் புராணங்களில் வருகிற நெப்ட்யூனை (Neptune) வருணன் என்றும் குப்பிடை (Cupid) மன்மதன் என்றும் மொழிபெயர்க்கலாம் என்று தோன்றுகிறது. சமயப் பண்பாடு சம்பந்தமான சொற்களை மொழி பெயர்ப்பதில் தொல்லை அதிகம் என்பதை அனுபவத்தில் அறியலாம்.

வாக்கிய அமைப்பு முறையிலே, ஆங்கிலமும் தமிழும் மிக்க மாறுபட்டவை. நிகழ்ச்சிகள் நடந்த கால வரிசையைக் குறிக்கும்போது, ஆங்கிலம் இயல்புக்கு விரோதமாகப் பேசும். உதாரணமாக, "This morning I met the man

who came from Singapore yesterday" என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். நேற்று அந்த மனிதன் சிங்கப்பூரிலிருந்து வந்த நிகழ்ச்சி, நான் இன்று காலை அவனை சந்தித்த நிகழ்ச்சியைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. ஆனால், மேற்கண்ட ஆங்கில வாக்கியம் காலத்தால் முற்பட்டதைப் பின்னாலும், பிற்பட்டதை முன்னாலும் சொல்லுகிறது. ஆனால், தமிழ் மொழியோ காலக்கிரமத்தில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த முறைப்படியே வாக்கியத்திலும் அவற்றை அமைத்துவிடும். உதாரணமாக, "நேற்று சிங்கப்பூரிலிருந்து வந்தவரை இன்று நான் சந்தித்தேன்" என்று முன் நிகழ்ந்ததை வாக்கியத்தின் முற்பாகத்திலும் பின் நிகழ்ந்ததை வாக்கியத்தின் பிற்பாகத்திலும் வைத்துத் தமிழ் கால இயல்பு கெடாது பேசும். ஆகையால், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும்போது வாக்கிய அமைப்பு முறையை நேர்மாறாக மாற்ற வேண்டும்.

ஷேக்ஸ்பியர் படைத்த நாடகக் கோமாளிகள் சிலேடைப் புலிகளாக இருப்பார்கள். ஆங்கிலத்திலே அவர்கள் பயன்படுத்தும் சிலேடைகளைத் தமிழ்ப்படுத்துவது என்பது முடியாத காரியம். உதாரணமாக, 'lying' என்ற ஆங்கிலச் சொல் படுத்திருத்தல், பொய் சொல்லுதல் ஆகிய இரு வேறு பொருள்களைத் தரக்கூடிய ஒரு சொல். தமிழில் இவ்விரண்டு பொருள்களையும் தரக்கூடிய ஒரே சொல்லிருக்கிறதா என்று நான் நெடுங்காலமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். இதுவரையிலும் அப்படி ஒரு சொல் கிட்டவில்லை. ஆகவே, 'lying' என்ற சொல்லை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் சிலேடை விளையாட்டு விளையாடும் போது, தமிழ் மொழி அந்த விளையாட்டை விளையாட முடியாமல் காலைத் தேய்க்கிறது. இதைப் போலவே தமிழிலிருக்கும் சிலேடைகளைக் கண்டு ஆங்கில மொழி திகைக்கிறது..

who came from Singapore yesterday'' என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். நேற்று அந்த மனிதன் சிங்கப்பூரி லிருந்து வந்த நிகழ்ச்சி, நான் இன்று காலை அவனை சந்தித்த நிகழ்ச்சியைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. ஆனால், மேற்கண்ட ஆங்கில வாக்கியம் காலத்தால் முற்பட்டதைப் பின்னாலும், பிற்பட்டதை முன்னாலும் சொல்லுகிறது. ஆனால், தமிழ் மொழியோ காலக்கிரமத் தில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த முறைப்படியே வாக்கியத்திலும் அவற்றை அமைத்துவிடும். உதாரணமாக, ''நேற்று சிங்கப்பூரிலிருந்து வந்தவரை இன்று நான் சந்தித்தேன்'' என்று முன் நிகழ்ந்ததை வாக்கியத்தின் முற்பாகத்திலும் பின் நிகழ்ந்ததை வாக்கியத்தின் பிற்பாகத்திலும் வைத்துத் தமிழ் கால இயல்பு கெடாது பேசும். ஆகையால், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும்போது வாக்கிய அமைப்பு முறையை நேர்மாறாக மாற்ற வேண்டும்.

ஷேக்ஸ்பியர் படைத்த நாடகக் கோமாளிகள் சிலேடைப் புலிகளாக இருப்பார்கள். ஆங்கிலத்திலே அவர்கள் பயன்படுத்தும் சிலேடைகளைத் தமிழ்ப்படுத்துவது என்பது முடியாத காரியம். உதாரணமாக, 'lying' என்ற ஆங்கிலச் சொல் படுத்திருத்தல், பொய் சொல்லுதல் ஆகிய இரு வேறு பொருள்களைத் தரக்கூடிய ஒரு சொல். தமிழில் இவ்விரண்டு பொருள்களையும் தரக்கூடிய ஒரே சொல்லிருக்கிறதா என்று நான் நெடுங்காலமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். இதுவரையிலும் அப்படி ஒரு சொல் கிட்டவில்லை. ஆகவே, 'lying' என்ற சொல்லை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் சிலேடை விளையாட்டு விளையாடும் போது, தமிழ் மொழி அந்த விளையாட்டை விளையாட முடியாமல் காலைத் தேய்க்கிறது. இதைப் போலவே தமிழி லிருக்கும் சிலேடைகளைக் கண்டு ஆங்கில மொழி திகைக் கிறது..

கிலேடைகளைத் தமிழ்ப்படுத்த முடியாதது போலவே, ஆங்கிலேயர்களுக்கே உரிய சில உணவு, உடை, ஸ்தாபன முறைகளையும் தமிழில் மொழிபெயர்க்கமுடியாது. அவற்றை அப்படி, அப்படியே தமிழில் கொடுக்க வேண்டியது. தான். பூட்ஸ் (boots), ஷூஸ் (shoes), ஸாக்ஸ் (socks), ஸ்டாக்கிங்ஸ் (stockings), கார்டர்ஸ் (Garters), கேக்ஸ், (Cakes) 'பீர் (beer), ஏல் (ale), ட்யூக் (Duke), மார்க்யுஸ் (Marquis) ஏர்ல் (Earl) முதலியவற்றை எவ்வாறு தமிழாக்குவது? இங்கிலாந்துக்கே சிறப்பாக உரிய பூக்கள், பூண்டுகள் பறவைகள், மிருகங்கள் முதலியவை மொழி பெயர்ப்பை, மீறி நிற்பவை.

ஆங்கில மொழியின் பண்புகளையுணர்ந்த ஒரு புலவர் சொன்னார். "ஆங்கில மொழி நாணிக் கொண்டிருக்கும் ஒரு கன்னிப்பெண்ணைப் போன்றவள், உரிமை பாராட்டிப் பழகுகிறவர்களிடத்திலே தான் அவள் தன் காதலைக் காட்டுவாள்" என்று. ஷேக்ஸ்பியர் இந்தப் பெண்ணோடு உரிமை பாராட்டியதோடு நின்றுவிடவில்லை; அவளைத் தீண்டியும், கேலி செய்தும், சடையைப் பிடித்திழுத்தும், பலவந்தமாகக் கற்பழித்துமிருக்கிறார். ஷேக்ஸ்பியர் இவ்வளவு அக்கிரமம் செய்திருந்தபோதிலும, ஆங்கிலம் என்ற பெண்ணழகி தன்னுடைய அழகுகளின் மர்மங்களையெல்லாம் ஷேக்ஸ்பியருக்கு ஒளிவு மறைவில்லாமல் காட்டியது போல, வேறு ஆங்கிலம் தெரிந்த ஒரு மனிதனுக்கும் இதுவரையில் காட்டியதில்லை. ஷேக்ஸ்பியர் பெயர்ச்சொற்களை அச்சுறுத்தி வினைச்சொற்களாகப் பணி செய்யும்படி செய்வார், "He childed as I fatherd" (லீயர் அரசன், அங்கம் 3 காட்சி 6). சொற்களைச் சேர்மானம் செய்வதிலும் கலவை செய்வதிலும் புதுச்சொற்களைத் துணிச்சலோடு உண்டாக்குவதிலும் கைதேர்ந்தவர் ஷேக்ஸ்பியர். மாயக்காரிகளுடைய அண்டாவிலே மாந்திரீகக் கஷாயம் தருபுருவென்று கொதிக்கிறது. கஷாயத்துக்குள்ளே கொதிக்கிற சரக்கு

கிலேடைகளைத் தமிழ்ப்படுத்த முடியாதது போலவே, ஆங்கிலேயர்களுக்கே உரிய சில உணவு, உடை, ஸ்தாபன முறைகளையும் தமிழில் மொழிபெயர்க்கமுடியாது. அவற்றை அப்படி, அப்படியே தமிழில் கொடுக்க வேண்டியது தான். பூட்ஸ் (boots), ஷூஸ் (shoes), ஸாக்ஸ் (socks), ஸ்டாக்கிங்ஸ் (stockings), கார்டர்ஸ் (Garters), கேக்ஸ், (Cakes) 'பீர் (beer), ஏல் (ale), ட்யூக் (Duke), மார்க்யுஸ் (Marquis) ஏர்ல் (Earl) முதலியவற்றை எவ்வாறு தமிழாக்குவது? இங்கிலாந்துக்கே சிறப்பாக உரிய பூக்கள், பூண்டுகள் பறவைகள், மிருகங்கள் முதலியவை மொழி பெயர்ப்பை, மீறி நிற்பவை.

ஆங்கில மொழியின் பண்புகளையுணர்ந்த ஒரு புலவர் சொன்னார். "ஆங்கில மொழி நாணிக் கொண்டிருக்கும் ஒரு கன்னிப்பெண்ணைப் போன்றவள், உரிமை பாராட்டிப் பழகுகிறவர்களிடத்தில் தான் அவள் தன் காதலைக் காட்டுவாள்'' என்று. ஷேக்ஸ்பியர் இந்தப் பெண்ணோடு உரிமை பாராட்டியதோடு நின்றுவிடவில்லை; அவளைத் தீண்டியும், கேலி செய்தும், சடையைப் பிடித்திழுத்தும், பலவந்தமாகக் கற்பழித்துமிருக்கிறார். ஷேக்ஸ்பியர் இவ்வளவு அக்கிரமம் செய்திருந்தபோதிலும, ஆங்கிலம் என்ற பெண்ணழகி தன்னுடைய அழகுகளின் மர்மங்களையெல்லாம் ஷேக்ஸ்பியருக்கு ஒளிவு மறைவில்லாமல் காட்டியது போல, வேறு ஆங்கிலம் தெரிந்த ஒரு மனிதனுக்கும் இதுவரையில் காட்டியதில்லை. ஷேக்ஸ்பியர் பெயர்ச்சொற்களை அச் சுறுத்தி வினைச்சொற்களாகப் பணி செய்யும்படி செய்வார், "He childed as I fatherd" (லீயர் அரசன், அங்கம் 3 காட்சி 6). சொற்களைச் சேர்மானம் செய்வதிலும் கலவை செய்வதிலும் புதுச்சொற்களைத் துணிச்சலோடு உண்டாக்குவதிலும் கைதேர்ந்தவர் ஷேக்ஸ்பியர். மாயக்காரிகளுடைய அண்டாவிலே மாந்திரீகக் கஷாயம் தருபுறுவென்று கொதிக்கிறது. கஷாயத்துக்குள்ளே கொதிக்கிற சரக்கு

களின் பட்டியல் ஒன்றைக் கொடுக்கிறார் ஷேக்ஸ்பியர் (மாக்பெத் அங்கம் IV காட்சி I)

> Nose of Turk and Tartar's lips
> Finger of birth-strangled babe
> Ditch-delivered by a drab.

ஆவேசத்தில் பிறந்த அசைக்க முடியாத சொற்கள் இவை. இவற்றை எடுத்து இயம்புவதற்கு மொழி பெயர்ப்புக் கலைக்கு ஆற்றல் இருக்கிறதா என்று ஐயப்பட வேண்டியது தான்.

ஷேக்ஸ்பியர் நீண்ட வாக்கியங்களையும் சொற்றொடர் களையும் தொடுத்தும் பிணைத்தும் விடுகிறார். ஆனாலும் இந்தப் பிணையலால், வாக்கியங்களின் பொருட்டெளிவு கொஞ்சமும் பாதிக்கப்படவில்லை. இப்பேர்ப்பட்ட விசித்திரமான குறளி வேலையை ஹாம்லெட், அங்கம் III காட்சி II-ல் வருகிற ஒரு வாசகத்தில் காண்கிறோம். டென் மார்க்கின் இளவரசன் நடிப்புக் கலை எப்படியிருக்க வேண்டும் என்று நடிகர்களுக்குப் போதிக்கிறான்:—

"Speak the speech, I pray you, as I pronounced, it to you, trippingly on this tongue; but if you mouth it as many of your players do, I had as lief the town-crier spoke my lines. Nor do not saw the air too much with your hand, thus; but use all gently; for in the very torrent, tempest and—as I may say—whirlwind of passion, you must acquire and beget a temperance, that may give it smoothness. O, it offends me to the soul to hear a robustious periwigpated fellow tear a passion to tatters, to very rags, to split the ears of the groundlings who for the most part are capable of nothing, but inexplicable dumb-shows and noise."

கனின் பட்டியல் ஒன்றைக் கொடுக்கிறார் ஷேக்ஸ்பியர் (மாக்பெத் அங்கம் IV காட்சி I)

> Nose of Turk and Tartar's lips
> Finger of birth-strangled babe
> Ditch-delivered by a drab.

ஆவேசத்தில் பிறந்த அசைக்க முடியாத சொற்கள் இவை. இவற்றை எடுத்து இயம்புவதற்கு மொழி பெயர்ப்புக் கலைக்கு ஆற்றல் இருக்கிறதா என்று ஐயப்பட வேண்டியது தான்.

ஷேக்ஸ்பியர் நீண்ட வாக்கியங்களையும் சொற்றொடர்களையும் தொடுத்தும் பிணைத்தும் விடுகிறார். ஆனாலும் இந்தப் பிணையலால், வாக்கியங்களின் பொருட்டெளிவு கொஞ்சமும் பாதிக்கப்படுவதில்லை. இப்பேர்ப்பட்ட விசித்திரமான குறளி வேலையை ஹாம்லெட், அங்கம் III காட்சி II-ல் வருகிற ஒரு வாசகத்தில் காண்கிறோம். டென்மார்க்கின் இளவரசன் நடிப்புக் கலை எப்படியிருக்க வேண்டும் என்று நடிகர்களுக்குப் போதிக்கிறான்:—

"Speak the speech, I pray you, as I pronounced, it to you, trippingly on this tongue; but if you mouth it as many of your players do, I had as lief the town-crier spoke my lines. Nor do not saw the air too much with your hand, thus; but use all gently; for in the very torrent, tempest and—as I may say—whirlwind of passion, you must acquire and beget a temperance, that may give it smoothness. O, it offends me to the soul to hear a robustious periwigpated fellow tear a passion to tatters, to very rags, to split the ears of the groundlings who for the most part are capable of nothing, but inexplicable dumb-shows and noise."

இவ்வாறு நீண்டு வளைந்த வாக்கியங்கள் மொழி பெயர்ப்பாளரைத் திகைக்கச் செய்கின்றன. மூல வாக்கியத்திலுள்ள முண்டு முடிச்சுகளையும் திருகு முருகல்களையும் அப்படி அப்படியே மொழி பெயர்த்தால், தமிழாக்கம் திக்குமுக்காடி மூச்சுத் திணறிக்கொண்டு நிற்கும். இப் பேர்ப்பட்ட சிக்கல் வாக்கியங்களை முறித்துத் தறித்து, சிறு சிறு வாக்கியங்களாக்கி, வேறு ஒரு தாளத்திலே அவற்றை மாற்றி நிறுத்தி, மூலத்தின் உணர்ச்சிப் பெருக்கைத் தமிழ்ச் சொற்கள் வழியாகப் பாயச் செய்ய வேண்டும். கீழ்க்கண்ட வாசகம் ஹாம்லெட்டின் உபதேசத்தை வெற்றிகரமாகத் தமிழாக்கியிருக்கிறதா என்பதை வாசகர்கள் தீர்மானிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது:

"நான் பேசின மாதிரி அந்தப் பேச்சைப் பேசுங்கள். சொற்கள் நாக்கிலே சுகமாக உருள வேண்டும். உங்களில் சில நடிகர்களைப் போல, சொற்களைக் குதப்புவதாக இருந்தால், ஊர்ப்பறையனை (town-crier—க்குத் தமிழில் வேறு பதம் இல்லை) அழைத்து இதைப் பேசச் சொல்லி விடலாமே, காற்றைப் போட்டு ரம்பத்தால் அறுப்பது போல், இப்படிக் கையை ஆட்டாதீர்கள்: மென்மையாக மெய்ப்பாடுகளைக் காட்டுங்கள். உணர்ச்சி மழையாகப் பெய்யலாம், புயலாக வீசலாம், சூறாவளியாகச் சுற்றியடிக்கலாம், ஆனால் அப்படி அடிக்கும்போதும் நிதானத்தைக் கைவிட்டு விடாதீர்கள். நிதானம் இருந்தால்தான், நடிப்பிற்கு ஒரு மெருகு உண்டாகும். டோப்பா அணிந்த தடியர்கள் உணர்ச்சிகளைக் கிழித்தெறிந்து கூளமாக்கி கேட்பவர்களுடைய காதைப் பிளக்கும்போது, என் ஆன்மா பதைபதைக்கிறது. கேட்கும் தரை மகாஜனங்களோ அர்த்தம் புரியாத ஊமை நாடகத்தையும், கூப்பாட்டையும்தான் ரசிப்பார்கள்."

மேற்கண்ட மொழிபெயர்ப்பைப் பலர் பலவிதமாகக் கண்டிக்கிறார்கள். இத்தகைய மொழிபெயர்ப்பு சிக்கல்

இவ்வாறு நீண்டு வளைந்த வாக்கியங்கள் மொழி பெயர்ப்பாளரைத் திகைக்கச் செய்கின்றன. மூல வாக்கியத்திலுள்ள முண்டு முடிச்சுகளையும் திருகு முருகல்களையும் அப்படி அப்படியே மொழி பெயர்த்தால், தமிழாக்கம் திக்குமுக்காடி மூச்சுத் திணறிக்கொண்டு நிற்கும். இப்பேர்ப்பட்ட சிக்கல் வாக்கியங்களை முறித்துத் தறித்து, சிறு சிறு வாக்கியங்களாக்கி, வேறு ஒரு தாளத்திலே அவற்றை மாற்றி நிறுத்தி, மூலத்தின் உணர்ச்சிப் பெருக்கைத் தமிழ்ச் சொற்கள் வழியாகப் பாயச் செய்ய வேண்டும். கீழ்க்கண்ட வாசகம் ஹாம்லெட்டின் உபதேசத்தை வெற்றிகரமாகத் தமிழாக்கியிருக்கிறதா என்பதை வாசகர்கள் தீர்மானிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது:

"நான் பேசின மாதிரி அந்தப் பேச்சைப் பேசுங்கள். சொற்கள் நாக்கிலே சுகமாக உருள வேண்டும். உங்களில் சில நடிகர்களைப் போல, சொற்களைக் குதப்புவதாக இருந்தால், ஊர்ப்பறையனை (town-crier—க்குத் தமிழில் வேறு பதம் இல்லை) அழைத்து இதைப் பேசச் சொல்லி விடலாமே, காற்றைப் போட்டு ரம்பத்தால் அறுப்பது போல், இப்படிக் கையை ஆட்டாதீர்கள்: மென்மையாக மெய்ப்பாடுகளைக் காட்டுங்கள். உணர்ச்சி மழையாகப் பெய்யலாம், புயலாக வீசலாம், சூறாவளியாகச் சுற்றியடிக்கலாம், ஆனால் அப்படி அடிக்கும்போதும் நிதானத்தைக் கைவிட்டு விடாதீர்கள். நிதானம் இருந்தால்தான், நடிப்பிற்கு ஒரு மெருகு உண்டாகும். டோப்பா அணிந்த தடியர்கள் உணர்ச்சிகளைக் கிழித்தெறிந்து கூளமாகிக் கேட்பவர்களுடைய காதைப் பிளக்கும்போது, என் ஆன்மா பதைபதைக்கிறது. கேட்கும் தரை மகாஜனங்களோ அர்த்தம் புரியாத ஊமை நாடகத்தையும், கூப்பாட்டையும்தான் ரசிப்பார்கள்."

மேற்கண்ட மொழிபெயர்ப்பைப் பலர் பலவிதமாகக் கண்டிக்கிருர்கள். இத்தகைய மொழிபெயர்ப்பு சிக்கல்

மிகுந்த ஷேக்ஸ்பியரை மிக்க எளிய கருத்துடையவர்போல் காட்டிவிடுகிறது என்று ஒரு சிறந்த இலக்கிய ரஸிகர் குறை கூறுகிறார். இந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மையிருக்கலாம். ஆனால் ஷேக்ஸ்பியரை மிக்க எளிமைப் படுத்திவிட்டது போன்ற தோற்றத்துக்குக் காரணம் என்னவென்றால் 16வது நூற்றாண்டு ஆங்கில அகவற்பாவை 20வது நூற்றாண்டுத் தமிழ் உரைநடையாக மாற்றியது தான். ஒரு தமிழனுக்கு 16வது நூற்றாண்டு இங்க்லிஷ் செய்யுள் மங்கலாகவும் எளிதில் புரியாததாகவும் இருக்கிறது. ஆனால், 20வது நூற்றாண்டுத் தமிழ் வசனம் எளிமையாகவும் நேரில் உள்ளத்தைத் தாக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஷேக்ஸ்பியரில் இரண்டு விதமான தெளிவின்மை இருக்கிறது. ஒன்று ஷேக்ஸ்பியரால் வேண்டுமென்றே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சில ஆன்ம அனுபவங்களை முழுமையாகச் சொல்லாமல் அரைகுறையாகவே சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் மங்கல் பாஷையை ஒரு அடையாள பாஷையாகப் பயன்படுத்து கிறார் ஷேக்ஸ்பியர். மொழிபெயர்ப்பாளர் இந்த மங்கல் பாஷையைத் தவிர்க்க முயல்வது தவறு. அப்படி தவிர்க்க முயன்றால் ஷேக்ஸ்பியருடைய மாசற்ற ஆன்மக் காட்சிகளுக்குக் களங்கம் ஏற்பட்டு விடும். இன்னொரு விதமான தெளிவின்மையையும் ஷேக்ஸ்பியரில் காணலாம். முதலாவதாக, ஷேக்ஸ்பியருக்கு அவசரம் அவசரமாக எழுத வேண்டிய கட்டாயம் இருந்தபடியால், சில சமயங்களில் வேண்டிய அளவுக்குக் கவனம் செலுத்தாமல் சொற்களைப் பயன்படுத்தி தெளிவற்ற நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இரண்டாவதாக, அவர் காலத்தில் ஆட்சியில் இருந்த சொற்கள் சில இப்போது புழக்கத்தில் இல்லாமல் போய் விட்ட காரணத்தால், அச்சொற்கள் தற்கால ஆங்கிலத்தை மாத்திரம் தெரிந்தவர்களுக்குப் பொருளற்றவை போல் தோன்றுகின்றன. இந்த இரண்டு காரணங்களாலும் ஏற்பட்ட தெளிவின்மையைத் தவிர்க்க வேண்டியது மொழி பெயர்ப்பாளனுடைய கடமை.

மிகுந்த ஷேக்ஸ்பியரை மிக்க எளிய கருத்துடையவர்போல் காட்டிவிடுகிறது என்று ஒரு சிறந்த இலக்கிய ரஸிகர் குறை கூறுகிறார். இந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மையிருக்கலாம். ஆனால் ஷேக்ஸ்பியரை மிக்க எளிமைப் படுத்திவிட்டது போன்ற தோற்றத்துக்குக் காரணம் என்னவென்றால் 16வது நூற்றாண்டு ஆங்கில அகவற்பாவை 20வது நூற்றாண்டுத் தமிழ் உரைநடையாக மாற்றியதுதான். ஒரு தமிழனுக்கு 16வது நூற்றாண்டு இங்க்லிஷ் செய்யுள் மங்கலாகவும் எளிதில் புரியாததாகவும் இருக்கிறது. ஆனால், 20வது நூற்றாண்டுத் தமிழ் வசனம் எளிமையாகவும் நேரில் உள்ளத்தைத் தாக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஷேக்ஸ்பியரில் இரண்டு விதமான தெளிவின்மை இருக்கிறது. ஒன்று ஷேக்ஸ்பியரால் வேண்டுமென்றே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சில ஆன்ம அனுபவங்களை முழுமையாகச் சொல்லாமல் அரைகுறையாகவே சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் மங்கல் பாஷையை ஒரு அடையாள பாஷையாகப் பயன்படுத்துகிறார் ஷேக்ஸ்பியர். மொழிபெயர்ப்பாளர் இந்த மங்கல் பாஷையைத் தவிர்க்க முயல்வது தவறு. அப்படி தவிர்க்க முயன்றால் ஷேக்ஸ்பியருடைய மாசற்ற ஆன்மக் காட்சிகளுக்குக் களங்கம் ஏற்பட்டு விடும். இன்னொரு விதமான தெளிவின்மையையும் ஷேக்ஸ்பியரில் காணலாம். முதலாவதாக, ஷேக்ஸ்பியருக்கு அவசரம் அவசரமாக எழுத வேண்டிய கட்டாயம் இருந்தபடியால், சில சமயங்களில் வேண்டிய அளவுக்குக் கவனம் செலுத்தாமல் சொற்களைப் பயன்படுத்தி தெளிவற்ற நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இரண்டாவதாக, அவர் காலத்தில் ஆட்சியில் இருந்த சொற்கள் சில இப்போது புழக்கத்தில் இல்லாமல் போய் விட்ட காரணத்தால், அச்சொற்கள் தற்கால ஆங்கிலத்தை மாத்திரம் தெரிந்தவர்களுக்குப் பொருளற்றவை போல் தோன்றுகின்றன. இந்த இரண்டு காரணங்களாலும் ஏற்பட்ட தெளிவின்மையைத் தவிர்க்க வேண்டியது மொழி பெயர்ப்பாளனுடைய கடமை.

இதைப் போன்ற மொழிபெயர்ப்புகளைப் பற்றி இன்னொரு குறையும் கூறுகிறார்கள். அதாவது, அகௌரவமான கொச்சைத் தமிழைப் பயன்படுத்தியதாக. ஷேக்ஸ்பியரின் நாடகச் சுவைக்கு முக்கிய காரணமாக இருந்தது உயிருள்ள, துடிதுடிப்பான கொச்சை மொழியை அவர் சதுரப் பாட்டோடு பயன்படுத்திய முறைதான், அவருடைய தலையாய பணி என்னவென்றால், அவர் காலத்திய பொது மக்களுடைய பேச்சு மொழிக்கு அவர் என்றென்றும் சாகாத இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்தது தான். கொச்சைத் தமிழைத் தவிர்க்க வேண்டும் என்று நினைக்கிற ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பாளர் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்க்கும் சிரமத்தை விட்டுவிட்டு மில்டன் போன்ற கனமும் கௌரவமும் பொருந்திய கவிஞர்களை மொழிபெயர்ப்பதில் அவர்களுடைய கவனத்தைச் செலுத்தலாம்.

பிற மொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களோடு விரவுவது தவறு என்று தூய தமிழ்வாதிகள் நினைக்கிறார்கள். தமிழர்களிடையே புழக்கத்தில் இல்லாத பிற மொழிச் சொல்லைத் தமிழுக்குள் இறக்குமதி செய்வது தவறுதான் என்பதில் ஐயமில்லை. இந்த இறக்குமதியினால் தமிழின் தூய்மை கெட்டுப் போகுமே என்றுகூட அல்ல, தமிழர்களுக்கு இச்சொற்கள் பொருளற்றவையாயிருக்கும் என்று அஞ்சியே இந்த இறக்குமதியைத் தவிர்க்க வேண்டும். விதேசிச் சொல்லொன்று நீண்ட புழக்கத்தாலும் தமிழர்கள் அதை ஸ்வீகாரம் செய்துகொண்டதாலும், தமிழ் மொழியோடு கலந்து பொருள் பொதிந்த சொல்லாகத் தமிழர்களால் கருதப்பட்டால், அதை வெட்கப் படாமல் பயன்படுத்துவதே மொழிபெயர்ப்பாளரின் கடமை. அதைத் தவிர்த்துவிட்டு அதற்குச் சமமான தூய தமிழ்ச் சொல்லைத் தேடியலைவது வீண் செயலாகும். முன்னமே நாம் சொன்னது போல மூலத்தின் அந்தராத்மாவை எப்படியாவது சொல்லித் தீர்த்துவிட வேண்டும் என்பதே நமது

இதைப் போன்ற மொழிபெயர்ப்புகளைப் பற்றி இன்னொரு குறையும் கூறுகிறார்கள். அதாவது, அகௌரவமான கொச்சைத் தமிழைப் பயன்படுத்தியதாக. ஷேக்ஸ்பியரின் நாடகச் சுவைக்கு முக்கிய காரணமாக இருந்தது உயிருள்ள, துடிதுடிப்பான கொச்சை மொழியை அவர் சுந்தரப் பாட்டோடு பயன்படுத்திய முறைதான், அவருடைய தலையாய பணி என்னவென்றால், அவர் காலத்திய பொது மக்களுடைய பேச்சு மொழிக்கு அவர் என்றென்றும் சாகாத இலக்கிய அந்தஸ்தைக் கொடுத்ததுதான். கொச்சைத் தமிழைத் தவிர்க்க வேண்டும் என்று நினைக்கிற ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பாளர் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்க்கும் சிரமத்தை விட்டுவிட்டு மில்டன் போன்ற கனமும் கௌரவமும் பொருந்திய கவிஞர்களை மொழிபெயர்ப்பதில் அவர்களுடைய கவனத்தைச் செலுத்தலாம்.

பிற மொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களோடு விரவுவது தவறு என்று தூய தமிழ்வாதிகள் நினைக்கிறார்கள். தமிழர்களிடையே புழக்கத்தில் இல்லாத பிற மொழிச் சொல்லைத் தமிழுக்குள் இறக்குமதி செய்வது தவறுதான் என்பதில் ஐயமில்லை. இந்த இறக்குமதியினால் தமிழின் தூய்மை கெட்டுப் போகுமே என்றுகூட அல்ல, தமிழர்களுக்கு இச்சொற்கள் பொருளற்றவையாயிருக்கும் என்று அஞ்சியே இந்த இறக்குமதியைத் தவிர்க்க வேண்டும். விதேசிச் சொல்லொன்று நீண்ட புழக்கத்தாலும் தமிழர்கள் அதை ஸ்வீகாரம் செய்துகொண்டதாலும், தமிழ் மொழியோடு கலந்து பொருள் பொதிந்த சொல்லாகத் தமிழர்களால் கருதப்பட்டால், அதை வெட்கப் படாமல் பயன்படுத்துவதே மொழிபெயர்ப்பாளரின் கடமை. அதைத் தவிர்த்துவிட்டு அதற்குச் சமமான தூய தமிழ்ச் சொல்லைத் தேடியலைவது வீண் செயலாகும். முன்னமே நாம் சொன்னது போல மூலத்தின் அந்தராத்மாவை எப்படியாவது சொல்லித் தீர்த்துவிட வேண்டும் என்பதே நமது

நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்துக்குப் புறம்பான எந்தக் கருத்தையும் புறக்கணிக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமை. ஆகவே, நாம் கருத்தில் முக்கியமாகக் கொள்ளவேண்டியது, இந்தச் சொல் சுயம் பான தமிழ்ச் சொல்லா அல்லது பிறமொழிச் சொல்லா என்பதல்ல. அல்லது அது கண்ணியமான சொல்லா கண்ணி யமற்ற சொல்லா என்பதுமல்ல. அல்லது பேச்சு வழக்கில் இருக்கும் சொல்லா எழுத்து வழக்கில் இருக்கும் சொல்லா என்பதுகூட அல்ல, உயிருள்ள சொல்லா செத்த சொல்லா, மூலநூலின் சுவையையும் மணத்தையும் தமிழில் தரவல்ல சொல்லா இல்லையா என்பதே.

அடுத்தாற்போல் நாம் கவனிக்க வேண்டியது மொழி பெயர்க்க முடியாத ஷேக்ஸ்பியருடைய கவிதையையும் பாவங்களையும் எப்படித் தமிழுக்குக் கொண்டு வருவது என்பதே. கேவலம் இளைச்சுப் போன உரைநடைக்குக் கவிதையின் மாந்திரீக சக்தி கிடையாது, ஏனென்றால் உரை நடையென்பது வடிவமற்ற ஒன்று, ஆனால் கவிதை வசிக்கும் இடம் எதுவென்றால் செய்யுளின் வடிவத்திலேதான், ஒரு பாரசீகத்து ரோஜாப்பூவை அம்மிக் குழவியில் வைத்துத் துவையலாக அரைத்துவிட்டால், அதன் சுவை மாறாம லிருந்தாலும் அதற்கு மிக முக்கியமாக இருந்த வடிவம் அழிந்துவிடுகிறது. மொழிபெயர்ப்பாளர் இந்த வடி வத்தை அழிக்காமல் பாதுகாக்க முடியுமா? ஷேக்ஸ்பியர் என்ற ரோஜாவை அப்படி அப்படியே தமிழில் படைப் பதே அவருடைய நோக்கமாக இருக்க வேண்டும். தமிழில் படைக்கப்பட்ட ரோஜாவுக்கு மூலரோஜாவின் அழகும் மணமும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அது ரோஜாவாக வாவது இருக்க வேண்டும்.

ஷேக்ஸ்பியரை செய்யுள் நடையில் தமிழாக்கம் செய்த வர்கள் எல்லோருமே மூலத்துக்கு நீதி வழங்கத் தவறி விட்டார்கள். செய்யுள் மொழி பெயர்ப்புகள் எல்லாமே

நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்துக்குப் புறம்பான எந்தக் கருத்தையும் புறக்கணிக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமை. ஆகவே, நாம் கருத்தில் முக்கியமாகக் கொள்ளவேண்டியது, இந்தச் சொல் சுயம் பான தமிழ்ச் சொல்லா அல்லது பிற மொழிச் சொல்லா என்பதல்ல. அல்லது அது கண்ணியமான சொல்லா கண்ணி யமற்ற சொல்லா என்பதுமல்ல. அல்லது பேச்சு வழக்கில் இருக்கும் சொல்லா எழுத்து வழக்கில் இருக்கும் சொல்லா என்பதுகூட அல்ல, உயிருள்ள சொல்லா செத்த சொல்லா, மூலநூலின் சுவையையும் மணத்தையும் தமிழில் தரவல்ல சொல்லா இல்லையா என்பதே.

அடுத்தாறுபோல் நாம் கவனிக்க வேண்டியது மொழி பெயர்க்க முடியாத ஷேக்ஸ்பியருடைய கவிதையையும் பாவங்களையும் எப்படித் தமிழுக்குக் கொண்டு வருவது என்பதே. கேவலம் இளைச்சுப் போன உரைநடைக்குக் கவிதையின் மாந்திரீக சக்தி கிடையாது, ஏனென்றால் உரை நடையென்பது வடிவமற்ற ஒன்று, ஆனால் கவிதை வசிக்கும் இடம் எதுவென்றால் செய்யுளின் வடிவத்திலேதான், ஒரு பாரசீகத்து ரோஜாப்பூவை அம்மிக் குழவியில் வைத்துத் துவையலாக அரைத்துவிட்டால், அதன் சுவை மாறும விருந்தாலும் அதற்கு மிக முக்கியமாக இருந்த வடிவம் அழிந்துவிடுகிறது. மொழிபெயர்ப்பாளர் இந்த வடி வத்தை அழிக்காமல் பாதுகாக்க முடியுமா? ஷேக்ஸ்பியர் என்ற ரோஜாவை அப்படி அப்படியே தமிழில் படைப் பதே அவருடைய நோக்கமாக இருக்க வேண்டும். தமிழில் படைக்கப்பட்ட ரோஜாவுக்கு மூலரோஜாவின் அழகும் மணமும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அது ரோஜாவாக வாவது இருக்க வேண்டும்.

ஷேக்ஸ்பியரை செய்யுள் நடையில் தமிழாக்கம் செய்த வர்கள் எல்லோருமே மூலத்துக்கு நீதி வழங்கத் தவறி விட்டார்கள். செய்யுள் மொழி பெயர்ப்புகள் எல்லாமே

ரத்தமும் புஷ்டியுமற்ற சோகை படர்ந்த படைப்புகளாக இருக்கின்றன. கவியெழுதும் ஆற்றல் மொழிபெயர்ப்பாளர்களுக்கு இல்லாதது ஒரு காரணம். எதுகைக்கும் மோனைக்கும் அடிமைப்பட்டுச் செய்யுள் எழுதும்போது, மூலத்தின் கருத்தை விட்டுவிட்டு இன்னும் அதிக தூரத்தில் சென்று விடுகிறார்கள் மொழிபெயர்ப்பாளர்கள், எதுகை அல்லது மோனையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உரிய சொல்லைப் பயன்படுத்தத் தவறிவிடுகிறார்கள்.

ஷேக்ஸ்பியருடைய blank verse அல்லது எதுகையில்லாத செய்யுளுக்கு நிகரானத் தமிழில் இருப்பது அகவற்பா. ஆனால், அகவற்பாவைத் திறமையாகப் பயன்படுத்தியவர்கள் வெகு சிலரே, தற்கால இலக்கியத்தில் பாரதிதாஸனைத் தவிர வேறொருவரும் அகவற்பாவைக் கவர்ச்சிகரமாக உபயோகிக்கவில்லை.

ஆகவே, சம்பிரதாயமான செய்யுள் நடையில் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்துப் பயனில்லையென்று நான் கருதுகிறேன். வசன கவிதையில்தான் ஷேக்ஸ்பியருடைய எதுகையற்ற கவிதையை எளிதில் மொழிபெயர்க்கலாம் என்று தெரிகிறது. வசன கவிதையென்பது யாப்பிலக்கணத்துக்குக் கட்டுப்படாததாக இருந்தாலும் மர்மமான ஒரு தாளத்துக்குக் கட்டுப்பட்டதாயிருக்க வேண்டும். மேலும் அது மூலத்திலுள்ள பாவங்களைச் சுகமாக எடுத்துச் சொல்லக்கூடிய இசைக்கருவியாக அமைய வேண்டும். சொல்லொலியையும் ஒலியின் அந்தத்திலிருக்கும் மோனத்தையும் உயிரெழுத்துக்கள் மூலமாகவும் மெய்யெழுத்துக்கள் மூலமாகவும் தந்திரமாக எழுப்பி உரிய உணர்ச்சிகளைக் கிளப்பக்கூடியதாயிருக்க வேண்டும் வசன கவிதை.

இந்தக் கருத்தை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம். லீயர் அரசனில் 5வது அங்கம் 3வது காட்சியில்

ரத்தமும் புஷ்டியுமற்ற சோகை படர்ந்த படைப்புகளாக இருக்கின்றன. கவியெழுதும் ஆற்றல் மொழிபெயர்ப்பாளர்களுக்கு இல்லாதது ஒரு காரணம். எதுகைக்கும் மோனைக்கும் அடிமைப்பட்டுச் செய்யுள் எழுதும்போது மூலத்தின் கருத்தை விட்டுவிட்டு இன்னும் அதிக தூரத்தில் சென்று விடுகிறார்கள் மொழிபெயர்ப்பாளர்கள், எதுகை அல்லது மோனையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உரிய சொல்லைப் பயன்படுத்தத் தவறிவிடுகிறார்கள்.

ஷேக்ஸ்பியருடைய blank verse அல்லது எதுகையில்லாத செய்யுளுக்கு நிகரானத் தமிழில் இருப்பது அகவற்பா. ஆனால், அகவற்பாவைத் திறமையாகப் பயன்படுத்தியவர்கள் வெகு சிலரே, தற்கால இலக்கியத்தில் பாரதிதாஸனைத் தவிர வேறெவரும் அகவற்பாவைக் கவர்ச்சிகரமாக உபயோகிக்கவில்லை.

ஆகவே, சம்பிரதாயமான செய்யுள் நடையில் ஷேக்ஸ்பியரை மொழிபெயர்த்துப் பயனில்லையென்று நான் கருதுகிறேன். வசன கவிதையில்தான் ஷேக்ஸ்பியருடைய எதுகையற்ற கவிதையை எளிதில் மொழிபெயர்க்கலாம் என்று தெரிகிறது. வசன கவிதையென்பது யாப்பிலக்கணத்துக்குக் கட்டுப்படாததாக இருந்தாலும் மர்மமான ஒரு தாளத்துக்குக் கட்டுப்பட்டதாயிருக்க வேண்டும். மேலும் அது மூலத்திலுள்ள பாவங்களைச் சுலபமாக எடுத்துச் சொல்லக்கூடிய இசைக்கருவியாக அமைய வேண்டும். சொல்லொலியையும் ஒலியின் அந்தத்திலிருக்கும் மோனத்தையும் உயிரெழுத்துக்கள் மூலமாகவும் மெய்யெழுத்துக்கள் மூலமாகவும் தந்திரமாக எழுப்பி உரிய உணர்ச்சிகளைக் கிளப்பக்கூடியதாயிருக்க வேண்டும் வசன கவிதை.

இந்தக் கருத்தை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவோம். லீயர் அரசனில் 5வது அங்கம் 3வது காட்சியில்

ஒரு மகோன்னதமான வாசகம் வருகிறது. லீயரும் கார்டிலியாவும் சிறைப்படுத்தப்படுகிறார்கள். கார்டிலியாவிடத்தில் லீயருக்குண்டான திடீர் அன்பு அவனுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்து அவனுடைய பைத்தியத்தைத் தெளிய வைக்கிறது. அந்தச் சித்தத் தெளிவிலே லீயருக்கு ஒரு ஞானஒளி பிறக்கிறது. ஜீவன்முக்தன் நிலையிலிருந்து மனிதச் சாதியைத் தெளிந்த கண்களோடு நடுக்கமறக் காண்கிறான் லீயர். இந்த நிலையில் லீயர் கார்டிலியாவிடம் பேசுகிறான்.

Come, let's away to prison;
We two alone will sing like birds'n the cage
when thou dost ask me blessing, I'll Kneel down,
And ask of thee forgiveness; so we'll live;
And pray, and sing, and tell old tales, and laugh
At gilded butterflies, and hear poor rogues
Talk of Court news; and we'll talk with them, too,
Who loses & who wins; who's in, who's out;
And take upon's the mystery of things,
As if we were God's spies; and we'll wear out,
In a wall'd prison packs and sects of great ones
That ebb and flow by the moon.

நெஞ்சைப் புனிதமாக்கும் மேற்சொன்ன வாசகத்தை மொழிபெயர்ப்பது என்பது அதைத் தீட்டுப்படுத்துவதை யொக்கும் என்று ஷேக்ஸ்பியர் பக்தர்கள் நினைக்கலாம். மேற்படி வாசகத்தை மொழிபெயர்த்துத்தான் ஆக வேண்டுமென்றால், அதைக் கீழ்க்கண்டபடி தமிழாக்கலாம்:

“வா, நாம் சிறைச் சாலைக்குப் போய்விடுவோம், கூண்டுக்குள்ளிருக்கும் பறவைகளைப் போல நாம் இருவரும் தனித்திருந்து பாடுவோம், நீ என்னிடம் ஆசீர்வாதம் கேட்கும்போதெல்லாம், மண்டியிட்டு நான் உன்னிடம்

ஒரு மகோன்னதமான வாசகம் வருகிறது. லீயரும் கார்டிலியாவும் சிறைப்படுத்தப்படுகிறார்கள். கார்டிலியாவிடத்தில் லீயருக்குண்டான திடீர் அன்பு அவனுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்து அவனுடைய பைத்தியத்தைத் தெளிய வைக்கிறது. அந்தச் சித்தத் தெளிவிலே லீயருக்கு ஒரு ஞானஒளி பிறக்கிறது. ஜீவன்முக்தன் நிலையிலிருந்து மனிதச் சாதியைத் தெளிந்த கண்களோடு நடுக்கமறக் காண்கிறான் லீயர். இந்த நிலையில் லீயர் கார்டிலியாவிடம் பேசுகிறான்.

Come, let's away to prison;
We two alone will sing like birds'n the cage
when thou dost ask me blessing, I'll Kneel down,
And ask of thee forgiveness; so we'll live;
And pray, and sing, and tell old tales, and laugh
At gilded butterflies, and hear poor rogues
Talk of Court news; and we'll talk with them, too,
Who loses & who wins; who's in, who's out;
And take upon's the mystery of things,
As if we were God's spies; and we'll wear out,
In a wall'd prison packs and sects of great ones
That ebb and flow by the moon.

நெஞ்சைப் புனிதமாக்கும் மேற்சொன்ன வாசகத்தை மொழிபெயர்ப்பது என்பது அதைத் தீட்டுப்படுத்துவதை யொக்கும் என்று ஷேக்ஸ்பியர் பக்தர்கள் நினைக்கலாம். மேற்படி வாசகத்தை மொழிபெயர்த்துத்தான் ஆக வேண்டுமென்றால், அதைக் கீழ்க்கண்டபடி தமிழாக்கலாம்:

''வா, நாம் சிறைச் சாலைக்குப் போய்விடுவோம், கூண்டுக்குள்ளிருக்கும் பறவைகளைப் போல நாம் இருவரும் தனித்திருந்து பாடுவோம், நீ என்னிடம் ஆசிர்வாதம் கேட்கும்போதெல்லாம், மண்டியிட்டு நான் உன்னிடம்

மன்னிப்புக் கேட்பேன். தொழுதும், பாடியும், பழங் கதைகள் பேசியும், பசப்பும் வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து நகைத்தும், அரண்மனைச் செய்திகளைப் புல்லோர் சொல்லக் கேட்டும், யாருக்குத் தோல்வி, யாருக்கு வெற்றி, பதவி யாருக்குக் கிடைத்தது, பதவியிழந்தவன் யார் என்று ஊர் வம்பு பேசியும், பேரண்டத்தின் அற்புதத்தையே மெய்கண்டவர்களாய் இறைவனுடைய வேவுகாரர்களைப் போல நாம் வாழ்க்கை நடத்துவோம்.''

இந்த மொழிபெயர்ப்பு நூற்றுக்கு நூறு செம்மையானது என்று கூற வரவில்லை. ஆனால் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பாளர்கள் எந்தப் பாதையில் நடந்தால் வெற்றி பெறக்கூடும் என்பதை இந்த மொழிபெயர்ப்பு சுட்டிக் காட்டுகிறது.

ஷேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பவருக்கு வேண்டிய பல தகுதிகளில் முக்கிய தகுதி என்னவென்றால் அவர் நீண்ட தவம் செய்து தன்னை நன்றாகப் பக்குவப்படுத்தியிருக்க வேண்டும். ஷேக்ஸ்பியருடைய சத்சங்கத்திலே அவர் தொடர்ச்சியாக உலாவி வர வேண்டும். ஷேக்ஸ்பியருடைய இனிய வாசகங்களிலே அவர் தன்னை முக்கி முக்கி எடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஷேக்ஸ்பியருடைய படைத்தற்றொழிலிலே அவர் பங்கு கொள்ள முடியும். அவர் தன்னுடைய ஆணவத்தை முற்றிலும் துடைத்து அழித்துவிட்டு, ஷேக்ஸ்பியருடைய பாத்திரங்களோடு இரண்டறக் கலக்க வேண்டும், அதோடு ஷேக்ஸ்பியருடைய உணர்ச்சிகளிலும் கவிமூச்சிலும் அவர் ஒன்றித் திளைத்திருக்க வேண்டும். இவ்வாறாக மொழிபெயர்ப்பாளர் தன் உள்ளத்தை ஷேக்ஸ்பியருக்கு அர்ப்பணம் செய்து அடக்கத்தோடும் பக்தியோடும் இந்த அத்வைத நிலையில் தன் மனத்தை நீண்ட காலம் நிறுத்தி வைக்கக் கற்றுக் கொண்டாரேயானால், அவருடைய உள்மனம் ஷேக்ஸ்பியருடைய மேதையின் அகலத்தையும், ஆழத்தையும், வளத்

மன்னிப்புக் கேட்பேன். தொழுதும், பாடியும், பழங் கதைகள் பேசியும், பசப்பும் வண்ணாத்திப் பூச்சிகளைப் பார்த்து நகைத்தும், அரண்மனைச் செய்திகளைப் புல்லோர் சொல்லக் கேட்டும், யாருக்குத் தோல்வி, யாருக்கு வெற்றி, பதவி யாருக்குக் கிடைத்தது. பதவியிழந்தவன் யார் என்று ஊர் வம்பு பேசியும், பேரண்டத்தின் அற்புதத்தையே மேற்கொண்டவர்களாய் இறைவனுடைய வேவுகாரர்களைப் போல நாம வாழ்க்கை நடத்துவோம்.''

இந்த மொழிபெயர்ப்பு நூற்றுக்கு நூறு செம்மையானது என்று கூற வரவில்லை. ஆனால் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பாளர்கள் எந்தப் பாதையில் நடந்தால் வெற்றி பெறக்கூடும் என்பதை இந்த மொழிபெயர்ப்பு சுட்டிக் காட்டுகிறது.

ஷேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பவருக்கு வேண்டிய பல தகுதிகளில் முக்கிய தகுதி என்னவென்றால் அவர் நீண்ட தவம் செய்து தன்னை நன்றாகப் பக்குவப்படுத்தியிருக்க வேண்டும். ஷேக்ஸ்பியருடைய சத்சங்கத்திலே அவர் தொடர்ச்சியாக உலாவி வர வேண்டும். ஷேக்ஸ்பியருடைய இனிய வாசகங்களிலே அவர் தன்னை முக்கி முக்கி எடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஷேக்ஸ்பியருடைய படைத்தற்றொழிலிலே அவர் பங்கு கொள்ள முடியும். அவர் தன்னுடைய ஆணவத்தை முற்றிலும் துடைத்து அழித்துவிட்டு, ஷேக்ஸ்பியருடைய பாத்திரங்களோடு இரண்டறக் கலக்க வேண்டும், அதோடு ஷேக்ஸ்பியருடைய உணர்ச்சிகளிலும் கவி மூச்சிலும் அவர் ஒன்றித் திளைத்திருக்க வேண்டும். இவ்வாறாக மொழிபெயர்ப்பாளர் தன் உள்ளத்தை ஷேக்ஸ்பியருக்கு அர்ப்பணம் செய்து அடக்கத்தோடும் பக்தியோடும் இந்த அத்வைத நிலையில் தன் மனத்தை நீண்ட காலம் நிறுத்தி வைக்கக் கற்றுக் கொண்டாரேயானால், அவருடைய உள்மனம் ஷேக்ஸ்பியருடைய மேதையின் அகலத்தையும், ஆழத்தையும், வளத்

தையும் எடுத்துச் சொல்லுவதற்குத் தகுதியுள்ள ஒரு கருவியாக அமையும். இவ்வாறு ஷேக்ஸ்பியரோடு ஒன்றிய நிலையில் மொழிபெயர்ப்பாளரின் உள்மனம் புத்தம் புதிய மந்திரச் சொற்களையும் சொற்றொடர்களையும், தாளக் கட்டுகளையும் கண்டுபிடித்து அவற்றின் மூலம் சாக்ஷாத் ஷேக்ஸ்பியரைத் தமிழ் மொழியில் ஆவாஹனம் செய்யும் வல்லமையைப் பெற்று விடுகிறது.

தமிழ் மொழியில் ஷேக்ஸ்பியரை வார்க்கும்போது, மொழிபெயர்ப்பாளரின் குறைபாடுகளும் மொழிபெயர்ப்பைப் பாதிப்பது இயல்பு. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளின் இலக்கிய மரபுகளைக் கசடறக் கற்றவராக இருக்க வேண்டும் மொழிபெயர்ப்பாளர். அதோடு ஷேக்ஸ்பியருடைய நாடக வாசகங்களிலுள்ள பல பாடபேதங்களையும் ஆராய்ந்து சிறந்த பாடம் எதுவென்று நிதானித்து உணர்ந்து அதை ஏற்றுக்கொள்ளும் திறமை, மொழிபெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டும். மேலும் ஜான்சன் போன்ற புகழுள்ள ஷேக்ஸ்பியர் உரையாசிரியர்களையும் சார்லஸ் லேம்ப், காலரிட்ஜ் போன்ற உய்த்துணரும் விமர்சன கர்த்தாக்களையும் மொழிபெயர்ப்பாளர் நன்றாக ஊன்றிப் படித்து, அதன் பின்னர் ஷேக்ஸ்பியர் வாசகங்களின் உண்மைப் பொருள் என்ன என்பதை உணர்ந்து சுயமான ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இவ்வாறு அறிவு நிலையிலே தன்னைப் படிப்பினால் பக்குவப்படுத்திக் கொண்ட பிறகு ஒரு மொழிபெயர்ப்பாளர் துணிச்சலோடு கற்றதையெல்லாம் மறந்துவிட்டு போற்சாக்ஷி துபக நிலையில் இருக்கப் பழகிக்கொண்டால், ஷேக்ஸ்பியரை வெற்றிகரமாகத் தமிழில் படைக்கும் ஆற்றல் அவருக்குக் கிட்டும்.

ஷேக்ஸ்பியருடைய இசைப்பாடல்களையும் நாட்டுப் பாடல்களையும் தெம்மாங்கு மெட்டுகளில் தமிழாக்கம் செய்யலாம்.

தையும் எடுத்துச் சொல்லுவதற்குத் தகுதியுள்ள ஒரு கருவியாக அமையும். இவ்வாறு ஷேக்ஸ்பியரோடு ஒன்றிய நிலையில் மொழிபெயர்ப்பாளரின் உள்மனம் புத்தம் புதிய மந்திரச் சொற்களையும் சொற்றொடர்களையும், தாளக் கட்டுகளையும் கண்டுபிடித்து அவற்றின் மூலம் சாக்ஷாத் ஷேக்ஸ்பியரைத் தமிழ் மொழியில் ஆவாஹனம் செய்யும் வல்லமையைப் பெற்றுவிடுகிறது.

தமிழ் மொழியில் ஷேக்ஸ்பியரை வார்க்கும்போது, மொழிபெயர்ப்பாளரின் குறைபாடுகளும் மொழிபெயர்ப்பைப் பாதிப்பது இயல்பு. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளின் இலக்கிய மரபுகளைக் கசடறக் கற்றவராக இருக்க வேண்டும் மொழிபெயர்ப்பாளர். அதோடு ஷேக்ஸ்பியருடைய நாடக வாசகங்களிலுள்ள பல பாட பேதங்களையும் ஆராய்ந்து சிறந்த பாடம் எதுவென்று நிதானித்து உணர்ந்து அதை ஏற்றுக்கொள்ளும் திறமை, மொழிபெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டும். மேலும ஜான்சன் போன்ற திறமையுள்ள ஷேக்ஸ்பியர் உரையாசிரியர்களையும் சார்லஸ் லேம்ப், கால்ரிட்ஜ் போன்ற உய்த்துணரும் வியாக்யான கர்த்தாக்களையும் மொழிபெயர்ப்பாளர் நன்றாக ஊன்றிப் படித்து, அதன் பின்னர் ஷேக்ஸ்பியர் வாசகங்களின் உண்மைப் பொருள் என்ன என்பதை உணர்ந்து சுயமான ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இவ்வாறு அறிவு நிலையிலே தன்னைப் படிப்பினால் பக்குவப்படுத்திக்கொண்ட பிறகு ஒரு மொழிபெயர்ப்பாளர் துணிச்சலோடு கற்றதையெல்லாம் மறந்துவிட்டு மேற்சொன்ன தபஸ் நிலையில் இருக்கப் பழகிக்கொண்டால், ஷேக்ஸ்பியரை வெற்றிகரமாகத் தமிழில் படைக்கும் ஆற்றல் அவருக்குக் கிட்டும்.

ஷேக்ஸ்பியருடைய இசைப்பாடல்களையும் நாட்டுப் பாடல்களையும் தெம்மாங்கு மெட்டுகளில் தமிழாக்கம் செய்யலாம்.

ஆங்கில மொழியின் நுணுக்கங்களைப் ப்ரெஞ்சு மொழியிலும் வங்காளியிலும் எடுத்துச் சொல்லுவதிலுள்ள கஷ்டத்தைப் பற்றி அரவிந்தர் ஆழ்ந்து யோசனை செய்திருக்கிறார். அவர் சொல்லுவதாவது :— "நானறிந்த வேறொரு மொழிக்கும் இல்லாத ஒரு சிறப்பியல்பு ஆங்கிலத்துக்கு இருக்கிறது. அதாவது சொல்லாமல் ஒன்றைச் சொல்லுந்திறமை, செறிந்த பொருளைச் சுட்டிக் காட்டும் ஆற்றல், சொல்லினால் வருணிக்க முடியாத ஒரு உலகத்தின் சாளரங்களைத் திறந்து அவ்வுலகத்தை ஜாடையாகக் காட்டும் ஆற்றல். வங்காள மொழி, ப்ரெஞ்ச் மொழியைப் போல, தெளிந்த தெளிவோடும், உயிர்த்துடிப்போடும், உணர்ச்சியோடும் பேசவல்லது. சொல்லுக்கடங்காத உண்மைகளைச் சொல்லுவதற்கு இந்தத் தெளிவுள்ள மொழிகள் கஷ்டப்படுகின்றன. அவற்றைச் சுற்றி வளைத்துத் தான் சொல்லவேண்டியிருக்கிறது. திரை மறைவிலிருக்கும் உண்மைகளைச் சொல்லினால் சொல்லுவதற்கு மல்லார்மே என்ற கவிஞன் எவ்வாறு ப்ரெஞ்ச் மொழியோடு மல்லாடி மல்லாடித் தொல்லைப்படுகிறான் என்பதைப் பாருங்கள்.'' இப்படிச் சொல்லிவிட்டு, சொல்ல முடியாததைச் சொல்லும் சக்தி ப்ரெஞ்சுக்கும் வங்காளிக்கும் நாளாவட்டத்தில் வரலாமென்றும், அவ்வாறு வரும்வரை இந்த வசதிக் குறைவு இருக்கத்தான் செய்யும் என்றும் அரவிந்தர் கூறுகிறார்.

என்னுடைய பார்வையில், தமிழ்மொழி தெளிவுள்ளதாகவும், உயிர்த் துடிப்புள்ளதாகவும், உணர்ச்சியுள்ளதாகவும் இருந்தாலும், சொல் வலையால் பிடிக்கவொண்ணுத் உண்மைகளைச் சொல்லினால் எடுத்துச் சொல்லும் ஆற்றலையும் பெற்றிருக்கிறது. திருமூலருடைய பாடல்களையும் பதினெண் சித்தர்களுடைய பாடல்களையும் படித்துப் பார்க்கும்போது, சொல்லுக்கும் சொல்லிறந்த சிந்தனைக்கும் இடையிலே ஊசலாடுகின்ற விதம் விதமான ஆன்மானுப

ஆங்கில மொழியின் நுணுக்கங்களைப் ப்ரெஞ்சு மொழியிலும் வங்காளியிலும் எடுத்துச் சொல்லுவதிலுள்ள கஷ்டத்தைப் பற்றி அரவிந்தர் ஆழ்ந்து யோசனை செய்திருக்கிறார். அவர் சொல்லுவதாவது :— "நானறிந்த வேறெந்த மொழிக்கும் இல்லாத ஒரு சிறப்பியல்பு ஆங்கிலத்துக்கு இருக்கிறது. அதாவது சொல்லாமல் ஒன்றைச் சொல்லுந்திறமை, செறிந்த பொருளைச் சுட்டிக் காட்டும் ஆற்றல், சொல்லினால் வருணிக்க முடியாத ஒரு உலகத்தின் சாளரங்களைத் திறந்து அவ்வுலகத்தை ஜாடையாகக் காட்டும் ஆற்றல். வங்காள மொழி, ப்ரெஞ்சு மொழியைப் போல, தெளிந்த தெளிவோடும், உயிர்த்துடிப்போடும், உணர்ச்சியோடும் பேசவல்லது. சொல்லுக்கடங்காத உண்மைகளைச் சொல்லுவதற்கு இந்தத் தெளிவுள்ள மொழிகள் கஷ்டப்படுகின்றன. அவற்றைச் சுற்றி வளைத்துத் தான் சொல்லவேண்டியிருக்கிறது. திரை மறைவிலிருக்கும் உண்மைகளைச் சொல்லினால் சொல்லுவதற்கு மல்லார்மே என்ற கவிஞன் எவ்வாறு ப்ரெஞ்சு மொழியோடு மல்லாடி மல்லாடித் தொல்லைப்படுகிறான் என்பதைப் பாருங்கள்.'' இப்படிச் சொல்லிவிட்டு, சொல்ல முடியாததைச் சொல்லும் சக்தி ப்ரெஞ்சுக்கும் வங்காளிக்கும் நாளாவட்டத்தில் வரலாமென்றும், அவ்வாறு வரும்வரை இந்த வசதிக் குறைவு இருக்கத்தான் செய்யும் என்றும் அரவிந்தர் கூறுகிறார்.

என்னுடைய பார்வையில், தமிழ் மொழி தெளிவுள்ளதாகவும், உயிர்த் துடிப்புள்ளதாகவும், உணர்ச்சியுள்ளதாகவும் இருந்தாலும், சொல் வலையால் பிடிக்கவொண்ணுத் உண்மைகளைச் சொல்லினால் எடுத்துச் சொல்லும் ஆற்றலையும் பெற்றிருக்கிறது. திருமூலருடைய பாடல்களையும் பதினெண் சித்தர்களுடைய பாடல்களையும் படித்துப் பார்க்கும்போது, சொல்லுக்கும் சொல்லிறந்த சிந்தனைக்கும் இடையிலே ஊசலாடுகின்ற விதம் விதமான ஆன்மானுப

வங்களை எளிதில் எடுத்துச் சொல்லும் சக்தியை அவர்கள் எவ்வாறு தமிழுக்கு ஊட்டியிருக்கிறார்கள் என்பது தெரியும்.

நான் சொல்லுகிற உண்மைக்குச் சான்றாக இதோ நிற்கிறது, இந்த திருமந்திரப் பாடல் :—

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற்கரியதோர் ஏணியிட்டு, அப் பனை
ஏறலுற்றேன், கடல் ஏழும் கண்டேனே.

ஆகவே, சொல்லுக் கெட்டாததை ஷேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் சொல்லும்போது, தமிழால் அவரை எட்டிப் பிடிக்க முடியாது என்று கவலைப்பட வேண்டியதில்லை.

செய்ட்டன் மாக்பெத்திடம் அவன் மனைவி செத்து விட்டாள் என்ற செய்தியை ஒரு உருக்கமான கட்டத்தில் சொல்லுகிறான். செய்தியைக் கேட்ட மாக்பெத் மனித வாழ்வின் வெறுமையைப் பற்றிச் சில உன்னதமான, ஆனால் அறிவுக்கு மங்களான சொற்களைச் சொல்லுகிறான் :—

She should have died hereafter;
There would have been a time for such a word.
Tomorrow and tomorrow and tomorrow
Creeps in this petty pace from day to day,
To the last syllable of recorded time!
And all our yesterday have lighted fools
The way to dusty death.

(அங். V காட்சி IV)

ஈரற்குழலை பதறும்படியாக, விரிந்துகொண்டே போகும் ஒரு விந்தையுணர்ச்சியைக் கீழ்க்கண்ட வரி நமக்கு உணர்த்துகிறது :—

வங்களை எளிதில் எடுத்துச் சொல்லும் சக்தியை அவர்கள் எவ்வாறு தமிழுக்கு ஊட்டியிருக்கிறார்கள் என்பது தெரியும்.

நான் சொல்லுகிற உண்மைக்குச் சான்றாக இதோ நிற்கிறது, இந்த திருமந்திரப் பாடல் :—

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற்கரியதோர் ஏணியிட்டு, அப் பனை
ஏறலுற்றேன், கடல் ஏழும் கண்டேனே.

ஆகவே, சொல்லுக் கெட்டாததை ஷேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் சொல்லும்போது, தமிழால் அவரை எட்டிப் பிடிக்க முடியாது என்று கவலைப்பட வேண்டியதில்லை.

செய்ட்டன் மாக்பெத்திடம் அவன் மனைவி செத்து விட்டாள் என்ற செய்தியை ஒரு உருக்கமான கட்டத்தில் சொல்லுகிறான். செய்தியைக் கேட்ட மாக்பெத் மனித வாழ்வின் வெறுமையைப் பற்றிச் சில உன்னதமான, ஆனால் அறிவுக்கு மங்கலான சொற்களைச் சொல்லுகிறான் :—

She should have died hereafter;
There would have been a time for such a word.
Tomorrow and tomorrow and tomorrow
Creeps in this petty pace from day to day,
To the last syllable of recorded time!
And all our yesterday have lighted fools
The way to dusty death.

(அங். V காட்சி IV)

ஈரற்குழலை பதறும்படியாக, விரிந்து கொண்டே போகும் ஒரு விந்தையுணர்ச்சியைக் கீழ்க்கண்ட வரி நமக்கு உணர்த்துகிறது :—

To the last syllable of recorded time.

காலம் என்ற எல்லையற்ற ஒற்றடிப் பாதையிலே மனிதன் நடக்கும் காலடிச் சத்தம் இந்த வரியிலே கேட்கிறது; தவிர்க்க முடியாத தன் விதியை நோக்கி அவன் நடைபோடும் சப்தமும் கேட்கிறது. மூலத்திலுள்ள விந்தையுணர்ச்சி மாருமல் கீழ்க்கண்டபடி இந்த வரியை மொழிபெயர்க்கலாம்:—

காலக் கணக்கின் கடைசி எழுத்து வரை.

'Time' - என்ற ஆங்கிலச் சொல்லைக் காட்டிலும் அதற்கு நேரான 'காலம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குத் தத்துவப் பொருள் வளமும், 'ஆழமும் அதிகம். 'எழுத்து' என்ற சொல், "recorded time" - என்ற சொற்ருெடரின் பொருளைக் கொடுப்பதோடு, தலையெழுத்தின் கொடுங்கோன்மையையும் ஒரு தமிழனுக்கு ஜாடையாகக் காட்டிக் கொண்டு நிற்கிறது.

நிரந்தர தத்துவங்களைக் கஷ்டப்படாமல் எடுத்துச் சொல்லும் வல்லமை ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழுக்கிருக்கிறது. சிறந்த ஞானிகள் தங்கள் ஞானனுபவங்களைத் தமிழ் மொழியில் சொல்லிச் சொல்லி, நிரந்தர தத்துவங்களை எளிதில் எடுத்து விவரிக்கத் தமிழ் மொழியைப் பழக்கியிருக்கிருர்கள்.

ஆனுல், தற்கால லௌகிக வாழ்வின் தினசரிச் செய்திகளை ஆங்கிலத்தைப் போல் தெளிவோடும் நுட்பத்தோடும் தமிழுக்குச் சொல்லத் தெரியவில்லை. அவ்வாறு சொல்லுந் திறமையைத் தமிழுக்குக் கொடுக்க வேண்டியது தமிழறிஞர்களின் கடமை. தற்கால வாழ்வின் எல்லா நுணுக்கங்களைப் பற்றியும் தமிழிலேயே சிந்தித்து, தமிழிலே எடுத்துச் சொல்லும் கடமையைத் தமிழறிஞர்கள் மேற்கொள்ள வேண்டும்.

To the last syllable of recorded time.

காலம் என்ற எல்லையற்ற ஒற்றடிப் பாதையிலே மனிதன் நடக்கும் காலடிச் சத்தம் இந்த வரியிலே கேட்கிறது; தவிர்க்க முடியாத தன் விதியை நோக்கி அவன் நடைபோடும் சப்தமும் கேட்கிறது. மூலத்திலுள்ள விந்தையுணர்ச்சி மாருமல் கீழ்க்கண்டபடி இந்த வரியை மொழிபெயர்க்கலாம்:—

காலக் கணக்கின் கடைசி எழுத்து வரை.

'Time' - என்ற ஆங்கிலச் சொல்லைக் காட்டிலும் அதற்கு நேரான 'காலம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குத் தத்துவப் பொருள் வளமும், 'ஆழமும் அதிகம். 'எழுத்து' என்ற சொல், "recorded time" - என்ற சொற்ருெடரின் பொருளைக் கொடுப்பதோடு, தலையெழுத்தின் கொடுங்கோன்மையையும் ஒரு தமிழனுக்கு ஜாடையாகக் காட்டிக் கொண்டு நிற்கிறது.

நிரந்தர தத்துவங்களைக் கஷ்டப்படாமல் எடுத்துச் சொல்லும் வல்லமை ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழுக்கிருக்கிறது. சிறந்த ஞானிகள் தங்கள் ஞானுனுபவங்களைத் தமிழ் மொழியில் சொல்லிச் சொல்லி, நிரந்தர தத்துவங்களை எளிதில் எடுத்து விவரிக்கத் தமிழ் மொழியைப் பழக்கியிருக்கிருர்கள்.

ஆனுல், தற்கால லௌகிக வாழ்வின் தினசரிச் செய்திகளை ஆங்கிலத்தைப் போல் தெளிவோடும் நுட்பத்தோடும் தமிழுக்குச் சொல்லத் தெரியவில்லை. அவ்வாறு சொல்லுந் திறமையைத் தமிழுக்குக் கொடுக்க வேண்டியது தமிழறிஞர்களின் கடமை. தற்கால வாழ்வின் எல்லா நுணுக்கங்களைப் பற்றியும் தமிழிலேயே சிந்தித்து, தமிழிலே எடுத்துச் சொல்லும் கடமையைத் தமிழறிஞர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஷேக்ஸ்பியரைத் தமிழாக்குவதன் மூலம் இரட்டை சேவையை நாம் செய்கிறோம். முதலாவதாக, மொழி பெயர்ப்பின் மூலம் ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் ஒரு புதிய உலகத்தின் காட்சிகளையும், கற்பனைகளையும், குறிக்கோள்களையும் எட்டிப் பார்க்கிறார்கள். இரண்டாவதாக, மொழிபெயர்க்கும்போது, ஷேக்ஸ்பியர் எப்படி தமிழ் மொழியைப் புதுக்குரலோடு பேசச் செய்கிறார், அதனால் தமிழ் மொழிக்கு எப்படிப் புது தர்சனங்கள் கிடைக்கின்றன என்பதையும் நாம் அறிகிறோம். ஷேக்ஸ்பியருடைய தெய்வீக மூச்சு பட்டதன் காரணமாகத் தமிழ் மொழிக்கு ஒரு புதுத் தென்பும், ஆற்றலும் உண்டாகின்றன. ஷேக்ஸ்பியருடைய ஆங்கில ரத்தத்தைத் தமிழ் மேனியில் பாய்ச்சினோமானால், தமிழிலக்கிய விந்து புத்தூட்டம் பெறும்; எதிர் காலத் தமிழ்ப் படைப்புகள் புதிய வீரியத்தோடு இயங்கும்.

ஷேக்ஸ்பியரைத் தமிழாக்குவதன் மூலம் இரட்டை சேவையை நாம் செய்கிறோம். முதலாவதாக, மொழி பெயர்ப்பின் மூலம் ஆங்கிலம் தெரியாத தமிழர்கள் ஒரு புதிய உலகத்தின் காட்சிகளையும், கற்பனைகளையும், குறிக் கோள்களையும் எட்டிப் பார்க்கிறார்கள். இரண்டாவதாக, மொழிபெயர்க்கும்போது, ஷேக்ஸ்பியர் எப்படி தமிழ் மொழியைப் புதுக்குரலோடு பேசச் செய்கிறார், அதனால் தமிழ் மொழிக்கு எப்படிப் புது தர்சனங்கள் கிடைக்கின்றன என்பதையும் நாம் அறிகிறோம். ஷேக்ஸ்பியருடைய தெய் வீக மூச்சு பட்டதன் காரணமாகத் தமிழ் மொழிக்கு ஒரு புதுத் தென்பும், ஆற்றலும் உண்டாகின்றன. ஷேக்ஸ்பிய ருடைய ஆங்கில ரத்தத்தைத் தமிழ் மேனியில் பாய்ச்சினோ மானால், தமிழிலக்கிய விந்து புத்தூட்டம் பெறும்; எதிர் காலத் தமிழ்ப் படைப்புகள் புதிய வீரியத்தோடு இயங்கும்.

# 12. சீனத்து ஞானி - லாவ்ட்சு

லாவ்ட்சு என்பவர் ஒரு சீனத்து ஞானி. லாவ்ட்சு என்றால் சீன மொழியிலே கிழடன் என்று பொருள். இந்த ஞானியினுடைய இயற்பெயர் என்ன, அவருடைய பெற்றோர்கள் பெயர் என்ன என்பது எல்லாம் ஒருவருக்கும் தெரியவில்லை.

லாவ்ட்சைப் பற்றி அழகான கதை ஒன்று சொல்வார்கள். கிழடனாகவே அவர் பிறந்தார், அவர் பிறக்கும் போதே அவருக்கு 84 வயதாகி விட்டது. அவருடைய தாயின் கருப்பையில் அவர் 84 ஆண்டுகள் தங்கியிருந்தார் என்று சொல்வார்கள். அழகான, ஆனால் நம்ப முடியாத கதை இது. ஆனாலும், இந்தக் கதையில் ஓர் உண்மை பொதிந்து இருக்கிறது. குழந்தைப் பருவத்திலேயே அவருக்கு ஒரு கிழவனுடைய முதிர்ச்சியும் பக்குவமும் இருந்தது என்று தெரிகிறது.

லாவ்ட்சு 90 ஆண்டுகள் வாழ்ந்தார், முழுமையாக வாழ்ந்தார். வாழ்வதைத் தவிர வேறு ஒன்றுமே அவர் செய்யவில்லை. அவருடைய சீடர்கள் அவருடைய அனுபவத்தைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர் சொல்கிறார்: "சொல்லினால் எடுத்துச் சொல்லக்கூடிய கடவுள் உண்மையான கடவுள் அல்ல. உண்மையைச் சொல்லுக்குள்ளே அடக்கத் தொடங்கிவிட்டால் அது பொய்யாகிவிடுகிறது" என்று அவர் சொல்கிறார்.

# 12. சீனத்து ஞானி - லாவ்ட்சு

லாவ்ட்சு என்பவர் ஒரு சீனத்து ஞானி. லாவ்ட்சு என்றால் சீன மொழியிலே கிழடன் என்று பொருள். இந்த ஞானியினுடைய இயற்பெயர் என்ன, அவருடைய பெற்றோர்கள் பெயர் என்ன என்பது எல்லாம் ஒருவருக்கும் தெரியவில்லை.

லாவ்ட்சைப் பற்றி அழகான கதை ஒன்று சொல்வார்கள். கிழடனாகவே அவர் பிறந்தார், அவர் பிறக்கும் போதே அவருக்கு 84 வயதாகி விட்டது. அவருடைய தாயின் கருப்பையில் அவர் 84 ஆண்டுகள் தங்கியிருந்தார் என்று சொல்வார்கள். அழகான, ஆனால் நம்ப முடியாத கதை இது. ஆனாலும், இந்தக் கதையில் ஓர் உண்மை பொதிந்து இருக்கிறது. குழந்தைப் பருவத்திலேயே அவருக்கு ஒரு கிழவனுடைய முதிர்ச்சியும் பக்குவமும் இருந்தது என்று தெரிகிறது.

லாவ்ட்சு 90 ஆண்டுகள் வாழ்ந்தார், முழுமையாக வாழ்ந்தார். வாழ்வதைத் தவிர வேறு ஒன்றுமே அவர் செய்யவில்லை. அவருடைய சீடர்கள் அவருடைய அனுபவங்களைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர் சொல்கிறார்: ''சொல்லினால் எடுத்துச் சொல்லக்கூடிய கடவுள் உண்மையான கடவுள் அல்ல. உண்மையைச் சொல்லுக்குள்ளே அடக்கத் தொடங்கியவுடனே அது பொய்யாகிவிடுகிறது'' என்று அவர் சொல்கிறார்.

அப்படியானால் அவருடைய சீடர்கள் அவரோடு இருந்து என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அவரோடு இருந்தார்கள். அவ்வளவுதான். அவரோடு இருப்பதே சத்சங்கமாக இருந்தது. உடன் இருந்து இருந்து அவருடைய தன்மையைப் பருகினார்கள் அவர்கள். அவர் பக்கத்தில் இருந்து அவரைப் போலவே மேலும் மேலும் அவர்கள் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். அந்த மௌனத்தின் மூலமாக லாவ்ட்சு தம்முடைய சீடர்களைத் தொட்டுப் பிசைந்து கனியாக்கினார்.

ஒவ்வொரு நாளும் காலையில் அவர் உலாவுவதற்காகப் போவார். அண்டை வீட்டுக்காரர் ஒருவர் அவருடன் உலாவச் செல்வார். அவருக்குப்பேச்சு என்றால் பிடிக்காது. அவர் ஒரு மௌன மனிதர் என்பதை நன்றாகத் தெரிந்தவர் அண்டைக் வீட்டுக்காரர். ஆகவே, அவரோடு உலாவிக் கொண்டு போகும்போது வாயைத் திறக்கவேமாட்டார். மைல்கணக்காக, மணிக்கணக்காக இருவரும் உலாவிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்களுக்கிடையே ஒரு சொல்லைக்கூட பரிமாறிக் கொள்ளமாட்டார்கள். அப்படியாகப் பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் அண்டை வீட்டுக்காரரைப் பார்க்க ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர், "நானும் உங்களோடு உலாவுவதற்கு வருகிறேன்" என்று சொன்னதால், அவரையும் அழைத்துக்கொண்டு வந்தார் அண்டை வீட்டுக்காரர் விருந்தாளிக்கு லாவ்ட்சைப் பற்றித் தெரியாது. அவருடைய பழக்கவழக்கங்களைப் பற்றியும் தெரியாது. உலாவும்போது லாவ்ட்சும் மௌனமாக இருந்தார். அண்டை வீட்டுக்காரரும் மௌனமாக இருந்தார். அவர்களுடைய மௌனத்திற்குக் காரணம் என்ன என்று விருந்தாளிக்குத் தெரியாது. அவருக்கு மூச்சைப் பிடித்ததுபோல் இருந்தது. கொஞ்ச நேரத்தில் சூரியன் கிழக்கில் உதயமாகி, ஓர் ஒளிப்பிரளயத்தையே உண்டுபண்ணிக்கொண்டு இருந்தது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டதும், "என்ன அழகு, என்ன அழகு"

அப்படியானால் அவருடைய சீடர்கள் அவரோடு இருந்து என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அவரோடு இருந்தார்கள். அவ்வளவுதான். அவரோடு இருப்பதே சத்சங்கமாக இருந்தது. உடன் இருந்து இருந்து அவருடைய தன்மையைப் பருகினார்கள் அவர்கள். அவர் பக்கத்தில் இருந்து அவரைப் போலவே மேலும் மேலும் அவர்கள் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். அந்த மௌனத்தின் மூலமாக லாவ்ட்சு தம்முடைய சீடர்களைத் தொட்டுப் பிசைந்து கனியாக்கினார்.

ஒவ்வொரு நாளும் காலையில் அவர் உலாவுவதற்காகப் போவார். அண்டை வீட்டுக்காரர் ஒருவர் அவருடன் உலாவச் செல்வார். அவருக்குப்பேச்சு என்றால் பிடிக்காது. அவர் ஒரு மௌன மனிதர் என்பதை நன்றாகத் தெரிந்தவர் அண்டைக் வீட்டுக்காரர். ஆகவே, அவரோடு உலாவிக் கொண்டு போகும்போது வாயைத் திறக்கவேமாட்டார். மைல்கணக்காக, மணிக்கணக்காக இருவரும் உலாவிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்களுக்கிடையே ஒரு சொல்லைக்கூட பரிமாறிக் கொள்ளமாட்டார்கள். அப்படியாகப் பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் அண்டை வீட்டுக்காரரைப் பார்க்க ஒரு விருந்தாளி வந்திருந்தார். அவர், "நானும் உங்களோடு உலாவுவதற்கு வருகிறேன்" என்று சொன்னதால், அவரையும் அழைத்துக்கொண்டு வந்தார் அண்டை வீட்டுக்காரர் விருந்தாளிக்கு லாவ்ட்சைப் பற்றித் தெரியாது. அவருடைய பழக்கவழக்கங்களைப் பற்றியும் தெரியாது. உலாவும்போது லாவ்ட்சும் மௌனமாக இருந்தார். அண்டை வீட்டுக்காரரும் மௌனமாக இருந்தார். அவர்களுடைய மௌனத்திற்குக் காரணம் என்ன என்று விருந்தாளிக்குத் தெரியாது. அவருக்கு மூச்சைப் பிடித்ததுபோல் இருந்தது. கொஞ்ச நேரத்தில் சூரியன் கிழக்கில் உதயமாகி, ஓர் ஒளிப்பிரளயத்தையே உண்டுபண்ணிக்கொண்டு இருந்தது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டதும், "என்ன அழகு, என்ன அழகு"

என்று சொல்லிப் பாராட்டினார் புதிதாக வந்தவர். லாவ்ட்சே அண்டை வீட்டுக்காரரோ பதில் சொல்லவில்லை. வீட்டுக்குத் திரும்பியதும், லாவ்ட்சு தன் அண்டை வீட்டுக்காரரிடம் சொன்னார், "நாளை முதல் இந்த மனிதனை அழைத்து வராதீர்கள், இவர் ஒரு வாயாடி" என்று அந்த மனிதன் சொன்னதெல்லாம் "என்ன அழகு, என்ன அழகு!" என்ற சொற்கள் தான். அதுவும் 3 மணி நேரத்தில் ஒரு முறை வாயைத் திறந்து சொன்ன சொற்கள். ஆனாலும், லாவ்ட்சு, "அவன் வாயாடி, அதிகமாகப் பேசுகிறான், அர்த்தம் இல்லாமல் பேசுகிறான், நமக்கும் தான் கண்கள் இருக்கின்றன. சூரிய உதயத்தைக் காணாமலா இருக்கிறோம்? அதைச் சொல்லாமலே சொல்வானேன்?" என்று கேட்டார் லாவ்ட்சு.

90 ஆவது வயதில் லாவ்ட்சு சீடர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, "நான் இமயமலைக்குப் போகிறேன். அங்கே போய் சாவுக்கு என்னைத் தயார் செய்து கொள்ளப் போகிறேன். சாகப் போகும் காலத்தில் முழுக்க முழுக்க தனிமையில் இருக்க விரும்புகிறேன். அந்தத் தனிமையில் தான் என்னுடைய வாழ்வின் நிர்மலமான மூலத்தை அணுகி அதோடு என்னால் கலக்க முடியும்" என்று சொன்னார்.

சீடர்கள் இதைக் கேட்டு திடுக்குற்றார்கள், வருந்தினார்கள். லாவ்ட்சோடு அவர்கள் 100 மைல்கள் சென்றார்கள். லாவ்ட்சு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, திருப்பி அனுப்பி விட்டு, சீனநாட்டு எல்லையை அடைந்தார். எல்லைப் பிரதேசத்தைக் காத்து வந்த காவலர் லாவ்ட்சினுடைய சிஷ்யர். "மனித வாழ்க்கையின் நன்மைக்காக நீங்கள் ஒரு நூல் எழுத வேண்டும். அவ்வாறு செய்வது உங்கள் கடமை. இல்லையென்றால், உங்களை எல்லையைக் கடக்க விடமாட்டேன்" என்று சொன்னார் எல்லைக் காவலர். மூன்று நாட்களுக்குக் குருவை சீடர் சிறைப்படுத்தி வைத்திருந்தார். இது ஓர் அழகான சிறைத் தண்டனை, அன்பினால்

என்று சொல்லிப் பாராட்டினுர் புதிதாக வந்தவர். லாவ்ட்சே அண்டை வீட்டுக்காரரோ பதில் சொல்லவில்லை. வீட்டுக்குத் திரும்பியதும், லாவ்ட்சு தன் அண்டை வீட்டுக்காரரிடம் சொன்ஞர், "நாளை முதல் இந்த மனிதனை அழைத்து வராதீர்கள், இவர் ஒரு வாயாடி" என்று அந்த மனிதன் சொன்னதெல்லாம் "என்ன அழகு, என்ன அழகு!" என்ற சொற்கள்தான். அதுவும் 3 மணி நேரத்தில் ஒரு முறை வாயைத் திறந்து சொன்ன சொற்கள். ஆனுலும், லாவ்ட்சு, "அவன் வாயாடி, அதிகமாகப் பேசுகிருன், அர்த்தம் இல்லாமல் பேசுகிருன், நமக்கும்தான் கண்கள் இருக்கின்றன. சூரிய உதயத்தைக் காணுமலா இருக்கிருேம்? அதைச் சொல்லாலே சொல்வானேன்?" என்று கேட்டார் லாவ்ட்சு.

90 ஆவது வயதில் லாவ்ட்சு சீடர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, "நான் இமயமலைக்குப் போகிறேன். அங்கே போய் சாவுக்கு என்னைத் தயார் செய்து கொள்ளப் போகிறேன். சாகப் போகும் காலத்தில் முழுக்க முழுக்க தனிமையில் இருக்க விரும்புகிறேன். அந்தத் தனிமையில் தான் என்னுடைய வாழ்வின் நிர்மலமான மூலத்தை அணுகி அதோடு என்னுல் கலக்க முடியும்" என்று சொன்ஞர்.

சீடர்கள் இதைக் கேட்டு திடுக்குற்ருர்கள், வருந்திஞர்கள். லாவ்ட்சோடு அவர்கள் 100 மைல்கள் சென்ருர்கள். லாவ்ட்சு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, திருப்பி அனுப்பி விட்டு, சீனநாட்டு எல்லையை அடைந்தார். எல்லைப் பிரதேசத்தைக் காத்து வந்த காவலர் லாவ்ட்சினுடைய சிஷ்யர். "மனித வாழ்க்கையின் நன்மைக்காக நீங்கள் ஒரு நூல் எழுத வேண்டும். அவ்வாறு செய்வது உங்கள் கடமை. இல்லையென்ருல், உங்களை எல்லையைக் கடக்க விடமாட்டேன்" என்று சொன்ஞர் எல்லைக் காவலர். மூன்று நாட்களுக்குக் குருவை சீடர் சிறைப்படுத்தி வைத்திருந்தார். இது ஓர் அழகான சிறைத் தண்டனை, அன்பிஞல்

கொடுக்கப்பட்ட தண்டனை கட்டாயப்படுத்தப் பட்ட தால் லாவ்ட்சு ஒரு சிறு நூல் எழுதும்படி நேர்ந்தது. அந்த நூலின் பெயர் தௌதேஷிங் மூன்று நாட்களில் அதை எழுதி முடித்தார்.

அந்த நூலின் முதல் வாக்கியம் இதுதான்: "சொல்லி னால் சொல்லக்கூடிய கடவுள் கடந்த நிலையிலுள்ள கடவுள் அல்ல." இந்த வாக்கியமே தௌதேஷிங் என்ற நூலுக்கு முன்னுரையாக அமைந்திருந்தது. மௌனத்தை வாகன மாக இருந்துதான் பேருண்மையை அடைய முடியும். மனம் பேசத் தொடங்கி விட்டால், மௌனம் அழிந்துவிடு கிறது, கடவுளை அடைவதற்குள்ள வாகனம் அழிந்துவிடும். ஆகையால், மனதற்ற நிலையிலே கடவுளை அடையலாம். அப்படியானால் மனதைத் தூர எறிந்துவிட வேண்டும். அதை உதைத்துத் தள்ளிவிட வேண்டும் என்பதே லாவ்ட்சி னுடைய சித்தாந்தம். லாவ்ட்சு சொல்லுவது அருணகிரி நாதர் பாடலுக்கு மத்தாப்பு போட்டது போல் இருக்கிறது.

"சும்மா இரு, சொல்லற என்றதுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே."

* • •

லாவ்ட்சு என்ற ஞானியைப் பார்த்து, "உங்களுக்கு ஞானம் எப்படி ஏற்பட்டது?" என்று ஒருவர் கேட்டார். அவர் சொன்னார்: "ஞானம் அடைவதற்காக நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. ஆனால், என்னுடைய தீவிர முயற்சியால் பலன் ஒன்றும் கிட்டவில்லை.—ஒரு நாள் ஏமாற்றத்தோடு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண் டிருந்தேன். ஓர் இலை, வாடிப் போன சருகு அது, மரக் கிளையில் இருந்து மெள்ள மெள்ள விழுந்தது. அப்போது ஒரு காற்று வடக்கு நோக்கி அடித்தது. இலையும் காற்றில் வடக்கு நோக்கிப் பறந்தது. பிறகு, காற்று திசை மாறித் தெற்கு நோக்கி அடித்தது. இலையும் தெற்கு நோக்கிப்

கொடுக்கப்பட்ட தண்டனை கட்டாயப்படுத்தப் பட்ட தால் லாவ்ட்சு ஒரு சிறு நூல் எழுதும்படி நேர்ந்தது. அந்த நூலின் பெயர் தௌதேஷிங் மூன்று நாட்களில் அதை எழுதி முடித்தார்.

அந்த நூலின் முதல் வாக்கியம் இதுதான்: "சொல்லி னால் சொல்லக்கூடிய கடவுள் கடந்த நிலையிலுள்ள கடவுள் அல்ல." இந்த வாக்கியமே தௌதேஷிங் என்ற நூலுக்கு முன்னுரையாக அமைந்திருந்தது. மௌனத்தை வாகன மாக இருந்துதான் பேருண்மையை அடைய முடியும். மனம் பேசத் தொடங்கி விட்டால், மௌனம் அழிந்துவிடு கிறது, கடவுளை அடைவதற்குள்ள வாகனம் அழிந்துவிடும். ஆகையால், மனமற்ற நிலையிலே கடவுளை அடையலாம். அப்படியானால் மனதைத் தூர எறிந்துவிட வேண்டும். அதை உதைத்துத் தள்ளிவிட வேண்டும் என்பதே லாவ்ட்சி னுடைய சித்தாந்தம். லாவ்ட்சு சொல்லுவது அருணகிரி நாதர் பாடலுக்கு மத்தாப்பு போட்டது போல் இருக்கிறது.

"சும்மா இரு, சொல்லற என்றதுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே."

* • •

லாவ்ட்சு என்ற ஞானியைப் பார்த்து, "உங்களுக்கு ஞானம் எப்படி ஏற்பட்டது?" என்று ஒருவர் கேட்டார். அவர் சொன்னார்: "ஞானம் அடைவதற்காக நான் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. ஆனால், என்னுடைய தீவிர முயற்சியால் பலன் ஒன்றும் கிட்டவில்லை.—ஒரு நாள் ஏமாற்றத்தோடு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண் டிருந்தேன். ஓர் இலை, வாடிப் போன சருகு அது, மரக் கிளையில் இருந்து மெள்ள மெள்ள விழுந்தது. அப்போது ஒரு காற்று வடக்கு நோக்கி அடித்தது. இலையும் காற்றில் வடக்கு நோக்கிப் பறந்தது. பிறகு, காற்று திசை மாறித் தெற்கு நோக்கி அடித்தது. இலையும் தெற்கு நோக்கிப்

பறந்தது. பிறகு காற்று நின்றுவிட்டது இலை முணுமுணுக்காமல், ஆட்சேபிக்காமல், போராடாமல் அழகாக மிதந்து வந்து பூமியில் விழுந்தது. மறுபடியும் காற்று அடிக்கத் தொடங்கியது. இலையும் வானத்தில் உயரப் பறந்தது. அது சொன்ன செய்தி ஒன்று எனக்குத் திடீரென்று புரிந்து விட்டது. அன்று முதல் நானும் ஒரு வாடிப் போன சருகாகி விட்டேன்; தன் முயற்சியைக் கைவிட்டேன். எனக்கென்று ஓர் இச்சை இல்லை என்பதை உணர்ந்தேன். பேரண்டத்தின் ஒரு பகுதி நான். பேரண்டம் எங்கே போகிறதோ அதைப் பின் தொடர்ந்து நானும் போவேன். மனசை மாற்றிக் கொண்டால் நானும் மனசை மாற்றிக் கொள்வேன். முழுமை போகும் போக்கிலே அதன் பகுதியும் போக வேண்டும். அப்படி போகும்போது ஆனந்தம் ஏற்படுகிறது அதை எதிர்த்துப் போராடினால் துன்பம் ஏற்படுகிறது'' என்று சொன்னார். அதைத்தான் மாணிக்க வாசகரும்,

> ''அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
> ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
> அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானே.''

எல்லாம் இறைவனுடைய செயல். நமக்குச் செயல் என்று ஒன்றும் இல்லை என்று உணர்ந்து நம்மையே இறைவனிடத்தில் ஒப்படைத்துவிட்டால் நம்முடைய வாழ்க்கை ஆனந்தமயமாகிவிடும். இறைவன் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் நியதியோடு ஒட்டி வாழ வேண்டும் என்று சொல்கிறார் லாவ்ட்சு. நியதி என்றால் ஒரு சட்டம், இறைவனால் இயற்றப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தை, நியதியை, அருளை இறைவனுடைய திருவடிகள் என்று போற்றினார்கள் நம்மவர்கள். ஒரு நியதியோடு, சட்டத்தோடு விளையாட முடியாது, ஊடாட முடியாது. அந்த நியதிக்கு ஆனந்தத்தையும் உருவத்தையும் ஊட்டிவிட்டால் இன்னும் நெருக்கமாக அதோடு ஊடாடலாம் என்று கண்டவர் மாணிக்கவாசகர். ஆகவேதான்,

பறந்தது. பிறகு காற்று நின்றுவிட்டது இலை முணுமுணுக்காமல், ஆட்சேபிக்காமல், போராடாமல் அழகாக மிதந்து வந்து பூமியில் விழுந்தது. மறுபடியும் காற்று அடிக்கத் தொடங்கியது. இலையும் வானத்தில் உயரப் பறந்தது. அது சொன்ன செய்தி ஒன்று எனக்குத் திடீரென்று புரிந்து விட்டது. அன்று முதல் நானும் ஒரு வாடிப் போன சருகாகி விட்டேன்; என் முயற்சியைக் கைவிட்டேன். எனக்கென்று ஓர் இச்சை இல்லை என்பதை உணர்ந்தேன். பேரண்டத்தின் ஒரு பகுதி நான். பேரண்டம் எங்கே போகிறதோ, அதைப் பின் தொடர்ந்து நானும் போவேன். மனதை மாற்றிக் கொண்டால் நானும் மனதை மாற்றிக் கொள்வேன். முழுமை போகும் போக்கிலே அதன் பகுதியும் போக வேண்டும். அப்படி போகும்போது ஆனந்தம் ஏற்படுகிறது அதை எதிர்த்துப் போராடினால் துன்பம் ஏற்படுகிறது'' என்று சொன்னார். அதைத்தான் மாணிக்க வாசகரும்,

> ''அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
> ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
> அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானே.''

எல்லாம் இறைவனுடைய செயல். நமக்குச் செயல் என்று ஒன்றும் இல்லை என்று உணர்ந்து நம்மையே இறைவனிடத்தில் ஒப்படைத்துவிட்டால் நம்முடைய வாழ்க்கை ஆனந்தமயமாகிவிடும். இறைவன் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் நியதியோடு ஒட்டி வாழ வேண்டும் என்று சொல்கிறார் லாவ்ட்சு. நியதி என்றால் ஒரு சட்டம், இறைவனால் இயற்றப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தை, நியதியை, அருளை இறைவனுடைய திருவடிகள் என்று போற்றினார்கள் நம்மவர்கள். ஒரு நியதியோடு, சட்டத்தோடு விளையாட முடியாது, ஊடாட முடியாது. அந்த நியதிக்கு ஆனந்தத்தையும் உருவத்தையும் ஊட்டிவிட்டால் இன்னும் நெருக்கமாக அதோடு ஊடாடலாம் என்று கண்டவர் மாணிக்கவாசகர். ஆகவேதான்,

"அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானே."

என்று பாடினார்.

* * *

தர்க்க சாஸ்திரம் (Logic) ஒரு பொது மகள். விலை கொடுக்கும் கட்சி எதுவாக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருப்பாள், அந்த விலைமகள் என்று சொல்வார் லாவ்ட்சு. அவளுடைய சீடர் லியேட்சு என்பவர் இந்த உண்மைக்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்வார். அவருடைய சொந்த ஊரில் நிகழ்ந்த நிகழ்ச்சி. அந்த ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். படகிலே ஆற்றைக் கடந்துகொண்டு இருந்தபோது ஒரு பெரிய வெள்ளம் வந்து அவரை அடித்துக்கொண்டு போய்விட்டது. அவருடைய உடலைத் தேடித் தேடி அலைந்தார்கள் அவருடைய உறவினர்கள் கடைசியாக ஒரு செம்படவன் கையிலே அந்த உடல் சிக்கிக் கொண்டது. "எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுங்கள். இல்லையென்றால் இந்தச் சடலத்தைக் கொடுக்கமாட்டேன்" என்று சொன்னான் செம்படவன். செத்துப் போனவன் கோடீஸ்வரன் தான். அவருடைய குடும்பத்தார் அவருடைய பிணத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராக இல்லை. அவர்கள் ஒரு தர்க்க நிபுணர்களாக இருந்தார்கள். அவர்கள் வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்கப் போனார்கள். அவர், "கவலைப்படாதீர்கள். எனக்குரிய ஊதியத்தைக் கொடுங்கள். நான் உங்களுக்கு வழி சொல்கிறேன்" என்று சொன்னார். உரிய ஊதியத்தை வாங்கிய பின் அவர் சொன்னார். "இந்த உயிரற்ற உடலை வேறு ஒருவருக்கும் அந்தச் செம்படவன் விற்க முடியாது. ஒருவரும் அதை விலை கொடுத்து வாங்கப் போவதில்லை. ஆகையால்,

"அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானே."

என்று பாடினார்.

* * *

தர்க்க சாஸ்திரம் (Logic) ஒரு பொது மகள். விலை கொடுக்கும் கட்சி எதுவாக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருப்பாள், அந்த விலைமகள் என்று சொல்வார் லாவ்ட்சு. அவளுடைய சீடர் லியேட்சு என்பவர் இந்த உண்மைக்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்வார். அவருடைய சொந்த ஊரில் நிகழ்ந்த நிகழ்ச்சி. அந்த ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். படகிலே ஆற்றைக் கடந்துகொண்டு இருந்தபோது ஒரு பெரிய வெள்ளம் வந்து அவரை அடித்துக்கொண்டு போய்விட்டது. அவருடைய உடலைத் தேடித் தேடி அலைந்தார்கள் அவருடைய உறவினர்கள். கடைசியாக ஒரு செம்படவன் கையிலே அந்த உடல் சிக்கிக் கொண்டது. "எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுங்கள். இல்லையென்றால் இந்தச் சடலத்தைக் கொடுக்கமாட்டேன்" என்று சொன்னான் செம்படவன். செத்துப் போனவன் கோடீஸ்வரன் தான். அவருடைய குடும்பத்தார் அவருடைய பிணத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராக இல்லை. அவர்கள் ஒரு தர்க்க நிபுணர்களாக இருந்தார்கள். அவர்கள் வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்கப் போனார்கள். அவர், "கவலைப்படாதீர்கள். எனக்குரிய ஊதியத்தைக் கொடுங்கள். நான் உங்களுக்கு வழி சொல்கிறேன்" என்று சொன்னார். உரிய ஊதியத்தை வாங்கிய பின் அவர் சொன்னார். "இந்த உயிரற்ற உடலை வேறு ஒருவருக்கும் அந்தச் செம்படவன் விற்க முடியாது. ஒருவரும் அதை விலை கொடுத்து வாங்கப் போவதில்லை. ஆகையால்,

கொஞ்ச நாள் காத்திருங்கள் அவன் வழிக்கு வந்து விடுவான்'' என்று புத்திமதி சொன்னார்.

2, 3 நாட்கள் கடந்தன. குடும்பத்தார் வழக்கறிஞருடைய ஆலோசனைப்படி நடந்துகொண்டார்கள். செம்படவனுக்குக் கவலை உண்டாகிவிட்டது. ஏனெனில், பிணம் நாற்றமடிக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் என்ன கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு சடலத்தைக் கொடுத்து விடுவதற்குத் தயாராக இருந்தான். இருந்தும், வழக்கறிஞருடைய ஆலோசனையைக் கேட்கலாம் என்று அவனும் வழக்கறிஞனிடம் போனான். வழக்கறிஞர், ''கவலைப் படாதே, எனக்குரிய ஊதியத்தைக் கொடு. நான் வழி சொல்கிறேன்'' என்று அவனிடமும் சொல்லி, ஊதியத்தை வாங்கிக்கொண்டு, ''கொஞ்ச நாள் காத்திரு. இந்தக் குடும்பத்தார் வேறு ஒருவரிடம் இருந்தும் இந்த உடலை வாங்க முடியாது. நீ கேட்கும் விலைக்கு இணங்கித்தான் ஆகவேண்டும். ஆகையினால், கொஞ்ச நாள் காத்திரு'' என்று சொன்னார்.

இந்த நிலையிலிருந்து பார்த்தால் தர்க்க சாஸ்திரம் ஒரு விலைமகள் தான். ஒருவருக்குச் சாதகமாகப் பேசவும் ஒருவருக்குப் பாதகமாகப் பேசவும் தெரிகிறது. சமயத் துறையிலே தர்க்க சாஸ்திரத்தை நம்பி இறங்கக்கூடாது என்பதை லாவ்ட்சு வற்புறுத்தி வந்தார்.

தர்க்க சாஸ்திரம் மனதிற்கு ஏற்பட்டது. இதயத்தை மாற்றுவதற்குத் தர்க்க சாஸ்திரத்தால் முடியாது. ஓர் உதாரணத்தைக் காட்டி நம் இதயத்தை மாற்றிவிடுவார் லாவ்ட்சு. நமக்குத் தெரிந்த உலகத்திற்கும் நமக்குத் தெரியாத உலகத்திற்கும் இடையே ஓர் உதாரணக் கதையைச் சொல்லிப் பாலம் போட்டு விடுவார் லாவ்ட்சு. அவர் ஒரு கவிஞர். அவரோடு வாதம் செய்யலாகாது. அவர் பாடும் கவிதையைக் கவனத்தோடு கேட்கவேண்டும். அந்தக் கவிதையைக் காதினுல் கேட்க வேண்டும், வாயினுல்

கொஞ்ச நாள் காத்திருங்கள் அவன் வழிக்கு வந்து விடுவான்'' என்று புத்திமதி சொன்னார்.

2, 3 நாட்கள் கடந்தன. குடும்பத்தார் வழக்கறிஞருடைய ஆலோசனைப்படி நடந்துகொண்டார்கள். செம்படவனுக்குக் கவலை உண்டாகிவிட்டது. ஏனெனில், பிணம் நாற்றமடிக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் என்ன கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு சடலத்தைக் கொடுத்து விடுவதற்குத் தயாராக இருந்தான். இருந்தும், வழக்கறிஞருடைய ஆலோசனையைக் கேட்கலாம் என்று அவனும் வழக்கறிஞனிடம் போனான். வழக்கறிஞர், ''கவலைப் படாதே, எனக்குரிய ஊதியத்தைக் கொடு. நான் வழி சொல்கிறேன்'' என்று அவனிடமும் சொல்லி, ஊதியத்தை வாங்கிக்கொண்டு, ''கொஞ்ச நாள் காத்திரு. இந்தக் குடும்பத்தார் வேறு ஒருவரிடம் இருந்தும் இந்த உடலை வாங்க முடியாது. நீ கேட்கும் விலைக்கு இணங்கித்தான் ஆகவேண்டும். ஆகையினால், கொஞ்ச நாள் காத்திரு'' என்று சொன்னார்.

இந்த நிலையிலிருந்து பார்த்தால் தர்க்க சாஸ்திரம் ஒரு விலைமகள் தான். ஒருவருக்குச் சாதகமாகப் பேசவும் ஒருவருக்குப் பாதகமாகப் பேசவும் தெரிகிறது. சமயத் துறையிலே தர்க்க சாஸ்திரத்தை நம்பி இறங்கக்கூடாது என்பதை லாவ்ட்சு வற்புறுத்தி வந்தார்.

தர்க்க சாஸ்திரம் மனதிற்கு ஏற்பட்டது. இதயத்தை மாற்றுவதற்குத் தர்க்க சாஸ்திரத்தால் முடியாது. ஓர் உதாரணத்தைக் காட்டி நம் இதயத்தை மாற்றிவிடுவார் லாவ்ட்சு. நமக்குத் தெரிந்த உலகத்திற்கும் நமக்குத் தெரியாத உலகத்திற்கும் இடையே ஓர் உதாரணக் கதையைச் சொல்லிப் பாலம் போட்டு விடுவார் லாவ்ட்சு. அவர் ஒரு கவிஞர். அவரோடு வாதம் செய்யலாகாது. அவர் பாடும் கவிதையைக் கவனத்தோடு கேட்கவேண்டும். அந்தக் கவிதையைக் காதினுல் கேட்க வேண்டும், வாயினுல்

கலைக்க வேண்டும். அது நம்முடைய எலும்போடு எலும் பாகவும் இரத்தத்தோடு இரத்தமாகவும் கலக்கவேண்டும். இப்படி அதை ஜீரணம் செய்துவிட்டோமேயானுல் அவருடைய கவிதையையும் கவிதையின் சொற்களையும் நாம் மறந்துவிட்டாலும் அந்தக் கவிதையின் மனம் நம்மிடம் ஒட்டிக்கொள்ளும். அதன் மூலம் நாம் சூள் கொண்டுவிடுகிருேம்.

அவர் நம்மோடு வாதாடமாட்டார். தர்க்கத்தில்தான் அவருக்கு நம்பிக்கை இல்லையே. அவர் கோவிலுக்குப் போனதும் இல்லை, பூஜை செய்ததும் இல்லை. ஏன்? அவர் வாழ்வு முழுவதுமே அவருடைய கோவில் வாழ்க்கை முழுவதுமே அவருக்குப் பூஜை. பேரின்பம், சிற்றின்பத்தின் சிகரம் என்பவர் அவர். சிற்றின்பமே பேரின்பத்தின் சிகரம் என்று அவர் சொல்லவில்லை. பேரின்பம், சிற்றின் பத்தின் சிகரம் என்றுதான் சொல்கிருர். சிற்றின்பத்தை அறிந்தவர்கள் நாம், பேரின்பத்தை அறியாதவர்கள். இரண்டுக்கும் பொதுவாக ஏதோ ஒன்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இரண்டுக்கும் இடையிலே ஒரு பாலத்தைக் கட்டிவிடுகிருர் லாவ்ட்சு.

"புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்புப் போல்
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்"

என்று ஞானிகள் ஒடுங்குகின்ற பேரின்பத்தைச் சிற்றின்பத்தோடு திருமூலர் பேசுகிருர்.

லாவ்ட்சு கடவுளைப் பற்றிப் பேசுவதே இல்லை. கடவுள் என்ற சொல்லை ஒரு முறைகூட அவர் உச்சரிக்கவில்லை. அப்படியானுல், அவர் கடவுளை மறந்துவிட்டாரா? அல்லது நிரீச்வரவாதியா? இல்லை. அவர் எப்போதும் கடவுள் தத்துவத்திலே மூழ்கிக் கிடக்கிறவர், முழுமையாக மூழ்கிக்

கலைக்க வேண்டும். அது நம்முடைய எலும்போடு எலும் பாகவும் இரத்தத்தோடு இரத்தமாகவும் கலக்கவேண்டும். இப்படி அதை ஜீரணம் செய்துவிட்டோமேயானால் அவருடைய கவிதையையும் கவிதையின் சொற்களையும் நாம் மறந்துவிட்டாலும் அந்தக் கவிதையின் மனம் நம்மிடம் ஒட்டிக்கொள்ளும். அதன் மூலம் நாம் சூள் கொண்டுவிடுகிறோம்.

அவர் நம்மோடு வாதாடமாட்டார். தர்க்கத்தில்தான் அவருக்கு நம்பிக்கை இல்லையே. அவர் கோவிலுக்குப் போனதும் இல்லை, பூஜை செய்ததும் இல்லை. ஏன்? அவர் வாழ்வு முழுவதுமே அவருடைய கோவில் வாழ்க்கை முழுவதுமே அவருக்குப் பூஜை. பேரின்பம், சிற்றின்பத்தின் சிகரம் என்பவர் அவர். சிற்றின்பமே பேரின்பத்தின் சிகரம் என்று அவர் சொல்லவில்லை. பேரின்பம், சிற்றின் பத்தின் சிகரம் என்றுதான் சொல்கிறார். சிற்றின்பத்தை அறிந்தவர்கள் நாம், பேரின்பத்தை அறியாதவர்கள். இரண்டுக்கும் பொதுவாக ஏதோ ஒன்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இரண்டுக்கும் இடையிலே ஒரு பாலத்தைக் கட்டிவிடுகிறார் லாவ்ட்ச.

“ புணர்ச்சியுள் ஆயிழைபால் நட்புப் போல்
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார் ”

என்று ஞானிகள் ஒடுங்குகின்ற பேரின்பத்தைச் சிற்றின்பத் தோடு திருமூலர் பேசுகிறார்.

லாவ்ட்ச கடவுளைப் பற்றிப் பேசுவதே இல்லை. கடவுள் என்ற சொல்லை ஒரு முறைகூட அவர் உச்சரிக்கவில்லை. அப்படியானால், அவர் கடவுளை மறந்துவிட்டாரா? அல்லது நிரீஸ்ரவாதியா? இல்லை. அவர் எப்போதும் கடவுள் தத்து வத்திலே மூழ்கிக் கிடக்கிறவர், முழுமையாக மூழ்கிக்

கிடக்கிறவர். கடவுளை நினைவுபடுத்துவது என்பதே அவருக்கு அபசாரமாகத் தோன்றுகிறது. ஏனென்றால், கடவுளை மறந்திருந்தால் அல்லவா அவரை நினைவுறுத்தல் என்பது ஏற்படுகிறது.

லாவ்ட்சு தன் சீடர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர்கள் எல்லோரும் ஒரு காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே நூற்றுக் கணக்கான தச்சர்கள் மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். ஓர் அரண்மனையைக் கட்டுவதற்காக மரங்கள் வேண்டியிருந்தன. காட்டில் ஒரு மரத்தைத் தவிர எல்லா மரங்களையும் அவர்கள் வெட்டி விட்டார்கள். மிஞ்சியிருந்த அந்த ஒரு மரத்தில் ஆயிரக்கணக்கான கிளைகள் இருந்தன அந்த மரத்தின் நிழலில் பத்தாயிரம் பேர் தங்கலாம். அவ்வளவு வீச்சு இருந்தது, அந்த மரத்தில். அந்த மரத்தை மட்டும் ஏன் வெட்டவில்லை என்பதை அறிய லாவ்ட்சு தன் சீடர்களை அனுப்பினார். சீடர்கள் தச்சர்களிடம் போய் விசாரித்தார்கள். தச்சர்கள் சொன்னார்கள்: ''இந்த மரம் உதவாக்கரை மரம். எதற்கும் உதவாதது ஒவ்வொரு கிளையிலும் எத்தனையோ முண்டு முடிச்சுகள் இருப்பதால் அதிலிருந்து ஒன்றும் செய்ய முடியாது. இதில் ஒன்றுவது நேராக இருக்கிறதா என்று பாருங்கள். எல்லாமே கோணலாக இருக்கிறது. ஆகவே, இவற்றை வைத்து தூண்கள்கூட செய்ய முடியாது. நாற்காலி, மேஜைகளும் செய்ய முடியாது. சரி, இதை விறகுக்காவது பயன்படுத்தலாம் என்றால் அதுவும் முடியாது. எரியும்போது அதிலிருந்து வரும் புகை, கண்ணில் பட்டால் கண் குருடாகிவிடும். அதனால்தான் இந்த மரத்தை வெட்டாமல் விட்டுவிட்டோம்'' என்று சொன்னார்கள் தச்சர்கள். இதைக் கேட்டு லாவ்ட்சு சிரித்துவிட்டு சீடர்களைப் பார்த்துச் சொன்னார்:—''நீங்களும் இந்த மரத்தைப் போல் வாழ வேண்டும். உலகத்தில் உள்ள ஆபத்திலிருந்து நீங்கள் தப்பவேண்டும். என்று நினைத்தால் இந்த மரத்தைப்

கிடக்கிறவர். கடவுளை நினைவுபடுத்துவது என்பதே அவருக்கு அபசாரமாகத் தோன்றுகிறது. ஏனென்றால், கடவுளை மறந்திருந்தால் அல்லவா அவரை நினைவுறுத்தல் என்பது ஏற்படுகிறது.

லாவ்ட்சு தன் சீடர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர்கள் எல்லோரும் ஒரு காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே நூற்றுக் கணக்கான தச்சர்கள் மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். ஓர் அரண்மனையைக் கட்டுவதற்காக மரங்கள் வேண்டியிருந்தன. காட்டில் ஒரு மரத்தைத் தவிர எல்லா மரங்களையும் அவர்கள் வெட்டி விட்டார்கள். மிஞ்சியிருந்த அந்த ஒரு மரத்தில் ஆயிரக்கணக்கான கிளைகள் இருந்தன அந்த மரத்தின் நிழலில் பத்தாயிரம் பேர் தங்கலாம். அவ்வளவு வீச்சு இருந்தது, அந்த மரத்தில். அந்த மரத்தை மட்டும் ஏன் வெட்டவில்லை என்பதை அறிய லாவ்ட்சு தன் சீடர்களை அனுப்பினார். சீடர்கள் தச்சர்களிடம் போய் விசாரித்தார்கள். தச்சர்கள் சொன்னார்கள்: ''இந்த மரம் உதவாக்கரை மரம். எதற்கும் உதவாதது ஒவ்வொரு கிளையிலும் எத்தனையோ முண்டு முடிச்சுகள் இருப்பதால் அதிலிருந்து ஒன்றும் செய்ய முடியாது. இதில் ஒன்றாவது நேராக இருக்கிறதா என்று பாருங்கள். எல்லாமே கோணலாக இருக்கிறது. ஆகவே, இவற்றை வைத்து தூண்கள்கூட செய்ய முடியாது. நாற்காலி, மேஜைகளும் செய்ய முடியாது. சரி, இதை விறகுக்காவது பயன்படுத்தலாம் என்றால் அதுவும் முடியாது. எரியும்போது அதிலிருந்து வரும் புகை, கண்ணில் பட்டால் கண் குருடாகிவிடும். அதனால்தான் இந்த மரத்தை வெட்டாமல் விட்டுவிட்டோம்'' என்று சொன்னார்கள் தச்சர்கள். இதைக் கேட்டு லாவ்ட்சு சிரித்துவிட்டு சீடர்களைப் பார்த்துச் சொன்னார்:—''நீங்களும் இந்த மரத்தைப் போல் வாழ வேண்டும். உலகத்தில் உள்ள ஆபத்திலிருந்து நீங்கள் தப்பவேண்டும். என்று நினைத்தால் இந்த மரத்தைப்

போல் இருங்கள். ஒருவரும் உங்களுக்குத் தீங்கிழைக்க மாட்டார்கள், நீங்கள் கோணலாக இருந்தால். நேராக இருந்தால் உங்களை வெட்டுவார்கள். நீங்கள் ஏதோ வீட்டில் நாற்காலி, மேஜைகளாக இருப்பீர்கள். நீங்கள் அழகாக இருந்தால் உங்களை உடைத்துவிட்டு கொண்டு போய்விடுவார்கள். மனித மதிப்பில்லாத உருப்படிகளாகி விடுவீர்கள். இந்த மரத்தைப் போல் இருங்கள். அப்படி இருந்தால் உங்களுக்கு ஒருவரும் கேடு விளைவிக்க மாட்டார்கள், நீங்களும் பெரிய பிரம்மாண்டமான மர மாகி வளர்வீர்கள். ஆயிரக்கணக்கான மக்கள் உங்கள் நிழலிலே இளைப்பாறுவார்கள்.

அப்படியாக, லாவ்ட்சுவின் கொள்கை, சாதாரணமாக நாம் ஏற்றுக்கொள்ளும் கொள்கைக்கு நேர்மாறானது. அவர் சொல்வார்:—"எங்கு போனாலும் கடைசி ஆளாக இரு. நீ இல்லாதது போல், ஓசைப்படாமல் உலகத்தில் வாழ். முதல் தாம்பூலத்திற்காகப் போட்டி போடாதே. அப்படி போட்டால், உன்னைக் கீழே தள்ளிவிடுவார்கள். உன்னுடைய திறமையைக் காட்டுவதற்காக ஒரு முயற்சியையும் செய்யாதே. அதற்குத் தேவையே இல்லை. பயனற்றவனாகவே இருந்து அனுபவி" என்று சொல்வார் லாவ்ட்சு.

"வாழ்க்கை அனுபவிப்பதற்காக ஏற்பட்டது, கொண்டாடுவதற்காக ஏற்பட்டது. பயன்படுத்தப்படுவதற்குரிய பொருள் அல்ல வாழ்க்கை. அது சந்தையில் விற்கும் சரக்கைப் போன்றது அல்ல. அது ஒரு கவிதையைப் போன்றது. அது ஒரு பாடலைப் போன்றது. அது ஒரு நாட்டியத்தைப் போன்றது. ஒரு சாலையோரத்தில் இருக்கும் ஒரு பூவைப் போல் இருக்கிறது வாழ்க்கை. தனிப்பட்ட ஆளுக்காக அது பூக்கவில்லை. தன்னுடைய மணத்தைக் காற்றிலே மிதக்கவிடுகிறது. இந்தப் பூ. இந்தப் பூவுக்கு வேலி கிடையாது. அனுமதேயமாக வாழ்கிறது அது.

போல் இருங்கள். ஒருவரும் உங்களுக்குத் தீங்கிழைக்க மாட்டார்கள், நீங்கள் கோணலாக இருந்தால். நேராக இருந்தால் உங்களை வெட்டுவார்கள். நீங்கள் ஏதோ வீட்டில் நாற்காலி, மேஜைகளாக இருப்பீர்கள். நீங்கள் அழகாக இருந்தால் உங்களை உடைத்துவிட்டு கொண்டு போய்விடுவார்கள். மனித மதிப்பில்லாத உருப்படிகளாகி விடுவீர்கள். இந்த மரத்தைப் போல் இருங்கள். அப்படி இருந்தால் உங்களுக்கு ஒருவரும் கேடு விளைவிக்க மாட்டார்கள், நீங்களும் பெரிய பிரம்மாண்டமான மரமாகி வளர்வீர்கள். ஆயிரக்கணக்கான மக்கள் உங்கள் நிழலிலே இளைப்பாறுவார்கள்.

அப்படியாக, லாவ்ட்சுவின் கொள்கை, சாதாரணமாக நாம் ஏற்றுக்கொள்ளும் கொள்கைக்கு நேர்மாறானது. அவர் சொல்வார்:—"எங்கு போனாலும் கடைசி ஆளாக இரு. நீ இல்லாதது போல், ஓசைப்படாமல் உலகத்தில் வாழ். முதல் தாம்பூலத்திற்காகப் போட்டி போடாதே. அப்படி போட்டால், உன்னைக் கீழே தள்ளிவிடுவார்கள். உன்னுடைய திறமையைக் காட்டுவதற்காக ஒரு முயற்சியையும் செய்யாதே. அதற்குத் தேவையே இல்லை. பயனற்றவனாகவே இருந்து அனுபவி" என்று சொல்வார் லாவ்ட்சு.

"வாழ்க்கை அனுபவிப்பதற்காக ஏற்பட்டது, கொண்டாடுவதற்காக ஏற்பட்டது. பயன்படுத்தப்படுவதற்குரிய பொருள் அல்ல வாழ்க்கை அது சந்தையில் விற்கும் சரக்கைப் போன்றது அல்ல. அது ஒரு கவிதையைப் போன்றது. அது ஒரு பாடலைப் போன்றது. அது ஒரு நாட்டியத்தைப் போன்றது. ஒரு சாலையோரத்தில் இருக்கும் ஒரு பூவைப் போல் இருக்கிறது வாழ்க்கை. தனிப்பட்ட ஆளுக்காக அது பூக்கவில்லை. தன்னுடைய மணத்தைக் காற்றிலே மிதக்கவிடுகிறது. இந்தப் பூ. இந்தப் பூவுக்கு வேலி கிடையாது. அனாமதேயமாக வாழ்கிறது அது.

ஆனால், தனியாக இருப்பதிலே அதற்கு அவ்வளவு ஆனந்தம் அப்படி நீ இருக்க வேண்டும். நீ உன் கெட்டிக்காரத் தனத்தைக் காட்டினால் மற்றவர்கள் உன்னைப் பயன்படுத்திக் கொள்வார்கள். ஏர்க்காலிலே உன்னைப் பூட்டி அவர்களுடைய நிலத்தை உழுவதற்கு உன்னைப் பயன்படுத்து வார்கள். நீ ஒரு கவிதையாக, ஆனந்தமாக இருக்க விரும்பு வாயானால், உனக்கு உண்மையாக வாழக் கற்றுக்கொள்'' என்பதே அவருடைய உபதேசம்.

ஆனால், தனியாக இருப்பதிலே அதற்கு அவ்வளவு ஆனந்தம் அப்படி நீ இருக்க வேண்டும். நீ உன் கெட்டிக்காரத் தனத்தைக் காட்டினால் மற்றவர்கள் உன்னைப் பயன்படுத்திக் கொள்வார்கள். ஏர்க்காலிலே உன்னைப் பூட்டி அவர் களுடைய நிலத்தை உழுவதற்கு உன்னைப் பயன்படுத்து வார்கள். நீ ஒரு கவிதையாக, ஆனந்தமாக இருக்க விரும்பு வாயானால், உனக்கு உண்மையாக வாழக் கற்றுக்கொள்'' என்பதே அவருடைய உபதேசம்.

# 13. அண்ணாமலைப் பல்கலைக்கழக நினைவலைகள்

1931 ஜூன் மாதம் முதல் 1933 ஏப்ரல் முடிய நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவனாக இருந்தேன். அந்த இரண்டு ஆண்டுகளும் என் வாழ்க்கையை உருவாக்கிய ஆண்டுகள், ஆனந்தம் நிறைந்த ஆண்டுகள்.

பஞ்சாப், வங்காளம், குஜராத், மகராஷ்ட்ரம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா முதலிய பல மண்டலங்களிலிருந்தும் பலர் அண்ணாமலை நகருக்கு மாணவர்களாக வந்து சேருவார்கள். காரணம், அனைத்திந்தியப் புகழ் பெற்ற பேராசிரியர்கள் அங்கே பேராசிரியப் பீடங்களில் அமர்ந்திருந்தார்கள்.

எம். எல். சீத்தாராமன் என்பவர் எங்களுடைய வேதியல் (Chemistry) ஆசிரியராக இருந்தார். குழந்தையுள்ளம் படைத்தவர் அவர். சதா ஆராய்ச்சியிலே ஆழ்ந்து கிடப்பார். அவருடைய உடல் ஓரிடத்திலிருக்கும், அவருடைய உள்ளம் எங்கேயோ வட்டமிட்டுக் கொண்டிருக்கும். நாங்கள் எல்லோரும் அவருக்கு டாக்டர் ஸ்பூனர் என்ற பட்டப் பெயர் சூட்டினோம்.

டாக்டர் ஸ்பூனர் இங்கிலண்டிலிருந்த பேராசிரியர். Absent-minded Professor என்று பெயர் பெற்றவர். ஒரு நாள் லண்டனிலிருந்து பர்மிங்ஹாம் போவதற்காக

# 13. அண்ணாமலைப் பல்கலைக்கழக நினைவலைகள்

1931 ஜூன் மாதம் முதல் 1933 ஏப்ரல் முடிய நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவனாக இருந்தேன். அந்த இரண்டு ஆண்டுகளும் என் வாழ்க்கையை உருவாக்கிய ஆண்டுகள், ஆனந்தம் நிறைந்த ஆண்டுகள்.

பஞ்சாப், வங்காளம், குஜராத், மகராஷ்ட்ரம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா முதலிய பல மண்டலங்களிலிருந்தும் பலர் அண்ணாமலை நகருக்கு மாணவர்களாக வந்து சேருவார்கள். காரணம். அனைத்திந்தியப் புகழ் பெற்ற பேராசிரியர்கள் அங்கே பேராசிரியப் பீடங்களில் அமர்ந்திருந்தார்கள்.

எம். எல். சீத்தாராமன் என்பவர் எங்களுடைய வேதியல் (Chemistry) ஆசிரியராக இருந்தார். குழந்தையுள்ளம் படைத்தவர் அவர். சதா ஆராய்ச்சியிலே ஆழ்ந்து கிடப்பார். அவருடைய உடல் ஓரிடத்திலிருக்கும், அவருடைய உள்ளம் எங்கேயோ வட்டமிட்டுக் கொண்டிருக்கும். நாங்கள் எல்லோரும் அவருக்கு டாக்டர் ஸ்பூனர் என்ற பட்டப் பெயர் சூட்டினோம்.

டாக்டர் ஸ்பூனர் இங்கிலண்டிலிருந்த பேராசிரியர். Absent-minded Professor என்று பெயர் பெற்றவர். ஒரு நாள் லண்டனிலிருந்து பர்மிங்ஹாம் போவதற்காக

ரயில்வே நிலையத்துக்கு வந்தார், அவருடைய மனைவியும் அவரை வழியனுப்புவதற்காக வந்திருந்தார். போர்ட்டர் ஒருவர் அவருடைய சாமான்களை வண்டியிலேற்றி விட்டு கூலிக்காகக் காத்திருந்தார். வண்டி புறப்பட்டு விட்டது. டாக்டர் ஸ்பூனர் அவசர அவசரமாகப் போர்ட்டரை ஆலிங்கனம் செய்து ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, தம் மனைவியின் மீது போர்ட்டருக்குக் கொடுக்க வேண்டிய கூலி ஒரு ஷில்லிங்கை வீசி எறிந்தார். இருவரும் அவர் செயலைக் கண்டு அதிர்ச்சியுற்றார்கள்,

அப்படியே தான் பேராசிரியர் எம். எல். சீத்தாராமனுடைய செயல்களும் இருக்கும். ஆனாலும், எங்கள் அன்பைப் பெரிதும் கவர்ந்தவர் அவர். ஒரு நாள் மதிய உணவு அருந்தி விட்டு எங்கள் சோதனைக் கூடம் (lab ) பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது எம். எல். எஸ். சோதனைக் கூடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவர், என்னைப் பார்த்து விட்டார். "ஹலோ, மிஸ்டர் மகராஜன்" என்று சொல்லிக் கொண்டே என்னிடம் வந்து ஆராய்ச்சி மர்மங்களைப் பற்றி அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு திடீரென்று "மிஸ்டர் மகராஜன், உங்களை நான் சந்தித்தபோது, ஆராய்ச்சிக்கூடத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தேனா?' அல்லது அதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேனா?" என்று கேட்டார். "சார், ஆராய்ச்சிக் கூடத்தை நோக்கித்தான் போய்க்கொண்டிருந்தீர்கள்" என்று சொன்னேன். "அப்படியானால், நான் மதிய உணவை உண்டு முடித்திருக்க வேண்டும்" என்று சொல்லி விட்டு விரைந்து போய் விட்டார். உணவு உண்டதே அவருக்கு நினைவுக்கு வரவில்லை; தான் சென்ற திசையை வைத்துத்தான் அதைப் பற்றி அவர் ஊகம் செய்து கொள்ள வேண்டியிருந்தது.

* * *

ரயில்வே நிலையத்துக்கு வந்தார், அவருடைய மனைவியும் அவரை வழியனுப்புவதற்காக வந்திருந்தார். போர்ட்டர் ஒருவர் அவருடைய சாமான்களை வண்டியிலேற்றி விட்டு கூலிக்காகக் காத்திருந்தார். வண்டி புறப்பட்டு விட்டது. டாக்டர் ஸ்பூனர் அவசர அவசரமாகப் போர்ட்டரை ஆலிங்கனம் செய்து ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, தம் மனைவியின் மீது போர்ட்டருக்குக் கொடுக்க வேண்டிய கூலி ஒரு ஷில்லிங்கை வீசி எறிந்தார். இருவரும் அவர் செயலைக் கண்டு அதிர்ச்சியுற்றார்கள்,

அப்படியே தான் பேராசிரியர் எம். எல். சீத்தா ராமனுடைய செயல்களும் இருக்கும். ஆனாலும், எங்கள் அன்பைப் பெரிதும் கவர்ந்தவர் அவர். ஒரு நாள் மதிய உணவு அருந்தி விட்டு எங்கள் சோதனைக் கூடம் (lab ) பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது எம். எல். எஸ். சோதனைக் கூடத்தை நோக்கிப் போய்க் கொண் டிருந்தவர், என்னைப் பார்த்து விட்டார். "ஹலோ, மிஸ்டர் மகராஜன்" என்று சொல்லிக் கொண்டே என்னிடம் வந்து ஆராய்ச்சி மர்மங்களைப் பற்றி அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு திடீரென்று "மிஸ்டர் மகராஜன், உங்களை நான் சந்தித்தபோது, ஆராய்ச்சிக்கூடத்திலிருந்து வெளியே வந்து கொண் டிருந்தேனா?' அல்லது அதை நோக்கிப் போய்க் கொண் டிருந்தேனா?" என்று கேட்டார். "சார், ஆராய்ச்சிக் கூடத்தை நோக்கித்தான் போய்க்கொண்டிருந்தீர்கள்" என்று சொன்னேன். "அப்படியானால், நான் மதிய உணவை உண்டு முடித்திருக்க வேண்டும்" என்று சொல்லி விட்டு விரைந்து போய் விட்டார். உணவு உண்டதே அவருக்கு நினைவுக்கு வரவில்லை; தான் சென்ற திசையை வைத்துத்தான் அதைப் பற்றி அவர் ஊகம் செய்து கொள்ள வேண்டியிருந்தது.

* * *

சந்திரகூடன் என்ற மாணவர் என்னோடு பி. எஸ்ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். வேதியல் சோதனைகளிலே அடிக்கடி பொட்டாசியம் சயனைட் என்ற ஒரு கொடிய விஷமருந்தை நாங்கள் பயன்படுத்துவதுண்டு. ஏதோ குடும்பத்திலே ஏற்பட்ட துன்பத்தின் காரணமாகச் சந்திரகூடன் பொட்டாசியம் சயனைட் விஷத்தை அருந்தி விட்டார். சில வினாடிகள் விஷம் அவருடைய ரத்தக் குழாய்களுக்குள் புகுந்து அவருடைய சிவந்த மேனியை நீலநிறமாக்கி விட்டது. உயிர் போய்விடும் என்ற நிலையில் அவர் இருந்தபோது எங்கள் ஆணை வேந்தர் ஸர் சாமுவேல் ரங்கநாதனும் ஒரு பெரிய டாக்டரை அழைத்து வந்து அவருக்கு மாற்று மருந்து கொடுக்கும்படி செய்தார். நான்கு நாட்கள் அவர் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. கடைசியில் பிழைத்துக் கொண்டார்.

ஒரு வாரத்துக்குப் பின் நானும் சந்திரகூடனும் வகுப்பிலிருந்த போது பேராசிரியர் எம். எஸ். சீத்தாராமன் சந்திரகூடனிடம் வந்து, "நீ இப்படியும் தற்கொலை புரிய முயன்றிருக்கலாமா? வாழ்க்கைப் போரிலே ஆண்மையோடு போரிட்டு வெற்றியடைய வேண்டும். இனி இப்படியெல்லாம் செய்யாதே" என்று உபதேசம் செய்தார்.

அடுத்த வாரம் டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி என்ற பேராசிரியர் சந்திரகூடனிடம் வந்து "நீ ஒரு கோழை. இறைவன் கொடுத்த உயிரை இப்படியா விரயம் செய்யப் பார்த்தாய்; நல்ல நிமிர்ந்து வாழ்!'' என்று சொல்லி உற்சாகப்படுத்திவிட்டுப் போனார்.

ஆனால், தற்கொலை முயற்சி நடந்து 10 ஆண்டுகளுக்குப் பின், 'ஹிந்து' பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி வந்தது:

"பேராசிரியர் எம். எஸ். சீத்தாராமன் பொட்டாசியம் சயனைட் சாப்பிட்டு இன்று மாண்டு விட்டார். 'வாழ்க்கை

சந்திரசூடன் என்ற மாணவர் என்னோடு பி. எஸ்ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். வேதியல் சோதனைகளிலே அடிக்கடி பொட்டாசியம் சயனைட் என்ற ஒரு கொடிய விஷ மருந்தை நாங்கள் பயன்படுத்துவதுண்டு. ஏதோ குடும்பத்திலே ஏற்பட்ட துன்பத்தின் காரணமாகச் சந்திரசூடன் பொட்டாசியம் சயனைட் விஷத்தை அருந்தி விட்டார். சில விநாடிகள் விஷம் அவருடைய ரத்தக் குழாய்களுக்குள் புகுந்து அவருடைய சிவந்த மேனியை நீலநிறமாக்கி விட்டது. உயிர் போய்விடும் என்ற நிலையில் அவர் இருந்தபோது எங்கள் ஆணை வேந்தர் ஸர் சாமுவேல் ரங்கநாதனும் ஒரு பெரிய டாக்டரை அழைத்து வந்து அவருக்கு மாற்று மருந்து கொடுக்கும்படி செய்தார். நான்கு நாட்கள் அவர் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. கடைசியில் பிழைத்துக் கொண்டார்.

ஒரு வாரத்துக்குப் பின் நானும் சந்திரசூடனும் வகுப்பிலிருந்த போது பேராசிரியர் எம். எஸ். சீத்தாராமன் சந்திரசூடனிடம் வந்து, "நீ இப்படியும் தற்கொலை புரிய முயன்றிருக்கலாமா? வாழ்க்கைப் போரிலே ஆண்மையோடு போரிட்டு வெற்றியடைய வேண்டும். இனி இப்படியெல்லாம் செய்யாதே" என்று உபதேசம் செய்தார்.

அடுத்த வாரம் டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி என்ற பேராசிரியர் சந்திரசூடனிடம் வந்து "நீ ஒரு கோழை. இறைவன் கொடுத்த உயிரை இப்படியா விரயம் செய்யப் பார்த்தாய்; நல்ல நிமிர்ந்து வாழ்!" என்று சொல்லி உற்சாகப்படுத்திவிட்டுப் போனார்.

ஆனால், தற்கொலை முயற்சி நடந்து 10 ஆண்டுகளுக்குப் பின், 'ஹிந்து' பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி வந்தது:

"பேராசிரியர் எம். எஸ். சீத்தாராமன் பொட்டாசியம் சயனைட் சாப்பிட்டு இன்று மாண்டு விட்டார். 'வாழ்க்கை

எனக்கு வெறுத்து விட்டது' என்று ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு உயிர் துறந்திருக்கிறார்."

இந்தச் செய்தி வந்த பத்து ஆண்டுகளுக்குப் பின்னும் 'ஹிந்து'ப் பத்திரிகையில் இன்னொரு செய்தி வந்தது. அப்போது எங்கள் பேராசிரியராக இருந்த டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி ஐக்கிய மாகாண சர்க்காரின் ரஸாயன ஆலோசகராக (Chemical Adviser to the Goverrment of the United Provinces) வேலை செய்து வந்தார். பத்திரிக்கைச் செய்தி இதுதான்:— "டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி இன்று பொட்டாசியம் சயனைட் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு ஒரு மனைவியும் மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். 'வாழ்க்கை பொருளற்றதாக எனக்குத் தோன்றுகிறது. ஆகையால், நான் என்னையே மாய்த்துக் கொண்டேன்' என்று அவர் கையால் எழுதப்பட்ட கடிதம் அவர் தலையணைக்கடியில் இருந்தது."

இவ்விரண்டு செய்திகளுமே எனக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தன. சந்திர சூடனும் நானும் இன்னும் உயிரோடிருக்கிறோம். ஆனால், சந்திர சூடனுக்கு உபதேசம் செய்த, உபதேசம் செய்யத் தகுதியுடைய நல்லாசிரியர்கள் இருவரும், தங்களுக்குத் துன்பம் வந்தபோது, அந்த உபதேசத்தைக் கைப்பிடிக்க முடியவில்லையே என்று ஆற்றாமைப் பட்டது என் இதயம்.

*    *    *

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி வகுப்பில் சேர்வதற்கு முன் பாளையங்கோட்டை அர்ச் சவேரியார் கல்லூரியில் இன்டெர்மீடியட் வகுப்பு மாணவனாக இருந்தேன். சார்ள்ஸ் லாம்ப் (Charles lemb) எழுதிய 'Essays of Elia'—என்ற அற்புதமான ஆங்கிலக் கட்டுரைகளை எங்களுக்குப் பாடப் புத்தமாக வைத்திருந்தார்கள்.

எனக்கு வெறுத்து விட்டது' என்று ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு உயிர் துறந்திருக்கிறார்."

இந்தச் செய்தி வந்த பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் 'ஹிந்து'ப் பத்திரிகையில் இன்னொரு செய்தி வந்தது. அப்போது எங்கள் பேராசிரியராக இருந்த டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி ஐக்கிய மாகாண சர்க்காரின் ரஸாயன ஆலோசகராக (Chemical Adviser to the Goverrment of the United Provinces) வேலை செய்து வந்தார். பத்திரிக்கைச் செய்தி இதுதான்:— "டாக்டர் எஸ். என். சக்ரவர்த்தி இன்று பொட்டாசியம் சயனைட் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு ஒரு மனைவியும் மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். 'வாழ்க்கை பொருளற்றதாக எனக்குத் தோன்றுகிறது. ஆகையால், நான் என்னையே மாய்த்துக் கொண்டேன்' என்று அவர் கையால் எழுதப்பட்ட கடிதம் அவர் தலையணைக்கடியில் இருந்தது."

இவ்விரண்டு செய்திகளுமே எனக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தன. சந்திர சூடனும் நானும் இன்னும் உயிரோடிருக்கிறோம். ஆனால், சந்திர சூடனுக்கு உபதேசம் செய்த, உபதேசம் செய்யத் தகுதியுடைய நல்லாசிரியர்கள் இருவரும், தங்களுக்குத் துன்பம் வந்தபோது, அந்த உபதேசத்தைக் கைப்பிடிக்க முடியவில்லையே என்று ஆற்றாமைப் பட்டது என் இதயம்.

* * *

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி வகுப்பில் சேர்வதற்கு முன் பாளையங்கோட்டை அர்ச் சவேரியார் கல்லூரியில் இன்டெர்மீடியட் வகுப்பு மாணவனாக இருந்தேன். சார்ள்ஸ் லாம்ப் (Charles lemb) எழுதிய 'Essays of Elia'—என்ற அற்புதமான ஆங்கிலக் கட்டுரைகளை எங்களுக்குப் பாடப் புத்தமாக வைத்திருந்தார்கள்.

ஆங்கில இலக்கியத்தின் கரை கண்டவரும் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுள்ளவருமான பேராசிரியர் A. ஸ்ரீநிவாசராகவன் எங்களுடைய ஆங்கிலப் பேராசிரியராயிருந்து 'எலியாவின்' கட்டுரைகளில் உள்ள நயங்களையெல்லாம் இனிது விளக்கி எங்களையெல்லாம் இலக்கிய இன்பத்தில் ஆழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்ஸி. வகுப்புக்கும் அதே 'Essays of Elia'—எங்களுக்குப் பாடப் புத்தகமாக வைத்திருந்தார்கள். சி. ஆர். மயிலேறு என்ற அன்பும் பண்பும் நிறைந்த பேராசிரியர் எங்களுக்கு அந்தப் புத்தகத்தை விளக்கி வந்தார். ஒரு நாள் 400 மாணவர்கள் இருந்த வகுப்பிலே அவர் ஒரு வாசகத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது நான் எழுந்து, "சார், உங்கள் விளக்கம் தப்பானது" என்று துடுக்குத்தனமாகச் சொல்லிவிட்டேன். இதைக் கேட்ட பேராசிரியர் மயிலேறு, "அப்படியா, மிஸ்டர் மகராஜன்! உங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள்" என்று சொன்னார். பேராசிரியர் ஸ்ரீநிவாசராகவனிடம் கற்ற விளக்கத்தை நான் ஐந்து நிமிஷங்கள் எடுத்துச் சொன்னேன். உடனே பேராசிரியர் மயிலேறு, வகுப்பிலிருந்த 400 மாணவர்களையும் நோக்கி, "நான் சொன்ன விளக்கம் தவறு. மகராஜன் சொன்ன விளக்கமே சரி" என்று கோழைப்படாது சொன்னார். அவருடைய பெருந்தன்மை இன்னும் என்னை பிரமிக்கச் செய்கிறது.

* * *

டாக்டர் எஸ். ஆர். ராமச்சந்திர ராவ் எங்கள் பௌதிகப் (Physics) பேராசிரியராக இருந்தார்; அகில இந்தியப் புகழ் பெற்றவர்; ஸர் சி. வி. ராமனுடைய பழைய மாணவர். 1933ல் பல்கலைக்கழகத்தில் அவரைப் பார்த்த பிறகு 40 ஆண்டுகள் அவரை நான் சந்திக்கவில்லை

1973ல் நான் சென்னை உயர்நீதிமன்றத்து நீதிபதியாயிருந்தபோது டாக்டர் எஸ். ஆர். ராவுக்குத் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டு Cancer Institute—ல் சேர்க்கப்

ஆங்கில இலக்கியத்தின் கரை கண்டவரும் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையுள்ளவருமான பேராசிரியர் A. சீநிவாசராகவன் எங்களுடைய ஆங்கிலப் பேராசிரியராயிருந்து 'எலியாவின்' கட்டுரைகளில் உள்ள நயங்களையெல்லாம் இனிது விளக்கி எங்களையெல்லாம் இலக்கிய இன்பத்தில் ஆழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்ஸி. வகுப்புக்கும் அதே 'Essays of Elia'—எங்களுக்குப் பாடப் புத்தகமாக வைத்திருந்தார்கள். சி. ஆர். மயிலேறு என்ற அன்பும் பண்பும் நிறைந்த பேராசிரியர் எங்களுக்கு அந்தப் புத்தகத்தை விளக்கி வந்தார். ஒரு நாள் 400 மாணவர்கள் இருந்த வகுப்பிலே அவர் ஒரு வாசகத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது நான் எழுந்து, "சார், உங்கள் விளக்கம் தப்பானது" என்று துடுக்குத்தனமாகச் சொல்லிவிட்டேன். இதைக் கேட்ட பேராசிரியர் மயிலேறு, "அப்படியா, மிஸ்டர் மகராஜன்! உங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள்" என்று சொன்னார். பேராசிரியர் சீநிவாசராகவனிடம் கற்ற விளக்கத்தை நான் ஐந்து நிமிஷங்கள் எடுத்துச் சொன்னேன். உடனே பேராசிரியர் மயிலேறு, வகுப்பிலிருந்த 400 மாணவர்களையும் நோக்கி, "நான் சொன்ன விளக்கம் தவறு. மகராஜன் சொன்ன விளக்கமே சரி" என்று கோணாமற்படாது சொன்னார். அவருடைய பெருந்தன்மை இன்னும் என்னை பிரமிக்கச் செய்கிறது.

* * *

டாக்டர் எஸ். ஆர். ராமச்சந்திர ராவ் எங்கள் பௌதிகப் (Physics) பேராசிரியராக இருந்தார்; அகில இந்தியப் புகழ் பெற்றவர்; ஸர் சி. வி. ராமனுடைய பழைய மாணவர். 1933ல் பல்கலைக்கழகத்தில் அவரைப் பார்த்த பிறகு 40 ஆண்டுகள் அவரை நான் சந்திக்கவில்லை

1973ல் நான் சென்னை உயர்நீதிமன்றத்து நீதிபதியாயிருந்தபோது டாக்டர் எஸ். ஆர். ராவுக்குத் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டு Cancer Institute—ல் சேர்க்கப்

பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே ஒரு சந்தன மாலையை வாங்கிக்கொண்டு அவர் இருந்த அறைக்குச் சென்று அவரை வணங்கி மாலையை அவர் கழுத்தில் போட்டு, "இறையருளால் நீங்கள் நீடூழி வாழ வேண்டும்." என்று வாழ்த்தினேன். 40 ஆண்டு காலத்துக்குப் பின்னும் அவர் என்னை மறக்காமல் நினைவில் வைத்திருந்தார். மேலும் சொன்னார்: "மகராஜன், கொஞ்சம் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். இப்போது மாணவனாக இருக்கும் எவனாவது இன்னும் 40 ஆண்டுகளுக்குப் பின்னால், அதுவும் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜான பிறகு, தன் பழைய ஆசிரியரை நினைத்து வந்து அவருக்கு மாலை போடுவானா!" இப்படிச் சொல்லும்போதே அவர் கண் பனித்தது. என் உள்ளம் உருகியது. முழுவதும் குணமாகி இன்னும் உயிரோடிருக்கிறார் அவர்.

* * *

இப்படியாக எங்களை அறிவூட்டி வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நினைக்கும் போதெல்லாம், உள்ளக்கடலிலே விதம்விதமான நினைவலைகள் வந்து அலைமோதுகின்றன. அண்ணாமலை மன்னர் அமைத்த கலைக்கழகம் இன்று பொன் விழாக் கொண்டாடுகிறது. அது பல்லாண்டு, பல்லாண்டு திகழ்ந்து திக்குத் தெரியாது திணறும் மாணவர்களுக்கு வழி காட்டியாக அமையுமாக.

★

பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே ஒரு சந்தன மாலையை வாங்கிக்கொண்டு அவர் இருந்த அறைக்குச் சென்று அவரை வணங்கி மாலையை அவர் கழுத்தில் போட்டு, "இறையருளால் நீங்கள் நீடுழி வாழ வேண்டும்." என்று வாழ்த்தினேன். 40 ஆண்டு காலத்துக்குப் பின்னும் அவர் என்னை மறக்காமல் நினைவில் வைத்திருந்தார். மேலும் சொன்னார்: "மகராஜன், கொஞ்சம் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். இப்போது மாணவனாக இருக்கும் எவனாவது இன்னும் 40 ஆண்டுகளுக்குப் பின்னால், அதுவும் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜான பிறகு, தன் பழைய ஆசிரியரை நினைத்து வந்து அவருக்கு மாலை போடுவானா!" இப்படிச் சொல்லும்போதே அவர் கண் பனித்தது. என் உள்ளம் உருகியது. முழுவதும் குணமாகி இன்னும் உயிரோடிருக்கிறார் அவர்.

* * *

இப்படியாக எங்களை அறிவூட்டி வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நினைக்கும் போதெல்லாம், உள்ளக்கடலிலே விதம்விதமான நினைவலைகள் வந்து அலைமோதுகின்றன. அண்ணாமலை மன்னர் அமைத்த கலைக்கழகம் இன்று பொன் விழாக் கொண்டாடுகிறது. அது பல்லாண்டு, பல்லாண்டு திகழ்ந்து திக்குத் தெரியாது திணறும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமையுமாக.

★